வரு.74 இல. 31 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
தினகரன் வாரமஞ்சரி
2022 ஜூலை 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
July 31 Sunday, 2022
28 பக்கங்கள் 80/-




03 நெருக்கடியை எதிர்கொள்ள பொருத்தமானவர் ரணில்

07 ஜனாதிபதியின் தலைமைத்துவத்தில் கொண்டுள்ள நம்பிக்கை

12 அரச வளங்களை கையகப்படுத்தும் உரிமை எவருக்கும் கிடையாது

24 இலங்கை மகளிர் கிரிக்கெட்; அறியப்படாத சாதனைகள்

## 19ஐ விஞ்சும் புதிய திருத்தம் ஒன்றை கொண்டு வருவோம்

### அரசின் தீர்மானம் அதுவே என்கிறார் விஜேயதாச



நிறைவேற்று அதிகாரத்தை மட்டுப்படுத்தும் வகையில் 22ஆவது திருத்தத்தை மீண்டும் திருத்தி, 19 ஆம் திருத்தத்தில் கொண்டுவரப்பட்ட விடயங்களையும், அதிலிருந்த பலவீனமான சரத்துக்களை நீக்கி 19ஆவதை விஞ்சிய புதிய திருத்தமொன்றை கொண்டுவர அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் (28) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

22ஆவது திருத்தச் சட்டம் அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்டு, வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது. 04

காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டக்காரர்களுடன்

## ஜனாதிபதியின் ஊடக பணிப்பாளர் கலந்துரையாடல்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஊடகப் பணிப்பாளர் தனுஷ்க இராமநாயக்க நேற்று காலி முகத்திடலில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். 04



## காலிமுகத்திடல் போராட்டத்தின் பின்னணியில் புலி ஆதரவாளர்கள்

### ஐக்கிய போர்படை வீரர் சமூக அமைப்பாளர் அசேல சந்தேகம்

யுத்தத்தின் மூலம் பெற்றுக் கொள்ள முடியாததை நாட்டை சீர்குலைத்து பெற்றுக்கொள்ள புலம்பெயர் தமிழர் முயற்சித்து போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாக ஐக்கிய படைவீரர் சமூகத்தின் அழைப்பாளர் அசேல தர்மசிறி தெரிவித்துள்ளார்.

30 ஆண்டு கால யுத்தத்தின் தியாகிகளை நினைவு கூரும் தினத்தில் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்புக்காக ஒரு அருட் தந்தையும்



தமிழ் இளைஞர்கள் குழுவும் காலி முகத்திடலில் நிகழ்வை நடத்தியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். 04

இளைஞர்களாக வந்தோரே 75 ஐ தாண்டியும் பதவியில்;

# எம்.பிக்களின் வயதெல்லை வரையறுக்கப்பட வேண்டும்

### அரசியல்வாதிகளுக்கு 75 வயதுவரையே கடமையாற்ற முடியும்

### தேர்தல்கள் திணைக்கள முன்னாள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கருத்து தெரிவிப்பு

பாராளுமன்ற உறுப்பினர்களின் வயதெல்லை வரையறுக்கப்பட வேண்டுமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய வலியுறுத்தியுள்ளார்.

அரசியல்வாதிகளுக்கு 75 வயது வரையில் கடமையாற்ற முடியுமென நான் நினைக்கிறேன். இளைஞர்களால் மட்டுமே அரசியல் செய்யமுடியுமென்று நான் கூறவில்லை.

இளைஞர்களுக்கும் வருவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். அன்று இளைஞர்களாக வந்தவர்களே, 70 வயதை 04



## மாணவர்களுக்கு 'பைசர்' தடுப்பூசி நோர்வூட்டில் பணிகள் முன்னெடுப்பு



13 முதல் 17 வயது வரையான மாணவர்களுக்கு 'பைசர்' தடுப்பூசி ஏற்றும் பணி நோர்வூட் பகுதியில் நேற்று முன்தினம் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. நோர்வூட் பிரதேசத்திலுள்ள முதலாம் கட்ட கொவிட்19 தடுப்பூசியைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசியே 29 ஆம் திகதி வழங்கப்பட்டது. சுமார் 04 பாடசாலைகளைச் 04



## துவிச்சக்கர வண்டிகளின் பாவனைக்கு தனியான வழி

### கொழும்பு மாநகரசபை விசேட ஏற்பாடு

04

## SLFP யின் யோசனைகளுக்கு ஜனாதிபதி சாதகமான பதில்

### தமது MPக்களை சந்தித்த பின் அடுத்த சுற்றுப் பேச்சு



சர்வகட்சி அரசாங்மொன்றை ஸ்தாபிப்பது தொடர்பில் ஶ்ரீலங்கா சுதந்திர கட்சி முன்வைத்த யோசனைகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சாதகமான பதில் கிடைத்துள்ளதாக கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஶ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அங்கத்தவர்களுக்கிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின் பின்னர், ஊடகங்களுக்கு 04

காய்ச்சல், உடல்வலி தென்படின்

## வைத்தியரை நாடுமாறு மக்களுக்கு அறிவுறுத்தல்

### சிறுவர்கள் குறித்தும் அவதானமாக இருக்கவும்

தற்போதைய நாட்களில் காய்ச்சல், உடல்வலி போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்திய ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுமாறு பொது மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிறுவர்களுக்கு காய்ச்சல், இருமல், தடுமல், சுவாசிப்பதில் சிரமம் போன்ற அறிகுறிகள் 04



போக்குவரத்து கட்டண அதிகரிப்பை தவிர்க்க

## பாடசாலை மாணவர்களுக்கு நாளை முதல் புதிய பஸ் சேவை

### கல்வி அமைச்சு தீர்மானம் அமுலாகிறது

பாடசாலை மாணவர்களுக்காக தனியார் பஸ்களை நாளை முதலாம் திகதி முதல் சேவையில் ஈடுபடுத்தி, புதிய பஸ் சேவையை ஆரம்பிப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போது காணப்படும் போக்குவரத்து சிக்கல் மற்றும் பாடசாலை போக்குவரத்து கட்டணங்கள் அதிகரித்துள்ளமையை கருத்திற் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது அனைத்து பாடசாலைகளும் உள்ளடங்கும் வகையில் பாடசாலை ஆரம்பமாகும் 04

## மசகு எண்ணெய்யின் விலையில் அதிகரிப்பு



உலக சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை கடந்த சில தினங்களுடன் ஒப்பிடுகையில் சற்று அதிகரித்து காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, பிரேண்ட் தர மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 108 அமெரிக்க டொலர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன், W.D.I.தர மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 97.50 அமெரிக்க டொலர்களாக காணப்படுகிறது.

## எங்கள் கருத்து...

## ஜனநாயகத்தின் பெறுமானம் கட்டிக்காக்கப்பட வேண்டும்!

உலகில் ஜனநாயக பாரம்பரிய ஆட்சிமுறையை பிறழ்வின்றி அடியொற்றி வருகின்ற நாடுகளில் இலங்கைத் தேசமும் ஒன்றாகும். பிரித்தானிய காலனித்துவத்தின் கீழ் எமது நாடு 1815 ஆம் ஆண்டு முழுமையாக ஆட்பட்டுக் கொண்ட பின்னர் பல தசாப்த காலம் அடிமைத்தனத்திலேயே ஆட்சி தொடர்ந்தது.

ஆனாலும் காலப்போக்கில் சுதந்திரத்தை நோக்கிய பயணத்தின் போது, பிரித்தானிய ஆட்சியாளர்கள் எமது நாட்டில் படிப்படியாக ஜனநாயக ஆட்சிமுறையைப் புகுத்தத் தொடங்கினர். 1948 இல் இலங்கைக்கு அவர்கள் முழுமையான சுதந்திரத்தை வழங்கிய போது, பாராளுமன்ற ஜனநாயக ஆட்சி முறையை அறிமுகப்படுத்திவிட்டே சென்றனர்.

அதன் பின்னர் ஜனநாயக ஆட்சிமுறையை வழுவாமல் பின்பற்றி வருகின்ற நாடென்ற பெருமையை எமது நாடு பெற்றுக் கொண்டது. 1978 இல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை கொண்டதாக அரசியலமைப்பு மாற்றியமைக்கப்பட்ட போதிலும், ஜனநாயகப் பாரம்பரிய ஆட்சி முறையிலிருந்து எமது நாடு ஒரு போதுமே விலகிச் சென்றதில்லை.

ஜனநாயகம் என்பதன் அர்த்தம் மக்கள் ஆட்சி என்பதாகும். அதாவது நாட்டின் ஆட்சியாளர்களை தேர்தல் ஊடாக மக்களே தெரிவு செய்கின்றார்கள். அடாவடித்தனத்தினாலோ அன்றி தீவிரவாதத்தினாலோ பலவந்தமான முறையில் எந்தவொரு 04

CCTV யில் சிக்கிய ஆர்ப்பாட்டக்காரர்

## ஜனாதிபதியின் கொடியை துஷ்பிரயோகம் செய்தவர் கைது



கொழும்பில் நடத்தப்பட்ட போராட்டத்தின் போது ஜனாதிபதி மாளிகையிலிருந்து ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ கொடியை திருடிச் சென்ற நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் நடத்திய போராட்டத்தின் போது பொதுமக்கள் ஜனாதிபதி அலுவலகத்தை முற்றுகையிட்டு 04

## கப்பலில் எரிபொருள் வந்தும் இறக்க முடியாத நிலையில்

### 52 மில். டொலர் செலுத்த முடியாமையே காரணம்



டுபாயின் கோரல் எனர்ஜி நிறுவனத்திலிருந்து கொழும்பு துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்ட 40,000 மெற்றிக் தொன் டீசல் கப்பலை விடுவிக்க தேவையான 52 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இல்லாத காரணத்தினால் இன்னும் இறக்கப்படவில்லையென இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

தாமதக் கட்டணம், துறைமுகக் கட்டணம் மற்றும் காப்புறுதிக் கட்டணம் என்பனவற்றுக்கு மாத்திரம் கூடுதலாக ஒரு இலட்சத்து 98,000 டொலர்கள் செலுத்த வேண்டியுள்ளதாக கூட்டுத்தாபனத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். 04

## ஜனாதிபதி மாளிகையில் 'அயர்ன் பொக்ஸ்' திருடிய இளைஞர் கைதானார்



ஜனாதிபதி மாளிகையிலிருந்த 'அயர்ன் பொக்ஸ்' திருடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் (28) கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து, அவரை எதிர்வரும் 04

## நானோ எனது குடும்பமோ பணத்துக்கு ஆசைப்பட்டதில்லை

### வாக்களிக்க பணம்பெற்ற குற்றச்சாட்டை மறுக்கிறார் சித்தார்த்தன் எம்.பி



புதிய ஜனாதிபதி தெரிவின் போது 06 அல்லது 07 கோடி ரூபா வரையான பணத்தை நான் பெற்றதாக சமூக வலைத்தளங்களில் தகவல்கள் பரப்பப்படுகின்றன. ஆனால் பணத்துக்கு நானோ எனது குடும்பமோ ஆசைப்பட்டதில்லை. கட்சி எடுத்த முடிவுக்கு மாறாகவும் வாக்களிக்கவில்லயென புளொட் அமைப்பின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

சமகால நிலைமைகள் தொடர்பாக கந்தரோடையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், 04

## எரிபொருள் வரிசையில் ஆடி அமாவாசை விரதம்

### விரதத்தை வீதியில் அமர்ந்தே நிறைவுசெய்த நபர் சமூக வலைத்தளங்களில் வைரலாகிய செய்தி

எரிபொருள் வரிசையில் காத்திருந்த ஒருவர் ஆடி அமாவாசை விரதத்தை வீதியில் வைத்தே நிறைவுசெய்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இவர் வீதியில் வைத்தே விரத உணவை உட்கொண்ட புகைப்படமொன்று சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது. ஆடி அமாவாசை தினம் வியாழக்கிழமை பிதிர்களுக்காக விரதம் இருந்து, மதியம் படையல் செய்து, அந்த உணவை உட்கொண்டு தமது 04



நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

## நகர அபிவிருத்தி அதிகார சபை

ஆலோசனைகளைக் கோரல் (RFP)



### நுவரெலியா பழைய சீ பேங்க் ரெஸ்ட் (Cey Bank Rest) ஆக்கம், மீள் நிர்மாணம் - நிர்மாணித்தல் - நிதியிடல் - செயற்படுத்தல் - ஒப்படைத்தல் அடிப்படை (DRBFOT)

இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு (முதலீட்டாளர்கள்/ அபிவிருத்தியாளர்கள்) குறித்த விபரங்கள் அடங்கிய முதலீட்டு ஆலோசனை கோரல் ஆவணங்களை மீளளிக்கப்படாத ரூ. 100,000/- தொகையை (வரி உட்பட) பத்தரமுல்ல, செத்சிரிபாய, கட்டம் 1, 6ஆம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப் பிரிவிற்கு செலுத்தி - 8ஆம் மாடியில் அமைந்துள்ள அவ் அதிகார சபையின் சொத்து முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி பிரிவிலிருந்து 2022 ஓகஸ்ட் 03 முதல் 2022 ஓகஸ்ட் 29 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரையான காலத்திற்குள் பெற்றுக்கொள்ளலாம்.

அபிவிருத்தி ஆலோசனைகளை ஒப்படைத்தல் 2022 செப்டம்பர் 05 மு.ப. 11.00 இற்கு முடிவுறும். அபிவிருத்தி ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளல் முடிவடைவதுடன் கிடைக்கப் பெற்றுள்ள தொழில்நுட்ப ஆலோசனைகளை திறத்தல் பத்தரமுல்ல "சுஹுருபாய" 17ஆம் மாடியில் அமைந்துள்ள, மாநகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்பம்) அலுவலகத்தில் இடம் பெறும்.

- தரைப் பிரதேசம் - 2A - 1R - 38P (ஹெக் - 1)
- குத்தகைக் காலம் - 50 வருடம்
- அடிப்படை விலை - (ரூ) 385,000,000/-
- பிணை முறி - (ரூ) 7,000,000/-

கேள்விக்கு முன்னரான கூட்டம் 2022 ஓகஸ்ட் 17 மு.ப. 10.00 இற்கு செத்சிரிபாய, கட்டம் 1, 9ஆம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபை கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

**மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் :-**

**பணிப்பாளர் (சொத்து அபிவிருத்தி)**
**சொத்து அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவப் பிரிவு,**
**நகர அபிவிருத்தி அதிகார சபை,**
**8ஆம் மாடி, செத்சிரிபாய கட்டம் 1, பத்தரமுல்ல.**

**தொலைபேசி இலக்கம் :**
**011-2875921, 011-3611950, 071-2798593 அல்லது**
**011-2875916-20 நீடிப்பு 2960 - 2967**
**பெக்ஸ் : 011-2875900**
**மின்னஞ்சல் : realestatedivisionuda@gmail.com**
**இணையதளம் : www.uda.gov.lk**

**தலைவ, அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான ஆலோசனைச் சபை, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, 17 மற்றும் 18ஆம் மாடி, "சுஹுருபாய", பத்தரமுல்ல.**




இந்தியாவுக்கான இலங்கை துணை உயர்ஸ்தானிகர் டொக்டர் டி. வெங்கடேஷ்வரனின் அழைப்பின் பேரில், பிரபல நடிகரும் இயக்குனருமான 'பத்ம பூஷன்' கமல்ஹாசன் முதல் முறையாக சென்னையிலுள்ள இலங்கை துணை உயர்ஸ்தானிகராலயத்திற்கு வருகை தந்தார். அவர்கள் இலங்கையின் இயற்கை அழகு மற்றும் சினிமா குறித்து கலந்துரையாடினர். நாட்டின் சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் வகையில் சினிமா மற்றும் நாடகக் குழு உறுப்பினர்களுடன் கமல்ஹாசன் இலங்கைக்கு வருகை தரவேண்டும் என துணை உயர்ஸ்தானிகர் கேட்டுக் கொண்டார்.



## உலக அலவிய்யா தரீக்காவின் ஆன்மீக தலைவர் மறைவிற்கு மர்ஜான் பளீல் எம்.பி அனுதாபம்



உலக அலவிய்யா தரீக்காவின் ஆன்மீக தலைவர்களில் ஒருவரும் நவீன கால இஸ்லாமிய அறிஞர்களிலொருவருமான அஷ்ஷெய்ஹ் அல்லாமா அபூபக்கர் அலீ அல் மஷ்ஹூர் மௌலானாவின் திடீர் மரணச்செய்தி கேள்விப்பட்டு தான் மிகவும் கவலையடைந்ததாக பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யெமன் நாட்டை பூர்வீகமாகக்கொண்ட அன்னார் (27) ஜோர்தான் நாட்டில் காலமானார். அன்னாரின் ஜனாஸா வெள்ளிக்கிழமை (28) விசேட விமானத்தில் யெமனுக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்குள்ள ஹழரல் மவ்த்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அவர் உலகம் போற்றும் ஆன்மீகத்தலைவராக இருந்து கல்விப்பணி செய்ததோடு மாத்திரம் நின்று விடாமல் பல முஸ்லிம் நாடுகளுக்கும் விஜயம் செய்து அங்கு கலாநிலையங்களையும் உருவாக்கி இஸ்லாமிய தஃவாத்துறைக்கும் பாரிய பங்களிப்பை மேற்கொண்டார்.



"செ" பிக்சர்ஸ் செல்வகுமார் முத்துவின் தயாரிப்பில் அறிமுக இயக்குனர் தினேஸ் தீனதயாளன் இயக்கத்தில் அஸ்மின் பாடல் எழுதும் புதிய படத்தின் தொடக்க நிகழ்வில்...

## மயூரபதி ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் ஆலயத்தின் பால்குட பவனி

கொழும்பு வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் ஆலயத்தின் பால்குட பவனி நாளை 2022.08.01ஆம் திகதி ஆடிப்பூரத் தினத்தன்று நடைபெற இருக்கின்றது. இந்த பால் குட பவனி கொழும்பு பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திலிருந்து புறப்பட்டு லோரன்ஸ் வீதி, அமரசேகர மாவத்தை ஹெவலொக் வீதி ஊடாக கொழும்பு வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் ஆலயத்தை வந்தடையவுள்ளது.





**விருதுகளின் வகை**

- வருடத்திற்கான சிறந்த ஊடகவியலாளர் மேர்வின் டீ சில்வா விருது*
- வருடத்திற்கான சிறந்த புலனாய்வு ஊடகவியலாளர்*
- வருடத்திற்கான சிறந்த தனித்துவ செய்திக்கான விருது*
- வருடத்திற்கான இளம் செய்தியாளர் டென்சில் பீரிஸ் விருது*
- வருடத்திற்கான சிறந்த சுகாதாரம் மற்றும் மருத்துவ கட்டுரையாளர்**
- வருடத்திற்கான சிறந்த சூழலியல் அறிக்கையாளர்**
- வருடத்திற்கான சிறந்த விளையாட்டு செய்தியாளர்**
- வருடத்திற்கான சிறப்பாக வடிமைக்கப்பட்ட பத்திரிகை*
- வருடத்திற்கான சிறந்த வணிக மற்றும் நிதியியல் செய்தியாளர்**
- வருடத்திற்கான சிறந்த கேலிச்சித்திரம்**
- விஷேட சூழ்நிலைகளின் போது அறிக்கையிடலுக்கான பேராசிரியர் கைலாசபதி விருது.**
- வருடத்திற்கான சிறந்த புகைப்பட ஊடகவியலாளர்*
- வருடத்திற்கான சிறந்த பத்தி எழுத்தாளர் பீ.ஏ.சிறிவர்த்தன விருது.**
- தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினை பயன்படுத்தி எழுதப்பட்ட சிறந்த செய்தி / விவரணக்கட்டுரை**
- சமூக பிரச்சினைகள் தொடர்பான சிறந்த அறிக்கையிடலுக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது.**
- வருடத்திற்கான சிறந்த விவரணக்கட்டுரையாளருக்கான உபாலி விஜயவர்த்தன விருது.**
- சிறந்த செய்தி இணையத்தளம்.**

* எந்தமொழியாயினும் ஒரே விருது
** சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் ஒவ்வொரு மொழிக்கும் ஒரு விருது

**விண்ணப்ப முடிவுத்திகதி : திங்கட்கிழமை - ஆகஸ்ட் 08, 2022**

பதிவுசெய்யப்பட்ட பத்திரிகைக்குச் சொந்தமான இணையப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட செய்தி அல்லது கட்டுரை அல்லது பத்தி என்பனவும் ஏற்றுக் கொள்ளப்படும். எனினும் அவ்வாறு இணையப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட செய்தி அல்லது கட்டுரை அல்லது பத்தி என்பவற்றின் பிரதி குறித்த பத்திரிகை ஆசிரியரால் அல்லது இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகளில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

வெற்றியாளர்கள் சுயாதீன நடுவர் குழாம் ஒன்றால் தெரிவு செய்யப்படுவர்

பல்வேறு பிரிவுகளுக்கு விண்ணப்பிக்கக்கூடிய அறிவுறுத்தல் மற்றும் விபரக்குறிப்புகள் அடங்கிய விண்ணப்பப்பத்திரத்தை இல.96, பேர்னார்ட் சொய்சா மாவத்தை, (கிருலப்பனை), கொழும்பு - 5. முகவரியிலுள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் பெற்றுக்கொள்ளலாம். அல்லது www.slpi.lk அல்லது www.pccsl.lk இணையத்தளங்களில் இருந்து இலவசமாக தரவிறக்கம் செய்யலாம்

ஒழுங்கமைப்பு : இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் மற்றும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்

TECOSL



## இலங்கை வங்கி

உலகளாவிய அதிசிறந்த 1000 வங்கிகளுள் ஒன்றாகவும் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் 500 மிகப்பெரிய வங்கிகளுள் ஒன்றாகவும் தரப்படுத்தப்பட்டுள்ள அரச வர்த்தக வங்கியும் இலங்கையின் 1ம் தர வங்கியுமாகிய இலங்கை வங்கியின் சட்டப்பிரிவில் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகைமையும் ஆற்றலும் ஊக்கமும் அனுபவமும் கொண்ட இளம் நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### நீதிமன்ற எழுதுவினைஞர் பயிலுநர் மற்றும் நொத்தாரிசு எழுதுவினைஞர் பயிலுநர்

### தேவைப்படும் தகைமைகள்

- **இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.**
- **கல்வித் தகைமைகளும் அனுபவமும்**
  - க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், ஆங்கிலம் மற்றும் தாய்மொழி உட்பட 05 பாடங்களில் திறமைச்சித்தி (விருப்புக்குரிய பாடங்கள் நீங்கலாக)

    **மற்றும்**
  - க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் சித்தி (பொது ஆங்கிலம் மற்றும் பொது அறிவு தவிர்ந்த)

    **மற்றும்**
  - சட்ட நிறுவனமொன்றில் அல்லது சட்டத்தரணி ஒருவரிடம் நீதிமன்ற எழுதுவினைஞராக/ நொத்தாரிசு எழுதுவினைஞராக இரண்டு (02) வருடங்கள் பணியாற்றிய அனுபவம்
- **ஏனைய தகைமைகள்**
  - ஆங்கிலம் மற்றும் தமிழ்/சிங்களம் ஆகிய மொழிகளில் நிமிடத்திற்கு 20 சொற்கள் என்ற தட்டச்சு வேகம்
  - கணனி அறிவும் ஆங்கில மொழியில் தேர்ச்சியும் அத்தியாவசியமாகும்
- **வயது**
  - விண்ணப்ப முடிவுத் திகதியில் 35 வயது அல்லது அதற்கு குறைவாக இருத்தல் வேண்டும்

### விதிகள் மற்றும் நிபந்தனைகள்

- பயிற்சிக்காலம் 02 ஆண்டுகளாகும் இப்பயிற்சிக் காலத்தில் மாதாந்த பயிற்சிக் கொடுப்பனவொன்று (முதலாம் வருடம் ரூபா 45,000 மற்றும் இரண்டாம் வருடம் ரூபா 60,000) வழங்கப்படும்.
- இப்பதவி வங்கிச் சேவையின் பொது விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய காணப்படினும் சாதாரண வங்கியியல் துறைக்குப் புறம்பானதாகும் (மூடிய சேவை)
- பயிற்சிக் காலத்தில் ஆற்றிய சேவையில் வங்கி திருப்தியடையும் பட்சத்தில் நீதிமன்ற எழுதுவினைஞர்-I/ நொத்தாரிசு எழுதுவினைஞர்-I என்ற தரத்தில் நிரந்தர ஆளணியில் உறுதிப்படுத்தப்படுவர்
- தேவைப்படும்போது வார இறுதி/விடுமுறை நாட்களிலும் கடமை நேரத்துக்குப் பின்பும் வேலை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்
- வங்கியின் தேவைக்கேற்ப நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்

### தெரிவு நடைமுறை

- போட்டிப் பரீட்சையினைத் (எழுத்துப் பரீட்சை மற்றும் வேகப்பரீட்சை) தொடர்ந்து பட்டியற்படுத்தப்படும் விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.
- போட்டிப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் நேர்முகத் தேர்வுக்குத் தகுதிபெறும் விண்ணப்பதாரிகளைப் பட்டியற்படுத்த மட்டுமே பயன்படுத்தப்படும்.

### விண்ணப்பிக்கும் முறை

உங்களது சுயவிபரக் கோவையினை **www.boc.lk** என்ற எங்களது இணையத்தள முகவரியூடாக (**careers** என்ற பகுதியின் கீழ்) தரவிறக்கம் செய்யக்கூடிய மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவாக பூர்த்தி செய்து உறவுமுறைசாராத இரண்டு நபர்களின் தொடர்பு விபரங்களுடனும் பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ்கள், அனுபவத்தை நிரூபிக்கும் ஆவணங்கள் என்பவற்றின் பிரதிகளுடனும் **13.08.2022ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கும் வகையில் கீழ்க்காணும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பவும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

விண்ணப்பத்தின் முடிவுத் திகதியில் மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டிராத அல்லது தொடர்புடைய சான்றிதழ்களின் நிழற்பிரதிகளைக் கொண்டிராத அல்லது உண்மைக்குப் புறம்பாக தகவல்களைக் கொண்ட அல்லது விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்பு கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பமும் ஆட்சேர்ப்பின் எந்தக் கட்டத்திலும் நிராகரிக்கப்படும்.

***பிரதான முகாமையாளர் (ஆட்சேர்ப்பும் தொழில் அபிவிருத்தியும்)***
***இலங்கை வங்கி,***
***மனித வளப் பிரிவு,***
***26ஆவது மாடி, தலைமை அலுவலகம்,***
***"இலங்கை வங்கிசதுக்கம்",***
***இல.01, இலங்கை வங்கி மாவத்தை,***
***கொழும்பு-01.***

*தேர்வு சம்பந்தமான ஆதரவுகளை நாடுவோர் தகைமையை இழப்பர்.*

*தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளை மட்டும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.*

*நிரப்பப்படவுள்ள பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் அல்லது ஆட்சேர்ப்பை பிற்போடும்/இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.*

இலங்கைவங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# அரசியல் அரங்கம்

அர்ஜூன்



# நெருக்கடிக்கு முகம் கொடுப்பதற்கு பொருத்தமானவர் ஜனாதிபதி ரணில்

## பாராளுமன்றம் தீர்மானித்துள்ளதாக கூறுகிறார் அமைச்சர் அலி சப்ரி

**நாடு தற்பொழுது எதிர்கொண்டிருக்கும் சூழ்நிலைக்கு முகங்கொடுப்பதற்கான திறன் வாய்ந்த சரியான அரசியல் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதை பாராளுமன்றம் அடையாளம் கண்டிருப்பதாக வெளிவிவகார அமைச்சரான ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார். நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து எமக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அவர் இதனைக் கூறினார்.**

**கே: பாராளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டார். இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: இது பாராளுமன்றத்தின் பெரும்பான்மையின் பிரதிபலிப்பாகும். இது பற்றியே அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளது. எனவே, அரசியலமைப்புச் செயல்முறைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அனைவரும் அரசியலமைப்பைப் பாதுகாப்பதற்கும் நிலைநிறுத்துவதற்கும் உறுதிமொழியளித்துள்ளனர். தற்போது இந்த செயல்முறை முடிந்து, பெரும்பான்மையானவர்கள் புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுத்துள்ளனர். எனவே அனைவரும் ஒன்றிணைந்து புதிய ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க வேண்டும்.

**கே: பொதுஜன பெரமுன தனது ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவை முன்னிறுத்துவதற்கு தீர்மானம் எடுத்திருந்த போது, அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவை நிறுத்துவதற்கு தீர்மானம் எடுக்க என்ன காரணம்?**

பதில்: உண்மையில் அது பொதுஜன பெரமுன எடுத்த முடிவு அல்ல. அடிப்படையில் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் படித்தவர்கள். எனவே, இந்த இக்கட்டான நேரத்தில் அவர்கள் உணருகின்ற சூழ்நிலையை சிந்திக்கவும் அடையாளம் காணவும் அவர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டது. எனவே, அவர்கள் சொந்தமாக ஒரு முடிவை எடுத்தார்கள், இப்போது நாம் அதை மதிக்க வேண்டும். இந்தச் செயலில் ஈடுபட்டுள்ளவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது நல்லது என்று சிலர் நினைத்தனர். மேலும் சிலர் நாட்டின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மை முக்கியம் என்று நினைத்தனர். பொருளாதாரம் முக்கியம் என்ற எண்ணத்தில் சிலர் இருந்தனர்.

இறுதியில், பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே சரியான அரசியல் தலைவர் என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். நாம் அதைத் தொடர வேண்டும் மற்றும் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும், மக்கள் எதிர்கொள்ளும் பாரிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அவருக்கு நியாயமான கால அவகாசம் வழங்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

**நாம் அனைவரும் கூட்டுப்பொறுப்புடன் செயற்பட வேண்டியது காலத்தின் தேவை**

**கே: ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராக முன்னிறுத்துவது பொதுஜன பெரமுன எடுத்த ஒருமனதான தீர்மானமா?**

பதில்: நான் அப்படி நினைக்கவில்லை. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கூடி அவ்வாறு முடிவெடுக்கவில்லை. ஆனால் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவர்களின் முன்னுரிமை என்ன என்பது தெரியும். இந்த முக்கியமான தருணத்தில் நீங்கள் ஒரு ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் போது, மூன்று வரிகளைக் கொடுத்து இப்படித்தான் வாக்களிக்க வேண்டும் என்று சொல்ல முடியாது. எனவே, பெரும்பான்மையானவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். அவர்கள் தங்கள் கருத்தைச் சொன்னார்கள்.



நாம் இப்போது அதை மதித்து முன்னேற வேண்டும்.

**கே: பொதுஜன பெரமுன பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுள்ள நிலையில், உங்களது சொந்த அரசாங்கத்தை அமைக்க நீங்கள் திட்டமிடுகிறீர்களா அல்லது அனைத்துக் கட்சி அரசாங்கத்தை அமைக்க மற்ற எதிர்க்கட்சிகளை அழைக்கிறீர்களா?**

பதில்: இது பற்றிக் கட்சித் தலைவர்களும், ஜனாதிபதியுமே கலந்துரையாட வேண்டும். தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீள்வதற்கு எதிர்ப்புகள் குறையும் வகையில் அவர்கள் அனைத்துக் கட்சி அரசாங்கத்தை அமைக்க முயற்சிப்பார்கள் என்று நான் நினைக்கிறேன்.

இப்போதைய நிலைமை ஜனாதிபதி யார், பிரதமர் யார் என்பதில் இல்லை. மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளே உண்மையான நிலை. பொருளாதாரத்தின் மறுமலர்ச்சிக்கு கூட எங்களுக்கு ஒரு சிறிய வாய்ப்பு கிடைப்பதற்கு சட்டம் மற்றும் ஒழுங்கு முக்கியம் என்று பெரும்பான்மையானவர்கள் நினைத்தார்கள். எனவே, அந்த வகையில் சர்வகட்சி ஆட்சி அமைவது நல்லது என நான் கருதுகிறேன்.

**"பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும், மக்கள் எதிர்கொள்ளும் பாரிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நியாயமான கால அவகாசம் வழங்கப்பட வேண்டும்**

**கே: பாராளுமன்றத்திற்கு வெளியில் நிலவும் யதார்த்தம் முற்றிலும் வேறுபட்டது எனவும் மக்கள் பாரிய இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளதாகவும் எனவே இந்தப் பிரச்சினைகளுக்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் பல்வேறு தரப்பினரும் கூறுகின்றனர். நீங்கள் இது பற்றிக் கருத்து தெரிவிக்க விரும்புகிறீர்களா?**

பதில்: அது மிகவும் வெளிப்படையானது. அந்த யதார்த்தத்தை நீங்கள் ஏற்கவில்லை என்றால் நீங்கள் உங்கள் கனவு உலகில் வாழ்கிறீர்கள். மக்கள் அவதிக்குள்ளாகி தெருவில் நிற்கின்றனர். இவ்வாறான நிலையில் இலங்கையை அராஜகத்தை நோக்கிக் கொண்டு செல்ல ஒரு சிலர் முயற்சிக்கின்றனர். அதை நாம் அனுமதிக்க முடியாது. அதேநேரம், எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசைகள், உணவுப் பணவீக்கம், ரூபாய் மதிப்பு சரிவு மற்றும் அதிக உணவு விலைகள் மற்றும் மின்வெட்டு போன்றவற்றை மக்கள் எதிர்கொள்கின்றனர் என்பதும் உண்மை. இவை பற்றியே நாம் பேச வேண்டியுள்ளது. மக்களுக்கு உண்மையை விளக்கிக் கூற வேண்டியுமுள்ளது.

உதாரணமாக, எரிபொருளை இறக்குமதி செய்ய எமக்கு எவ்வளவு செலவாகும், எவ்வளவு கொடுக்க முடியும் என்பதை அவர்களுக்குச் சொல்ல வேண்டும். எனவே, அதற்குள் நிலைமையை முகாமைத்துவம் செய்வதற்கான வழிகளைக் கண்டறிய வேண்டும். இந்த நேரத்தில் அரசியல் ஆதாயங்களைப் பெற முயற்சிக்காமல் நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒரே சக்தியாக செயற்பட்டால், சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வரும்போது விநியோகச் சங்கிலி மீட்டெடுக்கப்படும். அதே நேரத்தில் நமது அண்டை நாடுகளின் நண்பர்களும் சர்வதேச சமூகமும் இந்த நிலையை மாற்ற உதவுவார்கள். அடுத்த ஆறு முதல் 12 மாதங்களுக்குள் ஓரளவுக்கு நிலைமையை சீர் செய்ய முடியுமாக இருக்கும்.

**"மக்கள் அவதிக்குள்ளாகி தெருவில் நிற்கும் நிலையில், நாட்டை அராஜகத்தை நோக்கிக் கொண்டு செல்ல ஒரு சிலர் முயற்சிக்கின்றனர். அதை அனுமதிக்க முடியாது. எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசைகள், உணவுப் பொருள் விலையேற்றம், பணவீக்கம், ரூபாய் மதிப்பு சரிவு, மின்வெட்டு போன்றவற்றை மக்கள் எதிர்கொள்கின்றனர். இவை பற்றியே நாம் பேச வேண்டியுள்ளது**

**கே: பாராளுமன்ற முறைமையின் மீது தற்பொழுது மக்கள் நம்பிக்கை இழந்து விட்டதாகவும், அரசியல் கலாசாரம் மாற்றப்பட வேண்டும் என்றும் கோரிக்கைகள் வலுத்து வருகின்றன. அப்படிச் செய்ய வேண்டிய அவசியம் இருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா?**

பதில்: வெளியே நடக்கும் விடயங்களுக்கும், பாராளுமன்றத்தில் உள்ள சிலர் என்ன நினைக்கிறார்கள் என்பதற்கும் இடையே தொடர்பற்ற நிலை இருப்பதாக நான் நினைக்கிறேன். எனவே, களத்தில் உள்ள மக்களுடன் தொடர்ந்து கலந்து பேசி அவர்களின் பிரச்சினைகள் என்ன என்பதைக் கண்டறிந்து அவற்றுக்கு தீர்வு காண முயற்சிக்க வேண்டும்.

(28ஆம் பக்கம் பார்க்க)

---




# சட்டத்தை கையிலெடுத்து வன்முறையில் ஈடுபட எவருக்குமே இடமளிக்கலாகாது!

இலங்கையில் கடந்த சில மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களை புரிந்து கொள்ள ஏன் முயற்சி செய்யவில்லை? மக்களால் நியமிக்கப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதி ஒருவர் முதல் தடவையாக இராஜினாமா செய்ததோடு, அதற்குக் காரணமான பின்னணி சிக்கலான ஒன்றாகும். கடந்து சென்றவற்றை மறக்கத் தேவையில்லை. பாடங்களைக் கற்பதற்காக உண்மையை ஆராய வேண்டும்.

மிரிஹானையில் இடம்பெற்ற மோதல் சம்பவங்கள் தொடக்கம் இடம்பெற்ற அனைத்து சம்பவங்கள் குறித்தும் முழுமையாக ஆராய ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும். தவறு யாருடையது என்று மாத்திரமல்ல, எங்கு தவறு விட்டோம் என்பது குறித்தும் புரிந்து கொள்ள முடியும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இராஜினாமா செய்த வேளையில் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லம், ஜனாதிபதி செயலாளர் காரியாலயம் மற்றும் பிரதமர் காரியாலயத்தை போராட்டக்காரர்கள் கைப்பற்றினார்கள். அங்கிருந்த உடைமைகளையும் அவர்கள் கவர்ந்து சென்றதாகக் கூறப்படுகின்றது.

அதிகாரத்தில் இருக்கும் போது கூட ஜனாதிபதி நாட்டை விட்டு வெளியேறத் தடை ஏற்படுத்தப்பட்டது. பிரதமரின் பிரத்தியேக இல்லம் தீவைத்து அழிக்கப்பட்டதோடு, இந்த தொடரான சம்பவங்களுக்கு முன்னர் பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. வீடுகள் மற்றும் சொத்துகள் எரிக்கப்பட்ட சம்பவங்களும் பல நிகழ்ந்தன.

சமூகத்தில் மனிதனை தாக்கிக் கொல்லும் அளவுக்கு பயங்கரமான நிலைமைக்கு மாறிய தன்மை விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். சொத்துக்களுக்கு தீவைத்தல் மோசமான குற்றமாகும். சட்டத்தை கையில் எடுத்து பயங்கரமான நடவடிக்கைகளில் ஈடுபட எவருக்கும் இடமளிக்கக் கூடாது. அரசாங்கத்தை கவிழ்க்கும் மற்றும் அரசுத் தலைமை நியமிக்கப்பட வேண்டிய முறை குறித்து அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த முறை அரசியல் ரீதியாக திருத்தப்படும் வரை அரசியலமைப்புக்கு மதிப்பளிக்க வேண்டும்.

அண்மைக் காலங்களில் முகம் கொடுத்த சம்பவங்கள் அரசுக்கு எதிரான அமைதியான போராட்டம் என காட்டிக் கொள்ள முயற்சி செய்யப்பட்டாலும், அதனால் படிந்த இரத்தக்கறை, ஏற்படுத்தப்பட்ட பீதி மற்றும் சட்டத்தை கையில் எடுத்த நடவடிக்கை என்பவற்றை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. ஊடக நிறுவனங்களுக்குள் நுழைந்து நடந்து கொண்ட விதம் ஊடக சுதந்திரத்தை, ஊடக கலாசாரத்தை மதிப்பவர்களின் மனதை பதறச் செய்தது.

வன்முறையைத் தூண்டுவதற்கான சந்தர்ப்பங்கள் பல நாடுகளிலும் பல நேரங்களிலும் இடம்பெற்றுள்ளன. அற்றால் ஏற்படும் ஆபத்துக்கள், விளைவுகள் பற்றி ஆராய வேண்டும். ஜனநாயக சமூகமாக இலங்கை கடந்த காலத்தில் இவ்வாறான சம்பவங்களின் பின்னணியை ஆராய்ந்துள்ளது. தெற்கில் போராட்டங்களின் பின்னர் இளைஞர்களின் விரக்திக்கு காரணத்தை அறிய ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டதோடு, வடக்கில் பயங்கரவாதத்தை தோற்கடித்த பின்னர் கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக்குழு நியமிக்கப்பட்டு விடயங்கள் ஆராயப்பட்டதை ஞாபகப்படுத்த வேண்டும்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னரும் அந்தச் சம்பவம் மற்றும் பாதுகாப்புப் பிரிவினரின் குறைபாடுகள் பற்றி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டு ஆராயப்பட்டது. இந்த அறிக்கைகளின் பரிந்துரைப்படி செயல் திட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை. ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை பின்பற்றியிருந்தால் இவ்வாறான நிலைமை ஏற்பட்டிருக்காது.

உலகில் ஏனைய நாடுகளிலும் மோதல், போராட்டம் அல்லது பயங்கரவாத நடவடிக்கைகளின் பின்னர் ஆய்வுகள் நடத்தப்பட்டன. அமெரிக்கா அதற்கு சிறந்த சாட்சி வழங்குகின்றது. செப்டெம்பர் 11 ஆம் திகதி உலக வர்த்தக மையத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து விசேட விசாரணையை நடத்தியது. முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தோல்வி அடைந்த பின்னர் வோஷிங்டன் நகரில் கலவரம் ஏற்பட்டது. அதனை தேர்தல் முடிவுகளை ஏற்றுக் கொள்ளாத மக்கள் நடத்தியதாக கருதப்பட்டது.

அச்சம்பவம் தொடர்பாக ஆராய சர்வ கட்சி பாராளுமன்ற தெரிவிக்குழு ஒன்று நியமிக்க யோசனை கூறப்பட்டது. ஆனால் பின்னர் டிமொகிரடிக் கட்சிப் பிரதிநிதிகள் 7 பேரும் ரிபப்ளிக் கட்சி பிரதிநிதிகள் இரண்டு பேரும் கொண்ட குழு ஒன்று விசாரணையை ஆரம்பித்தது. அதன் முதல் சுற்று முடிவடையும் வேளையில் தலைவர் மற்றும் உபதலைவர்கள் கூறியவாறு ஏழு நடவடிக்கைகள் கொண்ட திட்டமிட்ட செயலே அன்று நடைபெற்றதாக அறிவித்துள்ளது. எவ்வாறாயினும் விசாரணைகள் இன்னும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் பற்றிய விடயங்களை ஆராய்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றையோ அல்லது சர்வ கட்சி பாராளுமன்ற குழுவையோ நியமிக்க வேண்டும். யாரும் சாட்சி சொல்லக் கூடிய வகையில் பின்னணி உருவாக்கப்பட வேண்டியது நல்லது. இந்த சாட்சி விசாரணைகள் பகிரங்கமாக நடத்தப்பட வேண்டும். சமூக ஊடங்களில் காணப்படும் சுயவிபரம், 'வொய்ஸ் கட்' அல்லது விவாதங்களால் கூறப்படுகின்ற பழமைவாத கருத்துகளால் சமூகத்திற்கு எவ்வித பலனும் இல்லை. பொதுமக்களின் உண்மையான கருத்து எதிர்காலத்தில் மீண்டும் இவ்வாறான சம்பவங்களைத் தடுத்து ஜனநாயகத்தை உறுதி செய்ய காரணமாக அமையும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

### ஆகஸ்ட் 03 ஆம் திகதி 10.30 வரை

# பாராளுமன்ற கூட்டத் தொடர் ஒத்திவைப்பு

## அதி விசேட வர்த்தமானியும் வெளியானது

பாராளுமன்ற கூட்டத்தொடர் 28 ஆம் திகதி நள்ளிரவுடன் ஒத்திவைக்கப்படுவதாக ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தெரிவித்துள்ளார்.

வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 03ஆம் திகதி காலை 10.30 மணிக்கு பாராளுமன்றம் மீண்டும் கூடவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் (28) நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அரசியலமைப்பின் 70 (1) உறுப்புரைக்கமைய அவருக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களுக்கு அமைய பாராளுமன்றக் கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதுடன், ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடர் எதிர்வரும் ஓகஸ்ட் 03ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு ஆரம்பிக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 33 உறுப்புரையின் (அ) மற்றும் (ஆ) உப பிரிவுகளுக்கு அமைய பாராளுமன்றத்தின் ஒரு கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு புதிய கூட்டத் தொடர் ஆரம்பிக்கும்போது ஜனாதிபதி பாராளுமன்றத்தை வைபவரீதியாக ஆரம்பித்துவைத்து, அக்கிராசனத்தை ஏற்று அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை முன்வைப்பதற்கான வாய்ப்புள்ளது.

பாராளுமன்றக் கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டுவரப்படும்போது பாராளுமன்றத்தினால் முறையாக பரிசீலனை செய்யப்படாத வினாக்கள் மற்றும் பிரேரணைகள் இரத்தாவதுடன், பாராளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் அவை தொடர்பில் நிலையியற் கட்டளைகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் பாராளுமன்ற இணைப்புக் குழுக்கள், உயர் பதவிகள் பற்றிய குழு மற்றும் விசேட குழுக்கள் தவிர்ந்த ஏனைய குழுக்கள் புதிய கூட்டத்தொடரில் மீண்டும் புதிதாக நியமிக்கப்பட வேண்டும்.

விசேடமாக 2022 ஜனவரி 18ஆம் திகதி முதல் ஜூலை 28ஆம் திகதி வரை ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடர் காணப்பட்டதுடன், இக்காலப் பகுதியில் பாராளுமன்றம் 48 நாட்கள் கூடியுள்ளது.

# துவிச்சக்கர வண்டிகளின் பாவனைக்கு தனியான வழி

## கொழும்பு மாநகரசபை விசேட ஏற்பாடு



தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக கொழும்பு உள்ளிட்ட நகரங்களில் துவிச்சக்கர வண்டிகளின் பாவனை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக கொழும்பு வீதிகளில் துவிச்சக்கரவண்டிகளுக்கென தனியான வீதி ஒழுங்கையை அமைக்க கொழும்பு மாநகர சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக நேற்று கொழும்பு இலங்கை வங்கி அவென்யூவில் பாதசாரிகளுக்கு தனியான பாதை திறந்து வைக்கப்பட்டது.

துவிச்சக்கர வண்டிகளை தரித்து வைக்கவும் பாதுகாப்பான இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், கொட்டாஞ்சேனை ஜோர்ஜ் ஆர். டி. சில்வா மாவத்தையிலும் துவிச்சக்கரவண்டி பாதைகளை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகர சபை தெரிவித்துள்ளது.

# சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல்கள் உயர் முன்னேற்றம்

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளை நிவர்த்தி செய்து, சிறந்த பொருளாதார நடைமுறையை நாட்டில் ஏற்படுத்துவதற்காக அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளும் நோக்கத்தில் இடம்பெற்றுவரும் கலந்துரையாடல்கள் உயர் முன்னேற்றத்தை அடைந்துள்ளதாக ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெறும் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றத்தை அடைந்துகொள்ள வேண்டுமாயின், கடன் நிலைபேற்றுத்தன்மை குறித்து முறையானதொரு திட்டம் முன்வைக்கப்பட வேண்டி இருந்தது. கடந்த காலத்தில் காணப்பட்ட ஸ்திரதன்மையற்ற அரசியல் நிலைமை மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயற்படாத முன்னைய அரசாங்கத்தின் அரசியல் கொள்கை காரணமாக இது தடைப்பட்டிருந்தது.

தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில், முழுமையான அரசியல் ஸ்திரத்தன்மை கொண்ட அரசாங்கம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அதேபோன்று, சர்வகட்சி ஆட்சிக்கான அரசியல் பேச்சுவார்த்தைகளும் மிகவும் வெற்றிகரமான நிலையில் உள்ளன.

அதன்படி, சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக நிறைவு செய்து, நிதி ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு தேவையான முதற்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும்.

# மட்டு. தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் மோகன் பிணையில் விடுதலை

**வெல்லாவெளி தினகரன் நிருபர்**

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கடந்த 2021 ஆண்டு இணையத்தளங்களில் தடைசெய்யப்பட்ட விடுதலைப்புலிகள் அமைப்பின் படங்களை பதிவு செய்தமை தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட மட்டக்களப்பு தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கணவதிப்பிள்ளை மோகனை சட்டமா அதிபரின் ஆலோசனையில் நேற்று முன்தினம் (29) ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதவான் எஸ். அன்வர் சதாத் ஒரு இலட்சம் ரூபாவுடனான இரு சரீரப்பிணையிலும்,50 ஆயிரம் ரூபா காசு பிணையிலும் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த மே மாதம் 3ம் திகதி தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கணவதிப்பிள்ளை மோகனை ஏறாவூர் பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு அழைக்கப்பட்ட நிலையில் பொலிஸ் நிலையத்தில் வைத்து ஏறாவூர் பொலிசார் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவரை ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதையடுத்து அவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் சட்ட மாஅதிபரின் ஆலோசனைக்கமைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

# வெல்லாவெளி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இரு குழுக்களுக்கிடையில் கைகலப்பு

**மண்டூர் தினகரன் நிருபர்**

வெல்லாவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெல்லாவெளியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பில் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர்

சம்பவ தினத்தன்று எரிபொருளை பெறுவதற்காக இரு நாட்களாக நீண்ட வரிசையில் காத்திருந்தவர்களில் இருவருக்கிடையில் தங்களின் மோட்டார் வாகனங்களை நிரல்படுத்துவதில் ஏற்பட்ட வாய்தர்க்கம் கைகலப்பில் மாறியபோது மண்டூர் பிரதேசத்தை சேர்ந்தவர் ஒருவர் பலமாக தாக்கப்பட்டதையடுத்து சம்பவம் பற்றி வெல்லாவெளி பொலிஸாருக்கு சம்பவத்தை நேரில் கண்ட ஊடகவியலாளர் ஒருவரினர்ல தெரியப்படுத்ததையடுத்து ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் சம்பவத்தில பாதிக்கப்பட்டவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

கடந்த சில தினங்களாக வெல்லாவெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட இரண்டு எரிபொருள் நிலையங்களில் எரிபொருளுக்காக காத்திருக்கும் நபர்களுக்கிடையே கலவரம் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### மாணவர்களுக்கு 'பைசர்'...

சேர்ந்த மேற்படி மாணவர்களுக்கு நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயத்தில் வைத்து காலை 09 மணி முதல் 11 மணிவரை தடுப்பூசி ஏற்றப்பட்டது. நாட்டில் தற்போது கொரோனாவின் தாக்கம் மீள் எழுச்சி பெற்றுள்ளதையடுத்து மாணவர்களுக்கு இந்த தடுப்பூசி வழங்கப்பட்டமை சிறந்த செயலாக காணப்படுவதாக ஆசிரியர்களும், பெற்றோர்களும் தெரிவித்தனர். மாணவர்கள் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள மிகவும் ஆர்வமாக இருந்தமை குறிப்பிடதக்கது.

### வெல்லாவெளி... (continued sections)

### பாடசாலை மாணவர்களுக்கு...

நேரம் மற்றும் நிறைவடையும் நேரம் என்பனவற்றை கவனத்திற்கொண்டு இந்த புதிய பஸ் சேவை முன்னெடுக்கப்படுமென கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

### எரிபொருள் வரிசையில்...

விரதத்தை நிறைவு செய்வார்கள்.

சம்பவ தினமும் இவ்வாறு எரிபொருள் பெற்றுக்கொள்ள வரிசையில் காத்திருந்த ஒருவர் தமது விரதத்தை வீதியில் வைத்தே நிறைவுசெய்து கொண்டார்.

### ஜனாதிபதியின் ஊடக...

ஜனாதிபதி செயலகத்துக்கு செல்லும் வழியில் காலி முகத்திடலில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பில் அவர் கருத்துக்களை கேட்டறிந்து அங்கிருந்து வெளியேறியதாக தெரிவிக்கப்படுகிறது.

### SLFP யின் யோசனைகளுக்கு...

கருத்து தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பேச்சுவார்த்தையில் தற்போது சாதகமான பக்கம் ஒன்று தெரிவதாக கூறினார். அந்த விடயங்களை நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாகவே, இரண்டு வாரங்களில் தங்களது பாராளுமன்றக் குழுவை சந்திக்க எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி கூறியதாக, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க,

தற்போதைய சந்தர்ப்பத்தில், அரசியல் முரண்பாட்டுக்காக அல்லது அரசியல் கட்சிகளின் எதிர்காலத்துக்காக செயற்படுவதைத் தவிர்க்க வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, மக்களின் பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வைக் காண்பதற்காக, அனைத்து கட்சிகளும் இணைந்து ஏதேனுமொரு இணக்கப்பாட்டை ஏற்படுத்தி, குறுகிய கால அரசாங்கத்துக்கான வேலைத்திட்டத்தை தயாரிக்க வேண்டமென்பதே தங்களது கட்சியின் யோசனையாகுமென துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

## எங்கள் கருத்து

### ஜனநாயகத்தின் பெறுமானம் கட்டிக்காக்கப்பட வேண்டும்!

பிரிவினருமே புதிதான ஆட்சியதிகாரமொன்றை உருவாக்கிக் கொள்ள ஜனநாயக நாட்டில் இடமளிக்கப்படுவதில்லை. மக்கள் அளித்த ஆணைக்கு விரோதமாக அரசாங்கமொன்று செயற்படுமிடத்து, அந்த அரசாங்கத்தை அதிகாரத்திலிருந்து அகற்றுவது வன்முறையினால் அல்ல.

மக்கள் தங்களது தீர்ப்பை தேர்தலிலேயே வழங்க முடியும். அதுவரை மக்கள் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். நாட்டின் பெரும்பான்மை மக்களின் தீர்ப்பிலிருந்தே ஆட்சியாளர்கள் தீர்மானிக்கப்படுகின்றனர். இவ்வாறான ஜனநாயக பாரம்பரியத்துக்கு மாறான விதத்தில் எந்தவொரு தரப்பினராவது ஆட்சியை மாற்றியமைக்க விரும்பினால் அது தீவிரவாதத்துக்கே ஒப்பானதாகும்.

இலங்கையின் இன்றைய நிலைமையை எடுத்து நோக்குவோமானால், ஜனநாயகப் பாரம்பரியங்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. நாட்டில் சமீப காலமாக இடம்பெற்றுள்ள ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வன்முறைகள் யாவும் ஜனநாயக வரம்புகளையே மீறிய செயல்கள் ஆகும். நாட்டின் ஆட்சித் தலைவரின் வாசஸ்தலம், அவரது உத்தியோகபூர்வ செயலகம், பிரதமரின் தனிப்பட்ட இல்லம் ஆகியவற்றுக்குள் அத்துமீறிப் பிரவேசித்து அவற்றைக் கைப்பற்றிய ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கு விளைவித்துள்ள சேதங்கள் அநேகம். ஊடக அலுவலகமே ஆர்ப்பாட்டக்காரர்களால் அடிபணிய வைக்கப்பட்டது.

உலகில் எந்தவொரு ஜனநாயக நாடுமே இது போன்ற செயல்களை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. நாட்டில் சட்டம் ஒழுங்கைச் சீர்குலைத்து, ஒட்டுமொத்த மக்களின் பாதுகாப்பையே ஆபத்துக்குள் தள்ளிவிடும்படியான காரியங்கள் அரங்கேறியிருக்கின்றன. அமைதியை விரும்புகின்ற மக்கள் அடைந்த அச்சத்துக்கு அளவேயில்லை. இவ்வாறான சட்டமீறல்களுக்கு ஆதரவளிப்பதோ அல்லது பரிந்து பேசுவதோ கூட முட்டாள்தனமான செயலாகும்.

மக்கள் எழுச்சி என்பதன் பேரில் புறப்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், இறுதியில் மக்களின் பாதுகாப்பையே முற்றிலும் இல்லாமல் செய்துள்ளதற்கு உதாரணங்களாக சில நாடுகள் உள்ளன. அந்நாடுகளில் பல வருடங்கள் கடந்தும் இன்னுமே அமைதி திரும்பவில்லை. அராஜகம் நிலவுகின்ற நாடுகளிலிருந்தாவது இலங்கை பாடம் கற்பது இப்போது அவசியமாகின்றது.

### கப்பலில் எரிபொருள் வந்தும் ...

ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட அவர் இதனை கூறியுள்ளார். நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியை தீர்க்கும் நோக்கில் அவசரகால கொள்வனவுகளின் கீழ் இந்த டீசல் கப்பல் முன்பதிவு செய்யப்பட்டதாக அவர் கூறினார்.

எதிர்காலத்தில் எரிபொருளை முன்பதிவு செய்தாலும், டொலர்களை தேடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும், அதனால் வரையறுக்கப்பட்ட கையிருப்பு சந்தைக்கு கட்டுப்பாடுகளுடன் வெளியிடப்படுமெனவும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

### காலிமுகத்திடல் போராட்டத்தின்...

அன்றைய தினம் பிரபாகரனுடன் இணைந்து போராடிய அருட்தந்தைகள் போராட்ட களத்தில் காணப்பட்டதாகவும் அது தொடர்பான புகைப்படங்கள் இருப்பதாகவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கண்டியில் (28) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

புலம்பெயர் புலிகள் போராட்டத்தில் முன்னணியில் உள்ளதாகவும் அதன் உறுப்பினர் ஒருவர் அண்மையில் பகிரங்கமாக தெரிவித்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எமது வேலைத்திட்டத்தினால் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு விட்டு நாடு தாவ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக புலம்பெயர் தமிழ் மக்கள் அறிவித்துள்ள போதிலும் பிக்குகள் போராட்டத்துக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளமை வருந்தத்தக்கதென அவர் தெரிவித்துள்ளார்.

32 வருடங்களாக இடம்பெற்ற கொடூர யுத்தத்தில் 27,000 போர் வீரர்கள் கொல்லப்பட்டதாகவும், காயமடைந்த 64,500 பேரில் 14,500 பேர் தற்காலிக ஊனமுற்றுள்ளதாகவும் தர்ம சிறி தெரிவித்தார். போராட்டம் என்ற போர்வையில் நாட்டை சீர்குலைக்க முயற்சிக்கும் அனைத்து கிளர்ச்சியாளர்களையும் கைது செய்ய வேண்டமென்றும், ஜனாதிபதி செயலகத்துக்குள் ஊடுருவி கஞ்சா மற்றும் போதைப்பொருள் பயன்படுத்தியவர்களுக்கு புனர்வாழ்வளிக்க வேண்டமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### நானோ எனது குடும்பமோ...

தேசிய கல்வியியல் கல்லூரியின் காணி தற்போதைய மதிப்பு 60 கோடி வரை வரும். அதனை நன்கொடையாக வழங்கிய எனக்கு பணம் பெரிதல்ல. பணத்துக்காக செயற்படுவதில் எனக்கோ எனது குடும்பத்துக்கோ உடன்பாடில்லை.

கடந்த காலத்திலும் கூட்டமைப்பின் தலைமைக்கு கோடிக்கணக்கான பணம் வழங்கப்பட்டதாக செய்திகள் பரப்பப்பட்டன. இவ்வாறான கதைகள் வரக் காரணம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை மலினப்படுத்துவதேயாகும். இதனை சக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களே செய்வதை ஏற்கமுடியாது.

எந்தச் சந்தர்ப்பத்திலும் எப்போதும் நான் யாரிடமும் பணம் பெற்றது கிடையாது. இவ்வாறான கதைகளை கூறுவதன் மூலம் எங்களை விட கூடுதலான விருப்பு வாக்கை பெற்றுக் கொள்ள முடியமென்பது தவறு ,தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கே வாக்குகள் இல்லாது போகும்.

இன்று மிகப்பலம் பொருந்திய கட்சியாக காணப்படுகின்ற இந்த கட்சியை உடைப்பதன் மூலம் நிச்சயமாக தமிழ் மக்களுடைய அபிலாசைகள் அனைத்தையும் உடைப்பதற்கே காரணமாக அமையும். இது சிங்கள தேசியத்துக்கும் பேரினவாதிகளுக்கும் உதவி செய்வதாகவே நான் பார்க்கிறேன்.

இன்னொரு விடயம், நிச்சயமாக என்னை பொறுத்தவரை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எப்பொழுதும் எவரிடமோ பணம் பெற்று நான் வேலை செய்வதில்லை. நான் மாறாக ஒரு நன்மை செய்யப்போகிறேன் என்று பணம் வாங்கியதுமில்லை.

நான் என்னை பற்றி சொல்ல வேண்டிய தேவையில்லை. மக்களுக்கு என்னை பற்றி நன்றாக தெரியும்.

எங்களுடைய கடந்த காலங்களை பார்க்கின்ற பொழுது யாழ்ப்பாணத்தில் அனைவருக்கும் தெரியும்.

நாங்கள் எப்படி செயல்பட்டிருக்கின்றோம் என்தை அவர்கள் அறிவார்கள். ஆகவே நான் இதனை கூறத் தேவையில்லை. ஆனால் இவ்வாறான வதந்திகள் வருகின்ற போது நான் கூற வேண்டிய கடமையும் இருக்கின்றதென்றும் தெரிவித்துள்ளார்.

### வைத்தியரை நாடுமாறு ...

காணப்பட்டால் உடனடியாக அருகிலுள்ள அரச வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

லேடி றிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் சன்ன டி சில்வா இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளார். நாட்டில் தற்போது மீண்டும் அதிகரித்துள்ள கொரோனா, டெங்கு தொற்று அல்லது வேறு வைரஸ் காய்ச்சலால் இந்த நிலை ஏற்படக் கூடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார் .

### ஜனாதிபதியின் கொடியை...

ஆக்கிரமித்தபோது, இந்த நபர் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ கொடியைத் திருடிச்சென்றுள்ளார்.

இந்நபர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இலட்சினை கொடியை, படுக்கை விரிப்பாக பயன்படுத்தி சமூக வலைத்தளத்தில் காணொளிகளையும் பகிர்ந்திருந்தார்.

சி.சி.டி.வி. காணொளிகளை ஆதாரமாக்கொண்டு பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் வெல்லம்பிட்டி பகுதியைச் சேர்ந்த 54 வயது நபரென பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான சந்தேகநபர், ஐக்கிய மக்கள் சக்தியின் துறைமுக தொழிற்சங்கத்தின் முன்னாள் தலைவர் களுதந்திரிகே உதேனி ஜயரத்ன என பொலிஸார் தெரிவித்தனர்.

### ஜனாதிபதி மாளிகையில்...

05ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த 09ஆம் திகதி கொழும்பு ஜனாதிபதி மாளிகையை போராட்டக்காரர்கள் முற்றுகையிட்ட போது சந்தேகநபர் இந்த அயர்ன் பொக்ஸை திருடிச் சென்றதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதன்படி, கொழும்பு 13 பகுதியைச் சேர்ந்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, அலரி மாளிகையில் இரண்டு தொலைக்காட்சிகளை திருடியதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

### எம்.பிக்களின் வயதெல்லை...

தாண்டியும் அரசியலில் இன்றும் இருக்கின்றனர். பாராளுமன்ற உறுப்பினர்களின் வயதெல்லை வரையறுக்கப்படவில்லை.

எங்கு அந்த தவறு விடப்பட்டிருக்கிறது? என்று தெரியவில்லை 04 தடவைகள் மாத்திரம் தான், பாராளுமன்றத்துக்கு போட்டியிடலாம் என்ற வரையறை ஏன் விதிக்கப்படக்கூடாதென தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை, தேர்தல் ஆணைக் குழுவின் விருப்பத்துக்கமைய தேர்தலை நடத்துவதற்கு அதிகாரம் இல்லை. வீசப்பட்ட பந்தில் துடுப்பாட்ட வீரர் ஆட்டமிழந்துள்ளாரென நடுவர் அறிந்திருந்த போதிலும், ஆட்டமிழப்பு கோரிக்கை விடுக்கப்பட்டால் மாத்திரமே அவரால் தீர்ப்பு வழங்கப்படும்.

அதுபோலதான், கோரிக்கை விடுக்கப்படாமல் தேர்தல் ஆணைக் குழுவினால் நடவடிக்கை எடுக்க முடியாது. இங்கு ஆணைக்குழு உறுப்பினர்களே நடுவர்ளென மஹிந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்துள்ளார்.

### 19ஐ விஞ்சும் புதிய திருத்தம்...

எனினும் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 22 ஆவது திருத்தத்துக்கு உப இணைப்புகள் சிலவற்றை உள்ளடக்கினார்.

அது மீண்டும் நிறைவேற்று அதிகாரத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக விமர்சனங்கள் எழுந்தன.

எனினும், இப்போது அரசாங்கம் முழுமையாக மாறியுள்ள காரணத்தினால் மீண்டும் அமைச்சரவையில் யோசனை ஒன்றை முன்வைத்து முன்னாள் ஜனாதிபதி முன்வைத்த இணைப்புகளை நீக்கி மீண்டும் 19 ஆவது திருத்தத்தில் கொண்டுவரப்பட்ட விடயங்களையும், அதிலிருந்த பலவீனமான சரத்துக்களை நீக்கி 19 ஆவது திருத்தத்தை விஞ்சிய புதிய திருத்தமொன்றை கொண்டுவர அறிவுறுத்தியுள்ளேன்.

இச் சட்டமூலம் அமைச்சரவை அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. திங்கட்கிழமை அமைச்சரவையில் அனுமதியை பெற்ற பின்னர் வர்த்தமானி அறிவித்தலுக்கு விடவும், அடுத்த ஏழு நாட்களில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இது குறித்து சகல தரப்புடனும் கலந்துரையாடி சகலராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் அரசியலமைப்பு திருத்தத்தை கொண்டுவரவும், அதேபோல் பாராளுமன்ற தெரிவுக்குழு வொன்றை அமைத்து நாட்டுக்கு பொருத்தமான புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்கவும் அமைச்சரவையில் இணக்கம் காணப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியிடம் இருக்க வேண்டமென்பதில் மாற்றம் இல்லை, இந்த அரசியலமைப்பின் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சு மாற்றப்பட வேண்டுமென்றால் சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்ல வேண்டும். அதற்கு இப்போது வாய்ப்பில்லை என்றார்.

# ஒரு வருட நிறைவைக் காணும் வவுனியா பல்கலைக்கழகம்









நிலையான தரமுள்ள உயர் கல்வியை வழங்குவதும், பிராந்தியத்தினதும், நாட்டினதும் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்வதும், சமூகம் சார்ந்த விடயங்களில் ஆய்வுகளை மேற்கொள்வதுமே பல்கலைக்கழகங்களின் தூரநோக்காகும். இந்த நிலையில் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட வவுனியா பல்கலைக்கழகம் அதன் துணை வேந்தர் பேராசிரியர் தம்பு மங்களேஸ்வரனின் தலைமையில் பல்வேறு விடயங்களில் சமூகத்துடன் நெருக்கமாகச் செயற்பட்டு வருகின்றது.

முக்கியமாக நாட்டின் அவசியத் தேவையாகிய நல்லிணக்கம் நல்லுறவை நாட்டின் அனைத்து சமூகங்களையும் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றச் செய்து அதன் ஊடாக சமூகத்தில் நல்லிணக்கத்தையும் நல்லுறவையும் மேம்படுத்துவதற்கான முயற்சியில் நல்லிணக்க நிலையம் ஒன்று அந்தப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

தென்னாசியப் பிராந்தியத்தில் நீண்டதொரு ஜனநாயகப் பாரம்பரியத்தைக் கொண்ட நாடாகக் கருதப்படுகின்ற இலங்கையில் சமூகங்களிடையே நல்லுறவை வளர்த்தெடுப்பதற்கான தேவை நீண்டகாலமாவே நிலவி வருகின்றது. அதனை நிறைவேற்றும் வகையில் வவுனியா பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டுள்ள நல்லிணக்க நிலையம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கவனத்தை ஈர்த்திருக்கின்றது. அதனையடுத்து. ஏனைய பல்கலைக்கழகங்களிலும் இத்தகைய நல்லிணக்க நிலையத்தை உருவாக்குமாறு ஆணைக்குழு சுற்றறிக்கை ஒன்றின் மூலம் அறிவித்திருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

மாணவர்கள் மத்தியில் மட்டுமல்லாமல், சமூகத்தில் பல்வேறு மதத்தலைவர்கள், கலாசார மட்டத்திலான சமூக அமைப்புக்கள் உள்ளிட்ட பல நிலைகளில் பல்வேறு நிகழ்வுகளின் ஊடாக இந்த நல்லுறவுச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது. அதன், ஓர் அம்சமாக பெண்கள் அரசியலில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் வகையில் அரசியலில் பெண்கள் என்றதொரு கல்வி நெறியை ஆரம்பிப்பதற்கும் திட்டமிடப்பட்டிருப்பதாக இந்த நிலையம் குறித்து விளக்கமளித்த பேராசிரியர் மங்களேஸ்வரன் கூறினார்.

முதலில் வடமாகாண இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியாக 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டு, ஆறு வருடங்களில் 1997 ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாகமாக பிரயோக விஞ்ஞான பீடம், வியாபார கற்கைகள் பீடம் என இரண்டு பீடங்களுடன் இந்த உயர்கல்வி நிலையம் தரமுயர்த்தப்பட்டது. பின்னர் 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி வவுனியா பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்தப்பட்டது. இந்தப் பல்கலைக்கழகம் தனது உயர்கல்விப் பயணத்தில் முதலாம் ஆண்டை நாளை ஆகஸ்ட் முதலாம் திகதி பூர்த்தி செய்கின்றது.

பிரயோக விஞ்ஞான பீடம், வியாபார கற்கைகள் பீடம், தொழில்நுட்பப் பீடம் என மூன்று பீடங்களுடன் பல்கலைக்கழகமாகத் தனது கன்னிப் பயணத்தைத் தொடங்கியுள்ள இந்த உயர் கல்வி நிறுவனத்தில் நாட்டின் அனைத்து கலாசார, மதங்கள் மற்றும் இனங்களையும் சேர்ந்த இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றார்கள். முன்னூறுக்கும் மேற்பட்ட கல்விசார், கல்விசாராத ஊழியர்கள் இங்கு பணியாற்றுகின்றார்கள்.

இந்தப் பல்கலைக்கழகத்தின் உட்கட்டமைப்புக்கான கட்டிட வசதிகளை ஏற்படுத்துவதற்குரிய வேண்டுகைகள் விடுக்கப்பட்டுள்ள போதிலும் அதற்கான முதலீட்டு நிதியொதுக்கீடுகள் அரசிடமிருந்து கிடைக்கவில்லை. பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்தப்பட்டதையடுத்து, இங்கு அவசியமான வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் நாட்டைத் தாக்கிய கொவிட் 19 நோய்ப் பேரிடர் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்தப் பல்கலைக்கழகத்தின் நிர்மாணத்துறைக்கு அவசியமான முதலீட்டு நிதியொதுக்கீட்டை அரசு செய்யவில்லை. இது பல்கலைக்கழகத்தினர் மத்தியில் கவலையை ,ஏற்படுத்தியுள்ளது.

ஆயினும் பற்றாக்குறைகள் மற்றும் சவால்களுக்கு மத்தியில் கடந்த ஒரு வருட காலத்தில் வவுனியா பல்கலைக்கழகம் பல்வேறு செயற்திட்டங்களை மேற்கொண்டிருக்கின்றது. அவற்றில் நாட்டின் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு முன்மாதிரியான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

வவுனியா பல்கலைக்கழகத்தின் கல்விநெறிகள் யாவும் ஆங்கில மொழிமூலமாகவே நடத்தப்படுகின்றன. இந்த நிலையில் உலக நாடுகளின் சிறந்த பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்து அதன் ஊடாக கல்விசார் பரிமாற்றங்களை மேற்கொள்வதற்கு சர்வதேச அலகு ஒன்றும் உருவாக்கப்பட்டிருக்கின்றது. இதன் ஊடாக இப் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும், கல்விசார் ஊழியர்களுக்கும் உலக நாடுகளில் உள்ள பல்கலைக்கழக மாணவர்கள் கல்விசார் ஊழியர்களுக்கும் இடையில் பரிமாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டிருக்கின்றது.

பல்கலைக்கழகங்கள் பொதுவாக மாணவர்களுக்குக் கற்பிப்பதுடன் பட்டமளிப்பதையே பிரதான நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. ஆனால் வவுனியா பல்கலைக்கழகம் அதனின்று ஒரு படி முன்னோக்கிச் சென்று கடந்த ஒரு வருட காலத்தில் பல்கலைக்கழகத்திற்கும் வியாபார சமூகத்துக்கும் இடையிலான ஒரு தொடர்பை ஏற்படுத்தி இருக்கின்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை ஒன்றிற்கமைய உலக வங்கித் திட்டத்தின் கீழ் இந்தப் பிரிவு உருவாக்கப்பட்டிருக்கின்றது.

அத்துடன் சமூகச் செயற்பாடுகளில் அறிவுசார் நிலையில் ஈடுபடவும் நிறுவன ரீதியில் சமூகத்திற்கான பணிகள் சேவைகளை முன்னேற்றுவதற்கும் வசதியாக தனியார் நிறுவனங்கள் பலவற்றுடன் வவுனியா பல்கலைக்கழகம் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றது.

விசேட தேவையுடையவர்களும் உயர் கல்வி வாய்ப்பைப் பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேறுவதை உறுதி செய்வதற்கும், அவர்களுக்கு உதவும் வகையிலும், விசேட தேவைக்கு உட்பட்டவர்களுக்கான உதவி நிலையம் ஒன்றும் உருவாக்கப்பட்டிருக்கின்றது. சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களாகவும் உதவிகளின்றி ஒதுங்கியும் வாழ்கின்ற விசேட தேவைக்கு உட்பட்டவர்களும் பல்கலைக்கழகக் கல்வியில் இணைந்து கொள்வதை உறுதிப்படுத்தி ஊக்குவிக்கும் நோக்கத்தைக் கொண்டதாக இந்த நிலையம் அமைக்கப்பட்டிருக்கின்றது. புதிய கல்வித்துறைக்கான பீடங்களை உருவாக்கும் முயற்சியில் மருத்துவம், சூழலியல், மானுடவியல் சமூகவியல், ஊடகவியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலான கல்விநெறிகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. மருத்துவ பீடத்திற்கென 35 ஏக்கர் காணியும் அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள வங்கியியலும் காப்புறுதியும் என்பதற்கான கற்கை நெறியில் 2021 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தாராத உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(18ஆம் பக்கம் பார்க்க)

பி.மாணிக்கவாசகம் ...




வெளிநாட்டிலிருந்து அனுப்பும் பணத்திற்கு

BOC Smart Remit ஊடாக பிட்ட பிட்ட பரிசில்களை வெல்ல வாய்ப்புகளை வழங்கும் BOC பிட்ட பிட்ட ரட்ட தேகி சீசன் 3 உடன் இணையும் அனைவருக்கும் வருடம் முழுவதும் பல வெற்றி வாய்ப்புகள்.

சுப்பர் பரிசு — 3 கோடி ரூபாய் பெறுமதியான சுப்பர் வீடு

மாதாந்தம் — தங்கக் காசுகள்

வாராந்தம் — 100,000/- ரூபாய் பெறுமதியான மின்சார மற்றும் வீட்டு உபகரணங்களுக்கான பரிசு வவுச்சர்

நாளாந்தம் — 10,000/- ரூபாய் பெறுமதியான சுப்பர் மார்க்கட் பரிசு வவுச்சர்

விரையுங்கள்! இவ்வாய்ப்பு 2022 ஏப்ரல் 1 ஆம் திகதியிலிருந்து 2023 மார்ச் 31 வரை மட்டுமே

இலங்கை வங்கிக்கு நேரடியாகப் பணம் அனுப்புதல் மற்றும் வங்கியின் காசுக் கரும பீடத்திலிருந்து பண அனுப்பீடுகளை பெற்றுக் கொள்வதன் ஊடாக தகுதி பெறலாம்.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

1975 BOC CALL CENTRE
www.boc.lk

தலைமை அலுவலகம், BOC சதுக்கம்,
இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்



# இன்றைய சவால்களை முறியடிப்பதற்கான புதியதொரு ஆரம்பம்!

## ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடர் முடிவு

**அரசியலாக இருந்தாலும் சரி, வியாபாரமாக இருந்தாலும் சரி அனைத்துக்கும் புதியதொரு ஆரம்பம் உத்வேகத்தை அளிப்பதாக அமையும். தற்பொழுது நாட்டில் காணப்படும் சவால்களுக்கு மத்தியில் புதியதொரு ஆரம்பத்துக்கான தேவை உணரப்பட்டுள்ளது.**

மாற்றம் வேண்டும் எனக் கோரி மக்கள் போராட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில், புதியதொரு ஆரம்பத்துக்கான தேவை உணரப்பட்டுள்ளது. நாட்டை சிக்கல்களிலிருந்து மீட்டெடுப்பதற்குத் தலைமைத்துவம் வகிக்க முன்வந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் புதியதொரு பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

சவால்களுக்கு மத்தியில் பிரதமர் பதவியை ஏற்றிருந்த அவர், தற்பொழுது நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்று நாட்டின் சவால்களுக்கு விடைதேடும் பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

இந்தப் பயணத்துக்குப் புத்தூக்கமான ஆரம்பத்தைப் பெறும் நோக்கில் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, புதிய நோக்கத்துடன் மூன்றாவது கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ளது. அரசியலமைப்பின் 70 (1) ஆம் பிரிவின்படி பாராளுமன்றக் கூட்டத்தொடரினை இடைநிறுத்தும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கடந்த 28 ஆம் திகதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரை ஜனாதிபதி முடிவுக்குக் கொண்டு வந்திருந்தார்.

எதிர்வரும் 03 ஆம் திகதி 10 மணிக்கு ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடர் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. பாராளுமன்றக் கூட்டத்தொடரை முடிவுக்குக் கொண்டு வருவது என்பது புதியதொரு ஆரம்பம் எனக் கூற முடியும்.

அதுவரை பாராளுமன்றத்தில் இருந்த பெரும்பாலான குழுக்கள் யாவும் இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் நியமிக்கப்பட்டு பணிகள் முன்னெடுக்கப்படும். இது தவிரவும் கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு புதிய கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்படும் போது அரச தலைவர் அதாவது ஜனாதிபதி பாராளுமன்றத்துக்குத் தலைமை வகித்து கொள்கைப் பிரகடன உரை நிகழ்த்துவார்.

தமது அரசாங்கம் எதிர்காலத்தில் முன்னெடுக்கவிருக்கும் திட்டங்கள் குறித்த விளக்கத்தை ஜனாதிபதி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நாட்டு மக்களுக்கும் தெளிவுபடுத்துவார். கொள்கைப் பிரகடன உரைநிகழ்த்தும் போது மாத்திரம் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் சபாநாயகரின் அக்கிராசனத்தில் அமர்ந்து உரைநிகழ்த்த முடியும்.

அரசியலமைப்பின் 33 (2) ஆவது பிரிவு பாராளுமன்றதின் அமர்வு ஒவ்வொன்றினதும் ஆரம்பத்திலும் அரசாங்கக் கொள்கைக் கூற்றை வாசிப்பதற்கும், பாராளுமன்றத்தின் சடங்குமுறையான இருக்கைகளில் தலைமை தாங்குவதற்கும் ஜனாதிபதிக்கு அதிகாரம் அளிக்கிறது.

பாராளுமன்ற வரலாற்றை எடுத்துக் கொண்டால் 1947 ஆம் ஆண்டு முதல் 50 இற்கும் மேற்பட்ட தடவை பாராளுமன்ற கூட்டத் தொடர்கள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுப் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 1978 ஆம் ஆண்டின் பின்னர் மாத்திரம் 26 தடவைகளுக்கு மேல் கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

> **மூன்றாவது கூட்டத்தொடர் உத்தியோகபூர்வமாக எதிர்வரும் 03 ஆம் திகதி ஆரம்பம்; அரசின் எதிர்காலத் திட்டங்களை ஜனாதிபதி தெளிவுபடுத்துவார்**

ஆளுநர் சேர். கென்றி மொங் மாசொன் மூர் தலைமையில் முதலாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரானது வைபவரீதியாக 1947 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 14 ஆம் திகதி அன்று ஆரம்பிக்கப்பட்டது. இங்கு ஆளுநர் அவர்களின் சிம்மாசன உரை இடம்பெற்றது.

இரண்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது அமர்வு இரண்டாவது எலிசபெத் மகாராணி அவர்களினால் 1954 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 12 ஆம் திகதி வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இங்கு மகாராணியின் சிம்மாசன உரை அரசாங்கத்தினால் சபையில் வாசிக்கப்பட்டது. அதன் பின்னரான காலப்பகுதியில் பாராளுமன்றத்தின் கூட்டத்தொடர்கள் வைபவ ரீதியாகவும் வைபவ ரீதியற்றமுறையிலும் ஆரம்பிக்கப்பட்ட பல சந்தர்ப்பங்கள் உள்ளன.

1978 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 7 ஆம் திகதி புதிய அரசியல் யாப்பு பிரகடனப்படுத்தப்பட்டதன் மூலம் ஜனாதிபதியின் சிம்மாசன உரைக்குப் பதிலாக அரசின் கொள்கைப் பிரகடன அறிக்கை வாசிக்கப்படும்.

ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவி ஏற்றதன் பின்னர் முடிவுக்குக் கொண்டுவந்த இரண்டாவது பாராளுமன்றக் கூட்டத் தொடராக இது காணப்படுகிறது. இதற்கு முன்னர் எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை அவர் முடிவுக்குக் கொண்டு வந்து நான்காவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்திருந்தார்.

இந்த நிலையில் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடர் மிகவும் எதிர்பார்ப்பு மிகுந்ததாகக் காணப்படுகிறது. இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக பாராளுமன்றத்தின் மூலம் ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், புதிய ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றக் கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து கொள்கைப் பிரகடன உரை நிகழ்த்தவுள்ளார்.

நாட்டின் பொருளாதார நிலைமைகள் குறித்து கடந்த சில மாதங்களாக அடிக்கடி பாராளுமன்றத்துக்கு அறிவித்துவரும் அவர், எதிர்காலத்தில் எவ்வாறான திட்டங்களைத் தமது அரசாங்கம் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கின்றது என்பதை இதில் தெளிவுபடுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக மக்கள் எதிர்கொள்ளும் எரிவாயு, எரிபொருள் பிரச்சினைக்கான தீர்வுகள், நீண்ட காலத்தில் நாட்டை ஸ்திரமான பொருளாதார நிலைமைக்குக் கொண்டு வருவதற்கு எடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகள் உள்ளிட்ட பலவிடயங்கள் குறித்து அவர் தனது உரையில் பிரஸ்தாபிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவற்றுக்கும் அப்பால், பாராளுமன்ற ஜனநாயகக் கட்டமைப்பில் எப்பொழுதும் அதிக நம்பிக்கை கொண்டுள்ள நபராகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க காணப்படுகிறார். ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் பாராளுமன்றத்தில் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்தபோது கூட இவ்விடயத்தை வலியுறுத்தியிருந்தார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை மாற்றம் செய்யப்படுவதுடன், பாராளுமன்றத்தின் குழு முறைமை மேலும் பலப்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தார். அமைச்சரவை பாராளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூறக் கூடியதாக இருக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

எனவே, ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரில் மேலும் பல பாராளுமன்றக் குழுக்கள் நியமிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் கொண்டுவரப்பட்ட துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் காலத்தில் இடைநிறுத்தப்பட்டிருந்தன. இவற்றை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார். இது மாத்திரமன்றி நிதி விடயத்தைக் கண்காணிப்பதற்கு மேலும் புதிய குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறியிருந்தார். இவ்வாறான நிலையில் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரானது ஜனநாயகத்தை மேலும் பலப்படுத்துவதற்கான புதியதொரு ஆரம்பமாக இருக்கும் என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

**பி.ஹர்ஷன்...**

---



# பா.ஜ.கவின் 'சமத்துவ இந்தியா' கொள்கைக்கு கிடைத்த வெற்றி

## பிரதமர் நரேந்திர மோடியின் செல்வாக்கை மீண்டுமொரு தடவை நிரூபித்திருக்கும் திரௌபதி முர்முவின் வெற்றி!

**பா.ஜ.க கூட்டணியின் வேட்பாளர் திரௌபதி முர்மு இந்திய குடியரசுத் தலைவர் தேர்தலில் பெருவாரியான வாக்கு மதிப்புகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, 15– ஆவது குடியரசுத் தலைவராகியிருக்கிறார். இந்த வெற்றியின் மூலம், ₹இந்தியாவின் பழங்குடியினத்தைச் சேர்ந்த முதலாவது குடியரசுத் தலைவர்' என்ற புகழையும் அவர் அடைந்திருக்கிறார்.**

இந்த வெற்றியானது பல கோணங்களிலும் நோக்கக் கூடியதாகும். பா.ஜ.கவின் அரசியல் செல்வாக்குக்குக் கிடைத்த பெருவெற்றி இதுவென்பது முதலில் நோக்கக் கூடியதாகும். அதாவது பா.ஜ.கவினால் முன்மொழியப்பட்ட வேட்பாளரான திரௌபதி முர்முவுக்கு கட்சி பேதங்களைக் கடந்து ஏராளமானோர் வாக்களித்துள்ளனர். பா.ஜ.கவுக்கு எதிரான கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் இத்தேர்தலில் திரௌபதி முர்வுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பா.ஜ.க மீதான அபிமானம் மற்றும் முர்மு மீதான நம்பிக்கை ஆகியனவே அவர்களின் தீர்மானத்துக்கான காரணம் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அதேசமயம் பிரதமர் நரேந்திர மோடியின் அரசியல் செல்வாக்கானது இந்தியாவின் அனைத்துக் கட்சிகளின் மத்தியிலும் பரவிக் கிடப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரௌபதி முர்மு இந்தியாவின் பழங்குடி இனத்தைச் சேர்ந்த பெண் ஆவார். பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவின் அனைத்துப் பிரிவினரையும் சமமாக போற்றி மதிக்கக் கூடிய தலைவரென்பதையும் இத்தேர்தல் முடிவு புலப்படுத்துவதாக உள்ளது. பா.ஜ.க என்பது ஒட்டு மொத்த இந்தியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சி என்பதை பிரதமர் நரேந்திர மோடி நிரூபித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற திரௌபதி முர்மு இந்தியாவின் குடியரசுத் தலைவராக பதவியேற்பதற்கு முன்னதாக டெல்லியில் மகாத்மா காந்தி நினைவிடத்தில் மரியாதை செலுத்தினார். குடியரசுத் தலைவராக பதவி ஏற்றிருக்கும் இவருக்கு அனைத்துக் கட்சித் தலைவர்களும் வாழ்த்து தெரிவித்தனர். நாட்டின் 2 ஆவது பெண் குடியரசுத் தலைவர் என்ற பெருமையையும் அவர் பெற்றிருக்கிறார்.




> **அன்புக் கணவரும், இரண்டு பிள்ளைகளும் சில வருடங்களிலேயே மரணமான பின்னர் ஆறாத்துயரில் வாடிய முர்மு, தனது முயற்சியினாலும் தொண்டுப் பணிகளாலும் மக்கள் போற்றும் பெண்ணாக உயர்ந்தார்**

## ஒரிசாவின் பழங்குடியின கிராமப் பெண்ணாகவிருந்து, குடியரசுத் தலைவர் பதவி வரை திரௌபதி முர்மு கடந்து வந்த பாதை!

பதவியேற்ற பிறகு பேசிய அவர், "நாட்டின் குடியரசுத் தலைவராக முதல் பழங்குடி இனப் பெண்ணாக தேர்ந்தெடுக்கப்பட்டதில் மகிழ்ச்சி அடைகின்றேன். நாட்டு மக்களின் வளமான எதிர்காலத்துக்காகப் பணியாற்றுவேன். இந்தப் புதிய பொறுப்பை நிறைவேற்ற உங்கள் நம்பிக்கையும் ஆதரவும் எனக்குப் பெரும் பலமாக இருக்கும். சாதாரண கவுன்சிலராகத் தொடங்கி இந்தியாவின் குடியரசுத் தலைவராக உயர்ந்தது ஜனநாயகத்தின் மகத்துவம்.

ஏழை வீட்டில் மகளாகப் பிறந்த நான், நாட்டின் குடியரசுத் தலைவர் ஆக முடியும் என்பதுதான் ஜனநாயகத்தின் சக்தி. பெண்கள் மற்றும் இளைஞர்கள் நலனில் தனிக் கவனம் செலுத்துவேன். என்னுடைய உயர்வு கோடிக்கணக்கான பெண்களின் கனவுகளுக்கான திறவுகோலாக இருக்கும். இந்த நேரத்தில் என்னைத் தேர்ந்தெடுத்த எம்.பிக்கள், எம்.எல்.ஏக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" எனக் குறிப்பிட்டார்.

"கொரோனா காலகட்டத்தில் உலகத்துக்கே இந்தியா பெரும் நம்பிக்கையாகத் திகழ்ந்தது. சுதந்திரப் போராட்டத்தில் பழங்குடியின மக்கள் முக்கிய பங்காற்றியிருக்கிறார்கள். அனைத்துத் தரப்பு மக்களையும் ஒன்றிணைத்து, பாரதத்தைக் கட்டி எழுப்ப முனைப்புடன் செயல்படுவோம். நாட்டு மக்களின் வளமான எதிர்காலத்துக்காகப் பணியாற்றுவேன்" என்றார் முர்மு.


முர்முவின் வெற்றியைக் கொண்டாடும் கிராமத்துப் பெண்கள்

கிராமத்துச் சூழலில் பிறந்து வாழ்ந்த திரௌபதி முர்முவின் வாழ்வு வியப்பூட்டவல்லது. ஒரிசா பழங்குடிகள் பாடசாலையில் 7 ஆம் வகுப்பு வரை பயின்றுள்ளார் திரௌபதி. அப்போது அந்தக் கிராமத்தில் இருந்து பாடசாலையில் படிக்கும் ஒரே பெண்ணாக அவர் இருந்துள்ளார். நன்கு படித்த திரௌபதி அடுத்து புவனேஸ்வரில் உள்ள ரமா தேவி மகளிர் கல்லூரியில் சேர்ந்து கல்வியை தொடர்ந்துள்ளார். சிறுவயது முதல் துணிச்சலுடன் பேசி எதையும் தைரியமாக அணுகும் வழக்கம் அவருக்கு உண்டு. அதே காலகட்டத்தில் புவனேஸ்வரின் மற்றொரு கல்லூரியில் படித்தவர் ஷியாம் சரண். இவருக்கு திரௌபதியை மிகவும் பிடித்து விட்டது.

படிப்பை முடித்து விட்டு வங்கி பணியில் சேர்ந்தார் ஷியாம். ஒரு நாள் திரௌபதியின் உபர்பேடா கிராமத்து வீட்டுக்கு உறவினர்கள் சிலருடன் பெண் கேட்டுச் சென்றுள்ளார். அவர்களது காதல் விவகாரத்தை கேள்விப்பட்ட திரௌபதியின் தந்தை பிரஞ்சி நாராயண் துடு, மிகவும் கோபப்பட்டார்.

ஷியாமுக்கு தனது மகளை மணமுடித்துக் கொடுக்கவும் மறுத்து விட்டார்.

(28ஆம் பக்கம் பார்க்க)

**எஸ்.சாரங்கன்...**

# ஜனாதிபதி ரணிலின் தலைமைத்துவத்தில் பாராளுமன்றம் கொண்டுள்ள நம்பிக்கை

வார இறுதி
## அரசியல் குறிப்பேடு
சம்யுக்தன்

### அவசரகால நிலைப் பிரகடனத்துக்கான வாக்கெடுப்பு மூலம் ஜனாதிபதி மீதான ஆதரவு சபையில் மீண்டுமொரு தடவை நிரூபிப்பு



**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு பாராளுமன்றத்தில் நடத்தப்பட்ட மற்றுமொரு பலப்பரீட்சை வெற்றியைப் பெற்றுக் கொடுத்துள்ளது. ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாக இருந்த போது மேற்கொண்ட அவசரகால நிலைப் பிரகடனம் கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக விடப்பட்டது.**

அவசரகால நிலைமை கொண்டுவரப்பட்டமை தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், இது தொடர்பான விவாதம் கடந்த புதன்கிழமை முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 5.20 மணிவரை நடைபெற்றது.

இது தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சியின் முதற் கோலாசான் லக்ஷ்மன் கிரியல்ல கோரிக்கை விடுத்திருந்தார். இதற்கமைய நடத்தப்பட்ட வாக்களிப்பில் அவசரகால நிலை பிரகடனத்துக்கு ஆதரவாக 120 வாக்குகளும், எதிராக 63 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன. இதன்படி 57 மேலதிக வாக்குகளால் அசரகால நிலை பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டது.

கடந்த 20 ஆம் திகதி பாராளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்க 134 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றிருந்தார். இரகசிய வாக்கெடுப்பில் எதிர்க்கட்சியிலிருந்தவர்களும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்குகளை அளித்திருந்தனர் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட நிலையில், அரசாங்கம் பாராளுமன்றத்தில் தனக்குக் காணப்படும் பெரும்பான்மையை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்திருந்ததுடன், அவசரகால நிலைமைப் பிரகடன வாக்கெடுப்பிலும் அவர்கள் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர்.

அதேநேரம், விமல் வீரவன்ச உள்ளிட்ட எதிர்க்கட்சியில் உள்ள ஒரு சிலர் அவசரகால நிலைமைப் பிரகடனத்துக்கு ஆதரவாக வாக்களித்திருந்த போதும், ரணில் விக்கிரமசிங்கவுடன் ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிட்ட டளஸ் அழகப்பெரும மற்றும் அவருக்கு ஆதரவாக இருந்த பொதுஜன பெரமுனவின் தலைவர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் உள்ளிட்ட பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் சிலர் இதற்கு எதிராக வாக்களித்திருந்தனர்.

பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் மத்தியில் மாறுபட்ட நிலைப்பாடுகள் காணப்பட்டாலும், அரசாங்கம் என்ற ரீதியில் தனது பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான பலத்துடன் அக்கட்சி உள்ளது என்பதே நிதர்சனம். நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட சவால்களிலிருந்து மீள்வதற்கான திட்டங்களுக்குத் தலைமைத்துவத்தை வழங்கி முன்கொண்டு செல்லக் கூடிய அனுபவம் மிக்க அரசியல் தலைவர் ஒருவரின் தேவையை அறிந்தே பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது அரசியல் வேறுபாடுகளையும் மறந்து ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த ரணில் விக்கிரமசிங்கவைத் தெரிவு செய்திருந்தனர்.

நாடு தற்பொழுது இருக்கும் நிலையில் அரசியல் வேறுபாடுகள் மற்றும் எதிர்காலத்தை அடிப்படையாகக் கொண்ட சுயலாப நோக்கங்களைக் கைவிட்டு அனைவரும் ஒன்று சேர்ந்து பயணிப்பதே காலத்தின் தேவையாகும்.

**நாட்டின் பொருளாதார நெருக்கடி வேளையில் தனிப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுடன் வேறுபட்டு நின்று செயற்படுவது தவறு. ஒன்றுசேர்ந்த அரசியல் பயணத்தின் மூலமே நாட்டை மீட்டெடுக்க முடியும்**



அதேநேரம், ஜனாதிபதியாகப் பதவி வகித்த கோட்டாபய ராஜபக்ஷ பதவியைத் துறந்து வீடு செல்ல வேண்டும் எனப் போராட்டத்தை ஆரம்பித்தவர்கள், தற்பொழுது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகவும் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். மக்கள் தமது கருத்துகளை சுதந்திரமாக முன்வைப்பதற்கும், தமது எதிர்ப்பினை வெளிப்படுத்துவதற்கும் உரிமை காணப்படுகின்ற போதும், வெறுமனே மக்களை உருவேற்றி வீதியில் இறக்கித் தொடர்ந்தும் போராட்டங்களை முன்னெடுப்பது நடைமுறைக்குச் சாத்தியமான மாற்றங்களைக் கொண்டுவர இடமளிப்பதாக அமையாது.

சவால் மிக்க சந்தர்ப்பத்தில் நாட்டைப் பெறுப்பேற்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பெருத்தமான அளவு கால அவகாசத்தை வழங்கி அதற்குள் அவர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் திருப்தி அடையாவிட்டால் அதற்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுத்தால் அதில் நியாயம் இருக்கும். இதனை விடுத்து, வெறுமனே அனைத்துக்கும் வீதியில் இறங்கிப் போராடுவதானது போராட்டம் குறித்து பொதுமக்கள் மத்தியில் காணப்பட்ட வரவேற்பை தற்போது இழக்கச் செய்து விட்டது என்பதே உண்மை.

சவால்களிலிருந்து நாட்டை மீட்பதற்கும், அரசாங்கத்தைப் பெறுப்பெற்று முன்கொண்டு செல்வதற்கும் முன்வருமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதும், அவர்கள் எவரும் அதனைப் பொறுப்பேற்கத் தவறியிருந்தனர்.

அதேநேரம், போராட்டக்காரர்கள் எல்லை மீறி நடந்து கொண்டமைதையும் காணக் கூடியதாகவிருந்தது. அரசாங்க நிறுவனமான இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்குள் நுழைந்து அங்கு பணியாற்றியவர்களை அச்சுறுத்தி, நிகழ்ச்சி நிரல்களை மாற்றுமாறு சில போராட்டக்காரர்கள் வற்புறுத்தியிருந்தனர்.

இதனுடன் சம்பந்தப்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். பொதுமக்களுக்கு சேவையாற்றும் அரசாங்க நிறுவனங்கள் அரசியல் நிலைப்பாடுகள் இன்றி சுயாதீனமாக செயற்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடம் இல்லை என்றாலும், இவ்வாறான நிறுவனங்களுக்கு அத்துமீறி நுழைந்து அச்சுறுத்தும் வகையில் நடந்து கொள்வதை நியாயப்படுத்த முடியாது.

அதேபோல ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், பிரதமர் செயலகம் ஆகிய அரசாங்க கட்டடங்களுக்குள் நுழைந்தவர்கள் பொதுச்சொத்துக்களுக்கு ஏற்படுத்தியுள்ள சேதங்கள் குறித்தும் சிந்திக்க வேண்டியுள்ளது. இதற்கும் அப்பால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட வீட்டை தீயிட்டு எரித்து, அங்கிருந்த பல பெறுமதியான சொத்துக்களைக் கொள்ளையிட்டவர்கள் உண்மையில் போராட்டக்காரர்களா என்ற கேள்வி எழாமல் இல்லை. இவ்வாறான வன்முறைச் சம்பவங்களால் போராட்டங்கள் திசைமாறிப் பயணித்து நாட்டில் பாரிய அழிவை ஏற்படுத்துவதற்கான அச்சுறுத்தல்கள் காணப்படுகின்றன.

இவை போன்ற நிகழ்வுகள் நாட்டை பல வருடங்கள் பின்னோக்கித் தள்ளி விடுவதற்கான ஆபத்து இருப்பதாக ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலரும் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தனர். குறிப்பாக மே மாதம் 09 ஆம் திகதியின் பின்னர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் விசேடமாக பொதுஜன பெரமுன கட்சியின் அரசியல்வாதிகள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்களின் வீடுகளை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் போராட்டத்தின் வன்முறை முகத்துக்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன.

> **“பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் மத்தியில் மாறுபட்ட நிலைப்பாடுகள் காணப்பட்டாலும், அரசாங்கம் என்ற ரீதியில் தனது பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான பலத்துடன் அக்கட்சி உள்ளது என்பதே நிதர்சனம்”**

அரசியலில் மோசடிக்காரர்கள் இருந்தால் அவர்களுக்கு அடுத்த தேர்தலில் பாடம் புகட்டுவதை விடுத்து அவர்களின் தனிப்பட்ட சொத்துக்களை அடித்து நொருக்கி, தீயிட்டுக் கொளுத்தி சேதப்படுத்துவதில் ஜனநாயகத் தன்மை இல்லை என்பதை போராட்டக்காரர்கள் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு செய்வது அரசியல்வாதிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் மென்மேலும் முரண்பாடுகளையே ஏற்படுத்தும். அது மாத்திரமன்றி நாடு தற்பொழுது பாரிய வீழ்ச்சிக்கு முகங்கொடுத்திருக்கும் சந்தர்ப்பத்தில் இவ்வாறான வன்முறைச் சம்பவங்கள் வெளிநாடுகளிலிருந்து எமக்குக் கிடைக்கக் கூடிய உதவிகளைத் தடுப்பதாகவும் அமைந்து விடலாம்.

விசேடமாக நாட்டை மீட்சிப் பாதைக்கு இட்டுச் செல்ல ஜனாதிபதி எடுத்திருக்கும் கடும் பிரயத்தனங்களுக்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதுடன், ஒரே இரவில் அனைத்து விடங்களையும் சுமுகநிலைக்குக் கொண்டுவந்து விடலாம் என்றும் எதிர்பார்க்க முடியாது. உரிய காலப் பகுதியை அவருக்கு வழங்கி அனைவரும் ஒத்துழைப்பைக் கொடுத்த இந்த இக்கட்டான சூழலில் இருந்து வெளி வருவதற்கு முயற்சிக்க வேண்டும்.



**ஒரே இரவில் அனைத்துப் பிரச்சினைகளும் நீங்கி விடாது. சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்கு புதிய ஜனாதிபதிக்கு கால அவகாசம் வழங்கப்பட வேண்டுமென்பதே பெரும்பாலான மக்களின் எதிர்பார்ப்பு**

# இ.தொ.காவும் த.மு.கூட்டணியும் இணைந்து செயல்பட வேண்டிய காலம் இது!

இது தான் தொடர வேண்டும் என்கிறார்



**‘ஜனாதிபதி மீது தமிழ்மக்கள் குறிப்பாக மலையக மக்கள் மதிப்பு வைத்திருக்கிறார்கள்’**

**‘தற்போதைய நிலையில் வீடொன்றை நிர்மாணிக்க 25 இலட்சம் வரை தேவைப்படும். இந்திய நிதியுதவியிலான வீடமைப்புத் திட்டம் மீண்டும் நடைமுறைக்கு வரும் பட்சத்தில் எஞ்சிய தொகையை ஈடுசெய்வது என்பது பிரச்சினைக்குரியதாகவே இருக்கப்போகிறது’**

தனியார் தொலைகாட்சி ஒன்று அண்மையில் நடாத்திய அரசியல் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஏ. சுமந்திரன் பங்கேற்றிருந்தார். ஒரு சந்தர்ப்பத்தில் தமிழின பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காமை பற்றி தமது ஆதங்கத்தை அவர் வெளிப்படுத்தியபோது குறித்த தொலைக்காட்சி ஊடகவியலாளர் குறுக்கீடு செய்து ஒரு கேள்வியை முன்வைத்தார். அக்கேள்வி இதுதான். தமிழராய் பிறந்த ஒரே காரணத்துக்காக தமிழர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக எப்படி கூறுகிறீர்கள்.?

சற்று சூடாகிப்போன சுமந்திரன் 30 வருடகால யுத்தமே அதைத்தானே நிரூபிக்கிறது. ஊடகவியலாளராக இருந்தும் இது தெரியாதா? என்று ஒரு போடு போட்டார்.

பெரும்பான்மை சமூகத்தினர் பலரின் எண்ணப்பாட்டின் விளைவுதான் அந்த ஊடகவியலாளரின் வெளிப்பாடு. எம்மைப் போலத்தானே தமிழர்களும் வாழ்கிறார்கள். வீடிருக்கிறது, நிலமிருக்கிறது. தொழில் இருக்கிறது. அரசாங்க சேவைகள் கிடைக்கின்றன. எல்லாவற்றையும் எம்மைப் போலவே அனுபவித்துக் கொண்டு இனப் பாகுபாடு என்று கூப்பாடு போடுவது ஏன்?

மேலோட்டமாகப் பார்த்தால் நியாயமான கேள்விதான். ஆனால் உள்ளே நுழைந்து தமிழராய் வாழ்ந்து பார்த்தால் மட்டும் தான் உண்மையை உணரமுடியும்.

இன ரீதியிலான நெருக்குவாரங்களின் யதார்த்தங்களை புரிந்து கொள்ளாத நிலையில் வேறு பிரித்து பார்க்க வழியில்லைதான். வடக்கு கிழக்கு தமிழர்களின், தமிழ் பேசுவோரின் உரிமைக் குரல்கள் எப்படி அங்கீகரிக்கப்படாமலே அலட்சியப்படுத்தப்படுகிறதோ அதுபோலவே பெருந்தோட்ட சமூகத்தின் வாழ்வியல் முரண்களை இனங்கண்டு கொள்ளவும் பலர் விரும்புவதில்லை.

தமிழ் சிங்கள அரசியல்வாதிகளின் அணுகுமுறைகளில் அவ்வப்போது எழும் சுயநலப்போக்கும் சந்தர்ப்பவாத தீர்மானங்களுமே இனப்பிரச்சினை இழுத்தடிக்கப்படுவதற்கான ஏதுநிலை. இது மலையக சமூகத்துக்கும் பொருந்தும். சராசரி ஒரு தமிழ் கிராமத்தவரைப் போல, ஒரு சிங்கள கிராமத்தவரைப் போல வாழ்க்கையை அனுபவிக்க இச்சமூகத்தால் முடியாமல் உள்ளது என்பது நிதர்சனமான உண்மை.

ஏனெனில் சலுகைகள் மட்டுமே சாதனை சமாச்சாரங்களாக பெற்றுத் தந்த தலைமைகளை தன்னகத்தே கொண்டது இந்த மலைபூமி. 200 வருடகால பல அத்தியாவசிய சங்கதிகள் இன்னும் பேசப்படுபவைகளாக மட்டுமே இருக்கின்றன. தீர்வுகள்தான் கிட்டவில்லை. இதில் முக்கியமானது நிலவுடமை. சுதந்திர வாழ்வின் அடையாளமே நிலத்துக்கான நிரந்தர சொந்தம்தான். அடுத்து லய வாழ்க்கையிலிருந்து பூரண விடுதலை. தனித்தனி வீடுகளின் தேவை. முன்னைய நல்லாட்சி காலத்தில் பிரதமராயிருந்தவர் தற்போதைய ஜனாதிபதி. இவர் மலையகத்தில் தேர்தல் பரப்புரை செய்யும் போதெல்லாம் “மலையக மக்கள் ஏனைய சமூகங்களுக்கு சமதையாய் வாழ உரிமை பெற்றவர்கள். அவர்களுக்கும் நிலத்தின் மீதான உரிமை, வசதியான தனி வீடு, நிறைவான சம்பளம் கிடைப்பதே நியதி” என்று கூறி வந்திருக்கிறார்.

பொதுவாக தற்போதைய ஜனாதிபதி மீது தமிழ் மக்கள் குறிப்பாக மலையக மக்கள் மதிப்பு வைத்திருக்கிறார்கள். நீண்டகாலமாக அவர் பால் ஈடுபாடு கொண்டிருக்கிறார்கள். அவரை இனவாதி என்று எவரும் முத்திரை குத்தவில்லை. முன்னைய நல்லாட்சியில் அவரின் சேவையை தமிழ் முற்போக்குக் கூட்டணி சில அத்தியாவசிய காரணங்களுக்காக பெற்றுக்கொள்ளவே செய்தது. பிரதேச சபைகள் சட்டதிருத்தம், மலையகத்துக்கான அதிகார சபை, காணி உரிமை வழங்கல், பிரதேச செயலகங்கள் அதிகரிப்பு, தனிவீட்டுத் திட்டம் என்று ஆரோக்கியமான சில காரியங்கள். ஆனால் சம்பள விடயத்தில் மட்டும் சறுக்கல்.

உண்மையில் பெருந்தோட்ட மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேறும் என்னும் நம்பிக்கை ஒளி மலையகமெங்கும் பிரகாசித்தது. எனினும் எண்ணியவை அப்படியே நடந்து விடவில்லை. செயற்பாட்டில் ஒரு மந்தநிலை காணப்பட்டது. அது அரசியல் ரீதியாக அவ்வப்போது தோன்றியிருந்த அசாதாரண நிலைமையின் பிரதிபலிப்பு. நல்லாட்சி தோல்வியடைந்த பின் மலையக அபிவிருத்திக்கான வேலைத்திட்டங்கள் முடக்கம் கண்டண. குறிப்பாக வீடமைப்புத் திட்டம், 1000 ரூபா தினச்சம்பள அதிகரிப்பு எனும் விடயத்தைத் தவிர இற்றைவரை பெரிதாக எதையும் சாதிக்கமுடியவில்லை. கொரோனா தொற்றின் அலைவீச்சு, அதனைத் தொடர்ந்த அரசியல் தளம்பல் நிலை, பொருளாதார நெருக்கடி, இளைய சமூகத்தினரின் எழுச்சிப் போராட்டம்,

பன். பாலா ...✍

ஸ்திரமற்ற கள நிலவரம் என்று நாடே பிரக்ஞை இழந்து தவிக்கலானது.

தற்போது சூடு தணிந்திருக்கிறது. அரசியல் ஸ்திரநிலை உருவாகியுள்ளது. ஜனாதிபதி தொிவின்போது இ.தொ.கா. தமது இரண்டு வாக்குகளையும் அவருக்கே வழங்கியுள்ளதாக தெரிகின்றது. தவிர த.மு கூட்டணிக்கும் தற்போதைய ஜனாதிபதியுடன் எவ்வித முறுகலும் இல்லை. இது நல்லதொரு வாய்ப்பை உருவாக்கித் தரவே செய்யும். மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக இருந்தபோது பெருந்தோட்ட வீடமைப்புத் திட்டம் அவர் பொறுப்பிலேயே இருந்தது. ஆனால் ஒரு வீடுதானும் கட்டப்படவில்லை. தற்போது அது அமைச்சர் ரமேஷ் பத்திரணவின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட மக்களுக்கான காணி விவகாரத்தில் எப்பொழுதுமே பெரும்பான்மை இன அரசியல்வாதிகளின் தலையீடு இருந்து வந்துள்ளது. இவ்விடயத்தை இன ரீதியிலான ஒரு கண்ணோட்டத்துடனையே அவர்கள் கையாள முற்பட்டுவந்துள்ளமை ஒன்றும் பரம இரகசியமல்ல. குறிப்பாக தரிசு காணி விநியோகத்தில் இவர்கள் தமது மேலாதிக்கப் போக்கை பிரயோகிக்கவே செய்வார்கள். இதனால் பெருந்தோட்டச் சமூகம் தமக்கான காணியுரிமை சங்கதி நியாயபூர்வமாக கையாளப்படுமா என்று ஐயப்பாட்டுடனேயே பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இதேவேளை 14ஆயிரம் வீடுகளுக்கான இந்திய நிதியுதவி தற்போதைய நிலையில் பற்றாக்குறை சமாச்சாரமாகியுள்ளது. முன்பு 12 இலட்சம் ரூபாவை தலா ஒரு வீட்டுக்கு இந்தியா ஒதுக்கியிருந்தது. ஆனால் நடைமுறைச் செலவு 15 இலட்சமாக காணப்பட்டது. இந்திய நிதி போதுமானதாக இல்லாததால் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட அப்போதைய அமைச்சர் பழனி திகாம்பரமும் அவரின் பின் இராஜாங்க அமைச்சரான ஜீவன் தொண்டமானும் வீடொன்றை நிர்மாணிப்பதற்கான எஞ்சிய தொகையை தமது அமைச்சிலிருந்து பெற்றுக்கொடுத்ததாக கூறியிருந்தார்கள்.

தற்போதைய நிலையில் வீடொன்றை நிர்மாணிக்க 25 இலட்சம் வரை தேவைப்படும். இந்திய நிதியுதவியிலான வீடமைப்புத் திட்டம் நடைமுறைக்கு வரும் பட்சத்தில் எஞ்சிய தொகையை ஈடுசெய்வது என்பது பிரச்சினைக்குரியதாகவே இருக்கப்போகிறது. இந்திய அரசாங்கத்துடன் இது சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடாத்தி நிதியை அதிகரிக்க வேண்டுகோள் வைப்பது ஒன்றுதான் வழி என்றால் அதற்கான முயற்சிகளை த.மு. கூட்டணியும் இ.தொ.காவும் மேற்கொள்வதே உசிதமானது.

இவ்விரு கட்சிகளுக்கும் இடையில் அண்மைக்காலமாக ஒரு புரிந்துணர்வு காணப்படுவதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. இப்படியொரு சுமூக நிலைக்கான தேவை இருக்கவே செய்கின்றது.

நல்லாட்சியின் போது த.மு.கூட்டணியின் சில நடவடிக்கைகள் மலையக சமூகத்துக்கு இன்றியமையாததாகவே அமைந்தன. இதை யாரும் மறந்துவிட முடியாது. இனி வரும் காலங்களில் அதன் தொடர்ச்சியான முனைப்புகளே முக்கியமாகிறது. அதற்கு இவ்விரு கட்சிகளின் இணக்கப்பாடு அவசியம் என்பதே பலரது எதிர்பார்ப்பாக உள்ளது.

அத்துடன் இதயசுத்தியுடன் அணுகப்படாத எந்தவொரு விவகாரமும் இங்கிதமாக முடிவதற்கு வாய்ப்பே இல்லை என்பதை நாம் மறந்துவிட கூடாது. இம்மக்களின் யதார்த்த வாழ்வியலை சரியாக உள்வாங்கிக் கொள்ளாதவர்கள் மத்தியிலே தேவைகளை ஈடேற்றிக் கொள்வது என்பது சாதுரியமான முன்னகர்வுகளிலேயே தங்கியுள்ளது. சாணக்கியமான வழி நடத்தல் காலத்தின் தேவை.

# பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்க மலையக சமூகம் தயாராக வேண்டும்

மலையகத்தின் பிரதான நகரங்கள் மற்றும் நகரை அண்மித்த பகுதிகளில் பொதுப் போக்குவரத்து சேவைகள் குறைந்த அளவிலாவது உண்டு. பெரும்பாலான தோட்டப்பகுதிகளுக்கு பொது போக்குவரத்து சேவைகளே இல்லை.

நகரங்களில் இருந்து 20 / 30 கிலோமீட்டர் தூரத்துக்கு அப்பாலும் தோட்டங்கள் உள்ளன. மலை உச்சிகளில் தோட்டங்கள் அமைந்துள்ளன. இப்பகுதியில் உள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் நகர்ப்பகுதிகளில் இருந்தே வருகை தருகின்றனர்.

தோட்டப்புற பாடசாலைகளில் ஆசிரியர் விடுதி வசதிகள் இல்லை. சில தோட்டங்களில் ஆங்கிலேயர் காலத்தில் அமைக்கப்பட்ட பாடசாலையில் அதிபர் விடுதி என ஒன்று இருக்கும், அதிலும் நீர் உட்பட அடிப்படை வசதிகள் குறைந்தளவிலேனும் காணப்படும். எனவே ஆசிரியர்கள் விடுதிகளில் தங்கி தமது கடமைகளைச் செய்தார்கள். தற்போது விடுதி வசதி இல்லாததால் ஆசிரியர்கள் நீண்டதூரம் நடந்தே பாடசாலைகளுக்கு செல்கின்றனர். பாதையில் வாகனங்களுக்காக காலை 10 மணிவரை காத்திருந்து வாகனங்கள் கிடைக்காத நிலையில், தூரம் நடந்துபோக முடியாத அளவுக்கு தொலைவாக இருந்ததால் ஆசிரியர்கள் மீண்டும் வீடு திரும்ப வேண்டியிருந்தது.













பெருந்தோட்டப் பகுதியில் தரம் 5 முதல் தரம் 9 வரையிலான பாடசாலைகளே அதிகமாக உள்ளன.

தரம் 5 தொடக்கம் தரம் ஒன்பதுக்கு மேல் உள்ள மாணவர்கள் தூரத்திலுள்ள நகர்ப்பகுதி பாடசாலைகளுக்கே செல்ல வேண்டியிருக்கிறது.

இவர்கள் முச்சக்கரவண்டி மற்றும் சிறிய ரக வாகனங்களிலேயே பாடசாலைக்கு செல்கின்றனர். சில பகுதிகளில் பொதுப் போக்குவரத்து பஸ்கள் இருந்தபோதும் தற்போது இந்த போக்குவரத்து சேவைகளும் குறைந்தும் பலபகுதிகளில் இல்லாமலும் போயுள்ளன.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மட்டுமல்லாது. அத்தியாவசிய பொருள் கொள்வனவிற்கு நகரப் பகுதிக்கே செல்ல வேண்டியுள்ளது. தோட்டப்பகுதிகளில் சிறிய பெட்டிக்கடைகளே அனேகமாக உள்ளன. இவற்றில் நுகர்வுக்கு தேவையான பொருட்களை தேவையான அளவில் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

தோட்டப்பகுதிகள் ச.தொ.ச கடைகள் இல்லை. சில தோட்டங்களில் கூட்டுறவுக் கடைகள் உள்ளன. அதில் 5000/= ரூபாவிற்கு மட்டுமே மாதமொன்றிற்கு பொருட்கள் வழங்கப்படுகின்றன .

அதுவும் தோட்டத்தில் பேர்பதிந்து நிரந்தரமாக தொழில் புரிபவர்களுக்கு மட்டும் வழங்கப்படுகின்றன.

இன்று தோட்டப்பகுதியில் வாழ்பவர்களில் 40 சதவீதமானவர்கள் தோட்டத்துறையில் தொழில் புரிவதில்லை. இவர்கள் விவசாயம், கால்நடை வளர்ப்பு, வெளியிடங்களில் வேலை என உள்ளனர்.

இவர்களுக்கு இந்த கூட்டுறவு கடைகளில் பொருட்கள் வழங்கப்படுவதில்லை தோட்டத்தில் வேலை செய்பவர்களுக்கு ஐயாயிரம் ரூபாவுக்கு 15 கிலோ மா, 15 கிலோ அரிசி என மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வழங்கப்படுகின்றது.

இந்தத் தொகையை அவர்களது சம்பளத்தில் பிடித்துக் கொள்வர். பணம் நேரடியாகப் பெறுவது இல்லை.

எனவே தோட்டப்பகுதியில் உள்ள அனைவரும் பொருள் கொள்வனவு நிமிர்த்தம் நகருக்கு வரவேண்டியுள்ளது. முன்பு எமது மக்கள் நடைப் பயணமாக வந்து மூட்டைகளை தலையில் சுமந்தே சென்றனர். இன்றைய சூழல் இது சாத்தியம் இல்லை.

இரசாயன உரம் இல்லாத நிலையிலும் மாற்று வருமானம் இல்லாத நிலையில் காதில், கழுத்தில் இருந்த நகைகளை விற்றும் அடகுவைத்தும் 30 ஆயிரம் ரூபாவிற்கு உர மூடையொன்றை வாங்கி பயிர்ச் செய்கையில் ஈடுபட்டாலும் உரிய விலை கிடைப்பதில்லை.

பசு மாடுகளை வளர்ப்போரின் பசும் பாலை சேகரிக்க வெளியார் வருவதில்லை, தமது உற்பத்தி பாலை பல கிலோமீட்டர் தூரம் சுமந்து சென்றே கொடுக்க வேண்டியுள்ளது.

வெளியிடங்களுக்கு நாட்கூலிக்கு செல்பவர்களும் நகர்பகுதிகளுக்கு தொழில் நிமித்தம் செல்பவர்களும் தமது தொழிலை இழந்துள்ளனர். மிதிவண்டிகளை அதிக விலைகொடுத்து கடன்பட்டு வாங்கி பலர் தற்போது பயன்படுத்துகின்றனர்.

மலைப்பாங்கான பகுதி என்பதால் ஒருவழிப் பயணத்திற்கு மட்டும் பயன்படுத்தி நடுவழியில் வண்டியைத் தள்ளிக் கொண்டு செல்ல வேண்டியதாகிறது.

இவ்வாறு போக்குவரத்துப் பிரச்சினைகள் இருந்தாலும் மக்கள் நடைப் பயணமாக சென்று தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதைக் காணக்கூடியதாக உள்ளது. முச்சக்கரவண்டியை நம்பி வாழ்ந்தவர்களின் வாழ்வாதாரம் முற்றாக பாதிப்படைந்துள்ளது.

இவர்கள் மாற்று தொழிலைத் தேடி கூலி வேலைகளுக்கு செல்கின்றனர். போக்குவரத்தால் பெருந்தோட்டப் பகுதி மக்கள் பாதிப்படையாத விதத்தில் எதிர்காலத்தை அமைத்துக்கொள்ள பெருந்தோட்டப் பகுதிகளில் கூட்டுறவுக் கடைகள், ச.தொ.ச கடைகள் அமைக்கப்பட வேண்டும். பாடசாலைகள் தரமுயர்த்தப்பட்டு ஆசிரியர் விடுதிகளை அமைக்க வேண்டும்.

தொழிலாளர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வருமானம் மார்க்கம் வேண்டும். வரவுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு மலையகம் முகம்கொடுக்கத் தயாராக வேண்டும்.

ஆர். நவராஜா ...✍
படங்கள் :
தெல்தோட்டை தினகரன் நிருபர்

# பதுக்கலை கட்டுப்படுத்துமா?



# National Fuel Pass

**4 ஆவது அடிப்படை தேவை போக்குவரத்து!**

மனிதனின் அடிப்படை தேவைகளான உணவு, உடை, உறையுள் என்பதற்கு அடுத்தபடியாக போக்குவரத்தும் இடம்பிடித்து வருகின்றது என்பதை அறிய வைத்துள்ள காலம் இதுவாகும். 'அது இன்றி அனைத்தும் ஸ்தம்பிதம்' என்கின்ற நிலை உருவாகியுள்ளது. இங்கு அதுவெனக் குறிப்பிடுவது போக்குவரத்தைத்தான் என்பதை புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும். நேரடியாக இதற்கான காரணம் எரிபொருள் நெருக்கடிதான். ஏன், மாணவர்களின் கல்வியை தீர்மானிக்கும் காரணியாக இந்த எரிபொருள் நெருக்கடி அமையமென நாம் எதிர்பார்த்திருக்கமாட்டோம்.

**பொருளாதார நெருக்கடி**

நாடு பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ளது என்பதை சிறுபிள்ளை கூட அறியும். காரணம், எம்மைச் சுற்றி நடக்கின்ற, வழக்கத்திற்கு மாறாக, நாம் இதுவரை கண்டிராத பல்வேறு விடயங்களே அவற்றை அவர்களுக்கு கூறியிருக்கும். இது எங்கு, எப்போது, எப்படி ஆரம்பித்தது? எனும் கேள்விகளுக்கு விடை தேடும் முன்னே அடுத்தடுத்து நாம் பல்வேறு நடைமுறைச்சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியவர்களாகவும் அதற்கான தீர்வை கண்டறிய வேண்டியவர்களாக மாறியுள்ளோம். அவ்வாறான ஒன்றே இந்த 'தேசிய எரிபொருள் அட்டை' National Fuel Pass.

**சீரான எரிபொருள் பங்கீடு**

எரிபொருள் தட்டுப்பாடு என்கின்ற ஒன்றைச் சுற்றி உருவான கறுப்புச் சந்தை, பதுக்கல் போன்ற விடயங்களை தடுத்து, நாட்டின் எரிபொருள் தேவையை உரிய வகையில் பூர்த்தி செய்வதற்காக, எரிபொருளை உரிய வகையில் பங்கிட எடுக்கப்பட்ட பல்வேறு முயற்சிகளின் இறுதி வடிவமாக இந்த QR முறையிலான திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.




**QR Code**

fuelpass.gov.lk தளம் ஊடாக வாகன விபரங்களை வழங்கி, பதிவு செய்து இறுதியில் கிடைக்கும் ஒரு கறுப்பு நிற சதுர வடிவான அமைப்பே QR Code ஆகும். Quick Response Code (மிக விரைவாக பதிலளிக்கும் குறியீடு) என விரிவாக்கம் கொண்ட இது, கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட, தரவுகளை கெமராவின் மூலம் உணரக்கூடிய சாதனங்களால் ஒரு சில நொடிகளில் தரவுகளை அடையாளம் காண்பதற்காக பயன்படுத்தப்படுகின்றது.

எனவே பல்வேறு தகவல்கள் அடங்கிய ஒரு QR குறியீட்டிலிருந்து சில நொடிகளில் அதிலுள்ள தகவலை பெறுவதனை அடிப்படையாகக் கொண்டு, ஒதுக்கிடப்பட்ட எரிபொருள் விநியோகத்தின் போது வாகன விபரங்களை பதிவதற்கும், அவற்றை கணனிமயப்படுத்துவதற்கும் எடுக்கும் நேரத்தை, குறைக்க இம்முறை பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறு தற்போது உங்களுக்கு வழங்கப்படும் QR குறியீட்டில் வாகன இலக்கமும் உங்களுக்கான பிரத்தியேக குறியீடொன்றுமே அடங்கின்றன. அவை உங்கள் QR குறியீட்டின் மேல், கீழ் பகுதியில் வெளிப்படையாக குறிப்பிடப்பட்டிருப்பதை நீங்கள் அவதானிக்கலாம். அத்துடன் ஒரு QR Reader செயலியின் மூலம் உங்கள் கையடக்கத் தொலைபேசி கெமரா ஊடாக நீங்கள் அத்தகவலை அறியலாம்.













ஆக மொத்தத்தில் தகவலை இலகுவாக பதிவு செய்வதனை அடிப்படையாகக் கொண்டு, நேர விரயத்தை தவிர்க்க QR முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு, இதன் மூலம் ஒரு நபர் பலமுறை எரிபொருள் நிரப்புவது இலகுவாக அடையாளம் காணப்பட்டு தடுக்கப்படுகின்றது.

**ஒதுக்கீடு/ கோட்டா**

ஒவ்வொரு வாகனத்துக்கும் வாராந்தம் எவ்வளவு எரிபொருள் விநியோகிக்கப்படும் என்பது இந்த திட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. உங்கள் வாகனம் ஒரு மோட்டார் சைக்கிளாயின் நிர்ணயிக்கப்பட்ட 4 லீற்றர் பெற்றோலை நீங்கள் ஒரு வாரத்திற்கு பெற முடியும். ஒரு எரிபொருள் நிலையத்தில் நீங்கள் QR குறியீட்டின் மூலம் எரிபொருள் பெறும் வேளையில், நீங்கள் பெறும் எரிபொருளின் அளவு கணனிமயப்படுத்தப்படும்.

குறிப்பாக மேற்படி 4 லீற்றர் பெற்றோலில் 2 லீற்றர்களை பெறுவீர்களாயின் அதில் நீங்கள் 2 லீற்றர்கள் பெற்றமை பதியப்படுவதோடு, எஞ்சிய 2 லீற்றரை அவ்வாரத்தின் மற்றுமொரு நாளில் நீங்கள் பெற முடியும். இதனை பரீட்சிக்க, fuelpass.gov.lk தளத்தில் Login என்பதை கிளிக் செய்து, உங்கள் கையடக்க தொலைபேசி இலக்கத்தை வழங்கி அதற்கு கிடைக்கும் OTP யினை உள்ளீடு செய்வதன் மூலம் இதனை அறிந்து கொள்ளலாம்.

**முறை புதிது; பழக்கப்பட்ட ஒன்றே**

குறிப்பாக இந்த QR குறியீட்டு எரிபொருள் ஒதுக்கீட்டு முறையானது, ஏற்கனவே 90களில் பாடசாலை மாணவர்களுக்கு மதிய போசனத்திற்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கூப்பன் முறை போன்றதே. அதனையும் தாண்டி அதற்கு முற்பட்ட காலத்தில் மண்ணெண்ணெய் உள்ளிட்ட பொருட்களை கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட முத்திரை முறையும் இது போன்றதே.

**நடைமுறைச் சிக்கல்**

ஒரு புதிய முறையொன்று அறிமுகம் செய்யப்படும் போது வழக்கமாக எழும் சில பிரச்சினைகள் இந்த QR முறை அறிமுகப்படுத்தப்பட்ட போதும் எழுந்தன. ICTA (தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம்) மூலம் உருவாக்கப்பட்டுள்ள இந்த தொகுதியானது, நேரடியாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள தரவுத் தொகுதியுடன் இணைக்கப்பட்டுள்ளது.



(28 ஆம் பக்கம் பார்க்க)

றிஸ்வான் சேகு முகைதீன்
rizwan.mohideen@lakehouse.lk

# பதுக்கலை ஊக்கப்படுத்தும் மக்களின் மனோபாவம்

கருணாகரன்

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மக்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் பாதிப்பை உண்டாக்கியிருக்கலாம். அதனால் அவர்கள் தீராத பிரச்சினைகளுக்குள்ளாகியிருக்கிறார்கள் என்பது உண்மையே. ஆனால் இதற்குள் மிகப் பெரிய நன்மைகளைப் பெற்றிருப்பது ஒரு பெரிய கூட்டம். அது வணிகத்தரப்பினராகும்.

முன்னெப்போதும் பெற்றிராத லாபத்தை இந்த நெருக்கடிக் காலத்தில் வர்த்தகர்கள் பெற்றிருக்கின்றனர். இன்னும் லாபத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

யுத்த காலத்தில், யுத்தம் நடைபெற்ற இடங்களில் கூட இந்த மாதிரி எல்லை மீறிய, கட்டற்ற, பொறுப்பற்ற, இதயமே இல்லாத சிறுமைத்தனமான வணிகம் நடைபெறவில்லை. அப்பொழுது ஓரளவுக்கு மக்களைக் குறித்தும் சமூகத்தைக் குறித்தும் சிந்திக்கும் ஒரு போக்கு, ஒரு தன்மை இருந்தது. அதை விட அன்று இவற்றைக் கண்காணிப்பதற்கான அதிகாரத் தரப்புகளும் இருந்தன.

இப்பொழுது நிலைமை தலைகீழாகி விட்டது. அரசாங்கம் ஆட்டம் காணத் தொடங்கியதைத் தமக்குச் சாதமாகப் பயன்படுத்த முற்பட்டது வர்த்தகத் தரப்பு. அதன் இயல்பே அதுதான். தவிச்ச முயலை அடிப்பது. யுத்தத்தின்போதும் ஒரு குறிப்பிட்ட தரப்பு இப்படிச் செய்ததுண்டு.

இங்கே நாட்டில் – அரசாங்கத்தில் ஏற்பட்ட நெருக்கடியையும் கட்டமைப்புச் சிதைவையும் தமக்குச் சாதமாகப் பயன்படுத்திய வணிகத் தரப்பைக் குறித்துக் கவனம் செலுத்துவதற்கோ தவறுகளைக் கட்டுப்படுத்துவதற்கோ யாரும் அக்கறைப் படவில்லை. அரசும் சரி, பொது அமைப்புகள், ஊடகங்கள், அரசியற் கட்சிகள், தலைவர்கள் உட்பட எந்தத் தரப்பும் இதைப்பற்றிச் சிந்திக்கவே இல்லை.

பதிலாக இவர்களுடைய கரிசனை முழுவதும் அரசியல் நெருக்கடியிலேயே குவிந்திருந்தது.

இதனால் பகற்கொள்ளை என்று சொல்லக்கூடிய அளவுக்கு இந்த அநீதி – அப்பட்டமான கொள்ளையடிப்பு – சுரண்டல் நடக்கிறது. இதன் காரணமாகப் பல லட்சம் மக்கள் தினமும் ஒவ்வொரு நொடியும் பாதிக்கப்படுகின்றனர். இதைக்குறித்து எங்கும் முறையிடவும் முடியாது. யாரிடத்திலும் பேசவும் முடியாது. அந்தளவுக்கு நாடு இறுகிப் போயுள்ளது. அல்லது எல்லாமே சீரழிந்து விட்டன. இதுதான் துயரம்.

அந்நியச் செலாவணியான டொலர் பிரச்சினை – தட்டுப்பாடு – வந்தபோது பொருட்களின் இறக்குமதியில் தடங்கல் அல்லது தடை ஏற்பட்டது. இதனால் சட்டெனப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு உருவாகியது. பதுக்கல்கள் நிகழ்ந்தன. ஆகவே இயல்பாகவும் செயற்கையாகவும் உருவாக்கப்பட்ட தட்டுப்பாட்டில் படபடவென பொருட்களின் விலை ஏறியது. அல்லது விலை ஏற்றப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் பதுக்கலைக் கட்டுப்படுத்தவோ கண்காணிக்கவோ அதற்குப்பொறுப்பான அரச நிர்வாகத் தரப்பு – விலைக்கட்டுப்பாட்டுச் சபை உள்பட அனைத்துத் தரப்பும் தவறின.

ஆரம்பத்தில் சில நடவடிக்கைகள் அங்குமிங்குமாக மேற்கொள்ளப் பட்டதுண்டு. ஆனால் அதையும் கடந்து அல்லது அவர்களை உச்சிக் கொண்டு தமது கைங்கரியத்தைக் காட்டத் தொடங்கினர் வியாபாரிகள். இறுதியில் வர்த்தகர்களே வெற்றியீட்டினர். இரண்டு மூன்று மாதங்களில் தங்களைக் கட்டுப்படுத்தக்கூடியவர்களோ கேட்கக் கூடியவர்களோ



இல்லை என்ற அளவுக்கு வளர்ச்சியடைந்தனர். இப்பொழுது இவர்கள் மாபெரும் மாஃபியாக்களாகி விட்டனர்.

பதுக்கலைக் கட்டுப்படுத்தவில்லை என்ற நிலையில் அதில் ருசிப்பட்டவர்கள் அடுத்ததாக விலையை ஏற்றத் தொடங்கினார்கள். முதலில் நாளுக்கு நாள் ஏறிய ஏற்றப்பட்ட விலை பின்னர் காலையில் ஒரு விலை, மாலையில் ஒரு விலை என்றானது. இது மேலும் வளர்ச்சியடைந்து மணித்தியாலங்களுக்கிடையில் வேறுபடும் அளவுக்கானது. இப்பொழுது நொடிக்கொரு விலை என்றாகி விட்டது.

இதை எதிர்க்க முடியாத நிலைக்குள்ளாகினர் மக்கள். அவர்களைப் பொறுத்தவரையில் எப்படியாவது பொருட்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற கட்டம். இல்லையென்றால் தேவைக்கதிகமாக அலைந்து அதிக சிரமங்களைப் பட வேண்டும். சிலவேளை குறித்த பொருளைப் பின்னர் பெற்றுக் கொள்ளவே முடியாது என்றும் ஆகிவிடும்.

அதனால் எப்படியோ என்ன விலைக்கோ கிடைக்கின்ற பொருளைப் பெற்றுக் கொள்வோம் என்ற முடிவுக்குப் பலரும் வந்தனர். இதை மேலும் தமக்கான வாய்ப்பாகப் பயன்படுத்தியது வணிகத் தரப்பு.

இந்த வளர்ச்சி இன்று எல்லா இடங்களிலும் உருவாகி மனச்சாட்சிக்கே விரோதமான அளவுக்குள்ளது. மக்கள் தங்களுடைய கொள்வனவுச் சக்திக்கு அப்பால் பொருட்களைப் பெற முடியாமல் திணறுகின்றனர். இவ்வளவுக்கும் பெரும்பாலான பொருட்கள் ஏற்கனவே கையிருப்பில் இருந்தவை. அல்லது இங்கே களஞ்சியங்களில் இருந்தவையாகும்.

உதாரணமாக, சைக்கிள்கள், வாகன உதிரிப்பாகங்கள், துணி மற்றும் உடைகள், வீட்டுப்பாவனைப்பொருட்கள், மின் உபகரணங்கள், மின்சாரப் பொருட்கள், மரப் பொருட்கள் என இந்தப் பட்டியல் நீளும். எரிவாயு, பெற்றோல், சீமெந்து, உரம், அரிசி, சீனி, மா, பருப்பு மற்றும் சில உணவுப்பொருட்கள் போன்றவற்றின் விலை உயர்வது தவிர்க்க முடியாதது. அவை அவ்வப்போது இறக்குமதி செய்யப்படுகின்றவை. அவற்றின் விலையை அரசாங்கமே அறிவித்தது. அல்லது அதற்குரிய நிறுவனங்கள் அறிவித்தன.

ஏனையவை அப்படியல்ல. ஆரம்பத்தில் – மூன்று மாதங்களின் முன்பு சைக்கிளொன்றின் விலை 30 ஆயிரமாக இருந்தது. இப்பொழுது தொண்ணூறு ஆயிரத்தைக் கடந்துள்ளது. இது எப்படி ஏற்பட்டது? உதிரிப்பாகங்களின் விலையும் அப்படித்தான். முதல்நாள் இரவு ஒரு விலை. மறுநாள் காலை அதே கடையில், அதே பொருள் வேறு விலையில் – கூடிய விலையில் விற்கப்பட்டது.

இந்த எல்லை மீறலுக்கு அளவே இல்லை. இங்கே நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால் நாட்டிலே ஊழல், கொள்ளை லாப மீட்டல், சமூக விரோதச் செயற்பாடுகள் போன்றவற்றுக்கு எதிராக ஒரு பக்கத்தில் மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

மறுபக்கத்தில் அத்தகைய நடவடிக்கைகள் சத்தமின்றி – அச்சமின்றி நடந்து கொண்டிருந்தது. நடந்து கொண்டிருக்கிறது.

ஆட்சியாளர்கள் மட்டும் தவறிழைக்கவில்லை. நாட்டிலுள்ள பல்வேறு தரப்பினரும்தான் தவறிழைக்கின்றனர். கொள்ளையடிக்கின்றனர். மக்களை ஏமாற்றிப் பிழைக்கின்றனர் என்பதைத் தெரிந்து கொண்டும் பல அரசியற் தலைவர்களும் காணாத மாதிரியே இருக்கின்றனர். இறுதியில் எரிபொருளைக் கூடப் பதுக்கி கறுப்புச் சந்தையில் அதை விற்கும் நிலை ஏற்பட்டது. இதனால் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதில் ஏகப்பட்ட நெருக்கடிகள் உருவாகின.

இதிலே வேடிக்கை என்னவென்றால் இப்பொழுது 520 ரூபாய்க்கு விற்கப்படும் எரிபொருள் விநியோகத்தைக் கண்காணிப்பதற்கு நான்கு ஐந்து அரச உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 30 ஆயிரம் ரூபாய்ச் சைக்கிள் ஒரு லட்சம் ரூபாய்க்கு விற்கப்படுவதைக் கண்காணிப்பதற்கு யாருமே இல்லை.

இது தனியே சைக்கிளுக்கு மட்டுமான ஒன்றல்ல. அனைத்துப் பொருட்களுக்குமான பிரச்சினையே.

மக்களின் முன்னேற்றத்துக்காகவும் அவர்களுடைய விடுதலைக்காகவும் தங்கள் உடலையும் உயிரையும் அர்ப்பணிக்கின்றது ஒரு தரப்பு. தேசத்தின் நன்மைகளுக்கான தங்களை அர்ப்பணித்துச் செயற்படுகின்றனர் பலர். இந்த மாதிரியானவர்களின் மத்தியில் இவர்களோ – இந்தக் கொள்ளையர்களோ எந்தவிதமான மனச்சாட்சியும் இல்லாமல் அறாவிலையில் பொருட்களை விற்கிறார்கள். கண்முன்னே கொள்ளையடிக்கிறார்கள். இதைப் பற்றி நமது சமூகத்தின் அக்கறை என்ன? பதில் என்ன?

அரகலய கிளர்ச்சி என்பது பின்நவீனத் தன்மைகொண்டது. திட்டமிடப்படாத, கருத்துக்களைத் மக்கள் மயப்படுத்தி அதிலிருந்து அதிகாரத்தை நோக்கியோ அல்லது அரசை எதிர்த்தோ உருவாகாமல் தன்னெழுச்சியாக உருவானது. எப்போது தோன்றும் எப்போது மறையும் என்று தெரியாமல் தோன்றி தமது எதிர்ப்புக்களை வெளிப்படுத்தி நிறைவடையும் கிளர்ச்சியாக அது இருக்கும். தற்காலிகமான தன்னெழுச்சியாக உருவாகி, அரசாங்கத்தை கலங்கடித்து அதே வேகத்தில் மறைந்துபோகும்.

யார்மீது பொறுப்புச் சுமத்துவது என்ற பிரச்சினையை வெளிப்படுத்தும். யார் தலைமை தாங்குகின்றனர் என்று எப்போதும் கண்டுபிடிக்க முடியாத தன்மையை கொண்டிருக்கும். வழி நடாத்தும் அடையாளமிடப்பட்ட குழுவோ, நிறுவனப்படுத்தப்பட்ட தலைமைத்துவ அமைப்போ அதற்கிருக்காது. அதனிடம் பன்மையான கோரிக்கைகள் இருக்கும். இத்தனையையும் மிகத் தீர்க்கமாக கடைப்பிடிக்கும் வரை அது பின்நவீனத்துவ கிளர்ச்சியை சார்ந்து இயங்குவதாக அமைந்திருக்கும். இந்தப் பண்புகளை



# உறுதியாக கட்டமைக்கப்படும் புரட்சி அதிகாரமும் வன்முறையும் நிறைந்தது

## அரகலய கிளர்ச்சி - ஒரு பார்வை

**மக்கள் அவர்கள் பாட்டில் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தி வந்த நிலையில், அவர்களை சட்டவிரோத மான வன்முறைகளில் இறங்கத் தூண்டியது எவை? யார்? என்ற விசயங்களும் கவனத்திற் கொள்ளப்பட்டு அவற்றையும் எதிர்க்க வேண்டும்.**

எப்போது அந்தக் கிளர்ச்சி இழக்க நேரிடுகிறதோ அப்போதே, மிக எளிதாக அதிகாரத் தரப்பினரால் கையகப்படுத்தி வீழ்த்தப்படும் நிலைக்குச் சென்றுவிடும்.

அரக்கலய கிளர்ச்சிக்கும் இதுதான் நடந்தது. ஆரம்பத்தில் நிறுவனமயப்படுத்தப் படாததும், தலைமைத்துவமற்றதுமான கிளர்ச்சியாகவே தொடங்கியது. மக்களின் மனங்களில் இருந்து ராஜபக்ஷக்களின் அரசுக்கெதிரான ஒரு எதிர்ப்பலையாக வெளிக்கிளம்பியது. அப்படி மக்கள் கிளர்ந்தெழுவதற்கு பிரதானமான காரணமாக அமைந்திருந்தது “பொருளாதார நெருக்கடியும் அதனால் உருவான அன்றாட வாழ்வின் மீதான சிக்கல்களும்தான்”. எரிவாயுத் தட்டுப்பாடு, அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு, எரிபொருள் பற்றாக்குறை, அதீதமான விலையேற்றம் நாட்டு மக்களை பெரும் நெருக்கடிக்குள் தள்ளியது. அதன் விளைவாக தன்னெழுச்சியாக நாடு தழுவியரீதியில் மக்கள் எதிர்ப்புகளை வெளிப்படுத்தினர். பின்னர் படிப்படியாக அந்தக் கிளர்ச்சியை நோக்கி நாட்டிலுள்ள பெரும்பான்மையான மக்கள் இணைந்து கொள்ளத் தொடங்கினர். இந்த எதிர்ப்பை குவிமையப்படுத்தி தொடருவதற்காக ஓர் இடத்தை தேர்வு செய்தனர். அந்த இடம் காலிமுகத்திடலாக இருந்தது. அதைத் தொடர்ந்து நாட்டின் பல பகுதிகளிலும் இந்த மக்கள் எதிர்ப்பு மையங்களும் உருவாகின. மக்கள் எழுச்சிக் கிளர்ச்சிகளும் நாடெங்கும் அவ்வப்போது முன்னெடுக்கப்பட்டன. இந்த அனைத்துக் கிளர்ச்சிகளின் முக்கிய கோஷமாக இருந்தது ராஜபக்ஷக்களை அதிகாரத்திலிருந்து வெளியேற்ற வேண்டும் என்பதுதான். சுமார் எண்பத்தைந்து நாட்கள் வரை இந்தக் கோஷம்தான் மக்களினதும், கிளர்ச்சி மையங்களினதும் பிரதானமான கோஷமாக இருந்தது.

ரணில் பிரதமராக பதவியேற்று சுமார் 25 நாட்கள் வரைக்கூட ராஜபக்ஷக்களை அதிகாரத்திலிருந்து வெளியேறுங்கள் என்பதே மையப் பேச்சாகவும், ரணிலுக்கெதிரான கோஷம் துணைச் செயற்பாடாகவுமே இருந்தது.

இந்த இடத்தில் ஒரு விசயத்தை கவனிக்க வேண்டும், தமிழர்களுக்கெதிரான எந்த அரச பயங்கரவாதக் கட்டவிழ்ப்பின் போதும் அனைத்து இனங்களையும் சேர்ந்த நாட்டுமக்கள் இப்படியான கிளர்ச்சிகளை ஒன்றிணைந்து இதுவரை செய்ததில்லை. முஸ்லிம்களுக்கெதிரான அரச ஆதரவோடு வன்முறைகள் திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட போதும் கூட, அனைத்து இனங்களையும் சேர்ந்த நாட்டு மக்கள் ஒன்றிணைந்து இப்படியான கிளர்ச்சிகளில் இறங்கியதில்லை. அந்தத் தருணங்களில் எல்லாம் பெரும்பான்மை சிங்கள மக்கள் சிறுபான்மைச் சமூகங்களுக்கெதிரான வன்முறைகளில்தான் ஈடுபட்டிருந்தனர். மலையக மக்கள் இப்படியான பிரச்சினைகளை



றியாஸ் குரானா

எதிர்கொண்ட போதும் கூட இதேதான் நிகழ்ந்தது.

ஆனால், அனைத்து இனங்களைச் சேர்ந்த மக்களும் ஒன்றிணைந்து கிளர்ச்சியை முன்னெடுக்க வந்திருப்பது, பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட போதுதான். இதனடியாக நாம் கற்றுக்கொள்ள முடியுமாக இருக்கின்ற ஒரே விசயம், பிற சமூகங்களுக்கு அரசாலோ அல்லது அரச ஆதரவாலோ எந்தவகையான வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டாலும் பெரும்பான்மை மக்கள் கவனத்திற் கொள்ளப்போவதில்லை என்பதுதான்.

ஆக, ரணிலுக்கு எதிரான கோஷம் என்பது இந்த 100நாள் அரக்கலய கிளர்ச்சியின் எண்பது நாட்களைக் கடந்த பிறகு இணைத்துக்கொள்ளப்பட்ட ஒன்று. அதுவும், ரணில் பிரதமராகி பல நாட்களுக்குப் பின்னரே அரக்கலயவின் கவனத்திற்குள் உட்செலுத்தப்பட்ட ஒரு விசயம். அதனால்தான் மக்களிடம் ரணிலுக்கு எதிரான கோஷம் என்பது தன்னெழுச்சியாக உருவாககமல் இடையில் இணைக்கப்பட்டதாக அமைந்திருக்கிறது. எனவே, மக்களின் தன்னெழுச்சியான கிளர்ச்சியில் பிந்தி வந்து இணைந்துகொண்ட ஒரு கோஷம் என்பதால் அனைத்து மக்களின் கரிசனத்திற்குமுரிய ஒன்றாக அது மாறிவிடவில்லை.

இன்று மக்களின் அரசுக்கெதிரான பிரதானமான எதிர்ப்பு தணிந்து, ரணிலுக்கும் ஒரு வாய்ப்பை வழங்கிப் பார்ப்போம் என்ற வகையில் மக்கள் மத்தியில் பொதுவான தன்னெழுச்சியான கிளர்ச்சி என்பது இரண்டுபட்டு நிற்கிறது. அதிலும் மக்களின் ஆரம்ப தீவிரம் தணிந்து ஒரு அரைமனதோடு எதிர்க்க வேண்டிய தேவையையும் உருவாக்கியிருக்கிறது.

**வெறுமனே, தாங்கள் கடந்த காலங்களில் ராஜபக்ஷ முகாமினரால் அனுபவித்த துயரங்களை மனதில்வைத்துக்கொண்டு, அவர்களின் ஆதரவோடு ஜனாதிபதியாக வந்திருக்கும் ரணிலை எதிர்ப்பதினூடாக “பழிவாங்கும்” ஒரு சின்னத்தமான மனநிலைக்குச் சென்றுவிட முடியாது.**

மக்களின் தன்னெழுச்சியான கிளர்ச்சி தணிந்திருப்பதையும், ரணிலை நிரந்தரமாக எதிர்ப்பது என்றும், அவருக்கு ஒரு வாய்ப்பை வழங்கிப் பார்ப்போம் என்றும் மக்கள் பிரிந்திருக்கின்றனர். ஆக, அரகலயவின் கிளர்ச்சி ஏற்படுத்தியிருந்த தீவிரமும், அதன் பரபரப்பும் குறைந்து மென்மையடைந்திருக்கிறது. இதை மீண்டும் தீவிரப்படுத்த வேண்டும் என்ற மனநிலையில் குறிப்பிட்ட குழுக்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால், மக்கள் அவற்றை பாதியளவுதான் பேசுபொருளாக எடுத்துக்கொண்டிருக்கின்றனர்.

தன்னெழுச்சியாக உருவான, அதுவும் பொருளாதார நெருக்கடி காரணமாக உருவான மக்களின் அதிருப்திகளை ஒருங்கிணைத்து நிறுவனமாகவும், இந்தக் கிளர்ச்சிக்கு தலைமை கொடுக்கவும் சில அரசியல் கட்சிகளும், அரசியல்வாதிகளும் திட்டமிட்டு அரகலயவுக்குள் நுழைந்து செயல்படத் தொடங்கியதும் மக்களின் தன்னெழுச்சி என்ற அம்சம் தலைகீழாக மாற்றமடைந்துவிட்டது. ரணில், சரத் பொன்சேகா, ஜேவிபி, சஜித் தலைமையலான எதிர்க் கட்சி போன்றவர்களின் ஆதரவுக் குழுக்களும் அரக்கலயவுக்குள் நுழைந்து மக்களின் அதிருப்திகளை பயன்படுத்தி, தங்கள் அரசியலை இலாபமானதாக ஆக்க முயற்சித்தன. சில குழுக்களும், தன்னெழுச்சியாக இணைந்த மக்களும் நீங்கியிருக்கின்றனர். தற்போது, முழுக்க முழுக்க அரச அதிகாரத்தை கைப்பற்றும் எண்ணத்திலுள்ள மாற்று அணியினரின் ஆதரவுக் குழுக்கள் மாத்திரமே களத்தில் இருக்கின்றனர். என்னைப் பொறுத்தவரை மக்களின் தன்னெழுச்சிப் போராட்டத்திற்கு மாத்திரமே ஆதரவு அளிக்க முடியும். அந்த எழுச்சி ஏன் உருவானதோ அதற்கான காரணங்கள் சரிசெய்யப்பட வேண்டும் என்பதையே ஆதரிப்பேன். இன்று மாற்று அணியினரின் அரசியல் இலாபத்தோடு கூடிய இன்றைய கோரிக்கைகளையோ அல்லது வீம்புக்கான எதிர்ப்புகளையோ ஆதரிக்க முடியாது. மாற்று எதிரணியினர் தன்னெழுச்சியான மக்களின் பொருளாதார நெருக்கடியினால் உருவான அரசுக்கெதிரான கிளர்ச்சியினுள் நுழையும் வரை, சட்டத்திற்கு புறம்பான எந்த நடவடிக்கைகளிலும் மக்கள் இறங்கவில்லை. அதை நோக்கி மக்கள் தூண்டப்படவுமில்லை. ஆனால், அதிகாரத்தை கைப்பற்றும் ஆசையில் மக்களை சட்டத்திற்கு விரோதமான கிளர்ச்சி நடவடிக்கைகளில் தூண்டிச் செயல்பட வைத்தமைக்கு மாற்று அணியினரே பொறுப்பேற்க வேண்டும். ஜனாதிபதி செயலகத்தை கைப்பற்றியது. அலறி மாளிகையைக் கைப்பற்றியது. பாராளுமன்றத்தை கைப்பற்ற வேண்டும் என கருத்துக்களை முன்வைத்தது. இலங்கை ரூபாவாஹினிச் செய்திச் சேவை நிலையதிற்குள் நுழைந்து ஒளி – ஒலிபரப்பு நடவடிக்கைகளுக்கு இடைஞ்சல் செய்தது. பிரதமரின் வீட்டை எரித்தது. பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளை உடைத்தது எரித்தது என்று நீளுகின்றது இந்தப் பட்டியல்.

தன்னெழுச்சியான மக்களின் கிளர்ச்சிகளை அதன் பண்பை மாற்றி வன்முறை சார்ந்த போராட்டமாக மாற்ற எவை, எவர்கள் காரணமாக இருந்தனர் என்பது நிச்சயம் மீள் பரிசீலிக்க வேண்டிய ஒன்றே. அந்த வகையான நடவடிக்கைகள்தான் மக்களின் தன்னெழுச்சியான கிளர்ச்சியைக் கூட தொடர முடியாத நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

மக்களின் ஆரம்பக் கிளிர்ச்சிக்கு காரணமாக இருந்த பொருளாதார நெருக்கடி என்ற பிரதானமான அம்சத்தையும் கடந்து, வேறு கருத்து நிலைகளையும் பலவீனப்பட்டிருந்த மக்களின் கிளர்ச்சியோடு இணைத்து மக்களை தவறாக வழிநடத்தும் நோக்கத்தைக் கொண்டது என்றே கூற வேண்டும்.

சிலர் அரசமைப்பில் மாற்றம் வேண்டும் என்கின்றனர். நிச்சயமாக இது அனைவராலும் ஏற்கக் கூடிய ஒன்றே. இந்த நாட்டுக்கு அவசியமான ஒன்றும் கூட. ஆனால், அதை செய்வதற்கு முன்பு பொருளாதார நெருக்கடியை சீர் செய்ய வேண்டும். தற்காலிகமானதும் முதன்மையானதுமான தேவையாக இருக்கும் இந்த மக்கள் பிரச்சினையைத்தான் இன்று முதன்மையானதாக எடுத்துக் கொள்ள முடியும். அதன் பிறகே நீண்ட கால இலட்சியமாக கருதப்படும் அரசமைபில் செய்ய வேண்டிய மாற்றம் மற்றும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு போன்றவற்றை கவனத்திற்கொண்டு செயல்பட முடியும்.

இன்று அரச எதிரப்பு அணியாக இருக்கின்ற எத்தனை அரசியல் கட்சிகள் அரசமைப்பு மாற்றத்தில் “மதச்சார்பற்ற” யாப்பை ஏற்கப் போகின்றன? இனப்பிரச்சினைக்கான தீர்வை கொடுப்பதற்கு எத்தனை கட்சிகள் விரும்பப் போகின்றன? இப்படியான கேள்விகள் இந்த இடத்தில் முக்கியமானவை.

(18 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியலமைப்பு ரீதியாகத் தேர்வானவர் ரணில்

## என்கிறார் சித்தார்த்தன்



**"விலகச் சொல்லுவது நாட்டுக்கு நல்லதல்ல"**

இன்றைய பொருளாதாரப் பிரச்சினைக்கு நாட்டில் புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சினை தான் அடிப்படைக் காரணம் என்கிறார் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன். தினகரன் வாரமஞ்சரிக்கு அவர் வழங்கிய செவ்வியில் 70 வருடங்களாக தமிழ் மக்களை ஒடுக்குவதற்கு அரசுகள் கோடானு கோடி ரூபாய் பணம்செலவு செய்தமை பொருளாதாரத்தை பின்னடையச் செய்தது என்கிறார். செவ்வி முழுமையாக....

**கேள்வி: கூட்டமைப்பு ஜனாதிபதித் தேர்தலில் டளஸுக்கு வாக்களிப்பதாக இருந்ததே. ஆனால் ரணிலுக்குக் கிடைத்த வாக்குகளைப் பார்த்தால் ரணிலுக்கு கூட்டமைப்பினரும் வாக்களித்துள்ளதாகவே தெரிகின்றதே உண்மையா?**

**பதில்:** கூட்டமைப்பில் இருந்து யாராவது மாறிப் போட்டார்களா என்று எனக்கு தெரியவில்லை. இரகசியமாக வாக்களித்த படியால், யார் யாருக்கு வாக்களித்தார்கள் என்று சொல்ல முடியாது.

டலஸுக்கு ஆதரவானவர்களும் ரணிலுக்கு வாக்களித்ததாகவும், ஜே.வி.பியின் ஆட்களும் வாக்களித்தனர் என்றும் பல கதைகள் இருக்கின்றன.

எது எப்படி இருந்தாலும், ரணிலுக்கு அளிக்கப்பட்ட வாக்குகளைப் பார்க்கின்ற போது, பொதுஜன பெரமுன கட்சியினர் அதிகமானவர்கள் வாக்களித்ததாக எனக்கு தெரிகிறது. கூட்டமைப்பினர் மாறிப் போட்டார்களா என்று எனக்கு சொல்ல முடியாமல் இருக்கின்றது.

**கேள்வி: ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தொடர்பாக பல சர்ச்சையான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றனவே?**

**பதில்:** அவர் பணம் வாங்கினார் என்பது நியாயமற்ற குற்றச்சாட்டு என நினைக்கிறேன். உறுதியாக கூற முடியாது. அதை நான் நம்பவில்லை.

**கேள்வி: தற்போதைய நிலையில் கூட்டமைப்பின் அடுத்த கட்ட அரசியல்நகர்வு என்னவாகஇருக்கும்?**

**பதில்:** ரணிலின் நகர்வுகள் எவ்வாறு அமையப் போகின்றது என்பது மிக முக்கியமான விடயம். ஏனெனில், கூட்டமைப்பின் அடுத்த கட்ட நகர்வுக்கு, தற்போது உள்ள சூழ்நிலையில், இனப்பிரச்சினை தீர்வு குறித்து அரசாங்கம் எந்த நகர்வையும் எடுக்காது. நாங்கள் அழுத்தங்களை பிரயோகித்துக் கொண்டிருப்போம்.

நாங்கள் டலஸ் அழகப்பெருமயிடம் பேசிய, காணாமல் ஆக்கப்பட்டோர்,அரசியல்கைதிகளின்விடுதலை, பயங்கரவாத தடைச் சட்டம், காணி விடுவிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்களை ரணிலிடமும் வலியுறுத்துவோம்.

பாராளுமன்றம் சென்று அங்கு அரசியல் யாப்பின் பிரகாரம் இன்றி, ஜனாதிபதியால் செய்யக்கூடியவற்றுக்கு கட்டாயமாக அழுத்திக் கேட்போம். ஆனால், நாங்கள் அவருக்கு எதிராக வாக்களித்து, அவருக்கு எதிராக தீர்மானம் எடுத்தது, சில வேளைகளில் அவரது மனதில் இருக்கலாம்.

இருந்தாலும், ரணில் நாட்டின் தலைவர் என்ற படியால் இந்த விடயங்களை செய்யலாம் என்று நம்புகிறேன்.

**கேள்வி: நல்லாட்சி அரசாங்கம் இனப்பிரச்சினை தீர்வு மற்றும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள், அரசியல் கைதிகள், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. இன்றைய சூழ்நிலையில் இனப்பிரச்சினை தீர்க்கப்படும் என நம்புவது சாத்தியமாகுமா?**

**பதில்:** நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் இனப்பிரச்சினை தீர்விற்காக ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர். அது முடிவு பெறவில்லை. அது வேறு விடயம். ஆனால், அது இப்போது நடைபெறும் என நான் எதிர்பார்க்கவில்லை.

ஆனால் மற்ற விடயங்களை, அவர் செய்யக்கூடியவை களை செய்யும் படி வலியுறுத்துவோம். அவர் இந்த நாட்டின் ஜனாதிபதியாக செய்து தருவார் என எதிர்பார்க்கின்றோம். அவர் தான் இந்த இடத்திற்கு வருவதற்கான முயற்சிகளை எடுத்து வந்திருக்கிறாரே தவிர, கோட்டாபய ராஜபக்ஷகளை பாதுகாக்கவோ,, ராஜபக்ஷகளைபாதுகாக்கவோ செய்வார் என எதிர்பார்க்கவில்லை.

**கேள்வி: ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பதவி விலக கோரி, காலி முகத்திடலில் முன்னெடுக்கப்படும் போராட்டம் தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன?**

**பதில்:** அவர் அரசியலமைப்பின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்டவர். விலக சொல்லுவது இந்த நாட்டிற்கு நல்லதல்ல.

அப்படி விலகத்தான் வேண்டுமென்றால், அரசியலமைப்பு ரீதியாக விலகச் செய்வதற்கு வழிகள் இருக்கின்றன. அதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டும்...

அவர் தான் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பது எனது அபிப்பிராயம் அல்ல. இவரை விட மிகச் சிறந்த ஒருவர் வந்தால் கூட, நாடு முன்னேற்றமடைய வேண்டும்.. இன்று இருக்கக்கூடிய இந்த நிலை மாற வேண்டும். சிங்கள மக்கள் மட்டுமன்றி எமது மக்களும் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**கேள்வி:அமையவுள்ள சர்வ கட்சி அரசில் கூட்டமைப்பு அங்கம் வகிக்குமா?**

**பதில்:** பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து சர்வகட்சி அமைப்பது பொருத்தமான ஒன்று, இன்றைய சூழ்நிலையில் கட்சி பேதமின்றி செயற்படுவதன் மூலம் தான் இந்த நாட்டை இக்கட்டான நிலையில் இருந்து மீட்க முடியும்.

ஆனால், இன்றும் கூட, எங்களை விடுங்கள். நாங்கள் அரசில் இருப்போம், இருக்கமாட்டோம் என்பதெல்லாம் வேறு விடயம். ஆனால் தென்னிலங்கை கட்சிகள், இன்றும் கூட இவ்வளவு இறுக்கமான நிலையில் நாடு இருக்கும் போது கூட, தங்களுடைய அதிகாரம், தாங்கள் தான் தனியாக அதிகாரத்துக்கு வர வேண்டும் என்று போட்டி போடும் நிலைமை துயரமானது. அவர்கள் தங்களுடைய போக்குகளையும், நான் தான் அதிகாரத்தில் இருக்க வேண்டும் என்ற போக்கையும் கைவிட்டு, நாட்டை முன்னோக்கி நகர்த்த வேண்டும் என்பதே என்னுடைய தனிப்பட்ட விருப்பம்.

அவ்வாறான நிலைமை உருவாகினால், நாங்களும் அவர்களுடன் சேர்ந்து, முன்னெடுப்புக்களை செய்வதற்கு தயாராகவே இருக்கின்றோம்.

**கேள்வி: அவ்வாறு கூட்டமைப்பு இணையுமானால் என்னென்ன நிபந்தனைகளை முன்வைக்கும் ?**

**பதில்:** எந்த வித நிபந்தனைகளும் இல்லை. அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து இந்த நாட்டை முன்னோக்கி நகர்த்த வேண்டும். தமிழ் மக்களுடைய இந்த தேசிய இனப்பிரச்சினை என்பது தான் ஒரு அடிப்படை காரணம் பொருளாதார பின்னடைவுக்கு, 70 வருடங்களாக தமிழ் மக்களை ஒடுக்குவதற்கு அவர்கள் செலவு செய்த கோடான கோடி ரூபாய் பணம். இவை எல்லாம் முக்கியமான காரணம்.

தொடர்ந்தும் தமிழ் மக்களைப் புறந்தள்ளி, இந்த நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியுமென்று, நினைத்துச் செயற்படுவார்களாக இருந்தால், இந்த நாடு நிச்சயமாக முன்னேறாது.

இப்போதுள்ள முதலாவது பிரச்சினை இந்த நாட்டை பொருளாதார ரீதியாக முன்னேற்றுவது.

அதைச் செய்கின்ற அதேநேரத்தில், எமது தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கும் நியாயமான தீர்வை காண வேண்டும். அப்படியான நிலைப்பாட்டை அவர்கள் எடுப்பார்கள் என்று நம்பினால்தான், நாங்கள் அவர்களுடன் இணைந்து செயற்பட முடியும் என்றார்.



சுமித்தி தங்கராசா

# அழியும் ஆபத்தை எதிர்நோக்கும் இலங்கைச் சிறுத்தைகள்

ஸ்பென்சர் மனுவேல்பிள்ளை

உலகளாவிய ரீதியில் இனங்காணப்பட்டுள்ள 8 வகையான சிறுத்தை உப இனங்களில் பந்தெரா பார்டஸ் கொட்டியா (*Panthera pardus kotiya*) என விஞ்ஞான ரீதியாக அறியப்படும் இலங்கைச் சிறுத்தையும் ஒன்றாகும். சிறுத்தைகள் பல்வேறுபட்ட சூழல்களுக்கு இசைவாக்கமடைந்து வாழக்கூடியவை என்பதனால் இலங்கையின் உலர் வலயம் முதல் ஈர வலயம் வரை இவை பரந்து காணப்படுகின்றன. சிங்கம், புலி போன்ற வலிமையான பெரிய ஊனுண்ணிகள் வாழும் நாடுகளில் சிறுத்தைகள் தம் உணவுக்காக அவற்றுடன் போட்டியிட வேண்டியுள்ளது. ஆனால் சிறுத்தைகளே இலங்கையின் உயர் ஊனுண்ணியாகவுள்ளது (Top predator). சிறுத்தைகளை அவற்றின் மஞ்சள் நிறமான தோலில் காணப்படும் கறுப்பு நிறமான புள்ளி அடையாளங்களை கொண்டு இலகுவாக இனங்கண்டுகொள்ளலாம்.

சிறுத்தைகள் தினமானது 2021 ம் ஆண்டில் ஆவணி முதலாம் திகதியில் வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்புச் சங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டு, இந்தவருடம் இரண்டாவது முறையாக கொண்டாடப்படுகிறது. சிறுத்தைகள் உணவு சங்கிலியை பேணுவதன் மூலம் இயற்கை சமநிலையை பேணுவதில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை. பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தினால் (International Union for Conservation of Nature IUCN) சிறுத்தைகள் அழிவுறக்கூடிய நிலையிலுள்ள இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

விஞ்ஞான ஆராய்ச்சிகளின் அடிப்படையில் இலங்கையில் ஆயிரத்திற்கும் குறைவான சிறுத்தைகளே தற்போது வாழ்கின்றன.

சிறுத்தைகள் தனித்து வாழும் இயல்புடையவை. ஒரு நாளில் 18 மணித்தியாலங்கள் வரை உறங்கும் மற்றும் அவை மாலை முதல் இரவு மற்றும் அதிகாலை நேரங்களிலேயே சுறுசுறுப்பாக காணப்படுவதோடு மான், மரை, காட்டுப்பன்றி, குரங்கு, முள்ளம்பன்றி என்பவற்றையும் மற்றும் பறவைகளையும் இரையாக கொள்ளும்.

இவை ஒலி எழுப்பாமல் பதுங்கி இரைக்கு அருகில் சென்று விரைவாக தாக்கி



இரையின் மூச்சுக்குழலை நசுக்குவதன் மூலம் அவற்றைக் கொல்கின்றன. பருமனான இரையினை 2 தொடக்கம் 3 நாட்கள் வரை சிறிது சிறிதாக உட்கொள்ளும் அதன் பின் 7 தொடக்கம் 14 நாட்கள் வரை வேறு இரை எதுவும் உட்கொள்ளாமல் வாழக்கூடியது. பெண் சிறுத்தைகள் ஒரு தடவையில் 2 தொடக்கம் 3 குட்டிகள் வரை ஈனுகின்றன. இவை 18 தொடக்கம் 24 மாதங்கள் வரை தாயுடன் சேர்ந்து வாழும்.

- ★ **தலை முதல் உடல் வரை நீளம் அண்ணளவாக 105 - 142 cm**
- ★ **வாலின் நீளம் அண்ணளவாக 77 - 96 cm**
- ★ **பெண் சிறுத்தையின் நிறை அண்ணளவாக 30 kg**
- ★ **ஆண் சிறுத்தையின் நிறை அண்ணளவாக 77 kg**
- ★ **வாழ்விடம் அண்ணளவாக 5 சதுரகிலோமீட்டர் பரப்பளவு**
- ★ **ஆயுட்காலம் 12 -15 வருடங்கள்**

இலங்கையில் கடந்த பத்து வருடங்களில் 96 சிறுத்தைகள் வரை இறந்திருக்கின்றன.

பொதுவாக சிறுத்தைகளின் இறப்பிற்கு செயற்கை காரணிகளான காடழிப்பு மற்றும் வாழ்விட இழப்பு, பொறிகளில் சிக்கி இறத்தல், தோல், பல், நகம் மற்றும் இறைச்சிக்காக வேட்டையாடுதல், மற்றும் இயற்கை காரணிகளான முதுமை மற்றும் ஏனைய மிருகங்களான முதலை, கரடி, எருமை போன்றவற்றின் தாக்குதலாலும் காரணங்களாகின்றன. சிரேஷ்ட சுற்றுச்சூழல் வழக்கறிஞர் டாக்டர் ஜெகத் குணவர்தன அவர்கள் சிறுத்தைகள் தொடர்ப்பன குற்றச்செயல்களை பற்றி கூறியதாவது, தாவர மற்றும் விலங்கு பாதுகாப்பு சட்டத்தின் முப்பதாவது பிரிவின் கீழ் சிறுத்தைகளை கொல்லுவதோ அல்லது துன்புறுத்துவதோ அல்லது சிறுத்தையின் தோல், பல், நகம் மற்றும் இறைச்சியினை வைத்திருப்பதோ அல்லது விற்பனை செய்வதோ தண்டனைக்குரிய குற்றமாகும் மற்றும் இவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுப்படுவோர் பொலிசாராலோ அல்லது வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தாராலோ அல்லது வன பாதுகாப்புத் திணைக்களத்தாராலோ உத்தரவின்றி கைதுசெய்யப்படுவார்கள்.

மலையகத்தில் அதிகரித்துவரும் சிறுத்தைகளின் தொடர் இறப்பு சம்பவங்களை தொடர்ந்து சிறுத்தைகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் *rainforest alliance* இனால் ஒழுங்குசெய்யப்பட்டு *Unilever* நிறுவனத்தின் நிதி உதவியுடன் வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்புச் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வருகின்றது.

இதனை தவிர, சிறுத்தைகளுடைய வாழ்விடம், பரம்பல், உணவு பழக்கம் மற்றும் மனித சிறுத்தை மோதல் போன்ற பல ஆராய்ச்சி நோக்கங்களை அடிப்படையாக கொண்டு கிளிநொச்சி, சிகிரியா, பெலிகுல் ஓயா, பானம, கொட்டகல மற்றும் மோர்னிங் சைட் போன்ற இடங்களில் சிறுத்தைகள் ஆராய்ச்சி மையங்கள் அமைக்கப்பட்டு LOLC இன் அனுசரணையுடன் 5 வருட ஆராய்ச்சி நிகழ்ச்சி திட்டம் வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்புச் சங்கத்தினால் அமுல்படுத்தப்பட்டுள்ளது.



கலாநிதி ச. விஜயமோகன் (வவுனியா பல்கலைக்கழகம்) கூறியதற்கு இணங்க வடக்கில் காணப்படும் பெரிய பரப்பளவிலான, செறிந்த விதானமுடைய காடுகள் சிறந்த அளவிலான சிறுத்தைகளின் எண்ணிக்கையையும் நிலவுகையையும் வடக்கில் பேணுவதில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது.

இருந்தாலும் சில இடங்களில், குறிப்பாக மன்னார் குஞ்சுக்குளம் போன்ற பகுதிகளில் சிறுத்தைகள் அதிகளவு கால்நடைகளை வேட்டையாடுவதனால் கால்நடை உரிமையாளர்கள் சிறுத்தைகளை நச்சூட்டப்பட்ட மாமிசங்களை கொண்டு இறக்கச்செய்து புதைக்கும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றது. இதனால் ஒப்பீட்டளவில் ஒரு யானையின் இறப்பு வெளிப்படையாக தெரிய வருவதுபோல் சிறுத்தைகளின் இத்தகைய இறப்பு சம்பவங்கள் வெளிவருவதில்லை.

(18ஆம் பக்கம் பார்க்க)


## இலங்கை வங்கி

உலகளாவிய அதிசிறந்த 1000 வங்கிகளுள் ஒன்றாகவும் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் 500 மிகப்பெரிய வங்கிகளுக்குள் ஒன்றாகவும் தரப்படுத்தப்பட்டுள்ள அரச வர்த்தக வங்கியும் இலங்கையின் 1ம் தர வங்கியுமாகிய இலங்கை வங்கியின் தொழில்நுட்பப் பிரிவில் நிலவும் கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தகுதியும் அனுபவமும் ஆற்றலும் ஊக்கமும் கொண்ட இளம் நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### கணினி அமைப்புப் பகுப்பாய்வாளர் / நிரலர் (System Analyst / Programmer)

**தேவைப்படும் தகைமைகள்**

1. **கல்வித் தகைமைகளும் அனுபவமும்**

இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் கணினி விஞ்ஞானம் அல்லது தகவற் தொழில்நுட்பம் அல்லது தகவல் மற்றும் தொடர் பாடல் தொழில்நுட்பம் அல்லது மென்பொருட் பொறியியலில் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பில் (உயர் பிரிவு) பெற்றுக்கொண்ட இளமாணிப் பட்டம்.

**அல்லது**

இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் கணினி விஞ்ஞானம் அல்லது தகவற் தொழில்நுட்பம் அல்லது தகவல் மற்றும் தொடர் பாடல் தொழில்நுட்பம் அல்லது மென்பொருட் பொறியியல் இளமாணிப் பட்டத்துடன் மென்பொருள் வடிவமைப்பு / தர உத்தரவாதம் / தரவுத்தள முகாமைத்துவம் / தகவற் பாதுகாப்பு துறையில் குறைந்தது ஓராண்டு அனுபவம் பெற்றிருத்தல்.

2. **ஏனைய தகைமைகள்**

- தகவல் அமைப்புப் பாதுகாப்பு / தரவுத்தள முகாமைத்துவம்/ தர உத்தரவாதம் தொடர்பான தொழில்முறைத் தகைமைகள் மேலதிகத் தகுதிகளாகக் கொள்ளப்படும்.
- தர உத்தரவாதம் / தரவுத்தள முகாமைத்துவம் / தகவற் பாதுகாப்பு அல்லது Enterprise / Advanced JAVA, J2EE, XML, RPG, ILE, CLLE, Dojo, Spring MVC, Web Sphere, C#, .Net, HTML முதலானவற்றைப் பயன்படுத்தி மென்பொருள் வடிவமைத்தல் என்பவற்றில் அனுபவத்தைக் கொண்டிருத்தல் கூடுதல் நன்மையாகும்.
- ஊக்கமும் பெறுபேறுகளை மையமாகக்கொண்டு செயற்படுமாற்றலும் கொண்டிருத்தல்
- புத்தாக்கச் சிந்தனையும் சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் திறன்களும் வாய்க்கப்பெற்றிருத்தல்

3. **வயது**

விண்ணப்ப முடிவுத் திகதியில் 30 வயது அல்லது அதற்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

4. **விதிகளும் நிபந்தனைகளும்**

- இப்பதவி வழமையான வங்கிச் சேவைக்கு புறம்பானதெனினும் (மூடிய சேவை) வங்கியின் பொது விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகும்.
- விண்ணப்பதாரர் 02 வருட தகுதிகாண் காலத்தின் பின்னர் தகுதியானவர் எனக் கருதப்பட்டால் வங்கியின் நிரந்தர ஆளணிக்குள் கணினிப் பகுப்பாய்வாளர் / நிரலர் – I என்ற பதவியில் அமர்த்தப்படுவார்.
- அடிப்படைச் சம்பள அளவுத்திட்டம்

ரூ. 62,060/- - ரூ. 81,660/-
ரூ. 980/- x 20

(அனைத்தும் உள்ளடங்கலாக மாறும் வாழ்க்கைச் செலவுப்படியுடன் மாதாந்த மொத்தச் சம்பளம் ஏறத்தாழ ரூ. 143,000/- ஆகும்

- வார இறுதியில்/ விடுமுறை நாட்களிலும் கடமை நேரத்துக்குப் பின்பும் வேலை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

### வலையமைப்பு / தொடர்பாடல் பொறியியலாளர் (Network/ Communication Engineer)

**தேவைப்படும் தகைமைகள்**

1. **கல்வித் தகைமைகளும் அனுபவமும்**

இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் கணினி விஞ்ஞானம் அல்லது தகவற் தொழில்நுட்பம் அல்லது தகவல் மற்றும் தொடர் பாடல் தொழில்நுட்பம் அல்லது பொறியியலில் இளமாணிப் பட்டம் பெற்றிருப்பதோடு வலையமைப்பு மற்றும் தொலைத்தொடர்புத் துறையில் ஓராண்டு அனுபவமும் கொண்டிருத்தல் வேண்டும்.

**அல்லது**

இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் கணினி விஞ்ஞானம் அல்லது தகவற் தொழில்நுட்பம் அல்லது தகவல் மற்றும் தொடர் பாடல தொழில்நுட்பம் அல்லது பொறியியலில் இளமாணிப் பட்டம் பெற்றிருப்பதோடு CCNA சான்றும் கொண்டிருத்தல் வேண்டும்.

**அல்லது**

இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் விஞ்ஞான இளமாணிப் பட்டம் பெற்றிருப்பதோடு CCNA சான்றும் வலையமைப்பு மற்றும் தொலைத்தொடர்புத் துறையில் ஓராண்டு அனுபவமும் கொண்டிருத்தல் வேண்டும்.

2. **ஏனைய தகைமைகள்**

- ஊக்கமும் பெறுபேறுகளை மையமாகக்கொண்டு செயற்படுமாற்றலும்
- தேவைப்படும்போது வெளி மாவட்ட கிளைகளுக்குச் செல்லும் இயலுமை

3. **வயது**

விண்ணப்ப முடிவுத் திகதியில் 30 வயது அல்லது அதற்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

4. **விதிகளும் நிபந்தனைகளும்**

- இப்பதவி வழமையான வங்கிச் சேவைக்கு புறம்பானதெனினும் (மூடிய சேவை) வங்கியின் பொது விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகும்.
- விண்ணப்பதாரர் 02 வருட தகுதிகாண் காலத்தின் பின்னர் தகுதியானவர் எனக் கருதப்பட்டால் வங்கியின் நிரந்தர ஆளணிக்குள் வலையமைப்பு / தொடர்பாடல் பொறியியலாளர் – I என்ற பதவியில் அமர்த்தப்படுவார்.
- அடிப்படைச் சம்பள அளவுத்திட்டம்

ரூ. 62,060/- - ரூ. 81,660/-
ரூ. 980/- x 20

(அனைத்தும் உள்ளடங்கலாக மாறும் வாழ்க்கைச்செலவுப் படியுடன் மாதாந்த மொத்தச் சம்பளம் ஏறத்தாழ ரூ. 143,000/- ஆகும்.

- வார இறுதி / விடுமுறை நாட்களிலும் கடமை நேரத்துக்குப் பின்பும் வேலை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

### தெரிவு முறை

- போட்டிப் பரீட்சையினைத் தொடர்ந்து பட்டியற்படுத்தப்படும் விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.
- போட்டிப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் நேர்முகத் தேர்வுக்குத் தகுதிபெறும் விண்ணப்பதாரிகளைப் பட்டியற்படுத்த மட்டுமே பயன்படுத்தப்படும்.

### விண்ணப்பிக்கும் முறை

உங்களது சுயவிபரக் கோவையினை **www.boc.lk** என்ற எங்களது இணையத்தள முகவரியூடாக (**Careers** என்ற பகுதியின் கீழ்) தரவிறக்கம் செய்யக் கூடிய மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவாக பூர்த்தி செய்து உறவுமுறைசாராத இரண்டு நபர்களின் தொடர்பு விபரங்களுடனும் பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ்கள், அனுபவத்தை நிரூபிக்கும் ஆவணங்கள் என்பவற்றின் பிரதிகளுடனும் **13.08.2022 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கும் வகையில் கீழ்க்காணும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

விண்ணப்பத்தின் முடிவுத் திகதியில் மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டிராத அல்லது தொடர்புடைய சான்றிதழ்களின் நிழற்பிரதிகளைக் கொண்டிராத அல்லது விண்ணப்ப முடிவுத் திகதியிற்குப் பின்பு கிடைக்கப் பெறும் அல்லது உண்மைக்குபுறம்பான தகவல்களைக் கொண்ட எந்தவொரு விண்ணப்பமும் ஆட்சேர்ப்பின் எந்தக் கட்டத்திலும் நிராகரிக்கப்படும்.

**பிரதான முகாமையாளர் (ஆட்சேர்ப்பும் தொழில் அபிவிருத்தியும்)**
**இலங்கை வங்கி**
**26ஆவது மாடி, தலைமை அலுவலகம்,**
**இலங்கை வங்கிச் சதுக்கம்**
**இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு -01**

தேர்வு சம்பந்தமான ஆதரவுகளை நாடுவோர் தகைமையை இழப்பர்.
தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளை மட்டும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.
நிரப்பப்படவுள்ள பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் அல்லது ஆட்சேர்ப்பை பிற்போடும்/இரத்துச்செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

இலங்கைவங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



## இலங்கை வங்கி

உலகளாவிய அதிசிறந்த 1000 வங்கிகளுள் ஒன்றாகவும் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் 500 மிகப் பெரிய வங்கிகளுள் ஒன்றாகவும் தரப்படுத்தப்பட்டுள்ள அரச வர்த்தக வங்கியும் இலங்கையின் 1ம் தர வங்கியுமாகிய இலங்கை வங்கியின் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகைமையும் ஆற்றலும் ஊக்கமும் அனுபவமும் கொண்ட இளம் நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### கணக்காய்வு உதவியாளர் பயிலுநர்

### தேவைப்படும் தகைமைகள்

➢ **இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.**

➢ **கல்வித் தகைமைகளும் அனுபவமும்**

- க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் ஒரே அமர்வில் குறைந்தபட்சம் 03 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**மற்றும்**

- க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஒரே அமர்வில் (பொது ஆங்கிலம், பொது அறிவு தவிர) 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

**மற்றும்**

- இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் (ICASL) சான்றிதழ் பெற்ற வியாபாரக் கணக்காளராக (CBA) இருத்தல் வேண்டும்.

**மற்றும்**

- இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் (ICASL) அல்லது இலங்கை மத்திய வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நிதி நிறுவனம் ஒன்றால் அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வு நிறுவனம் ஒன்றில் 02 ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம்.

❖ மேற்குறித்த தகைமைகளுக்கு மேலதிகமாக இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் (IBSL) CBF/IABF பரீட்சைகளில் சித்தியடைந்துள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

➢ **ஏனைய தகைமைகள்**

- ஆங்கிலம் மற்றும் சிங்களம்/தமிழ் மொழிகளில் தொடர்பாடும் திறன்.
- குறைந்தபட்ச மேற்பார்வையின் கீழ் சுயாதீனமாகத் தொழிற்படும் ஆற்றல்.
- கணனி அறிவும் தகவல் தொழில்நுட்பம்சார் கணக்காய்வு உத்திகளும்.
- குழுவாகச் செயற்படும் ஆற்றலுடன் பிறருடன் பழகும் பண்புகளையும் கொண்டிருத்தல்.
- அழுத்தமிகு சூழ்நிலைகளிலும் வேலை செய்யக்கூடிய ஆற்றல்.

➢ **வயது**

- விண்ணப்ப முடிவுத் திகதியில் 26 வயது அல்லது அதற்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

### விதிகள் மற்றும் நிபந்தனைகள்

- பயிற்சிக்காலம் 02 ஆண்டுகளாகும் இப்பயிற்சிக் காலத்தில் மாதாந்த பயிற்சிக் கொடுப்பனவொன்று (முதலாம் வருடம் ரூபா 45,000 மற்றும் இரண்டாம் வருடம் ரூபா 60,000) வழங்கப்படும்.
- இப்பதவி வங்கிச் சேவையின் பொது விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய காணப்படினும் சாதாரண வங்கியியல் துறைக்குப் புறம்பானதாகும் (மூடிய சேவை).
- பயிற்சிக் காலத்தில் ஆற்றிய சேவையில் வங்கி திருப்தியடையும் பட்சத்தில் கணக்காய்வு உதவியாளர் -1 என்ற தரத்தில் நிரந்தர ஆளணியில் உறுதிப்படுத்தப்படுவர்.
- வங்கியின் தேவைக்கேற்ப நாட்டினது எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்குத் தயாராகவிருத்தல் வேண்டும்.
- வழமையான வங்கி வேலை நேரத்திற்குப் பிறகும் வார இறுதி நாட்கள்/விடுமுறை நாட்களிலும் பணிபுரியக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
- பெரும் முன்னறிவித்தல்களேதும் வழங்கப்படாதபோதும் நாட்டின் எப்பாகத்துக்கும் பயணம் செய்யக் கூடியவராக இருத்தல்.

### தெரிவு நடைமுறை

- போட்டிப் பரீட்சையினைத் தொடர்ந்து பட்டியற்படுத்தப்படும் விண்ணப்பதாரிகள் நேர்முகத்தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.
- போட்டிப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் நேர்முகத்தேர்வுக்குத் தகுதிபெறும் விண்ணப்பதாரிகளைப் பட்டியற்படுத்த மட்டுமே பயன்படுத்தப்படும்.
- மாகாண ரீதியாக அல்லது வங்கியின் தற்றுணிபின் அடிப்படையில் தெரிவு இடம்பெறும்.

### விண்ணப்பிக்கும் முறை

உங்களது சுயவிபரக் கோவையினை **www.boc.lk** என்ற எங்களது இணையத்தள முகவரியூடாக (**careers** என்ற பகுதியின் கீழ்) தரவிறக்கம் செய்யக்கூடிய மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவாக பூர்த்தி செய்து உறவுமுறைசாராத இரண்டு நபர்களின் தொடர்பு விபரங்களுடனும் பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ்கள், அனுபவத்தை நிரூபிக்கும் ஆவணங்கள் என்பவற்றின் பிரதிகளுடனும் **13.08.2022ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கும் வகையில் கீழ்க்காணும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பவும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

விண்ணப்பத்தின் முடிவுத் திகதியில் மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டிராத அல்லது தொடர்புடைய சான்றிதழ்களின் நிழற்பிரதிகளைக் கொண்டிராத அல்லது உண்மைக்குப் புறம்பாக தகவல்களைக் கொண்ட அல்லது விண்ணப்ப முடிவுத் திகதியிற்குப் பின்பு கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பமும் ஆட்சேர்ப்பின் எந்தக் கட்டத்திலும் நிராகரிக்கப்படும்.

**பிரதான முகாமையாளர் (ஆட்சேர்ப்பும் தொழில் அபிவிருத்தியும்)**
**இலங்கை வங்கி,**
**மனித வளப் பிரிவு,**
**26ஆவது மாடி, தலைமை அலுவலகம்,**
**“இலங்கை வங்கிசதுக்கம்”,**
**இல.01, இலங்கை வங்கி மாவத்தை,**
**கொழும்பு-01.**

*தேர்வு சம்பந்தமான ஆதரவுகளை நாடுவோர் தகைமையை இழப்பர்.*

*தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளை மட்டும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.*

*நிரப்பப்படவுள்ள பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் அல்லது ஆட்சேர்ப்பை பிற்போடும்/இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்க உண்டு.*

இலங்கைவங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# அரச வளங்களை பலாத்காரமாக கையகப்படுத்தும் உரிமை எவருக்கும் கிடையாது

## பொலிஸ் ஊடகப் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ

**அரச கட்டிடங்கள் மற்றும் சொத்துக்களை கையகப்படுத்துவதற்கோ அல்லது அத்துமீறி அரச கட்டிடங்களுக்குள் பிரவேசிப்பதற்கோ எவருக்கும் அனுமதி கிடையாது. அவ்வாறு செயற்டுவது சட்டவிரோதமாகும். சட்டவிரோத செயற்பாடுகளை அனுமதிக்க முடியாது. அவ்வாறு செயல்படுபவர்களை பொலிசார் வெறுமனே கைகட்டி நின்று பார்க்க மாட்டார்கள். அரச வளங்களையும் கட்டிடங்களையும் பாதுகாக்கும் பொறுப்பு பொலிசாருக்கு உரியது. பொலிசார் தமது பொறுப்பையே நிறைவேற்றி வருகின்றனர். சட்டவிரோத ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்களை கட்டுப்படுத்துவது தொடர்பில் சட்டத்தில் இடமுள்ளது. அதன் அடிப்படையிலேயே சட்டவிரோதமாக மேற்கொள்ளப்பட்டு வரும் ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை பொலிசாரும் இராணுவத்தினரும் மேற்கொண்டு வருகின்றனர். சட்டத்தை கையிலெடுக்கும் உரிமை எவருக்கும் கிடையாது. இக்காலங்களில் ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னெடுக்கும் மோசமான செயற்பாடுகள் பொலிசார் மீது மக்களுக்கு உள்ள பயத்தை இல்லாதொழிக்கும். அவ்வாறான நிலை சிறந்த விளைவுகளை தரப்போவதில்லை. குற்றச் செயல்களையும் சமூக பிரச்சினைகளையும் சாதாரண மக்கள் முறைப்பாடு செய்வதற்காக இருக்கும் ஒரே இடம் பொலிஸ் நிலையம் தான். அந்த முறைமை சீரழிக்கப்பட்டால் எதிர்காலம் மிக மோசமாகும். ஜனநாயக நாடு என்ற வகையில் அதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்கிறார் பொலிஸ் ஊடகப் பணிப்பாளரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ. நாட்டில் நடைபெற்று வரும் அண்மைய சம்பவங்கள் தொடர்பிலும் அது தொடர்பில் பொலிசார் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் அவர் கருத்துக்களைக் கூறுகின்றார்.**

நேர்காணல்:
லோரன்ஸ் செல்வநாயகம்...



**கே: ஆர்ப்பாட்டக்காரர்களால் கையகப்படுத்தப்பட்ட ஜனாதிபதி செயலகத்தை மீட்கும் நடவடிக்கையின் போது பொலிசாரால் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது மோசமான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் பொலிசார் முறையற்ற விதத்தில் செயற்பட்டதாகவும் வெளிவரும் தகவல்கள் தொடர்பில் உண்மைத் தன்மையை தெரிவிக்க முடியுமா?**

பதில்: போராட்டக்காரர்களை கட்டுப்படுத்துவது என்பது சாதாரண விடயமல்ல. போராட்டங்களை கட்டுப்படுத்தும் போது சந்திக்க நேரும் நேரடி எதிர் விளைவுகளுக்கு முகம் கொடுத்து எந்த நிலையிலும் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய கடமை பொலிசாருடையது. இது எமது நாட்டில் மட்டுமல்ல உலகில் எங்கும் நடப்பதே.

பொதுமக்கள் தமது உரிமையை பெற்றுக் கொள்வதற்காக ஆர்ப்பாட்டம் நடத்துவதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். எனினும் அதன் போது சட்ட விரோத செயற்பாடுகள் இடம்பெறுமானால் அதனை சட்ட வரைவு மூலமாகவே கட்டுப்படுத்த வேண்டியுள்ளது.

அதற்கமைய ஜனாதிபதி செயலகத்தை பலவந்தமாக ஆக்கிரமித்து அங்கு தங்கியிருப்பது சட்டவிரோதமான செயற்பாடாகும். அவ்வாறான நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது எவ்வாறு என்பது தொடர்பில் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அது தொடர்பில் பல்வேறு விதமான கருத்துக்கள் வெளியிடப்படலாம். எனினும் பொலிசார் தமது கடமையையே மேற்கொண்டனர்.

காலிமுகத்திடலில் 200க்கும் மேற்பட்ட கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்த போதும் கடந்த மே 9ஆம் திகதி அங்கு சுமார் ஐந்து கூடாரங்களே சேதப்படுத்தப்பட்டிருந்தன.

பெருமளவு ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கு இருந்துள்ள நிலையில் மூன்று அல்லது நான்கு பேருக்கே காயங்கள் ஏற்பட்டுள்ளன.

எவ்வாறெனினும் அத்தகைய செயல்களை நாம் அனுமதிக்கப் போவதில்லை. இறுதி சந்தர்ப்பத்திலாவது பொலிசார் தலையிட்டதனால்தான் மோதல்களைக் கட்டுப்படுத்த முடிந்தது.

எனினும் பெருமளவானோர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் பெருமளவு கூடாரங்கள் சேதப்படுத்தப்பட்டதாகவும் தகவல்கள் வெளியிடப்பட்டன. உண்மையில் நடந்ததும் அவை பிரசாரப்படுத்தப்பட்டமைக்குமிடையில் உள்ள வித்தியாசத்தை இதன் மூலம் காணமுடிகிறது.

காயமடைந்தவர்கள் மருத்துவரிடம் கொண்டு செல்லப்படுவர். மருத்துவர் அவரை பரிசோதனை செய்த அறிக்கையை வழங்கியதன் பின்பு அதனை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கக் கூடிய சந்தர்ப்பமும் உள்ளது.

பிரசாரப்படுத்தப் படுவது போல் ஜனாதிபதி செயலகத்தை மீட்கும் போது பாரதூரமான தாக்குதல்கள் இடம் பெற்றிருந்தால் பெரும்பாலானோர் காயமடைந்திருக்க வேண்டும்.

மற்றும் அந்த சம்பவங்கள் தொடர்பில் ஆறு முறைப்பாடுகள் மாத்திரமே செய்யப்பட்டுள்ளன. சிறு காயங்களே தவிர பாரிய காயங்கள் தொடர்பில் அதில் தெரிவிக்கப்படவில்லை.

இவ்வாறுதான் சிறு சம்பவமொன்று பூதாகரமாக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பில் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**கே: ஆர்ப்பாட்டக்காரர்களை வெளியேற்றும் நடவடிக்கைகளின் போது பாதுகாப்பு படையினர் தவிர்ந்த வேறு தரப்பினரும் அதில் சம்பந்தப்பட்டிருந்ததாக கூறப்படும் செய்தியின் உண்மைத் தன்மை என்ன?**

பதில்: உண்மையில் அந்த நடவடிக்கைகளில் பொலிசாரும் இராணுவத்தினரும் மட்டுமே செயற்பட்டனர். வேறு எவரும் அதில் ஈடுபடவில்லை என்ற தகவல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இராணுவத்தினரின் இரவு நேர கடமைகளின் போது அவர்கள் அணியும் சீருடைகளில் வித்தியாசங்கள் உள்ளன. இந்த சம்பவத்தின் போதும் அவ்வாறு உடை அணிந்திருந்ததால் தவறான சந்தேகங்கள் வரலாம்.

அதேவேளை அவ்வாறான குழுக்கள் ஈடுபட்டிருந்தால், அவர்கள் மனிதாபிமானமற்ற ரீதியில் தாக்குதல்களை மேற்கொண்டிருந்தால் குற்றஞ்சுமத்துபவர்கள் நீதிமன்றத்தை நாட முடியும். அத்தகைய உரிமை நிராகரிக்கப் படுவதில்லை.

**கே: ஆர்ப்பாட்டக்காரர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு இராணுவம் அழைக்கப்பட்டது பொலிசாரின் வேண்டுகோளின் பேரிலா?**

பதில்: ஜூலை 9ஆம் திகதி முதல் அனைத்து நடவடிக்கைகளும் பொலிசும் இராணுவமும் இணைந்ததாகவே மேற்கொள்ளப்பட்டது.

அப்படி இல்லாவிட்டாலும் பொலிசாருக்கு தமது கடமையின் போது இராணுவத்தினரை அழைப்பதற்கான உரிமை உள்ளது. பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் பன்னிரண்டாவது சரத்தின்படி வர்த்தமானி மூலம் இராணுவத்தினரை அழைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

அத்தகைய நிலையில் அவசர காலச்சட்டம் நடைமுறையில் இல்லாத சந்தர்ப்பங்களிலும் மாதாந்தம் இராணுவம் இவ்வாறு கடமைக்கு அழைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அழைக்கப்படும் போது இராணுவத்தினருக்கு மேலதிக அதிகாரங்கள் எதுவும் வழங்கப்படுவதில்லை. எனினும், அவசர காலச் சட்டத்திற்கு அமைய அவர்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்தினதோ அல்லது பொலிசாரினதோ உத்தரவு இல்லாமலே சட்டவிரோத ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரம் அதன் மூலம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**கே: ஆர்ப்பாட்டக்காரர்கள் கடந்த ஜூலை 22ஆம் திகதி தாம் வெளியேறப் போவதாக தெரிவித்திருந்த நிலையிலும் பலவந்தமாக அவர்களை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது ஏன்?**

பதில்: ஜனாதிபதி செயலகம் என்பது அரசாங்கத்தின் சொத்து. அதற்குள் எவரும் பலவந்தமாக பிரவேசிக்க முடியாது. சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களுக்கு அங்கிருந்து வெளியேறுவது தொடர்பில் கால அவகாசம் கோர முடியாது.

அவர்கள் அந்த கட்டிடத்திற்குள் நுழைந்ததிலிருந்து அவர்கள் சட்ட விரோத நடவடிக்கையிலேயே ஈடுபட்டனர். அவர்களை எந்த சந்தர்ப்பத்திலும் வெளியேற்றக் கூடிய அதிகாரம் சட்டத்தை நிலைநாட்டும் அதிகாரிகளுக்கு உள்ளது.

வெளியேறுமாறு பொலிசார் அவர்களிடம் வேண்டுகோள் விடுக்க வேண்டிய அவசியமும் கிடையாது. ஜனாதிபதி செயலக வாயிலை தடை செய்யும் வகையில் நடவடிக்கை மேற்கொண்டிருந்தவர்களிடம் கொழும்பு கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அங்கிருந்து விலகிக் கொள்ளுமாறு 9 தடவைகள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதே வேளை கொழும்பு மத்திய பிரிவுக்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகரும் பல தடவைகள் ஜனாதிபதி செயலகத்திலிருந்து அவர்களை வெளியேறுமாறு கோரிக்கை விடுத்துள்ளார். அந்த வகையில் பொலிசார் மனிதாபிமான ரீதியிலேயே நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

அவர்கள் சட்டத்தை மதிப்பவர்களாக இருந்தால் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்திருக்க முடியும். அவர்களால் கால அவகாசத்தை கோர முடியாது.

அரசியலமைப்புக்கு இணங்க ஜனாதிபதி ஒருவர் பதவியேற்ற நிலையில் அவர் ஜனாதிபதி செயலகத்துக்கு வருகை தந்து தமது கடமைகளை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது பொலிசாரினதும் பாதுகாப்பு படையினரதும் பொறுப்பாகும்.



**கே: கைது செய்யப்பட்டவர்கள் சாதாரண சட்டத்திற்கு இணங்க நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டதேன்?**

பதில்: சட்டத்தின் நோக்கம் நாட்டில் சாதாரண நிலைமையை முன்னெடுத்துச் செல்வதே. அத்தியாவசிய பொருட்களுக்கான நெருக்கடி காரணமாக மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர். இது முன்னொரு போதும் நாட்டில் காணப்படாத நிலைமையாகும். இத்தகைய தருணத்தில் சட்டத்தை புத்தகத்தில் உள்ளவாறு நடைமுறைப்படுத்த முற்பட்டால் மக்கள் பெரும் பாதிப்புகளை எதிர் நோக்க நேரும்.

அதற்காக நாம் சட்டத்தை நடைமுறைப்படுத்தவில்லை என்றும் கூற முடியாது.

அண்மைக்காலமாக நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் சட்ட விரோத கூட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. ஆரம்பத்தில் தமக்குள்ள அதிகாரங்களைக் கொண்டு பொலிசாரினால் அவற்றைக் கலைக்க முடிந்தது. பின்னர் நவீன ரீதியாக மோதல்களை கட்டுப்படுத்துவதற்கான முறைமையை நாம் தெரிவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அதை குறையாக எவரும் கருத முடியாது.

**கே: பொலிஸ் தலைமையகத்திற்கு அருகில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொண்டு பொது சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டவர்களுக்கு பிணை வழங்கப்பட்டது ஏன்?**

பதில்: குற்றங்களை நாம் நீதிமன்றத்தில் ஒப்புவிப்போம். ஆனால் அவர்களுக்கு பிணை வழங்குவதா இல்லையா? என்ற தீர்மானத்தை நீதிமன்றமே மேற்கொள்ளும். நாம் நீதிமன்றத்தின் தீர்மானங்களை சவாலுக்கு உட்படுத்துவதில்லை. நீதிமன்றத்தின் தீர்ப்பு எதுவானாலும் நாம் அதனை மதிக்கின்றோம்.

**கே: மிரிஹான சம்பவம் முதல் ஊடகவியலாளர்களுக்கு எதிரான தாக்குதல்கள் தொடர்கின்றன. அவர்கள் கடமையின் போது ஜெக்கட்டுகளை அணிய வேண்டும் என நீங்கள் தெரிவித்த கருத்து தற்போது விமர்சனங்களுக்கு உள்ளாகி வருகின்றது. ஊடகவியலாளர்கள் என்பதற்கான அடையாளத்தை நிரூபிப்பதற்கு ஆதாரங்கள் உள்ள போதும் ஊடகவியலாளர்கள் மீதான தொடர் தாக்குதல்கள் என்பது பாரதூரமானதல்லவா? அது தொடர்பில் உங்கள் கருத்து என்ன?**

பதில்: மோதல்களுக்கு முகம் கொடுக்க நேரும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரம் அவசியமாகும். ஆர்ப்பாட்ட பூமியில் அந்த அதிகாரத்தின் படி அவர்கள் செயற்படுவதை தடுக்கமுடியாது. அவ்வாறென்றால் அவர்கள் ஆர்ப்பாட்டக்காரர்களின் தாக்குதலுக்கு இலக்காகுவார்கள். இரவு நேர ஆர்ப்பாட்டங்களின் போது அடையாள அட்டைகளை பரிசீலிப்பது என்பது முடியாத காரியமாகும். ஆர்ப்பாட்டங்களின் போது தகவல்களை சேகரிக்க வரும் ஊடகவியலாளர்கள் தாம் எந்த சூழ்நிலையில் இருக்கின்றோம் என்ற புரிதல் அவசியம்.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் தாம் ஊடகவியலாளர்கள் என்பதை காட்சிப்படுத்துவதற்காக ஜெக்கட்டுகளை அணிந்திருப்பது அவசியமாகும். வெளிநாடுகளிலும் இவ்வாறான ஆர்ப்பாட்டங்களில் போது இது போன்ற நடைமுறையே ஊடகவியலாளர்கள் கடைப்பிடிக்கின்றனர்.

மோதல்களின் போது தகவல்களை சேகரிக்க வரும் ஊடகவியலாளர்கள் அவர்களின் பாதுகாப்பு தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். ஆர்ப்பாட்டக்காரர்களின் கல்வீச்சுக்கு இலக்காகுவதை தடுப்பதற்காக தலைக் கவசத்தை அணிவதும் சிறந்தது. அதனையே நான் தெரிவித்துள்ளேன்.

அதேபோன்று பொலிசாருக்கும் ஊடகவியலாளர்களுக்குமிடையில் நிலவுகின்ற இடைவெளியை நிவர்த்தி செய்வது முக்கியம். இதனை நான் பல சந்தர்ப்பங்களில் பகிரங்கமாக தெரிவித்துள்ளேன். அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகவே நான் அதனை தெரிவித்தேன்.

ஆர்ப்பாட்டங்கள், மோதல்களின் போது ஏனையவர்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்களை ஊடகவியலாளர்களும் எதிர்நோக்க நேரிடும். அதற்கு தேவையான உபகரணங்களை பெற்றுக் கொடுப்பது ஊடக அமைப்புகளினதும் அவர்கள் தொழில் புரியும் நிறுவனங்களினதும் பொறுப்பாகும்.

ஊடகவியலாளர்களுக்கு பாரிய பொறுப்புகள் உள்ளன. பொலிஸார் அமைதியை நிலை நாட்டுவதற்கு செயற்படுவது போல தகவல்களை வெளியிடும் பொறுப்பு ஊடகவியலாளர்களுக்கு உரியது. அது அவர்களின் கடமையாகும். கடமையை நிறைவேற்றுவதற்கு தேவையான உபகரணங்களை அவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பது அவசியமாகும்.

**கே: ஜூலை 4 ஆம் திகதி பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தியமை சட்டத்தின் முன் சவாலுக்கு உட்படுத்தப்பட்டது. இந்த நிலைமை தொடர்பில் உங்கள் கருத்து என்ன?**

பதில்: குற்றவியல் நியதிக் கோவைக்கிணங்க நிலைமைகளை தடுப்பதற்கான உச்சளவு அதிகாரம் பொலிசாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க உச்சளவு அதிகாரங்கள் அடிப்படையில் பொதுமக்களின் போக்குவரத்துக்களை மட்டுப்படுத்துவது எல்லாக் காலத்திலும் இடம்பெற்றுள்ளது.

பொலிஸ் ஊரடங்குச் சட்டமும் அதற்கானதே.

**கே: காலிமுகத்திடல் சம்பவத்திற்குப் பிறகு பாதுகாப்பு படையினரின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் சமூக வலைத்தளங்களில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றனவே அது தொடர்பில் நீங்கள் கூற விரும்புவது என்ன?**

பதில்: சமூக வலைத்தளங்களில் செய்திகளை வெளியிடுபவர்கள் திட்டமிட்ட வகையில் அதை மேற்கொள்ளா விட்டாலும் தெரிந்தே தன்னிச்சையாக தகவல்களை வெளியிடுவோரும் உள்ளனர்.

இதுபோன்ற சந்தர்ப்பங்களில் திட்டமிட்டு செயற்படுபவர்களும் அதிகம். அவசரகால சட்டத்தின் பதினைந்தாவது சரத்திற்கிணங்க சமூக வலைத்தளங்கள் மக்களை திசைதிருப்பும் வகையில் தகவல்களை வெளியிடுவது தடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு செயற்பட்ட ஒருவர் அண்மையில் கைது செய்யப்பட்டதையும் இங்கு குறிப்பிட முடியும்.

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# அரசியல் நெருக்கடிகள் தணிந்து நாடு வழமைக்கு திரும்பினாலேயே பொருளாதார முன்னேற்றம் ஏற்படும்!

'உலகளாவிய ரீதியில் நாடுகளின் பொருளாதார செயற்பாடுகளின் வேகம் தணிந்து மெதுவடைந்து வருவதாக IMF இன் அண்மைய அறிக்கையொன்று கூறுகிறது. இதனால் இலங்கையின் பிரதான ஏற்றுமதிச் சந்தைகளில் ஒரு தொய்வுநிலை ஏற்பட்டு இலங்கையின் ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடையும் அபாய நிலை தோன்றியுள்ளது'

இலங்கை தற்போது அனுபவித்துவரும் எரிபொருள் நெருக்கடி எதிர்வரும் மாதம் மேலும் தீவிரமடைவதற்கான சமிக்ஞைகள் மிகத் தெளிவாகத் தென்படுகின்றன.

நாட்டில் ஏற்பட்ட அரசியல் அசைவுகளின் பின்னர் ஒரு உறுதியான அரசியல் பொருளாதாரப் புறச்சூழல் உருவாகி நாடு படிப்படியாக வழமைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் கடந்த சில நாட்களில் ஏற்பட்ட சம்பவங்கள், அது தொடர்பில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பங்காளிகளின் நடத்தைகள் மற்றும் எதிர்வினைகள் என்பவற்றை நுணுக்கமாக ஆராய்ந்து கடந்த காலப் பட்டறிவுடன் ஒப்புநோக்குமிடத்து இலங்கைப் பொருளாதாரம் வழமைக்குத் திரும்புவது இப்போதைக்கு சாத்தியமில்லை என்பதும் தற்போது இடம்பெற்று வரும் உள்நாட்டு வெளிநாட்டு அரசியல் பொருளாதார நகர்வுகள் நாட்டின் பொருளாதாரத்தை மேலும் ஒரு படி மோசமான நிலைக்கு கொண்டு சென்ற பின்னரே பொருளாதார மீட்சியைப்பற்றிச் சிந்திக்கச் செய்யும் என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

கடந்த வாரம் IMF இன் குறிப்புகளும் Fitch Ratings எனப்படும் சர்வதேச கடன் தரப்படுத்தல் நிறுவனத்தின் அறிக்கையும் இலங்கை இன்னமும் அரசியல் உறுதிப்பாடற்ற நிலையில் உள்ளமையையும் கடன் மீளச்செலுத்தல் பொறிமுறை தொடர்பில் நிலையற்ற தன்மையை தொடர்ந்தும் கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளன.

இதனால் இலங்கையின் பொருளாதார மீட்சி காலதாமதமடைவதாகக் கொள்ளலாம்.

இலங்கை IMF இடம் கடன்பெறச் சென்றுள்ள போதிலும் ஏற்கெனவே பெற்றுள்ள கடன்களை மீளச் செலுத்துவது தொடர்பில் கடன் வழங்கியவர்களுடன் பேசி ஒரு உடன்பாட்டிற்கு வராமல் அதன் உதவிகள் இலங்கைக்குக் கிடைக்காது.

அவ்வாறு IMF இன் அனுசரணை கிடைக்காமல் சர்வதேச கடன் தரமிடல் நிறுவனங்கள் இலங்கையைக் கடன் பெறுவதற்குத் தகுதி உள்ள நாடு என்று அறிவிக்காது. இதனால் இலங்கையினால் சர்வதேச சந்தைகளில் கடன் பெறமுடியாது. நட்பு நாடுகளிடமிருந்து கடன்களைப் பெறுவது மாத்திரமே இப்போது இலங்கைக்கு எஞ்சியுள்ள ஒரே வழியாக உள்ளது. நட்பு நாடுகள் என்ற வகையிலும் இந்தியாவைத் தவிர எந்த ஒரு நாடுமே அப்போதைய நெருக்கடியான ஒரு சூழலில் இலங்கைக்கு போதியளவு நிதியுதவிகளைச் செய்ய முன்வரவில்லை என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

இந்தியாவும் இப்போதுள்ள நிலையில் மேலதிக கடன் உதவிகளைச் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. சீனா இலங்கைக்கு உதவக்கூடிய நிலையில் இருந்தாலும் அது வணிகக் கடன்களை மாத்திரமே வழங்கும் அல்லது பிணையாக இலங்கையின் சொத்துகளில் எதையாவது எதிர்பார்க்கும்.

இப்போது ஏற்கெனவே சீனாவிடமிருந்து பெற்ற மீள் கட்டமைப்புச் செய்யுங்கள் என்று IMF உடன் ஐக்கிய அமெரிக்காவும் இணைந்து அழுத்தங்களை விடுத்து வருகின்றன. ஆயினும் சீனா இது தொடர்பில் சாதகமாக சமிக்ஞைகள் எதையும் வழங்கவில்லை.

இது IMF உடன் ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்து கடன் ஒப்பந்தமென்றைச் செய்வதில் காலதாமதங்களை ஏற்படுத்தியுள்ளது. மறுபுறம் உலகளாவிய ரீதியில் நாடுகளின் பொருளாதார செயற்பாடுகளின் வேகம் தணிந்து மெதுவடைந்து வருவதாக IMF இன் மிகச் சமீபத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையொன்று கூறுகிறது. இதனால் இலங்கையின் பிரதான ஏற்றுமதிச் சந்தைகளில் ஒரு தொய்வுநிலை ஏற்பட்டு இலங்கையின் ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடையும் அபாய நிலை தோன்றியுள்ளது.

இலங்கையின் ஏற்றுமதிகள் பிரதானமாகச் செல்லும் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலும் பொருளாதார மெதுவடைதல் ஏற்பட்டு பணவீக்கம் அதிகரித்துச் செல்கிறது. எனவே இலங்கையின் ஏற்றுமதிச் சந்தைகளைக் காப்பாற்றிக் கொள்வது மிகமிக அவசியமாகும்.

ஆனால் அண்மையில் ஏற்பட்ட ஆட்சி அசைவின் பின்னர் அந்நாடுகளின் ராஜதந்திரிகளுடன் இடம்பெற்ற உத்தியோகபூர்வ சந்திப்புகளின்போது பேசப்பட்ட விடயங்களாக ஊடகங்களில் வெளிவந்த செய்திகளை நோக்குமிடத்து ஒரு மிகப்பலம் பொருந்திய செல்வந்த நாடு



அதன் வெளிநாட்டு ராஜதந்திரிகளைக் கையாள்வதை ஒத்த ஒரு போக்கினை அவதானிக்க முடிந்தது.

எடுக்கிறதோ பிச்சை மிதக்கிறதோ பல்லக்கில் என்பது போல, இலங்கை மக்கள் அனுபவித்து வரும் இன்றைய வலிமிகுந்த பொருளாதாரச் சுழலில் சொந்த மக்களின் வயிற்றைப்பற்றி யோசித்து ஏற்கெனவே நமது ஏற்றுமதிச் சந்தைகளாக உள்ள நாடுகள் பொருளாதாரப் பின்னடைவைச் சந்தித்துள்ள சுழ்நிலையிலும் அவற்றுடன் முரண்படாமல் முடிந்தளவில் இணங்கிச் சென்று அவற்றின் உதவிகளைப் பெற எத்தனிப்பதே இலங்கை மக்களுக்கு நன்மையை ஏற்படுத்தும்.

அதனை விடுத்து அந்த நாடுகளுக்கு அரசியல் பயிற்சி வகுப்பு எடுக்க முனைவது பொது மக்களையே நேரடியாகப் பாதிக்குமேயன்றி ஆட்சியாளர்களையல்ல. அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கைக்கு வழங்கியுள்ள GSP+ சலுகைகளை நீக்குவதாக அறிவித்தாலே போதும் இலங்கையின் ஏற்றுமதிகள் சரிந்து விழுந்துவிடும்.

ஆயினும் மேற்குலக நாடுகள் தொடர்ந்தும் இலங்கைக்கு உதவிகளை வழங்கி வருகின்றன. ஆனால் இலங்கையில் முழுமையான மக்கள் ஆணையுடன் ஒரு ஜனநாயக ஆட்சிமாற்றம் இடம்பெறும் வரை அவை மதில் மேல் பூனைகளாக இருந்து காய்களை நகர்த்துகின்றன.

உலகின் சர்வாதிகரிகளாகக் காணப்பட்ட மிகப் பலம் பொருந்திய நபர்களே மேற்குலகின் காய் நகர்த்தலில் தமது சொந்த நாட்டு மக்களாலேயே அடித்து விரட்டப்பட்டார்கள். ஆகவே உலக வரைபடத்தில் ஒரு புள்ளியாக உள்ள இலங்கை ஏனைய நாடுகளின் கடந்த கால அனுபவங்களிலிருந்து பாடம் கற்பது முக்கியம்.

இந்த அரசியல் நெருக்கடிகள் தணிந்து வழமை நிலை ஏற்படாத வரையில் இலங்கையால் டொலர்களைத் திரட்ட முடியாது. நாடு அவசரகால நிலையில் உள்ளபோது சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதோ வெளிநாட்டு முதலீட்டாளர்களை வரவழைக்க எத்தனிப்பதோ வெற்றி பெறாது.

இன்றைய சூழலில் நாட்டின் எரிபொருள் கையிருப்புகள் ஓரிரு வாரங்களுக்கு மட்டுமே தாக்குப் பிடிக்கும். எரிபொருள் கப்பல்களை வரவழைப்பதற்கு போதிய டொலர்களைப் பெற முடியவில்லை என பெற்றோலிய வளத்துறை அறிவித்துள்ளது.

மத்தியவங்கி அதனை வழிமொழிந்துள்ளது. பெற்றோலிய இறக்குமதிக்காக மாதாந்தம் 450 தொடக்கம் 600 மில்லியன் டொலர்கள் தேவைப்படுவதாக மத்தியவங்கி முன்னர் கூறியது. சாதாரண ஏற்றுமதி வருமானங்களை வைத்து இதனை ஈடுசெய்ய முடியாத நிலை உள்ளது.

உணவு மற்றும் மருந்துப்பொருள்கள் என்பவற்றையும் இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. எனவே இப்போது டொலர்கள் இல்லை என்று கூறி பெற்றோலியத்தைக் கொண்டுவர இயலாவிட்டால் இரு வாரங்களின் பின்னர் நாடு முடங்கும் நிலை ஏற்படும்.

அப்போது பெற்றோலியத்தை வரவழைத்தால் அதிக விலை செலுத்திக் கொள்வனவு செய்ய நேரிடும். எனவே வருமுன் காப்போனாகச் செயற்படவேண்டிய தருணத்தில் டொலர் இல்லை. அதனால் எதிரகாலத்தில் நெருக்கடி ஏற்படும் என்று அபாய சங்கு ஊதுவதல்ல அதிகாரத்தில் உள்ளவர்கள் செய்ய வேண்டியது. பிரச்சினைக்குரிய தீர்வைக்காண்பதே அவர்கள் செய்ய வேண்டியது.

மறுபுறம் மிகநீண்ட காத்திருப்பின் பின்னர் இம்மாத நடுப்பகுதியில் டீசல் மற்றும் பெற்றோலியக் கப்பல்கள் நாட்டுக்குள் வந்தன. அவை முறையாக விநியோகிக்கப்படுகின்றனவா என்பது கேள்விக்குரியது.

அனுமதிப்பங்கு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் பெற்றோல் மாபியா ஒன்று தோன்றுவதால் முச்சக்கர வண்டிகள் மூலமாக பெற்றோல் பெறப்பட்டஜஸ்ரீ ஒரு லீற்றர் 3000 ரூபா வரையில் விற்கப்படும் அவல நிலை உருவாகியது. இவை ஒவ்வொரு நிலையங்களாக ஓடி ஓடி பெற்றோல் சேகரித்து விற்கும் தொழிலில் சிலர் ஈடுபட்டனர்.

சவாரியில் ஈடுபட்டு வருமானம் உழைப்பதை விட பெற்றோல் விற்று உழைப்பது மிகவும் இலாபகரமாக உள்ளதால் பெரும்பாலான முச்சக்கர வண்டிகளை முன்புபோல வீதிகளில் காண முடிவதில்லை. QR முறைமை மூலம் உரியவகையில் ஒவ்வொரு வாகனத்திற்கும் உரிய பங்கீட்டை வழங்குவதை உறுதிப்படுத்த வேண்டும்.

ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட நாட்களில் ஒவ்வொரு பெற்றோல் நிலையத்திற்கும் எரிபொருள் வினியோகிக்கப்படுவதை அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும். சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளும் தமது கடமைகளை உரிய முறையில் செய்ய வேண்டும். தற்போது எரிபொருள் வரிசைகளில் விரயமாகும் நேரத்தை அளவிடமுடியாதுள்ளது.

பெற்றோலிய விநியோகத்தை சரியாக முகாமை செய்யாவிட்டால் வேறு எதைச் செய்தாலும் நாட்டின் பொருளாதாரச் செயற்பாடுகளை வழமைக்குக் கொண்டுவரமுடியாது. இப்போதைய நிலை சில குழுக்கள் நிலைமையைப் பயன்படுத்தி கொள்ளை இலாபம் ஈட்டவும், அதிகாரிகள் கண்டும் காணாதது போல விலகிச் செல்லவும் வசதியான ஒரு அராஜக சூழலை உருவாக்கியுள்ளது.

அடுத்த எரிபொருள் கப்பல்கள் வராத பட்சதில் இந்த எரிபொருள் மாபியாக்கள் விரிவடைந்து பலம் பெறவும் வழிவகுக்கும் சாதாரண பொதுமக்கள் தமது நாளாந்த தேவைகளுக்கு இந்த மாபியாக்களில் தங்கியிருக்கும் நிலையும் உருவாகாமல் இது தவிர்க்க வேண்டும். கையிருப்பில் உள்ள எரிபொருள் முறையான விதத்தில் பகிர்ந்தளிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

---



# "அரகலகாரர்களை" இயக்கிய இரகசிய சக்திகள் வெளிச்சத்துக்கு வருகின்றன

## முன்னாள் ஆளுநர் அசாத்சாலி

ராஜபக்ஷக்களைப் பாதுகாக்கத்தான் புதிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அரசியலில் முன்னிலைப்படுத்தப்பட்டதாகவும், இதற்காகவே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அதிகளவான எம்.பிக்கள் வாக்களித்தனர் என்பதும் எதிர்க்கட்சிகளின் வங்குரோத்துப் பிரச்சாரம் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் மேல்மாகாண முன்னாள் ஆளுநருமான அசாத் சாலி தெரிவித்தார்.

தினகரன் வாரமஞ்சரிக்கு அவர் வழங்கிய நேர்காணலில் தெரிவித்ததாவது,

**கேள்வி: ராஜபக்ஷக்களின் எதிர்காலத்தை மீளக்கட்டி எழுப்பும் நோக்குடனே புதிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னிலைப்படுத்தப்பட்டதாக பொதுவாக விமர்சிக்கப்படுகிறது. இதிலுள்ள உண்மைகள் என்ன?**

**பதில்:** எவ்வித உண்மைகளும் இதில் இல்லை. அரசியலுக்காக எதிர்க்கட்சிகள் அவிழ்த்துவிட்ட வங்குரோத்து பிரச்சாரங்களே இவை. தென்னிலங்கை முற்றாக ராஜபக்ஷக்களை கைவிட்டுள்ள நிலையில், ரணிலால் மட்டுமல்ல எந்த அரசியல் சக்திகளாலும் அவர்களை மீளவும் அரசியலில் நிமிர்த்த முடியாது. எதையாவது சொல்லி மக்களை குழப்பும் நோக்கில் இப்பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவை இன்னுஞ் சில காலங்களுக்குத்தான். பின்னர், புதிய ஜனாதிபதியின் செயற்பாடுகள் அனைவரையும் கவர்ந்துவிடும்.

**கேள்வி: ராஜபக்ஷக்களுக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்குகளில் நல்லாட்சி அரசாங்கம் நடந்துகொண்ட விதங்கள் பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்? இதில் பல சந்தேகங்கள் இருக்கிறதே.**

**பதில்:** நீதியமைச்சராக இருந்த விஜயதாஸ ராஜபக்ஷதான் இவர்களுக்கு எதிரான வழக்குகளை அவதானித்து, தேவையான சட்ட நடவடிக்கைகளையும் முடுக்கிவிட்டார். பின்னர், இவரது நிலைப்பாட்டில் சந்தேகம் மற்றும் சர்ச்சைகள் எழுந்து, தலதா அத்துக்கோரள நீதியமைச்சராக நியமிக்கப்பட்டார். விஷேட நீதிமன்றங்களை அமைத்து ராஜபக்ஷக்களை தண்டிக்கும் வரைக்கும் அந்த நகர்வுகள் முனைப்படைந்தன. பின்னர் ஆட்சிமாற்றம் ஏற்பட்டதால் அனைத்தும் தலைகீழாகின. எனவே, இதிலிருந்தாவது புரியவில்லையா ரணில் எவரையும் காப்பாற்றவில்லை என்பது.

**கேள்வி: புதிய ஜனாதிபதியின் முதற்கட்ட நடவடிக்கையே பலரையும் திகைக்க வைத்துள்ளதே! காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து விரட்டப்பட்ட விதத்தை சர்வதேசம் கண்டித்தல்லவா இருக்கிறது.?**

**பதில்:** மூன்று மாதங்களாக நாட்டின் நிர்வாகத்தை இயக்கும் முக்கிய அலுவலகங்களை முடக்கி, ஆர்ப்பாட்டம் செய்வதை அமைதியான ஆர்ப்பாட்டம் என்று சொல்ல முடியாது. இவர்களிடம் இருந்தவை அனைத்தும் திட்டமிட்ட அரசியல் நிகழ்ச்சிகள். ஏதோ ஒரு சக்தி, பின்னாலிருந்து இந்த "அரகலகாரர்களை" இயக்கிய இரகசியங்கள் எல்லாம் இப்போது வெளிச்சத்துக்கு வருகின. இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் சுற்றிவளைத்த இடங்களைப் பாருங்கள். ஷங்ரிலா ஹோட்டல், கோல்பேஸ் ஹோட்டல், கிங்ஸ் பெரி ஹோட்டல், துறைமுக நகர், ஜனாதிபதி மாளிகை, அலரிமாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகங்களையே இவர்கள் சுற்றிவளைத்தனர்.

சுற்றுலாத் துறையினர் வந்துபோகின்ற பிரதேசங்களே இவை. இவ்விடங்களை மறித்து மாதக்கணக்கில் ஆர்ப்பாட்டம் நடத்தினால், அரச இயந்திரம் இயங்குவதில்லையா? சுற்றுலாத்துறையினர் வருவதில்லையா? இதற்காகத்தான், இவர்கள் அப்புறப்படுத்தப்பட்டனர். ஜனநாயக செயற்பாடுகள், சிவில் சமூக செயற்பாடுகளுக்கு இடைஞ்சல் இல்லாதிருக்க வேண்டும். ஆனால், ஆர்ப்பாட்டக்காரர்கள் முழுக்க, முழுக்க சிவில் செயற்பாடுகளை குழப்பிக்கொண்டே இருந்தனர். ஆர்ப்பாட்டம் செய்வது, பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதெல்லாம் ஜனநாயக செயல்பாடுகளில் உள்ளவைதான். இதற்காகத்தான், விகாரமாதேவி பூங்கா மற்றும் ஹைட்பார்க் விளையாட்டுத்திடல் போன்ற ஒதுக்குப்புறங்களை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

**கேள்வி: சர்வகட்சி அரசாங்கம் அமைக்கும் முயற்சிகளில் மும்முரம் காட்டுகிறது அரசு. மீண்டும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுவதை தடுக்கவா அல்லது பொருளாதார பிரச்சினையை தீர்க்கத்தானா?**

**பதில்:** ஆர்ப்பாட்டங்கள் எதற்கும் அரசாங்கம் அஞ்சவில்லை. அதற்காகத்தானே, இதற்கென பொது இடங்களை ஒதுக்கியுள்ளோம். தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் ஸ்திரம் அவசியம். மேலும், ஒத்துழைப்பு அரசியல் இன்றைய நெருக்கடிக்கு அவசியப்படுகிறது அவ்வளவுதான்.

**கேள்வி: ஜனாதிபதி அழைக்கிறார் என்பதற்காக எதிர்க்கட்சிகள் எல்லாம் இந்த அரசுடன் இணையுமென்று எதிர்பார்க்க முடியுமா?**

**பதில்:** நேர்மையாகச் சிந்திக்கும் மக்களின் அவலங்களை போக்க விரும்பும் கட்சிகள் இணையும் என்றே எதிர்பார்க்கிறேன். எல்லோரும் இணைந்தால் ஆறுமாதங்களில் நெருக்கடிக்கு தீர்வு கிடைக்கும். மூன்று மாதங்களில் இதற்கான ஸ்திரம் ஏற்பட்டும்விடும். பொருளாதாரத்தில் முக்கியம் வகிப்பது போக்குவரத்து. இதற்கு எரிபொருள் அவசியம். இவை முறையாக வந்தால் வரிசைகள் மற்றும் சிரமங்கள் நீங்கிவிடும்.



**கேள்வி: ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து டலஸுக்கு முஸ்லிம் தலைமைகள் எதையாவது நிபந்தனையாக முன்வைத்தமை குறித்து ஏதாவது உங்களுக்கு தெரியுமா? தெரிந்தால் சற்று விளக்குங்களேன்.**

**பதில்:** வழமையாக பேசுவதைப் பேசியிருப்பார்கள். வழமையான பதிலைப்போல் தருவதாகச் சொல்லப்பட்டிருக்கும். இதுவல்ல விடயம். போட்டியிட விரும்பிய சஜித் பிரேமதாஸ முஸ்லிம் தலைமைகளுடன் பேச்சு நடத்தியது சகலருக்கும் தெரியும். அதேபோன்று, போட்டியிலிருந்து விலகுவது குறித்து எந்த முஸ்லிம் தலைமையுடன் பேசினார்? தனது டுவிட்டரில் தன்னை வேட்பாளராக அறிமுகப்படுத்திக்கொண்டு பாராளுமன்றம் புறப்பட்ட சஜித் பிரேமதாஸ, திடீரென போட்டியிலிருந்து விலகி, டலஸ் அழகப்பெருமவை ஆதரிப்பதாக அறிவித்தார்.

எனவே, நிச்சயமாக எந்தப் பேச்சுக்களும் நடத்தப்பட்டிருக்க வாய்ப்பில்லை. பரவாயில்லை, இவ்வாறு தங்களை ஆலோசிக்காது பெறப்பட்ட முடிவில் இணக்கம் இல்லை என்பதை தெரிவிக்க, ஜனாதிபதி தெரிவில் வாக்களிக்காமல் நடுநிலை வகித்திருக்கலாம். அதையும் செய்யவில்லை. அவ்வாறு செய்திருந்தால், இனவாதிகளான உதய கம்மன்பில, விமல் வீரவன்ச, அத்துரலியே ரத்ன தேரர், சன்ன ஜயசுமான போன்ற பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கூட்டுச்சேர்ந்த பாவத்திலிருந்தாவது தவிர்ந்திருக்கலாம்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட அனைத்து நாசகார செயற்பாடுகளுக்கும் இவர்கள்தானே பிரதானம். ஈஸ்டர் தாக்குதலை முஸ்லிம்களின் தலையில் சுமத்தி, அதற்காக முஸ்லிம் அமைச்சர்கள் பதவி துறக்க வேண்டுமென உண்ணாவிரதமிருந்தவர் அத்துரலியே இல்லையா? முஸ்லிம்கள் இந்நாட்டின் குடிமக்கள் இல்லை, இங்கு அடிமையாக வாழ வேண்டும், இல்லாவிடின் அரேபியாவுக்குச் செல்ல வேண்டுமென விமல் வீரவன்ச கூறியதை அவர்கள் மறந்திருக்கலாம். நாங்களும், எங்களது முஸ்லிம் தாய்மார்களும் மறக்கவில்லை. ஹராம், ஹலால் மற்றும் எமது சகோதரிகளின் புனித ஆடையான ஹபாயாவை கழற்றி எறியுமாறு கேவலப்படுத்திய கம்மன்பில, முஸ்லிம் தலைமைகளுக்கு நண்பர்களாக இருக்கலாம். ஆனால், இன்று மட்டுமல்ல இறுதி வரைக்கும் எங்களுக்கும், இஸ்லாத்துக்கும் இவர்கள் எதிரிதான்.

**கேள்வி: புதிய ஜனாதிபதியின் அரசாங்கத்தில் ஏதாவது பதவிகள் அல்லது பொறுப்புக்கள் உங்களுக்கு கிடைக்கலாமென பேசப்படுகிறதே.**

**பதில்:** பதவிகளை எதிர்பார்த்து செயற்படுவது எனது கொள்கையிலே இல்லை. இறைவன் எனக்கு போதுமான பொருளாதார வசதிகளை தந்திருக்கிறான். மக்களுக்காக எனது பதவிகளை மூன்று தடவைகள் ராஜினாமா செய்திருக்கிறேன். மேல்மாகாண ஆளுநர், மத்திய மாகாண சபை உறுப்பினர், இன்னும் கொழும்பு மாநகர சபையின் எதிர்க்கட்சி பதவி என்பவைகளே அவை.

**கேள்வி: மக்களால் தேந்தெடுக்கப்பட்டாலே நாட்டின் பொறுப்புக்களை ஏற்பேன், குறுக்கு வழிகளால் இல்லை என சஜித் பிரேமதாஸ சொல்வதிலிருந்து எதைப் புரிந்துகொள்ளலாம்?**

**பதில்:** எதையுமே புரிந்துகொள்ள முடியாதிருக்கிறது. பொருளாதாரப் பிரச்சினையை தீர்க்க ஐந்து வருடங்கள் தேவைப்படும் என்கிறார். ஆனால், இன்னும் இரண்டரை வருடங்களே எஞ்சியுள்ள ஜனாதிபதிப் பதவிக்கு பாராளுமன்றத்தில் போட்டியிடவும் முனைந்தார். இதில் இன்னொரு புதுமையும் இருக்கிறது. மக்களால் நேரடியாக தெரியப்பட்டால்தான் பதவிகளை ஏற்பேன் என்று கூறியவாறே, எம்.பிக்கள் வாக்களிக்கும் தேர்தலில் களமிறங்க நெருங்கினார்.

நெருக்கடியான நேரத்தில் பிரதமர் பதவியை ஏற்குமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த அழைப்பை நிராகரித்த சஜித், அதே பிரதமர் பதவியை ரணில் பாரமெடுக்க முன்வந்தபோது, தானும் தயாரென மீண்டும் அறிவித்தார். இவ்வாறு குழம்பிய நிலைப்பாடுகளையே தற்போது சஜித் பிரேமதாஸவிடம் காண முடிகிறது. ரணில் விக்ரமசிங்கவை எதிர்க்க வேண்டுமென்ற அவரது குறி, சஜித்தை குழப்பியுள்ளது. அவரது தந்தையான முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸவின் ஆகக் குறைந்த அரசியல் சாணக்கியமும் அவரிடம் இல்லை.

**கேள்வி: அரச சொத்துக்கள் மற்றும் அரச அலுவலகங்களை சேதப்படுத்திய ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு, அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்க இருக்கிறதா? இது குறித்து அரச உயர்மட்டத்தின் நிலைப்பாடு என்ன?**

**பதில்:** அரச சொத்துக்கள் என்பது பொது மக்களுடையது. ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, பிரதமரின் அலரிமாளிகை, பிரதமரின் அலுவலகம் என்பன ஆர்ப்பாட்டக்காரர்களால் அசிங்கப்படுத்தப்பட்டுள்ளன. அங்குள்ள ஆவணங்களை தீயிட்டு எரித்துள்ளனர். இதில், சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஐரோப்பிய யூனியன் என்பவற்றின் உறுதிமொழிக் கடிதங்களும் எரிந்துள்ளன.

வரலாற்றில், என்றும் நடந்திராத அவமானமிது. இனிமேல் இவ்வாறு நடக்க கூடாது. அவ்வாறு நடக்காத வகையில், சிலருக்கு பாடம் கற்பிக்கப்பட வேண்டும் என்பது எனது நிலைப்பாடு. நாளைக்கு யார் ஜனாதிபதியானாலும் அல்லது பிரதமரானாலும் இந்த அலுவலகங்களையே பயன்படுத்துவர். எனவே, இந்த அலுவலகங்களை ஆக்கிரமித்தது, அசிங்கப்படுத்தியது, எமது எதிர்கால தலைவர்களை அவமதித்தது போன்றதுதான்.

சுஐப் எம்.காசிம் ...

## வாழ்வாதாரமா சேதாரமா 233



தமிழ்க் கவி பேசுகின்றார்

# குடும்பமே முதியவர்களை சுமையாக கருதினால் அரசு எவ்வாறு கௌரவிக்கும்?

மிக மோசமான நிலையில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். என்னவோ சொல்கிறார்களே ' அறியாதவன் பூசை விடிய விடிய' என்று அப்படி இருக்கிறது நிலைமை. மக்களால் மக்களுக்காக மக்களை ஆள்வதே சனநாயகம் எனப்படுகிறது. இப்போது எங்கள் நிலைமை அப்படியல்ல நாமாகவே ஒதுங்கியிருந்தாலும் எமது தலைமீதுதான் எல்லாமே வந்து விடிகிறது.

திட்டமிட்டு ஏராளனமான முதியோர் இயலாதவர்கள் ஏழைகள் எனப்படுவோர் ஒதுக்கப்பட்டுவிட்டார்கள். அவர்களது வாழ்க்கை முடக்கப்பட்டுவிட்டது. இலங்கை முழுதுமான எரிபொருள் விநியோகம் அவர்களுக்கு மறுக்கப்பட்டுவிட்டது. பல லட்சம் பெறுமதியான வண்டிகளுக்கு வழங்கப்படும் பெற்றோல் அவர்கள் ஓட்டிச் செல்லும் மென்மையான வாகனமான 'பெடல் மொடல்' வண்டிகளுக்கு இல்லை. பல்லாயிரம் மக்களில் மேற்குறித்த முதிய, இயலாத, மென்மையான, ஏழைகளே அந்த வண்டியை பயன்படுத்துகிறார்கள். அவர்களுடைய வண்டிகளுக்கு இதுவரை பதிவுகளோ அனுமதிப்பத்திரங்களோ கிடையாது. அது பாதைகளை ஆக்கிரமித்து உறுமிச் செல்பவையும் கிடையாது. அவர்களுடைய அத்தியாவசிய தேவைகளுக்காக மட்டுமே வீதிக்கு வரும். இளைஞர்கள் அதை தொட்டுப்பார்க்கவும் விரும்புவதில்லை அது அவர்களுடைய வேகத்துக்கும் ஸ்ரைலுக்கும் சரிவராது.

மற்றவர்களை தொந்தரவு செய்யாமல் பெரியவர்கள் தாமே இயக்கிச் செல்ல ஏதுவானது. ரீ வீ. எஸ் ச்சாம்ப் (TV Schamp) இதை பெடல் மூலம் இயங்கவைத்து பெற்றோல் மூலம் ஓட்டிச் செல்லலாம். நெடுந் தூரம் பயணிக்க முடியாது. ஏதோ வைத்தியசாலை சந்தை இன்னும் தமது தேவைகளுக்கு அயலிலுள்ள இடங்களுக்கு போகலாம். அவ்வளவுதான் அந்த வண்டிகளை இனி இயக்க முடியாது ஏன் நிரப்பு நிலையங்களில் கூச்சலும் குழப்பமும் தொடங்கிய போதே அவர்கள் வீட்டுக்குள் முடங்கிவிட்டனர். 'எனக்கு மூட்டுவலி. ஒரு நூறு மீட்டர் நடக்க முடியாது. இந்த வண்டியை இயக்கி எடுத்தால் நான் போக வேண்டிய இடத்துக்கு போய்விடுவேன்.

எனது வேலைகளுக்காக நான் யாரையும் சிரமப்படுத்துவதில்லை என்று கூறும் நானே இன்று தெருக்கரையில் காசை வைத்துக்கொண்டு நின்று வருவோர் போவோரை போகிற வழியில் எனது பொருட்களை வாங்கித்தரும்படி கேட்கிறேன். சிலர் ஏதாவது காரணம் சொல்லி மறுக்கிறார்கள். சிலர் செய்து தருகிறார்கள். என் வாழ்நாட்களிலேயே நான் அடுத்தவரை சார்ந்து நிற்பது இப்போதுதான்.

முதியவர்களுக்காக எந்தவகையிலும் கவலைப்படாத அரசாங்கங்களையே நாம் பார்க்கிறோம். பல நாடுகளில் ஏராளமான நாடோடிக்கதைகள் இதுபற்றி உண்டு. சீன நாட்டுப்புறக் கதையொன்றில் அரசன் தன் நாட்டின் பிரஜைகளிடம் ஆறுபது வயது கடந்தவர்களை எங்காவது நாட்டின் எல்லைக்கப்பால் அனுப்பிவிடும்படி கோருகிறான். கோருகிறான் என்ன கோருகிறான். கட்டளையிடுகிறான்.

பெருத்த துயரத்தோடு மக்கள் அவன் சொன்னதை செய்கிறார்கள் ஒருவன் மட்டும் அரசனுக்கோ அயலவர்களுக்கோ தெரியாமல் தன் தந்தையை பரணில் ஒளித்து வைத்து பராமரிக்கிறான். அந்த நாட்டுக்கு ஒரு கேடு வருகிறது. அப்போது அந்த அரசன் தன் பிரச்சினையை மக்களுக்கு அறிவித்து சரியான தீர்வை சொல்பவர்களுக்கு பரிசு என அறிவிக்கிறான். அந்தப்பரிசை சரியான தீர்வை சொல்லி பெறுவது யார் தெரியுமா? தந்தையை வீட்டிற்குள் ஒளித்து வைத்திருப்பவன்தான். அடுத்த ஒருதடவை இன்னும் ஒரு அறிவு பூர்வமான பிரச்சினை வருகிறது. அப்போதும் அந்த தந்தையை மறைத்து வைத்திருப்பவனே பரிசை பெறுகிறான். மூன்றாவது தடவையாகவும் அவன் பரிசை வென்ற போது அரசன் காரணத்தை ஆராய்கிறான். பயந்து போன அந்த மனிதன் தன் தந்தையே இதற்கெல்லாம் தீர்வு சொன்னார். அது அவரது வயது தந்த அனுபவம்தான். அவரை மறைத்து வைத்திருந்த குற்றத்துக்கு என்னை மன்னியுங்கள் என மன்றாடினான் அந்த அரசனுக்கு தன் தவறு புரிந்தது. எனவே அவன் முதியவர்களை திரும்பவும் நாட்டிற்குள் கொண்டு வந்தான்.



எல்லாத் தொழிலுக்கும் ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேல் அவர்கள் ஓய்வு பெற வேண்டும் என்ற வரையறை உண்டு. வங்கியிலோ அல்லது வேறெங்குமோ முதியவர் என்ற வரையறைக்குள் வந்து விட்டால் கடன் வாங்க முடியாது பொருட்களை சொத்துகளை கைமாற்ற முடியாது அதற்கெல்லாம் பருவமடைந்த அதாவது பதினெட்டு வயதுக்கு மேலுள்ள மக்கள் பிணை நின்றாக வேண்டும்.

எங்கள் அயலில் ஒரு முதியவர் அப்படியான ஒரு கடன் வழங்கும் நிறுவன பொறுப்பாளரிடம் கேட்டார். 'மெய்யே டாப்பா எழுவதெண்பது வயதுள்ளவங்களிட்ட நாட்டையே தூக்கிக் குடுக்கிறம் ஒரு நாப்பதாயிரம் கடன் தர உவ்வளவு பிணை கேக்கிறாய்.' என்று அரங்கத்துக்கு வராத நியாயமான கேள்விதான் என்ன செய்வது முதியவர்கள் அவர்களது அறிவை தயக்கமில்லாமல் பேசி விடுகிறார்கள். ஆனாலும் அவர்களுக்கு தமது உரிமைகளை கேட்க முடியவில்லை. கேட்டாலும் பலன் இல்லை. வயது போனதுமே அவர்கள் தம்மை இயலாதவர்களாக வடிவமைத்துக் கொள்கிறார்கள். அதுவே அவர்களுக்கு சோர்வையும் தருகிறது.

எண்பது வயதான ஒரு சீவல் தொழிலாளி இப்போதும் பனைமரத்தில் சீறிக் கொண்டு ஏறுகிறார். அதே கிராமத்தில் சில இளைஞர்களால் மாமரத்தில் கூட ஏற முடியவில்லை. அங்கே அந்த முதியவருக்கு உள்ள திறமைக்கு தேவை காரணமாகிறது. அவரே சொல்கிறார் 'எனக்கு தினசரி கள் அருந்த வேண்டும். அதை விலைக்கு வாங்கினால் பணம் செலவாகும். நானே அந்தத் தொழிலை செய்வதால் என் தேவை நிறைவேறும். அதேசமயம் என் பிள்ளைகளும் என்னைச் சினக்க மாட்டார்கள்.'

பெண்களையும் முதியவர்களையும் போற்றாத குடும்பமும் அலட்சியப்படுத்தும் குடும்பமும் நன்றாக வாழ்வதில்லை. என்பார்கள். அதிலும் முதியவர்கள் தமது இளமைக்காலத்தில் பெற்று வளர்த்த குழந்தைகளுக்காக வாழ்நாள் முழுதும் பாடுபட்டு உழைக்கிறார்கள். அவர்களது மழலையில் மயங்கி பெற்றோர் அவர்களது நல்வாழ்வை திட்டமிடுகின்றனர். அதே பிள்ளைகள் வளர்ந்து கல்வி கற்று தாம் உழைத்து குடும்பத்தை நடத்தும் போது பெற்றோரை சுமையாக நினைக்கின்றனர். குடும்பங்களே அப்படியென்றால். அரசாங்கம் எப்படி முதியோரைக் கௌரவிக்கும்.

அதுவும் தனக்கு முதியவர்களை சுமையாகத்தானே பார்க்கும். அவர்களது வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும் என்ற அவசியம் என்ன இருக்கிறது. நாங்களாக போட்ட விலங்கு அதை நாமே அகற்ற முடியவில்லை. சகல மக்களையும் சமமாக பேணும் நிலை சமுதாயங்களுக்கே இல்லை. இன்னும் சாதி, சமயம், ஏழை பணக்காரன் என்று எத்தனை பேதங்களை இன்னும் வளர்த்து பாதுகாத்து வருகிறோம்.

இதுவரை காலமும் கவனிக்காமல் விடப்பட்ட பல விடயங்கள் இனிமேல் அரங்கேறலாம். காலம் ஓடிக்கொண்டுதான் இருக்கும் ஆனால் தான் பிறந்த மண்ணில் இதுவரை காலமும் தன்னுடையது என நம்பியிருந்த மண்ணில் தான் கையாலாகாத நிலையில் நிற்பது கொடுமை. எந்த வீட்டிலாவது பஞ்சம் பற்றாக்குறை வந்து விட்டது என்பதற்காக இயலாதவர்களை முதியவர்களை பெண்களை குழந்தைகளை பட்டினி போடுவார்களா? அவர்களைத்தானே முதலில் பேண வேண்டும். ஆனால் இந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அப்படி முடிகிறதா? எரிவாயு நிலையங்களில் முடிகிறதா? முதியோர் அடையாள அட்டை என்று ஒன்றை வழங்கியவர்களுக்காவது அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது தெரிகிறதா? வாழ்வாதாரத்தை இழந்தவர்கள் காப்பாற்றப்பட வேண்டும் அவ்வளவுதான். குடும்பமே முதியவர்களை சுமையாக கருதினால் அரசு எவ்வாறு கௌரவிக்கும்?

# இதழியல் வேந்தருக்கு இலண்டனில் விழா!



இதழியல் வேந்தர் கனடா உதயன் வார இதழின் பிரதம ஆசிரியர் ஆர்.என். லோகேந்திரலிங்கத்துக்கு இலண்டன் வாழ் தமிழ்ச் சமூகம் புதன்கிழமையன்று(20.7.2022) விழா எடுத்து கௌரவித்தது. ஊடகத் துறையில் இருபத்தைந்து ஆண்டு கால சாதனை நிகழ்த்தி, பொது வாழ்க்கையில் ஐம்பது ஆண்டுகளை பூர்த்தி செய்து, கவிதை, பேச்சு, எழுத்து, இலக்கியம், சமூகம், சமயம், எனப் பல்துறைகளிலும் ஆர்.என். லோகேந்திரலிங்கம் ஆற்றிவரும் பணிகளைப் பாராட்டி இலண்டன் வாழ் தமிழ்ச் சமூகம் இந்த விழாவினை ஏற்பாடு செய்திருந்தது. இலண்டனில் பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் நால்வர் மணி மண்டபத்தில் இந்த விழா நடைபெற்றது.



விழா தொடங்குமுன்னர் காலை 10.30 மணியளவில் இங்கு வருகை தந்த ஆர்.என். லோகேந்திரலிங்கத்துக்கு சைவ முன்னேற்றச்சங்கத்தின் ஸ்ரீ சிவகாமி சமேதர ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் சிவாச்சாரிய பெருமக்களால் சிறப்பான வரவேற்பும் கௌரவமும் வழங்கப்பட்டன.

தொடர்ந்து விழா நிகழ்ச்சிகள் காலை 11.30 மணிக்குத் தொடங்கின. சைவ முன்னேற்றச் சங்கத்தின் முன்னாள் தலைவரும், தற்பொழுது நிர்வாகக் குழுவில் இடம்பெற்றிப்பவருமான வாமனானந்தன் கடவுள் வாழ்த்தி இசைத்தார். திருமதி. வசந்தா மகாதேவன் தன் இனிய குரலில் தமிழ்த் தாய் வாழ்த்தினை இசைத்தார். தொடர்ந்து மறைந்த முன்னோர்களுக்கான மௌன வணக்கம் நடைபெற்றது.



பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் தலைவர் தரும.இரவீந்திர மோகன் விழாவிற்கு வருகை தந்திருந்தவர்களை வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினார். அதைத் தொடர்ந்து சைவ முன்னேற்றச் சங்கத்தின் நிறுவனர், தொண்டர் திலகம் வ.இ. இராமநாதன் தலைமையுரை நிகழ்த்தினார். அவர் தனது தலைமையுரையில் லோகேந்திரலிங்கத்துடனான தனது நீண்ட கால நட்பை நினைவு கூர்ந்தார். இன்றைய அவரின் வெற்றி ஒரே நாளில் பெறப்பட்டதல்ல என்றும், ஊடகத் துறையில் அவர் மேற்கொண்ட உழைப்பும், விடாமுயற்சியும், எதிர்கொண்ட சவால்களுமே அவரது சாதனையை சாத்தியமாகியிருக்கிறது என்றும் அவர் தனது தலைமையுரையில் தெரிவித்தார். தொடர்ந்து தமிழ் நாடு சேலம் பன்னிரு திருமுறை பகுப்பாய்வு மையத்தின் தலைவரும், தற்பொழுது இங்கிலாந்தில் ஆன்மீகப் பயணம் மேற்கொண்டிருப்பவருமான பேராசிரியர் டாக்டர் வே.சங்கரநாராயணன் தொடக்கவுரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் லோகேந்திரலிங்கத்தின் ஐம்பது ஆண்டு காலப் பொது வாழ்வின் சாதனைகளை பட்டியலிட்டார். பகைவர்களை எதிர்கொள்ள வேண்டிய ஊடகத் துறையில் இருந்தும், உலகளாவிய நட்பின் நாயகனாக அவர் உயர்ந்து விளங்கும் பாங்கு, துறை தாண்டியும், தாயக மக்களுக்காக அவர் அன்றாடம் ஆற்றிவரும் சமூகநலப் பணிகள் இவைகளை அவர் பாராட்டினார். 50 முதல் 70 பக்கங்கள் கொண்ட வார இதழை கிட்டத்தட்ட 1250 வாரங்களாக, 25 ஆண்டுகள் நடத்துவது சாமானியமான சாதனை அல்ல என்றும், புலம் பெயர் தேசத்தில் வெள்ளிவிழா காணும் முதல் தமிழ் வார இதழ் கனடா உதயன் பத்திரிகை தான் என்றும் அவர் தன் உரையில் தெரிவித்தார்.



தொடர்ந்து வாழ்த்துரை வழங்கிய டாக்டர் நவரத்தினம், லோகேந்திர லிங்கத்தின் சாதனைகள் தமிழ் இனத்துக்கே பெருமை தருவதாக உள்ளது என்று குறிப்பிட்டார். தொடர்ந்து வாழ்த்துரை வழங்கிய ஈழத்தின் பிரபல ஊடகவியலாளர் விக்கிரமசிங்க லோகேந்திரலிங்கத்துடன் தான் கொண்ட நட்பின் நினைவலைகளை பகிர்ந்து கொண்டார். ஒரு ஊடகவியலாளரின் பொறுப்பு, கடமை, பத்திரிகை தருமம் இவற்றை செம்மையாகக் கடைப்பிடித்து சிறப்புப் பெற்றவர் லோகேந்திரலிங்கம் என்று அவர் குறிப்பிட்டார். வாமனானந்தன் தனது வாழ்த்துரையில், உலகில் முதல் எழுத்தாளர் விநாயகப் பெருமான் என்று குறிப்பிடுவதைப் போல முதுகெலும்புள்ள பத்திரிக்கையாளரான லோகேந்திர லிங்கத்தை தமிழ் விநாயகர் என்று அழைப்பதில் தவறில்லை என்றார். டாக்டர் நித்தியானந்தம் தனது வாழ்த்துரையில் லோகேந்திர லிங்கத்தின் தமிழ்ப் பணிகளோடு, சமூகப் பணிகளும் தன்னை மிகவும் கவர்ந்துள்ளதாகத் தெரிவித்தார். இலண்டன் ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலய நிர்வாகி தேவசகாயம், லோகேந்திரலிங்கம் மலையகப் பகுதி மக்களுக்கு ஆற்றிவரும் சேவைகள் குறித்து பெருமிதம் கொள்வதாகத் தெரிவித்தார். இலண்டன் சிவன் கோயில் நிறுவனர் சச்சிதானந்தம் தனது வாழ்த்துரையில் இலண்டன் முரசு போன்ற பழமையான பத்திரிகைகளுடன் ஒப்பிட்டு லோகேந்திரலிங்கத்தின் பணிகளைப் பாராட்டி வாழ்த்தினார். .இந்துசேகரன் தனது வாழ்த்துரையில், யானை பலம் கொண்ட சிந்தனையாளர் லோகேந்திரலிங்கம் எழுத்தாளர்களுக்கும், படைப்பாளிகளுக்கும் ஒரு வழிகாட்டி எனக் குறிப்பிட்டார். தொடர்ந்து சைவ முன்னேற்றச் சங்கத்தின் சமயச் செயலாளர் திருமதி சரோஜினி சந்திரகோபால், திருமதி.

புவனேஸ்வரி நடராசா, திருமதி.ரஷாந்தினி, உள்ளிட்டோரும் வாழ்த்துரைகள் வழங்கினர். நிறைவாகத் தனது ஏற்புரையில் கனடா உதயன் வார இதழின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் இலண்டன் வாழ் தமிழ்ச் சமூகம் எடுத்த இந்த நிறைவான நிகழ்வுக்குத் தன்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார். இது போன்ற விழாக்கள் தனது பொறுப்பையும், கடமையையும் அதிகரித்திப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். இக்கட்டான சூழ்நிலைகளிலும், இலக்கு நோக்கிய தனது பயணத்தை நிறுத்தியதில்லை என்றும், எதிர்காலத்திலும் இலக்கு நோக்கிய தனது பயணம் தொடரும் என்றும், இது போன்ற வாழ்த்துக்கள் அதற்கு வலுவூட்டும் என்றும் தெரிவித்தார். கனடா உதயன் இதழின் பிரதிகளையும் இலண்டன் வாழ் தமிழ்ச் சமூக உறவுகளுக்கு அவர் வழங்கி மகிழ்ந்தார். இலண்டன் தமிழ்ச் சமூகத்தின் இந்த இரண்டரை மணி நேர விழா, இனிய மதிய விருந்துடன் நிறைவடைந்தது.

அ.கனகசூரியர் ...

# சாரல்நாடனின் 'வானம் சிவந்த நாட்கள்' நாவல் வெளியீடும் நினைவேந்தலும்




**அமரர் சாரல்நாடனின் "வானம் சிவந்த நாட்கள்" நாவல் வெளியீடும் நினைவேந்தலும் கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தில் இன்று 31ஆம் திகதி ஞாயிறு மு.ப 10.00 மணிக்கு இடம்பெறும். சு.முரளிதரன் நிகழ்வுக்கு தலைமை தாங்க வெளியீட்டாளர் (காணொளி வழி) உரையை எச்.எச். விக்ரமசிங்க வழங்குவார். நாவல் குறித்த பார்வையை சு. தவச்செல்வன் வழங்குவார்**

***சாரல்நாடன் எனும் மலையக சகாப்தம் எனும் தலைப்பிலான நினைவேந்தல் அரங்கத்தில் சாகித்யரத்னா மு.சிவலிங்கம், கலாபூசணம் மொழிவரதன், சிவ இராஜேந்திரன், சிவலிங்கம் சிவகுமார், ஜெ.சற்குருநாதன், வடிவேல், இர.சிவலிங்கம் சிவனு மனோகரன், அகிலன், டேவிட் சுதர்மமகாராஜன் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.***

*மலையகத்தில் அறுபதுகளில் கிளர்ந்த கல்வி எழுச்சியின், சமூக விழிப்புணர்வின், இளைஞர் சிந்தனையின் மைய நாயகனாகத் திகழ்ந்த இர.சிவலிங்கத்தின் பண்ணையில் வார்க்கப்பட்ட சாரல்நாடன் மலையக இலக்கிய வரலாற்றில் முக்கிய இடத்தினை வகிக்கிறார்.*

*ஹட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியின் அதிபராக இர.சிவலிங்கம் சேவையாற்றிய காலத்தில், அவரின் கீழ் மாணவனாகப் பயின்ற சாரல்நாடன், சிவலிங்கம் தன் மீது கொண்டிருந்த பெரும் நம்பிக்கையை மெய்ப்பித்துக்காட்டியிருந்தார்.*

*கவிதையில் ஆரம்பித்து, சிறுகதை, குறுநாவல், நாவல், வாழ்க்கை வரலாறு, இலக்கிய வரலாறு என்று இலக்கியத்தின் எல்லாத்துறைகளிலும் தன் எழுத்தாற்றலை நிரூபித்தவர் சாரல்நாடன்.*

*மலையக இலக்கியத்தில் ஆவணப்படுத்தலின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தானே சாரல் வெளியீட்டகத்தை நிறுவி, மலையகப் படைப்புகளுக்கு நூல் வடிவம் தந்தார். சி.வி.வேலுப்பிள்ளையின் 'வாழ் வற்ற வாழ்வு' என்ற நாவலைத் தேடிப்பிடித்து அதனை நூலாக வெளியிட்டு அதற்கு நிரந்தர வாழ்வளித்தார்.*

*போப் துரை கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்று தியாகிகளாக மறைந்த வீராசாமி, வேலாயுதம் ஆகியோரின் வாழ்க்கைப் போராட்டத்தின் பின்னணியில் சாரல் நாடன் எழுதிய 'வானம் சிவந்த நாட்கள்' என்று வீரகேசரியில் தொடராக எழுதிய நாவலை, நூலாக்கும் முயற்சியில் அனைத்து வேலைகளையும் முடித்த நிலையில், துரதிர்ஷ்டமாக அவர் மரணித்தது அந்நூல் வெளியீட்டை சாத்தியமற்றதாக்கி விட்டது. அவர் மறைந்து எட்டு ஆண்டுகள் கழிந்து, இன்று அந்நூலை வெளியிட்டு வைப்பதில் நாங்கள் பெரும் மனநிறைவும், மகிழ்ச்சியும் அடைகின்றோம். இது சாரல்நாடனின் ஆத்மநிறைவுக்கு நாங்கள் வழங்கும் சிறு படையலாகும்.*

*இந்நாவலுக்கு முன்னுரை எழுதித் தருமாறு லண்டனில் வாழும்*

*இலக்கிய விமர்சகரும் மலையக இலக்கிய ஆய்வாளருமான மு.நித்தியானந்தனைக் கேட்டபோது, தனக்கேயுரிய ஆய்வு முத்திரையுடன் அவர் வழங்கியுள்ள முன்னுரைக்காக நாங்கள் அவருக்கு நன்றிக் கடன்பட்டிருக்கிறோம். மலையக இலக்கிய முயற்சிகளில் எங்களின் செயற்பாடுகளுக்கு என்றும் உற்சாகமும் ஆதரவும் தரும் அவரின் உயர்ந்த மனதிற்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள்.*

*நூல் வடிவமைப்பில் தமிழ்ப் புத்தக உலகில் தலைசிறந்த வடிவமைப்பு ஓவியராகத் திகழும் கே.கே.ராஜா இந்த நூலுக்கு அட்டைப்பட ஓவியத்தை வடித்துத்தந்திருப்பது நூலுக்குப் பெருமை சேர்க்கிறது. தெளிவத்தை ஜோசப்பின் 'நாமிருக்கும் நாடே', என்.எஸ்.எம். ராமையா வின் 'ஒரு கூடைக்கொழுந்து', சி.வி.வேலுப்பிள்ளையின் 'வீடற்றவன்' ஆகிய நூல்களுக்கு அட்டைப்படம் வரைந்த பெருமை மிகு ராஜாவின் ஓவியத் தூரிகையில் இந்த நூலின் அட்டைப்படம் உருப் பெறுவது நமது பாக்கியமாகும். தனது வேலைப்பளுவிற்குள் இந்நூலின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தன் அரிய நேரத்தை ஒதுக்கி உதவியதற்கு எங்கள் நன்றி என்றும் உரியது. சிரமம் பாராமல் இந்நூலினை மொய்ப்புப்பார்த்து உதவிய இ.பத்மநாப ஐயருக்கும் நாங்கள் நன்றிக்குரியவர்கள்.*

*எழுச்சித் தலைவர் பி.சந்திரசேகரம் நினைவாகவும், பத்திரிகைத் துறையில் மலையகத்திற்கு சேவையாற்றிய எஸ்.எம்.கார்மேகம் நினைவாகவும், மலையகத்தின் எழுச்சிக் கவிஞர் பெரியசாமயை நனைவுகூர்ந்தும் நாங்கள் வெளியிட்ட நூல்கள் மலையக மக்கள் மத்தியில் மட்டுமல்ல, தமிழகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் பெரும் வரவேற்பைப் பெற்றன.*

*நல்லுணர்வோடு நாம் மேற்கொள்ளும் முயற்சிகளின் சிரமத்தை உணர்ந்து, நமது உழைப்பையும் முயற்சியையும் மதித்துப் போற்றும் நல்லுள்ளங்களுக்கு நாம் நன்றி நவில்கின்றோம்.*

*சாரல்நாடனின் 'வானம் சிவந்த நாட்கள்' என்ற இந்நாவல் தமிழ்கூறு நல்லுலகில் வரவேற்பைப்பெறும் என்று நம்புகிறோம்.*

எச்.எச்.விக்ரமசிங்க ...
(பதிப்பாசிரியர்)

# தினகரன் வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## மோட்டார் வாகனங்கள்

### 107 டொயோட்டா கார்கள் விற்பனைக்கு

Toyota CHR 2020 முதலாம் உரிமையாளர் (புத்தம்புதியதாக தருவிக்கப்பட்டது) SILVER EAGLE EYE 7000 KM உண்மையான ஓட்ட தூரம் ஒரிஜினல் 4 WAY கெமரா Infortaintment System 075 2242842. 043944

## வேலைவாய்ப்பு

### 309 வெற்றிடங்கள் கணக்கியல்/ நிதி

கணக்காய்வு/ கணக்காளர் பயிலுநர்கள் விண்ணப்பிக்கவும். முகாமையாளர் 891/2, பேங்ஷால் வீதி, கொழும்பு 11. தொலைபேசி / வட்ஸ்அப் 075 5030954. மின்னஞ்சல் :agapeacservices@gmail.com 038818




வத்தளையில் அமைந்துள்ள தனியார் ஏற்றுமதி நிறுவனத்திற்கு tally software அனுபவமுள்ள ஆண் அல்லது பெண் Account Assistant தேவை. தொடர்பு தொலைபேசி இல. 0777 303641 தங்களின் சுயவிபரக்கோவையை jesmin_print@yahoo.com எனது Eமெயிலுக்கு அனுப்பவும். தொடர்பு நேரம் 9.00 am முதல் 5 pm வரை மேலும் அனுபவமுள்ள fork lift oparater ஒருவரும் தேவை. 043435

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

வீட்டுப் பணிப்பெண் மற்றும் சுத்திகரிப்பாளர்கள் தேவை. வயது 30 இற்குக் கீழ் அனுபவம் தேவையில்லை. நல்ல சம்பளம் வேலை நிபந்தனைகளுடன் தொடர்பு 75/1, W.A. சில்வா மாவத்த, கொழும்பு 06 தொலைபேசி 2591169, 0777 452447, 075 5091379. 040927

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

அறுகம்பை முதல் தர ஹோட்டலுக்கு முகாமையாளர் தேவை. கணனி அறிவு இருத்தல், ஆங்கில மொழி ஆற்றல் இருத்தல் வேண்டும். அழையுங்கள். 0770695822. 043036

### 325 தொழில்துறை பொது

தோட்டத்துறை புத்தளம் நாகவில்லு 1 1/2 ஏக்கர் சிறு தோட்டத்துக்கு தொழிலாளர் தேவை. திருமணமான தம்பதியினர் விரும்பத்தக்கது. (வயது 4050) தங்குமிட வசதியுண்டு. தொடர்புகளுக்கு. 075 1613689. 044160

வீட்டு வேலைக்கு வயது 4050க்கு இடைப்பட்ட பணிப் பெண் தேவை. வயதான பெண்மணியை பராமரித்தல் வீட்டு வேலைகளில் உதவுதல் வேண்டும். ரூபா 40,000.00 சம்பளம் வழங்கப்படும். கலந்தாலோசித்துக் கொள்ளலாம். தொ. பே. 077 1927042. 043760

### 327 வேலை தேவை

முன் அனுபவமுள்ள எனக்கு அறபிக் கல்லூரியில் றக்கீப் கடமை தேவை. தொடர்புகளுக்கு யூ.எல். புஹாரி 071 4988046. 044176

## காணி/தோட்டம்

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

நாவலவில் வீடு வாடகைக்கு. 2 படுக்கையறைகள், 1 குளியலறை, சமையலறை மற்றும் பெரிய மண்டபம் (நாவல ஜும்ஆப் பள்ளி வாசலுக்கு அடுத்தாக). 0771456055, 07620 0 4360. 043121

149/6, தேவானம்பியதிஸ்ஸ மாவத்தையில் 2 அறைகளுடன் வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு உண்டு. 072 8261822. 043392

### 642 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

ஜாஎல, ஏக்கல 2 அறைகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. 25,000/ அழையுங்கள் 071 8114034. 043793

### 672 வீடு சொத்து வாடகைக்கு/குத்தகைக்கு தேவை

ஆதனங்களில் பயிர்ச்செய்கைக்கு பண்ணைகளிற்கு உகந்த காணிகளின் பராமரிப்பு, குத்தகை, விற்பனைக்காக இருப்பின் எம்மை அழைக்கவும். 074 2264469. 043562

## வாரமஞ்சரி திருமண சேவைகள்

### மணமகன்

இலங்கை மற்றும் வெளிநாட்டில் சிறப்பான வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள கல்வி கற்ற இரட்டைப் பிரஜாவுரிமையுள்ள 42 வயது 5'8" எடுப்பான வெள்ளைநிற ஆளுமையுடைய சகோதரனுக்கு ஓர் சிறந்த தோற்றமுடைய கவர்ச்சியான துணைவரைத் தேடுகின்றனர். தேவைப்படின் UK இலும் குடியேறல் வேண்டும். நிதிநிலைமை, இனம், சமயம் பார்க்கப்பட மாட்டாது. Email: makaram80@yahoo.com. G184292

---

SMIB

# அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

## விலைமனு அறிவித்தல்

## மின்பிறப்பாக்கிகளின் கொள்வனவு

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் தலைமை அலுவலகம் மற்றும் நாடளாவிய ரீதியிலமைந்துள்ள அதனது கிளைகளுக்கு மின்பிறப்பாக்கிகளை கொள்வனவு செய்வதற்காக இவ்வங்கியின் பெறுகைக் குழுத் தலைவர் விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.

விலைமனுக்கள் 2022.08.22 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு மூடப்படும்.

மீளளிக்கப்படாத கட்டணமான 1,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், கொழும்பு-03, காலி வீதி, 269 ஆம் இலக்கத்திலுள்ள அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் நிருவாகம் மற்றும் லொஜிஸ்டிக்ஸ் திணைக்களத்திலிருந்து பெறப்படும் ஆவணங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

5 வருடங்களுக்கு மேலான காலப்பகுதியில் வியாபார பதிவு மற்றும் அனுபவமுள்ள புகழ் வாய்ந்த உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் உள்ளூர் அதிகாரம் பெற்ற ஏகமுகவர்களுக்கு 2022.08.12 ஆம் திகதி வரையும் விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும்.

முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஒன்றில் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாகவே மூடும் நேரத்திற்கு முன்னராக பெற்றுக் கொள்ளும் வகையில் கொழும்பு-03, 269 ஆம் இலக்கத்தின் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பெறுகைக் குழுத் தலைவருக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனு ஆவணங்கள் நிருவாகம் மற்றும் லொஜிஸ்டிக்ஸ் திணைக்களத்தில் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.

விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே 4 ஆம் மாடியிலுள்ள நிருவாகம் மற்றும் லொஜிஸ்டிக்ஸ் திணைக்களத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களுக்கு, 011-7722879/011-7722784 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக நிருவாகம் மற்றும் லொஜிஸ்டிக்ஸ் இன் பிரதான முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

**பொது முகாமையாளர்,**
**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி,**
**இல. 269, காலி வீதி,**
**கொழும்பு-03.**

---




---

**Repeat Your Ad For Better Offers**

---

# சுகாதார அமைச்சு

## இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் (SPMC)

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### சர்வதேச போட்டி ரீதியான விலை கோரல் - (ICB) புத்தம் புதிய குமிழ் பொதியிடல் (BLISTER CARTONING) இயந்திரமொன்றை வழங்குதல், நிறுவுதல், செயற்படுத்திக் காண்பித்தல் மற்றும் பயிற்சி வழங்குதல்

**கேள்வி இல: SPMC/PD/13/2022 - 2022-09-01ஆம் திகதி முடிவுறுத்தப்படும்**

1. இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழுவின் தலைவரினால் 2022 செப்டெம்பர் 01ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை புத்தம் புதிய குமிழ் பொதியிடல் (BLISTER CARTONING) இயந்திரமொன்றை அது சார்ந்த பயிற்சியுடன் வழங்குதல், நிறுவுதல், செயற்படுத்திக் காண்பித்தல் என்பவற்றுக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| பொருள் | மீள் செலுத்தப்படாத கேள்விக் கட்டணம் |
|---|---|
| 1. புத்தம் புதிய குமிழ் பொதியிடல் (BLISTER CARTONING) இயந்திரமொன்றை வழங்குதல், நிறுவுதல், செயற்படுத்திக் காண்பித்தல் மற்றும் பயிற்சி வழங்குதல் | ரூபா 7,500.00 |

2. முழுத் தொகுதியொன்றில் தயாரிக்கப்பட்ட முத்திரையிடப்பட்ட மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளிலான விலைமனுக்களை வெவ்வேறாக "தலைவர், பெறுகைக் குழு, இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம், இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவல எஸ்டேட், இரத்மலானை இலங்கை" எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11, இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தரை தளத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
3. கீழ் காணும் ஆவணங்களை ஒப்படைப்பதன் மூலம் 2022-08-01ஆம் திகதி முதல் 2022-08-31ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் மேற்கூறப்பட்ட முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
   - இலங்கை இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11இல் அமைந்த அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் - திட்டமிடல் மற்றும் கொள்வனவு அவர்களுக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பித்தல்.
   - மீள் செலுத்தப்படாத மேல் கூறப்பட்ட கேள்விக் கட்டணத்தை அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் கணக்குப் பிரிவிற்கு செலுத்தல்.
4. விலைமனுக்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தச்சட்டத்தின் உடன்பாடுகளினால் நிர்வாகிக்கப்படுவதுடன் கேள்விதாரர் சார்பில் விலைமனுதாரர் ஒரு முகவரை, உப முகவரை, பிரதிநிதியை, நியமிக்கப்பட்டவரை அமர்த்துவதாயின் பொது ஒப்பந்தச் சட்டத்தின் (PCA) 10ஆம் பிரிவின் பிரகாரம் அவ்வாறான பொது ஒப்பந்தத்துக்காக தன்னைப் பதிவு செய்துகொள்ள வேண்டியதுடன் கேள்வியின் எத்தருணத்திலும் கொடுக்கல் வாங்கல்களின் போது செல்லுபடியாகும் அவ்வாறான பதிவுத் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.
5. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2022 ஆகஸ்ட் 16ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்பதுடன் விலைமனுதாரர்கள் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன் BLISTER CARTONING இயந்திரம் பற்றிய விழிப்புணர்வைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அன்றைய தினமே அமைவிடத்திற்கான விஜயம் மற்றும் பரீட்சித்துப் பார்த்தல் என்பவற்றை மேற்கொள்ளலாம்.
6. விலைமனுக்கள் ஏற்கப்படும் நேரம் முடிவடைந்தவுடன் இரத்மலானை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டத்தாபனத்தில் விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன் அத்தருணத்தில் சமூகம் தந்துள்ள விலைமனுதாரர் அல்லது அவரது அங்கீகாரம் வழங்கப்பட்ட முகவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.
7. விலைமனு ஆவணங்களை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
8. மேலதிக தகவல்களை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் பிரதிப் பொது முகாமையாளர் - உற்பத்திகள் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல.: 0112-637574) "விலைக்கோரல் தகவல்கள்" தொடர்பான விபரங்களை எமது இணையத்தளத்தில் பார்வையிடலாம். (www.spmclanka.lk)

**தலைவர் - பெறுகைக் குழு,**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்,**
**இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவல எஸ்டேட், இரத்மலானை,**
**இலங்கை.**

**தொலைபேசி இல.** : (00)94-11-2635353/ (00)94-11-2637574
**மின்னஞ்சல்** : spmclanka@sltnet.lk
**இணையத்தளம்** : www.spmclanka.lk

---

துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமானசேவை அமைச்சு

## வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்

# விலைமனுக்கோரல் (IFB)

### இலங்கை கப்பல் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக நுரைச்சோலை பிரதேசத்தில் ஒரு வீட்டை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெறுவதற்கான விலைமனுக்கோரல

துறைமுகங்கள் மற்றும் விமானசேவை அமைச்சின் கீழ் இயங்கும் துறைமுகங்கள் மற்றும் கப்பல் கூட்டுத்தாபனம் (CSC) முழுவதுமாக பொதுத் துறைக்கு சொந்தமானது. அதன் ஊழியர்கள் பொதுவாக செப்டெம்பர் - ஏப்ரல் மாத காலத்தில் (செயல்பாடுகள்) லக்விஜய அனல்மின் நிலையத்திற்கு நிலக்கரி இறக்கும் வேலைக்காக அனுப்பப்படுகிறார்கள்.

அடுத்த செயல்பாட்டுக் காலத்தில், அதாவது 2022 செப்டம்பர் 15 முதல் 2023 ஏப்ரல் இறுதி வரை, 02 வாரங்கள் குறைவாக/அதிகமாக, சுமார் ஏழு மாத காலத்திற்கு கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள் மற்றும் தேவைக்கேற்ப பிற அரச அலுவலர்களுக்குத் தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக, விலைமனுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தளபாடங்கள் மற்றும் வசதிகளுடன் வீடொன்று வாடகைக்கு/குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்காக, வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் சார்பாக வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் நுண் கொள்முதல் குழுவின் தலைவரினால் சட்டபூர்வமான வீடு/தங்குமிடத்தின் உரிமையாளர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

1. இருப்பிடம் முன்மொழியப்பட்ட வீடு/தங்குமிடம் லக்விஜய லக்விஜய அனல்மின் நிலைய வளாகத்திலிருந்து பத்து (10) கிலோமீட்டர் தொலைவில், பலாவி/கல்பிட்டி பிரதான வீதிக்கு அருகாமையில், கரவோ மற்றும் தலவில புனித சாந்த அன்னை தேவாலயத்திற்கு இடையில் காணப்படுமாயின் மிகவும் விரும்பத்தக்கது. இந்த வீடுகள்/தங்குமிடங்களின் கட்டுமானம் முழுமையாக முடிக்கப்பட்டு, குடிபுகத் தயாராக இருக்க வேண்டும் மற்றும் அரச அதிகாரிகள் வசிக்கும் பொருத்தமான குடியிருப்பு சூழலில் அமைந்திருக்க வேண்டும்.

   மேற்குறிப்பிடப்பட்ட பகுதியினுள் அமைந்த வீடுகள்/குடியிருப்புகளுக்கான விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படாவிடின் அல்லது சமர்ப்பிக்கப்பட்டுள்ள வீடுகள்/குடியிருப்புகளை தேர்வு செய்வதற்கு ஏற்ற நிலையில் இல்லாவிடின், கொள்முதல் குழுவின் விருப்பத்தின்பேரில், அதிலிருந்து மேலும் தொலைவில் உள்ள வீடுகள்/குடியிருப்புகளுக்கான விலைமனுக்கள் சமர்பிக்கப்பட்டிருப்பின் பரிசீலிக்கப்படும்.

   மனுதாரரினால் குத்தகைக்கு விடப்படும் வீடு தொடர்பான கோரப்பட்ட தகவல்களை கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட மனு ஆவணத்தில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் மட்டுமே நிரப்ப வேண்டும் மற்றும் வேறு எந்த ஆவணங்களையும் பயன்படுத்தக்கூடாது. ஒரு மனுதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட (01) வீடுகளை வாடகைக்கு/குத்தகைக்கு வழங்க விரும்பினால், அவர்/அவள் ஒவ்வொரு வீட்டிற்கும் தனித்தனி மனு ஆவணங்களை நிரப்ப வேண்டும்.
2. வரவிருக்கும் வாடகை/குத்தகை ஒப்பந்தம், பரஸ்பர ஒப்பந்தத்தின் அடிப்படையில் மேலும் இரண்டு செயல்பாட்டு காலங்களுக்கு இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் விருப்பத்தின் பேரில் நீட்டிக்கப்படலாம்.
3. அனைத்து வாடகை/வரி செலுத்துதல்களும் குறித்த காலத்தில் நடைமுறையில் உள்ள அரசாங்க வரி செலுத்தும் விதிகளுக்கு உட்பட்டது.

தொடர்புடைய கூடுதல் நிபந்தனைகள் மனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

மனு ஆவணத்தினை **2022.08.01 ஆந் திகதி முதல் 2022.08.15** ஆந் திகதிவரை வேலைநாட்களில் **மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00** மணி வரை மீள்செலுத்தப்படாத கட்டணமாக ரூ.1,000/= வெட் **12%** வரியுடன் மனு வைப்புத் தொகையாக செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்

அவ்வாறு மீள்செலுத்தப்படாத கட்டணமாக ரூ.1,000/= வெட் 12% வரி வைப்புத் தொகைக்கான **"இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்"** என்ற பெயரில் எடுக்கப்பட்ட மணியார்டர் மற்றும் சுய-முகவரியிடப்பட்ட முத்திரையிடப்பட்ட கடித உறையில் எழுதப்பட்ட பதிவுத் தபால் கட்டணத்திற்கான முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையொன்றுடன் தபால் மூலம் எழுத்துப்பூர்வ கோரிக்கைகள் முன்வைக்கும் மனுதாரர்களுக்கு மனு ஆவணங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (கடிதத்தில் தொலைபேசி எண்ணைக் குறிப்பிடவும்). மின்னஞ்சலில் ஏற்படக்கூடிய தாமதங்களுக்கு இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் பொறுப்பேற்காதவாறு சரியான நேரத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

உரிய முறையில் முழுமையாக்கப்பட்ட விண்ணப்பங்கள் தபாலுறையில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் **"வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான தங்குமிட வளாகத்திற்கான விலைமனுக்கோரல் 2022/23"** எனக்குறிப்பிட்டு **2022.08.16 ஆம் திகதி இலங்கை நேரப்படி பி.ப.3.00 மணிக்கு முன்** பதிவுத்தபாலில் அல்லது பொதி சேவையின் மூலமாக அல்லது நேரடியாக அல்லது கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் இடப்பட்டுள்ள மனுக்களை சேகரிக்கும் பெட்டியில் இடுதல் மூலமாகவோ மனுக்களை சமர்ப்பிக்க முடியும். மனுக்கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் கேட்போர்கூடத்தில் மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

இந்த மனுக்கள் தொடர்பாக முடிவுசெய்யும் உரிமை வழங்கற்குழுவிற்கு உண்டு. நேரம் தாழ்த்திக்கிடைக்கும் மனுக்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள

நிர்வாகப் பிரிவு

தொலைபேசி/பெக்ஸ் : +94 11 2326077
கைத்தொலைபேசி : +94 71 0215720
மின்னஞ்சல் : **procurement@cscl.lk**

தலைவர்
கூட்டுறவு வழங்கல் குழு
வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்,
இல - 27, MICH கட்டிடம்,
சேர் ராஸிக் பரீட் மாவத்தை (பிரிஸ்டல் வீதி) கொழும்பு 00100.
தொடர்புகளுக்கு - (011) 2328772/3, (011) 2423214, (011) 2497800

LITRO GAS

# PROCUREMENT NOTICE
## FOR THE SUPPLY OF PLASTIC DUST CAPS FOR LP GAS DOMESTIC CYLINDER VALVES

PROCUREMENT REF. No. LGLL/OPS/033 /LOCAL/2022

NATIONAL COMPETITIVE BIDDING (NCB)

Litro Gas Lanka Limited invites sealed offers from reputed parties to supply 30,000,000 numbers of plastic dust caps.

The Bidder should have a minimum of 03 years' experience in the field of manufacturing plastic injection molding or any similar industry.

All bids must be accompanied by a Bid Security of LKR 300,000/= from a recognized commercial bank registered in Sri Lanka.

The Bid Document can be obtained from the address mentioned below on the payment of a non-refundable fee of LKR 3,000/- by Cash on any working day (Mon-Fri) between 9.00am – 3.00pm from 02nd August 2022 to 16th August 2022 (both days inclusive).

The pre-bid meeting will be held on 09th August 2022 at 10.00 am at Litro Gas Lanka Limited Head office, 267, Union Place, Colombo 02.

The duly completed bids should be deposited in the Tender Box at the Litro Gas Head Office on or before 3:00 pm on 17th August 2022.

The Chairman
Department Procurement Committee
Litro Gas Lanka Limited
267, Union Place, Colombo 02
T.P. - 011 2581131 / Fax – 011 2327698

BE BETTER INFORMED!

News you can trust now free on your mobile phone.

Dinamina Daily News Thinakaran

VISIT apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

AVAILABLE AT

LAKE HOUSE


# அறிவித்தல்

MCB

# அறிவிப்பு

## MCB வங்கி வாடிக்கையாளர்களுக்கு கைவிடப்பட்ட சொத்தின் சட்டரீதியான அறிக்கை

[illegible]

| உரிமையாளரின் பெயர் | சொத்து விவரங்கள் | உரிமையாளரின் பெயர் | சொத்து விவரங்கள் | உரிமையாளரின் பெயர் | சொத்து விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |

[illegible]

The Management, MCB Bank Ltd.

Daily News Classifieds, the Housewives' companion

பனை அபிவிருத்தி சபை

## விளம்பரம்

பனை உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள், தரகர்கள், ஏலவிற்பனையாளர்கள், களஞ்சியங்கள், கொள்வனவாளர்கள் மற்றும் விற்பனையாளர்களிற்கு அறிவிப்பு.

1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க தென்னை அபிவிருத்திச்சட்டத்தின் கீழ் திருத்தப்பட்ட 1975 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க தென்னை அபிவிருத்திச் (திருத்தம்) சட்டத்தின் கீழ் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

மேற்கூறிய அதிகாரங்களுக்கு இணங்க உங்களது / நிறுவனத்தினது பனை சார்ந்த தயாரிப்புகளின் பதிவு **01-08-2022 - 15-08-2022** வரை செய்யப்படுகிறது.

- உங்களுக்கு பனை தொடர்பான பொருட்களின் ஏற்றுமதி / இறக்குமதியின் போது ஏற்படும் பிரச்சனைகளை குறைக்கிறது.
- பனை ஆராய்ச்சி நிறுவனத்தால் பனை தொடர்பான பொருட்களின் தர சான்றிதழை வழங்கப்படுகிறது.
- பனை உற்பத்திகளின் திறமையான ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செயல்முறையை எளிதாக்குகிறது.

பனை அபிவிருத்திச் சபையில் பதிவு செய்யாமை தொடர்பில் சட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலதிக விசாரணைகளுக்கு

பனை அபிவிருத்தி சபை, இல. 498, காலி வீதி, கொழும்பு 06.

தொடர்பு எண்கள். : **011-2364406 077-3154055 077-5624264**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## JCT கொள்கல திறந்தவெளி II ஆம் கட்டத்தில் உள்ளக வீதிகளை மீள்மேற்பரப்பிடல்

## (Contract No.: SLPA/CD/JCT/ROAD/02)

1. '**JCT** கொள்கல திறந்தவெளி **II** ஆம் கட்டத்தின் உள்ளக வீதிகளை மீள்மேற்பரப்பிடலுக்காக (ஒப்பந்த இல.: **SLPA/CD/JCT/ROAD/02)'** துறைமுகங்கள், கப்பற்சேவை மற்றும் விமானசேவைகளின் அமைச்சின் செயலாளரின் சார்பில் துறைமுகங்கள், கப்பற்சேவை மற்றும் விமானசேவைகளின் அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். இந்த ஒப்பந்தத்தின் கீழுள்ள பணியானது பிரதானமாக வெட்டுதல் மற்றும் அடிப்பரப்பு திருத்தங்கள் அடங்கலான JCT கொள்கல திறந்தவெளி உள்ளக வீதிகளை மீள்மேற்பரப்பிடலாகும். மொத்த வீதி பிரதேசமானது அண்ணளவாக 21,000 $M^2$ ஆகும்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காக பின்வருவன பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.
   - விலைமனுதாரரானவர் சி-2 மற்றும் சி-3 தர **CIDA ( ICTAD** என முன்னர் அழைக்கப்பட்டது) பதிவுள்ள வீதி நிர்மாணத்தில் விஷேடத்துவமுள்ள ஒப்பந்தக்காரராக இருத்தல் வேண்டும்.
   - eroc.drc.gov.lk என்ற இணையதளத்திலிருந்து ஒன்லைனின் மூலமாக விண்ணப்பிக்கும் விலைமனுதாரரினால் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவுச் சான்றிதழைக் கொண்டிருத்தல்.
3. கொழும்பு-01, லேடன் பஸ்தியன் வீதியின் 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் தொழில்நுட்ப நூலகத்தில் 2022.08.18 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமும் அதனைத் தொடர்ந்து தளவிஜயமும் நடைபெறும்.
4. பெசேவ அடங்கலாக 35,000 ரூபாவை மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக செலுத்திய பின்னர், எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் கொழும்பு-01, லேடன் பஸ்தியன் வீதியின் 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு பிரிவின் ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு பிரதான பொறியியலாளரினால் 2022.08.09 ஆம் திகதியிலிருந்து 2022.09.05 ஆம் திகதி வரையும் (இரண்டு நாட்களும் அடங்கலானது) வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 2 மணிக்குமிடையில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும். விலைமனுக்கோரல் ஆவணங்கள் அதே அலுவலகத்தில் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
5. விலைமனுக்கள் 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கோரல் ஆவணமானது பாதுகாப்பான தபாலுறையில் சேர்க்கப்பட்டு, முத்திரையிடப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் "Resurfacing of Internal Roads at JCT Container yard-Phase II (Contract No.: SLPA/CD/JCT/ROAD/02)" என அடையாளமிடப்பட்டு பதிவுத் தபாலில் தலைவர், அமைச்சு பெறுகைக் குழு, துறைமுகங்கள், கப்பற்சேவைகள் மற்றும் விமானசேவைகள் அமைச்சு, இல. 19, சைத்திய வீதி, கொழும்பு-01 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலே குறிப்பிட்டுள்ள முகவரியிலுள்ள துறைமுகங்கள், கப்பற்சேவைகள் மற்றும் விமானசேவைகள் அமைச்சில் வைக்கப்பட்டுள்ள பெறுகை பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் 2,700,000.00 ரூபா பெறுமதியான விலைமனு பிணைய உத்தரவாதமொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணைய உத்தரவாதமானது 2023.01.31ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. இந்த வேலைகளை பூர்த்தி செய்வதற்கான நேர கட்டமைப்பானது 300 நாட்களாகும்.
9. விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2022.09.06ஆம் திகதியன்று பி.ப. 2 மணியளவில் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் விலைமனுக்கள் பி.ப. 2 மணிக்கு மூடப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
10. எந்தவொரு மேலதிக விபரங்களும் மேலேயுள்ள முகவரியின் ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் (தொலைபேசி: 011-2380517)
11. மேலேயுள்ள அனைத்தும் eroc.drc.gov.lk என்ற இணையதளத்திலிருந்து ஒன்லைனில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**துறைமுகங்கள், கப்பற்சேவைகள் மற்றும் விமானசேவைகள் அமைச்சு,**
**இல.: 19, சைத்திய வீதி, கொழும்பு-01.**



## ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 16

மூத்த எழுத்தாளர் தி. ஞானசேகரன்

# படைப்பாற்றலும் செயல்திறனும் மிக்க பேராளுமை செங்கை ஆழியான்

ஈழத்து நாவல் வரலாற்றில் செங்கை ஆழியானுக்கு ஓர் உன்னத இடமுண்டு. இவர் நாற்பத்தாறு நாவல்களை எழுதியுள்ளார். இவற்றில் யானை என்ற நாவல் The Feast என்ற மகுடத்தில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. காட்டாறு நாவல் 'வன மத கங்க" எனச் சிங்களத்தில் மொழிபெயர்ப்பு நாவலாக வெளிவந்துள்ளது. பிரளயம் (1976) காட்டாறு (1977) மரணங்கள் மலிந்தபூமி (2000) என்பன தேசிய சாகித்திய மண்டலப் பரிசினைச் சுவீகரித்துக் கொண்டன. இவரது வாடைக் காற்று நாவல் திரைவடிவம் பெற்றது. இவரது பத்துக் குறுநாவல்கள் அடங்கிய தொகுதி 'ஆயிரமாயிரம் ஆண்டுகள்" என்ற மகுடத்தில் வெளியாகியுள்ளது. செங்கை ஆழியான் பல்வேறு பிரதேச சமூகங்களை ஈழத்து நாவல் இலக்கியத்துக்கு அறிமுகம் செய்துள்ளார். மீனவர்கள், சலவைத் தொழிலாளர்கள் சுருட்டுத் தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோரது சமூகப் பிரச்சினைகளை அணுகியுள்ள அவரது படைப்புகளில் சமூகப் பார்வை சிறப்புற அமைவதை அவதானிக்கலாம். ஈழத்து எழுத்தாளர்களுள் போர்க்கால நிகழ்வுகளை அதிகளவில் இலக்கியமாக்கியவர் செங்கை ஆழியான் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

சிறுகதைத் துறையில் செங்கை ஆழியான் சுமார் 160 கதைகள்வரை எழுதியுள்ளார்.

சிங்களப் பத்திரிகைகளான ராவய, சிலுமின, லங்காதீப முதலிய பத்திரிகைகளில் இவரது சிறுகதைகள் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளன. இதுவரை இவரது ஐந்து சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. அவற்றுள் 'இரவு நேரப் பயணிகள்" என்ற தொகுதி வடக்கு கிழக்கு மாகாணப் பரிசினைப் பெற்றது. 'யாழ்ப்பாண இராத்திரிகள்" என்ற தொகுதி இலங்கை இலக்கியப் பேரவையின் பரிசினையும் தமிழ்நாடு லில்லி தேவநாயகம் நினைவு சிறப்புப் பரிசினையும் பெற்றது. இரவுநேரப்பயணிகள் என்ற தொகுதி 'ராத்திரி நொன சாய்" எனச் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

செங்கை ஆழியானின் சிறுவர் புதினங்களாக பூதத்தீவுப் புதிர்கள், ஆறுகால்மடம் ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன.

செங்கை ஆழியான் ஐம்பதுக்கும் மேற்பட்ட வானொலி நாடகங்களை எழுதியுள்ளார். இவரது புனைகதைசாராப் படைப்புகளாக 'இருபத்து நான்கு மணிநேரம், மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது, 'களம் பல கண்ட கோட்டை", 'சுனாமி" ஆகியவை வெளிவந்துள்ளன.

செங்கை ஆழியான் பல தொகுப்பு நூல்களை வெளிக் கொணர்ந்துள்ளார். சம்பந்தன் சிறுகதைகள், மறுமலர்ச்சிச் சிறுகதைகள், முன்னோடிச் சிறுகதைகள், சிரித்திரன் சுந்தரின் நானும் எனது கார்ட்டூன்களும், ஈழகேசரிச் சிறுகதைகள், முனியப்பதாசன் சிறுகதைகள், புதுமைலோலன் சிறுகதைகள், மல்லிகைச் சிறுகதைகள், சிங்களச் சிறுகதைகள் என்பன இவற்றுள் அடங்கும்.




பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி ஞானம் சஞ்சிகைக்கு வழங்கிய நேர்காணலில் செங்கை ஆழியானின் தொகுப்பு முயற்சிகள் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

“பல்கலைக்கழகத்தில் செய்யவேண்டிய ஒரு ஆராய்ச்சிக்கான முழுத்தளத்தையும் இத்தொகுப்பு முயற்சிகளின் மூலம் செங்கை ஆழியான் செய்திருக்கிறார். ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்குப் பங்களித்த பத்திரிகைகள், சஞ்சிகைகள் செய்த பணிகளையும் படைப்பாளிகளின் படைப்பாக்க முயற்சிகளையும் இலக்கியச் செல்நெறியில் ஏற்பட்ட வளர்ச்சிப் போக்குகளையும் அறிந்துகொள்ள இத்தொகுப்புகள் உதவுவதோடு வரலாற்றுத் தவறுகளைச் சரிசெய்வதற்கும் பெரும் பங்காற்றியுள்ளன.”

செங்கை ஆழியானின் ஆய்வு நூல்களாக ஈழத்தவர் வரலாறு, நல்லைநகர் நூல், யாழ்ப்பாண அரச பரம்பரை, Jaffna Dynasty, ஈழத்துச் சிறுகதை வரலாறு, சுருட்டுக் கைத்தொழில் என்பன வெளிவந்துள்ளன. மகாவம்சத்தை தமிழில் மொழி பெயர்ப்புச் செய்துள்ளார். யாழ்ப்பாண தேசம், பூதத்தம்பி என்னும் சிறிய நூல்களும் இவரால் எழுதப்பட்டுள்ளன. இவற்றுள் ஈழத்துச் சிறுகதை வரலாறு இவரது ஆய்வு முயற்சிகளின் மகுடமாகக் கருதப்படுகிறது.

ஈழத்துச் சிறுகதை வரலாறு நூலுக்கு பேராசிரியர் அ. சண்முகதாஸ் வழங்கிய அணிந்துரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

“ஈழத்துச் சிறுகதை வரலாற்றைத் தெளிவாகவும் விரிவாகவும் முதன்முறை எழுதிவெளியிட்டவர் என்ற பெருமையினைச் செங்கை ஆழியான் பெற்றுக்கொள்கிறார். தன்னுடைய ஆக்கங்களுள் ஒரு துறையாகிய சிறுகதையின் வரலாற்றை முழுமையாக நோக்கியது வியக்கத்தக்க விடயமல்ல. அது தற்செயல் நிகழ்ச்சியுமல்ல. எங்கள் நாட்டிலே ஆக்க இலக்கியகாரர்களிற் பெரும்பாலோர் விமர்சகர்களாகவும் உள்ளனர். இந்த வகையில் ஆக்க இலக்கியக் காரராகிய செங்கை ஆழியான் விமர்சகராகவும் நின்று ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றை நோக்கியுள்ளார்.”

க.குணராசா என்ற இயற்பெயர் கொண்ட செங்கை ஆழியான் 25.01.1941இல் வண்ணார் பண்ணையில் கந்தையா அன்னம்மா தம்பதியினருக்கு எட்டாவது மகனாகப் பிறந்தவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை யாழ். இந்துக் கல்லூரியிலும், உயர்கல்வியை பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் பெற்றார். புவியியல் சிறப்புப் பட்டதாரியான இவர், பின்னர் முதுகலைமாணிப் பட்டத்தையும் கலாநிதிப் பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பெற்றார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயிலுங்காலத்தில் செங்கை ஆழியான் சிறுகதைத் துறையிலேயே கவனஞ் செலுத்தி வந்தார். தாம் எழுதியதோடு பிறரையும் எழுதத் தூண்டி நின்றார். செம்பியன் செல்வனோடு இணைந்து பல இலக்கியச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வந்தார். பல்கலைக்கழகச் சூழலில் நூல் வெளியீட்டுக்கென ஓர் அமைப்பை செம்பியன் செல்வனுடனும் நவஜோதியுடனும் இணைந்து இவர் உருவாக்கினார். பல்கலைக்கழக வெளியீடு என்ற பெயரில் அமைந்த இந்த அமைப்பின் மூலம் கதைப் பூங்கா, விண்ணும் மண்ணும், காலத்தின் குரல்கள் ஆகிய சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்தன. இத்தொகுதிகள் மூலம் பல புதிய எழுத்தாளர்கள் ஈழத்துத் தமிழிலக்கிய உலகிற்கு அறிமுகமானார்கள். இவ்வாறு அன்றைய காலகட்டத்தில் பலர் தமது ஆற்றல்களை இனங்கண்டு வெளிக்கொணர செங்கை ஆழியான் ஓர் உந்து சக்தியாகச் செயற்பட்டார். இத்தகைய செயற்பாட்டினை அவர் தொடர்ந்தும் தனது எழுத்துலக வாழ்க்கை முழுவதிலும் ஆற்றி வந்துள்ளார். தனது பல்கலைக்கழக வாழ்க்கைக்குப் பின்னர் யாழ். இலக்கிய வட்டத்துடன் இணைந்து பல்வேறு இலக்கியச் செயற்பாடுகளை ஆற்றியதுடன் புதிய தலைமுறைகள் இலக்கிய உலகில் அடியெடுத்து வைப்பதற்குத் தூண்டுகோலாக அமைந்தார்.

யாழ். இலக்கிய வட்டத்தின் ஆரம்பகால உறுப்பினராகவும், பின்னர் அதன் தலைவராகவும் விளங்கினார். இலங்கை இலக்கியப் பேரவையின் தலைவராகவும் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் தலைவராகவும் பதவி வகித்துள்ளார்.

செங்கை ஆழியான் தொழில்ரீதியாகப் பல பதவிகளை வகித்தவர் 1964 முதல் 1971வரை ஆசிரியராகக் கடமையாற்றியவர். 1971இல் இலங்கை நிர்வாக சேவை பரீட்சையில் சித்தி பெற்று 2001இல் ஓய்வு பெறும்வரை உயர் நிர்வாக சேவை அதிகாரியாகப் பல பதவிகள் வகித்தவர். காரியாதிகாரி, உதவி அரசாங்க அதிபர், பிரதிக் காணி ஆணையாளர், பிரதேசச் செயலாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர், வட பிராந்திய ஆணையாளர், மாநகர ஆணையாளர் என அவர் வகித்த பதவிகள் அவரால் பெருமையுற்றன.

செங்கை ஆழியான் ஓர் புவியியற் பட்டதாரி என்ற வகையில் பேராதனைப் பல்கலைக்கழகப் பயிற்சியாளராகவும், கொழும்புப் பல்கலைக்கழக உதவி விரிவுரையாளராகவும் பின்னர் ஆறு ஆண்டுகள் ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். அக்காலத்தில் கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக்கலாசாலை வருகைதரு விரிவுரையாளராகவும் இருந்து நூற்றுக்கணக்கான புவியியலாளர்களை உருவாக்கியுள்ளார். ஐம்பதுக்கும் மேற்பட்ட புவியியல் நூல்களை மாணவர்களுக்கென எழுதியுள்ளார்.

செங்கை ஆழியான் ஞானம் சஞ்சிகைக்கு ஒரு விரிவான தொடர் பேட்டியை அளித்துள்ளார். அப்பேட்டி அவரது 50 வருடகால இலக்கியச் செயற்பாடுகளைப் பதிவுசெய்வதோடு ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சிப்போக்கின் ஒரு வெட்டுமுகத்தை வெளிக்காட்டுவதாகவும் அமைந்தது.



செங்கை ஆழியானின் பணிகளைப் பாராட்டி பல நிறுவனங்கள் அவருக்குப் பட்டங்கள் விருதுகள் வழங்கிக் கௌரவித்துள்ளன. 'இலக்கியச் செம்மல்", 'புனைகதைப் புரவலர்", 'ஆளுநர் விருது", 'கம்பன் கழக விருது" என்பன இவற்றுட் சிலவாகும். இலங்கை அரசின் இலக்கியத்திற்கான ‘சாகித்தியரத்தினா அதியுயர் விருது இவருக்கு 2009இல் வழங்கப்பெற்றது.

செங்கை ஆழியானின் மனைவி கமலாம்பிகை ஓர் ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர், இவர்களுக்கு ரேணுகா, பிரியா, ஹம்சா என மூன்று பெண் பிள்ளைகள். ஈழத்து எழுத்தாளர்களில் அதிக படைப்புகளைத் தந்தவர், அதிக இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபட்டவர், அதிக உயர் பதவிகளை வகித்தவர், அதிக கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டவர் செங்கை ஆழியான்.

செங்கை ஆழியான் தனது 75ஆவது வயதில் அமரரானார்.




## 38 முடிந்து விட்டதே கொல்லுவதோ இளமை

## தெரியவருமே கொலைகாரனை கண்டுபிடித்தவனின் திறமை

கைவிலங்கு மாட்டப்பட்டு தலை குனிந்தபடியே அங்கே நின்றிருந்த வரை பார்த்து விட்டு,

அலறிய படியே ஓடிவந்த மதுமிதா,

"அப்பா....! என்னப்பா இது? ஏன் உங்கள் கையில் விலங்கு மாட்டியிருக்கிறார்கள்!" என்று கேட்ட படியே,

அவரை கட்டிப்பிடித்துக் கொண்டாள்.

ஆனாலும்,

மதுமிதாவின் தந்தையாகிய மகேந்திரன்,

அவளது முகத்தைப் பார்க்காமல்,

வேறு பக்கம் திரும்பிக்கொண்டார்.

அவர் ஏதோ பேசுவதற்கு முயற்சி செய்தார்.

அதே நேரம்,

இன்ஸ்பெக்டர் இன்பராஜ் பேசினார்.

"ம்... மிஸ்டர் மகேந்திரன் இதுவரை நீங்கள் செய்த அந்த அக்கிரமங்களை எல்லாம் உங்கள் மகளிடம் சொல்லுங்கள்!"

அதே நேரம்,

அவர் பேசுவதை ஒளிப்பதிவு செய்வதற்கு,

சார்ஜன் வசந்தன் தயாரானார்.

"மகளே என்னை மன்னித்துவிடு என்று சொல்லும் அளவிற்குக் கூட தகுதி இல்லாதவன் நான். ஆமாம் மது நான் ஒரு கொலைகாரன். நன்றாக வாழ்ந்து கொண்டிருந்த இரண்டு இளைஞர்களையும் ஒரு இளம் பெண்ணையும் நான் கொலை செய்துவிட்டேன்.

என்னுடைய உத்தரவு படிதான் உன்னுடைய நெருங்கிய நண்பர்களான தீபாவையும் தீபனையும் என்னுடைய ஆட்கள் பாதாளத்தில் தள்ளி விட்டார்கள்! அந்த நேரத்தில் நீயும் அந்த இடத்தில் இருந்ததாக எனது ஆட்கள் வந்து என்னிடம் சொன்னார்கள். எனது சட்டவிரோத வியாபாரத்தை பொலிஸாரிடம் இருந்து மறைப்பதற்காகத்தான் நான் இதை எல்லாம் செய்தேன். தீபனுடன் நீ இரண்டு, மூன்று தடவைகள் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்து விட்டு என்னிடம் வந்து எனது ஆட்கள் சொன்னார்கள்.

இதனால் உங்கள் இருவருக்கும் இடையில் ஏதாவது தொடர்பு இருக்குமோ என்று நான் சந்தேகப்பட்டேன். நான் ஒரு நாள் காரில் போகும் போது தீபன் தனியாக நடந்து செல்வதைப் பார்த்தேன். உடனே காரை நிறுத்திய நான், தீபனை நன்றாகத் திட்டினேன். எனது மகளுடன் இருக்கும் தொடர்பை விட்டு விடும்படி அவனை எச்சரித்தேன். அப்போது அதற்கு அவன் மறுப்பு தெரிவித்தான். உங்கள் மகளுடன் எனக்கு எந்த தொடர்பும் இல்லை என்றும், தனக்கு கெம்பசில் உள்ள வேறு ஒரு பெண்ணுடன் தான் தொடர்பு இருப்பதாக அவன் சொன்னான். ஆனாலும் நான் அதை நம்பவில்லை. அதேநேரம் காரின் என்னுடன் வந்த எனது ஆள் காரில் இருந்து இறங்கி தீபனை அடிக்கப் போனான்!"

"இதனால் தீபனுக்கு கோபம் வந்து விட்டது. அப்போதுதான் அவன் சொன்னான். உங்களுடைய திருட்டுத் தனமான தொழில்களைப் பற்றியெல்லாம் பொலிஸாரிடம் சொல்லப் போகிறேன் என்று கத்தினான். என்னுடைய திருட்டுத் தனமான தொழில்கள் எல்லாம் அவனுக்குத் தெரிந்திருக்கிறது என்று அப்போதுதான் எனக்குப் புரிந்தது!" "ம்... அதன்பிறகு தீபனை கொலை செய்வதற்கு முடிவு செய்தீர்களாக்கும்!"

"ஆமாம் சேர்... சந்தர்ப்பம் வரும் போது அதை செய்வதற்குத்தான் முடிவு செய்தேன்!"

"சிறிது நாள் சென்றதும் நீங்கள் எதிர்பார்த்த அந்த நாளும் வந்தது இல்லையா?"

"ஆமாம் சேர்... அந்த தீபன் காதலித்து எனது மகளின் கூட்டாளியைத் தான். ஆனாலும் அவர்கள் இருவருடைய பெற்றோர்கள் இந்தக் காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். அதனால் அவர்களை பயம் காட்டுவதற்காக நாங்கள் தற்கொலை செய்து கொள்ளப்போகிறோம் என்று கடிதம் எழுதிவைத்து விட்டு குறிப்பிட்ட அந்த பாதாளத்திற்கு சென்றிருக்கிறார்கள்."

"அது சரி... இந்த விஷயங்கள் எல்லாம் உங்களுக்கு எப்படி தெரியும்?"

"எனது மகள் தீபிகாவுடன் பேசிக் கொண்டிருக்கும் சில விஷயங்கள் எனது காதிலும் விழும் அவர்களுடைய அந்த தற்கொலை நாடகத்தைப் பற்றிய முழு விபரங்களையும் எனது மனைவிதான் என்னிடம் சொன்னாள்"

"அவங்களுக்கு எப்படித் தெரியும்?"

"மதுவின் பேரனுக்கு தீபிகா போன் பண்ணியிருக்கா. அன்று அவள் போன் வேலை செய்யவில்லை. இதனால், தீபிகா லேண்ட் போனில்மதுவுடன்பேசியிருக்கிறாள். மது மாடியில் லேண்ட்போனில் பேசியதை கீழே இருக்கும் மற்ற லைனின் மனைவி கேட்டுக் கொண்டிருக்கிறாள்.

அதை அப்படியே என்னிடம் வந்து சொல்லிவிட்டாள்.

"ஓ... அதனால் அந்த தினத்திலேயே அவர்கள் இருவரையும் கொலை செய்வதற்கு நீங்கள் திட்டம் போட்டீர்கள்... அப்படித்தானே...

"இருவரையும் அல்ல... தீபனை மட்டும்தான் நான் கொலை செய்ய முடியு செய்தேன். ஆனால் அவனை தள்ளி விட்ட பிறகு ஓடிவந்த தீபிகா எனது ஆட்களின் கரங்களில், தொங்கியே ஆட்டம் போட்டிருக்கிறாள். அதனால் அவளையும் பிடித்து பாதாளத்தில் தள்ளிவிட்டதாக அவர்கள் என்னிடம் சொன்னார்கள்!"

"தீபிகா எழுதிய கடிதம் அவளது பையில் இருந்தது என்பதை எப்படி தெரிந்து கொண்டீர்கள்?" "மது தீபிகாவுடன் போனில் பேசியதை கேட்டுத் தான் அதைத்தெரிந்து கொண்டேன்!"

"அப்போ தீபிகா எழுதிய கடிதத்தை அவள் அண்ணன் கஜனுக்கு அனுப்பியதும் நீங்கள் தானா?"

"ஆமாம் சேர் அதையும் நான் தான் செய்தேன்... அதுமட்டுமில்ல தீபனின் கை எழுத்தைப் பார்த்து அதே போல் அந்தக் கடிதத்தில் கை எழுத்தைப் போட்டதும் நான் தான். அதேபோல் தீபிகா எழுதுவதைப் போல் கஜனின் முகவரியை எழுதியதும் நான்தான் அந்தக் கடித்தை தபாலில் போட்டதும் நான் தான்!"

"நீங்கள் மனிதனே இல்லை, சரியான மிருகம். இதேபோல் தான் உங்கள் மருமகனையும் கொலை செய்தீர்கள்?"

"ஆமாம் சேர். இவர்களைக் கொன்ற இருவரும் தான் அவனையும் கொன்று கிணற்றில் போட்டார்கள் பிறகு கிணற்றை மூடி விட்டோம்!"

"நீங்கள் உங்கள் பிள்ளைகளை மட்டுமல்லாமல் உங்கள் மகளையும் கொலை செய்திருக்கிறீர்கள். தனது கணவர் இறந்த கவலையில் ஆறு மாதத்திற்குப் பிறகு உங்கள் மகளும் நஞ்சி குடித்து இறந்து விட்டாள்!"

"ஆமாம் சேர்... அதுவும் உண்மை தான்... ஐயோ... உண்மையிலேயே நான் அநியாயக் காரன்தான் இன்ஸ்பெக்டர் என்னை...... சுட்டுத்தள்ளுங்கள் சேர்!" முகத்தை மூடிக் கொண்டு அழுதான் மகேந்திரன்.

"அந்தத் தண்டனை உங்களுக்குப் போதும்... அந்த பாதாளத்தின் அருகில் அழைத்துச் சென்று ஒரு கயிற்றில் கட்டி அங்கிருந்து ஜீப்பில் கயிற்றைக் கட்டி இழுத்துச் செல்ல வேண்டும்.... ம்.. வசந்தன் இவனை இழுத்துச் செல்லுங்கள்!'

"ஆகட்டும்!" சேர் என்று சொன்ன சார்ஜன் வசந்தன்,

மகேந்திரனை இழுத்துச் சென்றார்.

இவை எல்லாவற்றையும் பார்த்த படியே அழுது கொண்டே நின்றாள் மதுமிதா..

எல்லாமே கனவில் நடப்பதைப் போல் இருந்தது. அவளுக்கு!

"என்ன மதுமிதா... உங்கள் அப்பா எப்படிப்பட்டவர் என்பது இப்போது புரிகிறதா உங்களுக்கு? இந்த விஷயத்தில் உங்கள் அம்மாவுக்கும் பங்குண்டு. அவங்களையும் நாங்கள் கைது செய்து விட்டோம். ம்... இப்போது அது சம்பந்தமாக உங்களுக்கு என்ன சொல்லத் தோன்றுகிறது.

"நான் என்ன சேர் சொல்ல இருக்கிறது? எனக்கிருந்தது அப்பா இல்லை.. ஒரு கொலைகாரன். எனக்கு இருந்தது அம்மா அல்ல... கொலை செய்வதற்கு கொள்ளை அடிப்பதற்கு துணைபோன ஒரு ராட்சசி. அதே மாதிரிதான் நானும் நான் ஒரு அபாக்கியவாதி சேர். என்னுடைய அம்மாவும் அப்பாவும் வாழ்நாள் பூராவும் சிறைத்தண்டனை அனுபவிப்பதை பார்க்கப்போகும் துரதிரஷ்டமான ஒரு பெண் நான். நானும் இனி கால் போனபோக்கில் போகப் போகிறேன்.!" அவள் விழிகளில் இருந்து நீர்த்துளிகள் வடிந்தோடின!



"இல்லை மதுமிதா அப்படியெல்லாம் உங்களை போக விடமாட்டேன் நான். நீங்கள் இப்போது செய்யும் தொழிலை செய்து கொண்டு போங்கள். நான் உங்களை உங்கள் சின்னம்மாவிடம் ஒப்படைக்கிறேன். அவங்க ரொம்பவும் நல்லவங்க. நான் எல்லாவற்றையும் தேடிப்பார்த்து விட்டேன். அதனால் பிரச்சினை இல்லை!"

"ஆமாம் சேர்... அவங்க ரொம்பவும் நல்லவங்க... என்மேல் ரொம்பவும் பாசம் வச்சிருக்காங்க... அவுங்களுக்கும் ஒரே மகள் தான். ஆனாலும் அவங்க ஏழைகள்!"

"ஆனாலும் குணத்தால் ரொம்பவும் பணக்காரங்க... அதோ வெளியே அவுங்க வந்திருக்காங்க... நீங்க அவங்களோட போங்க... என் உதவி தேவை என்றால் எப்போது வேண்டுமானாலும் வாங்க... உங்களுக்கு உதவி செய்ய நான் தயாராகவே இருப்பேன்!"

"உங்களுக்கு ரொம்ப நன்றி சேர். நீங்கள் இன்ஸ்பெக்டர் என்று தெரியாமல் உங்களோடு நெருக்கமாகப் பழகிவிட்டேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்!"

"ஐயையோ மன்னிக்கும் அளவுக்கு நீங்கள் எந்தத் தவறையும் செய்யவில்லை... ம்... போய் வாருங்கள்!"

"வருகிறேன் சேர்!"

விடைபெற்றாள் மதுமிதா.

நானும் விடைபெறுகிறேன்!

(முற்றும்)

"இனியவனே என்று பாடி வந்தேனில் அடுத்த வாரம் சந்திப்போம்!

விழிகளில் ஆரம்பித்து
புன்னகையில் சங்கமித்து
கண்ணீரில் அஸ்தமிக்கும்
ஒரு காதல் காவியம்!



இனியவனே என்று பாடி வந்தேன்!

காதலர்களுக்கு பனி மழை
காதலிப்பவர்களுக்கு தேன்துளி
விரைவில் உங்கள்
தினகரன் வாரமஞ்சரியில்!
ஜனரஞ்சக எழுத்தாளர்
மொழிவாணன்
எழுதுகிறார்!

இன்றே உங்கள் பிரதிகளை
பதிவு செய்து கொள்ளுங்கள்

## உறுதியாக கட்டமைக்கப்படும்... (10ஆம் பக்கத் தொடர்)

அவற்றையும் கருத்திற்கொண்டே இன்றைய அரசியல் ரீதியிலான தங்கள் செயற்பாடுகளை சிறுபான்மை அரசியல் கட்சிகளும், சிறுபான்மைச் சமூகங்களும் தீர்மானிக்க வேண்டும். வெறுமனே, தாங்கள் கடந்த காலங்களில் ராஜபக்ஷ முகாமினரால் அனுபவித்த துயரங்களை மனதில்வைத்துக்கொண்டு, அவர்களின் ஆதரவோடு ஜனாதிபதியாக வந்திருக்கும் ரணிலை எதிர்ப்பதினூடாக "பழிவாங்கும்" ஒரு சின்னத்தமான மனநிலைக்குச் சென்றுவிட முடியாது.

தற்போதைய அரசமைப்பிற்கு அமைவானதும், சட்டரீதியிலானதுமான நடவடிக்கைகளை அதிகாரத்தரப்பு நடைமுறைப்படுத்துகிறது. இன்று நடைபெறும் கைதுகள் அப்படியானவைதான். இப்படி கைது செய்யப்படுவதற்கு சட்டவிரோதமான நடவடிக்கைகளில் இறங்கியதே காரணம். இந்த மக்கள் அவர்கள் பாட்டில் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தி வந்த நிலையில், அவர்களை சட்டவிரோதமான வன்முறைகளில் இறங்கத் தூண்டியது எவை? யார்? என்ற விசயங்களும் கவனத்திற் கொள்ளப்பட்டு அவற்றையும் எதிர்க்க வேண்டும். அரசு என்ற வகையிலும், சட்டம் என்ற வகையிலும், அதிகாரத் தரப்பு தனக்கெதிரான நடவடிக்கைகளை இல்லாமல் ஆக்குவதற்கு அல்லது தணிப்பதற்கு தற்போதைய அரசமைப்பை பாவிக்கும் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், அப்படியான நிலைக்கு மக்களைத் தூண்டிய காரணத்தையும், தூண்டிய தரப்புக்களையும் கூட கவனத்திற்கொண்டு எதிர்ப்புக்களை வெளிப்படுத்த வேண்டும். அப்படியானால் மட்டுமே நாம் மக்களின் பக்கம் நின்று செயற்படுகிறோம் என்று பொருள். அரசுக்கு ஆதரவாகவோ அல்லது அரசுக்கு எதிரான முகாம்களுக்கோ ஆதரவாக செய்படுவது மக்களின் பக்கம் நின்று செயற்படுவதாக ஆகிவிடாது.

கடந்த காலத்தில், சிறுபான்மைக் கட்சிகள் மற்றும் பெரும்பான்மைக் கட்சிகள் அரசமைப்பு திருத்தங்களில் பங்கேற்றிருந்தனர்.

அவர்கள் கூட மதச்சார்பற்ற அரசமைப்பு குறித்து கவனம் செலுத்தியிருக்கவில்லை. அரசமைப்பில் மாற்றம் கொண்டுவருவதென்பது, பிரதானமாக மதச்சார்பற்ற ஒரு அரசமைப்பு அவசியமானது. அதே நேரம், நாட்டின் அரைவாசிக்கும் மேற்பட்ட பெண்களின் நலன்கள், (அதிகாரம், தொழில், பாதுகாப்பு, அவர்களுக்கான உரிமை) தொடர்பிலும், தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் போன்றவர்களின் அரசியல் அபிலாஷைகளையும் கவனத்திற் கொண்டதுமான ஒரு அரசமைப்பு உருவாக்கப்படாதவரை இந்த நாடு சிறந்ததொரு பன்மைத்தன்மைகொண்ட கலாசாரங்களின் ஒன்றியமாக இருக்கப் போவதில்லை.

இன்று மக்கள் எதிர்நோக்கும் அவசியமானதும், அவசரமானதுமான பொருளாதார நெருக்கடியை சீராக்குவது தொடர்பில் அக்கறை கொள்வோம். ஏனெனில், நாட்டில் 70 வீதமான மக்கள் பொருளாதார நெருக்கடியால் அவதிப்படுகின்றனர். அதை விட்டு விட்டு அதிகாரத்திற்கான போட்டியை மையப்படுத்தி எதிரணியினர் பரப்பும் கருத்துக்களை பின்தொடர மக்களைத் தூண்டத் தேவையில்லை. அப்படித் தூண்டினாலும், தன்னெழுச்சியாக மக்களிடம் எழும்பாத எந்தக் கிளர்ச்சியும் குறித்த விளைவின் எல்லைக்குச் சென்றடையாது. அதே நேரம் வன்முறை அரசியலும், அதன் விளைவுகளையும் பலமுறை இலங்கை சந்தித்திருக்கிறது. அதுபோன்ற ஒன்று மீண்டும் நமது நாட்டுக்கு அவசியமானது அல்ல. வன்முறையை தூண்டும் வகையில் மக்கள் மனங்களை தொந்தரவு செய்யும் எந்தக் கருத்துக்களையும் ஆதரிக்க முடியாது. அதை எதிர்ப்பதைத் தவிர வேறு தெரிவுகள் இல்லை. மெல்ல மெல்ல கருக்கொள்ளும் மென்மையான வன்முறைகளும், அவற்றை ஆதரிப்பதினூடாக விரிவடைய வாய்ப்புள்ளது. எனவே, அரசமைப்பினதும், சட்டத்தினதும் எல்லைக் குட்பட்ட வகையில் அவற்றை தடுத்தே ஆக வேண்டும். ஆனால், அவற்றைத் தடுப்பதற்கு இருக்கின்ற அரசமைப்பு என்பது சர்வாதிகாரத் தன்மைக்கு நிகரானது. அதை மக்கள் பங்கேற்போடு எதிர்வரும் ஜனநாயகத் தேர்களின் போது மாற்றியமைக்க முயற்சிப்பதுதான் சரியான வழிமுறை. ஆனால், அந்தத் தேர்தல்கள் வரும் இரண்டரை ஆண்டுக்குள் மக்களின் பொருளாதார நெருக்கடி தீர்க்கப்பட்டுவிட்டால், கிளர்ச்சிக்கான மனநிலை மக்கள் மனங்களில் இருந்து தூர்ந்துபோய்விடும் என்ற அச்சத்தில்தான் எதிரணியினர் மக்களை கிளர்ச்சி மனநிலையோடு தேர்தல் வரை வைத்திருக்க வேண்டும் என்பதற்காக இந்தவகையான தவறான கருத்துக்களை பரப்பிக்கொண்டிருக்கின்றனர். இரண்டரை வருடத்திற் பின்னர் தேர்தல் வரும்போது, மக்கள் இதே எதிர்ப்பு மற்றும் கிளர்ச்சி மனை நிலையோடு இருந்தால் எதிரணியினர் மிக இலகுவாக ஆட்சியைக் கைப்பற்ற முடியும். அதன் பின்னர், இன்று ரணிலுக்கு எதிராக முன்வைக்கும் கோஷங்களை சரிசெய்து அவர்கள் ஆட்சியை செய்ய முடியும். அதுவரை, வன்முறைக்கு ஆதரவான நிலைப்பாட்டை ரணில் எதிர்ப்பு என்ற கோஷத்தில் தூண்ட வேண்டியதில்லை.

என்னைக் கேட்டால் புரட்சி வேண்டாம் என்றுதான் சொல்வேன். புரட்சியை நான் அதிகமும் எதிர்ப்பேன். ஒவ்வொரு கல்லாக அடுக்கி உறுதியாக கட்டமைக்கப்படும் புரட்சி மிக கேவலமான அதிகாரமும் வன்முறையும் நிறைந்த ஒரு இடம். அங்கு கொலைகள் என்பதற்கு புனிதமான இடமிருக்கிறது. அழிவுகளை கொண்டாட்டமாக வைத்திருக்கிறார்கள். அங்கு எதுவுமே சரியாக இல்லை. இது நவீனத்துவத்தின் புரட்சி பற்றிய தன்மை கொண்டது. ஆனால், தற்காலிகமான, தன்னெழுச்சியான சிறியளவிலான புரட்சியை மட்டுமே யாரால் எப்போது தொடங்கியது என தெரியாமல் தோன்றி, அதிகாரத்தை கலங்கடித்து, எப்போது கைவிடப்படும் எனத் தெரியாமல் மறைந்துபோகும்.

## அழியும் ஆபத்தை... (11ஆம் பக்கத் தொடர்)

மேலும் அவர், A9 வீதியானது வடக்கிலுள்ள காட்டினை ஊடறுத்து செல்வதால் அதனை கிழக்கு மற்றும் மேற்கு என இரு துண்டுகளாக பிரிகின்றது மற்றும் இவ் வீதியில் சாதாரண நாட்களில் அதிகளவு வாகனங்கள் பிரயாணம் செய்வதால் சிறுத்தைகள் இவ் வீதியினை கடப்பது அரிது. இதனால் அவற்றின் மரபணு சார்ந்த நீண்டகால விளைவுகளையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதனை சுட்டிக்காட்டினார்.

பேராசிரியர் இனோகா குடாவிதானகே (சபரகமுவ பல்கலைக்கழகம்) அவர்கள் மலையக சிறுத்தை பரம்பலை பற்றி கூறிய போது, ஹோட்டன் சமவெளி (horton plains) மற்றும் பீக் வில்டர்ன்ஸ் (Peak wilderness) போன்ற காடுகள் சிறுத்தைகளுக்கு சிறந்த பரந்த வாழ்விடத்தை வழங்கினாலும் காடழிப்பு மற்றும் விவசாய நிலங்களின் அதிகரிப்பு போன்ற நடவடிக்கைகளால் துண்டாக்கப்பட்ட குறைந்த பரப்பளவை கொண்ட ஏனைய சிறிய வன பகுதிகளிலும் சிறுத்தைகள் வாழ்கின்றன. இவ்வாறான மக்களின் வாழ்விடங்களுக்கு அருகே காணப்படும் சிறிய வன பகுதிகளில் வாழும் சிறுத்தைகளிற்கு இயற்கையான இரைகளின் தட்டுப்பாடு ஏற்படும்போது அவை மனிதக் குடியேற்றங்களை நாடிச் சென்று கால்நடைகளையும் நாய்களையும் வேட்டையாடி உண்கின்றன. எனவே வீட்டில் வளர்க்கும் நாய்கள் மற்றும் கால்நடைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதன் மூலம் சிறுத்தைகள் வாழ்விடங்களை நோக்கி வருவதை தவிர்த்துக் கொள்ளலாம். மிக முக்கியமாக உணவு கழிவுகளை முறையாக அகற்றுவதன் மூலம் வேறு நாய்களோ அல்லது பன்றிகளோ அவ் உணவுக்கழிவுகளை நாடி வருவதை தவிர்ப்பதோடு அவற்றை நாடி வரும் சிறுத்தைகளையும் தவிர்த்துக் கொள்ளலாம். இவ்வாறு உரிய நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் சிறுத்தைகள் மனித குடியிருப்புகளை நாடி வருவதை தவிர்த்துக் கொள்ளலாம்.

சிறுத்தைகள் இவ்வாறான இரையை தேடி வருவதை தவிர மனிதர்களை எப்போதும் தவிர்க்க முயற்சிப்பதே அவற்றினுடைய இயல்பாகும். எனவே சிறுத்தைகள் பற்றி அறிந்து கொள்வதன் மூலமும் அவற்றில் இருந்து எங்களை எப்படி பாதுகாப்பது என்பதை தெரிந்து கொள்வதன் மூலமும் நாங்கள் இயற்கையோடு இணைந்து வாழ முயற்சி செய்து அழிந்து வரும் இயற்கை முக்கியவத்துவம் வாய்ந்த இலங்கை சிறுத்தைகளை பாதுகாக்க காருண்யம் வாய்ந்த இலங்கை பிரஜைகளாகிய நாம் கை கோர்ப்போம்.

## ஒரு வருட... (05ஆம் பக்கம் தொடர்)

தொழில் முயற்சியாண்மை, ஊடகவியல் போன்ற துறைகளிலான கல்வி நெறிகளை ஆரம்பிப்பதற்கும் ஆங்கில டிப்ளோமா கற்கை நெறியை உயர் டிப்ளோமா கல்வி நெறியாகத் தரமுயர்த்தித் தொடர்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

வன்னிப் பிரதேசத்தினதும்,வடமாகாணத்தினதும் உயர் கல்வித் தரத்தை சர்வதேச தரத்திற்கு உயர்த்தி இப்பிரதேசத்தின் உயர் அடையாளமாக வவுனியா பல்கலைக்கழகத்தை உருவாக்குவதே தமது நேக்கம் என வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் தம்பு மங்களேஸ்வரன் இந்த ஒரு வருட நிறைவு காணும் தருணத்தில் தெரிவித்தார்.

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI
BUDGET adz
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845

Off Grid Solar System with power backup
Imported and High Quality
5kw invertor + 400Ah 48 volt battery with Solar panels 4 x 455w.
Single phase system Rs 1.7Mil
Three phase system Rs 2.2 Mil
Contact City Renewable Energy
072 451 3541

SUBODHA AYURVEDA (PVT) HOSPITAL
CHANNELLING SERVICE
OPD & Hospitalized Treatment Service
Graduated Ayurveda Doctors Service
WELL EXPERIENCED STAFF | TRUSTED SERVICE
General Medical Treatments
Consultation by Dr. Rangana Pradeep
B.A.M.S (Hons) Colombo, M.Sc. Clinical Biochemistry (Red) Peradeniya
Lecturer (Probationary), IIM University of Colombo
Dr. Jayadasa Treatments for Leucoderma & Psoriasis
0716 790 672, 0726 506 485
No. 7/13, Thelawala Rd, Mayura Mw, Rathmalana.

COMMERCIAL LAND FOR SALE
FACING THIMBIRIGASYAYA MAIN ROAD
COLOMBO-05
* 51 PERCHES
* 70 FT ROAD FRONTAGE
* HIGHLY COMMERCIAL / RESIDENTIAL AREA
PRICE : 15 MN PER PERCH (NEGOTIABLE)
CALL: 0777 258 280

Full Automatic block machine
full set available
pan mixture, converyer blet, Block Machine, Tracker machine
Rs.3,800,000/=
Phone: 0761448531







SWIMMING POOLS
We Construct all types of Swimming Pools, Refurbishing of Old Pools, Repairing Pools, Jacuzzies, Floating Pools with Highly Talented Professionals and Our Own Designers and Architects
SUPPLIERS AND DEALERS OF GOOD QUALITY POOL CHEMICALS, CHLORINE 70 & 90, SODASH, ALUMINIUM ETC...
Suppliers of Filters, Motors, All Pool Chemicals, Filter Services, Pool Tiles, Deck Tiles, Jacuzzy Jet Accessories and all other Pool Equipment etc...
EURONIX CONSTRUCTION & WATER MANAGEMENT (PVT) LTD
SUPPLYING HIGH QUALITY EUROPE MADE FILTERS, MOTORS ETC...
Hotline : 0774 778 357 www.euronwater.com
We are Specialising on Constructing Large Pools For Commercial Purposes

Automatic block machine
Little used but brand new condition, full set available, pan mixture machine, conveyor belt machine, Block Machine, tracker machine, 1950000
077 37 80 470

THE BEST Industrial Power Generators
YORPOWER
20, 30, 45 kVA
65 - 450 kVA
Petrol Genset 6.2 kVA
Never be in the dark again...!
NOW AVAILABLE Exclusively Made in UK
2 Year Warranty
24 Hrs Professional Service
Ex-stock Original Spares
JESMAJO VALUE CREATORS
CALL NOW - 0777 355 691 / 077 913 2054
JESMAJO VALUE CREATORS (PVT) LTD. 186/6, Katuwana Road, Homagama.
T : 011 2 855 390 | E : engineering@jesmajov.com | www.jesmajov.com

# படித்ததும் பகர்வதும் 105



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### புதிய ஜனாதிபதி எதிர்நோக்கும் சவால்கள்!



இலங்கையின் புதிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மீதுள்ள பொறுப்புகள் மிகப் பாரியன என்றால் மிகையல்ல. இலங்கையை உலக நாடுகளின் பார்வையில், இப்போதிருக்கும் நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்கு கொண்டு வருவதற்கு பல்வேறு சவால்களை அவர் சமாளிக்க வேண்டியுள்ளது.

என்றுமில்லாதவாறு மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்புவதே முதலாவதும் முக்கியமானதுமான சவாலாகும். எரிபொருள் பிரச்சினை முதல் விவசாயிகளின் உரப் பிரச்சினை வரை எண்ணற்ற துறைகளில் இப்பொருளாதார பிரச்சினை வித்தியாசமான முறைகளில், வேறுபட்ட வடிவங்களில் தாக்கம் செலுத்தி வருகிறது.

எரிபொருட்களுக்கான நீண்ட வரிசைகள், போக்குவரத்து சீர்குலைவு, மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடு, மின்சார துண்டிப்பு, பாடசாலைகளை மீள தொடர்ச்சியாக இயங்க செய்வதிலுள்ள சிக்கல்கள், உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு உட்பட பல்வேறு வகைகளில் நாளுக்கு நாள் பிரச்சினைகள் பல வடிவங்களில் அதிகரித்த வண்ணமே உள்ளன. இப்பொருளாதார பிரச்சினையை தீர்ப்பதற்கான அவசரகால, மத்திமகால, நீண்டகால திட்டங்களை உடனடியாக அறிமுகப்படுத்தி அமுல் நடத்த வேண்டிய பொறுப்பு ஜனாதிபதியின் மற்றுமொரு முக்கிய சவாலாகும்.

பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான அடிப்படைத் தேவையாக, அரசியல் ஸ்திரத்தன்மையை உடனடியாக ஏற்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. நாடாளுமன்றத்தில் தனது கட்சிக்கென ஒரே ஒரு ஆசனத்தை மட்டுமே வைத்திருந்தாலும், தன் மீதுள்ள பெரும்பான்மை உறுப்பினர்களின் நம்பிக்கையை உறுதியாக தக்க வைத்து, முரண்பாடுகளுக்கிடையே சமன்பாடு கண்டு, நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டியுள்ளது. இதன் மூலமே வெளிநாடுகளின் நம்பிக்கையை வென்று அவற்றின் உதவிகளை பெறக்கூடியதாக இருக்கும்.

நாட்டு மக்கள் அன்றாடம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளைத் தீர்த்து, அவர்களது அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்ற, ஆக்கபூர்வமான செயற்பாடுகளை, மிக அவசரமாக மேற்கொள்வதன் மூலம் அவர்களது நம்பிக்கையை வென்றெடுக்க பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசர, அவசிய தேவையாகவுள்ளது. இவற்றோடு நாட்டில் சட்டம் ஒழுங்கை சீராக்கி, சகல இன மக்களும் சக வாழ்வு வாழக்கூடிய விதத்தில் சட்ட ஆட்சியை சரியாக நிலைநாட்ட வேண்டும். இவற்றை நிறைவேற்றுவதன் மூலமே நாட்டில் அமைதியைப் பேணி, உலக நாடுகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள வழி பிறக்கும்.

நாட்டின் புதிய ஜனாதிபதி இச்சவால்களை வெற்றிகொள்ள, பொருத்தமானவர்களைக் கொண்டு, சரியான திட்டங்களை வகுத்து, உடனடியாக அவற்றை செயற்படுத்தி , நல்லாட்சியை நிலைநாட்ட வேண்டும் என்பதே மக்களின் இன்றைய எதிர்ப்பார்ப்பாகும்.

## நெஞ்சுக்கு நீதி

போதைப் பொருட்கள் தருவது போலி இன்பமே
போகப் போக வாழ்வை அழிக்கும் உண்மையே
மேதைகள் மொழிவழி உடன் ஏற்பாய் அன்பனே
வேதனைகள் நீங்கி வேதலம் மீள்வது நின்னமே

## பாராட்டுறோம்! வாழ்த்துகிறோம்

### பிரதமர் தினேஷ் குணவர்தன



இலங்கையின் 26வது பிரதமாராக தினேஷ் குணவர்தன பதவியேற்றுள்ளார். தனியாள் வரிசையில் இவர் நாட்டின் 16வது பிரதமராவார்.

1949.03.02ம் திகதியன்று பிறந்த இவர் அவரது தந்தை முன்னாள் அமைச்சர் பிலிப் குணவர்த்தன போன்றே அரசியலில் ஆர்வம் கொண்டு, 'மஹஜன எக்சத் பெரமுன' கட்சியினூடாக அரசியலில் தீவிர ஈடுபாடு கொண்டஇடதுசாரி அரசியல்வாதியாவார்.

1983 முதல் இக்கட்சியின் தலைவராக இருக்கிறார். இலங்கை அரசியலில் பிரபலமாகவிருந்த இந்திக்க குணவர்த்தன, பிரசன்ன குணவர்த்தன, கீதாஞ்சன குணவர்த்தன மற்றும் லக்மாலி குணவர்த்தன ஆகியோரின் சகோதரராவார்.

முதல் முறையாக, 1977ல் நாடாளுமன்ற தேர்தலில் அவிசாவளை தொகுதியில் போட்டியிட்டார். ஆனால் அதில் இவர் தோல்வியடைந்தாலும், 1983ல் நடைபெற்ற மகரகம தொகுதிக்கான இடைத் தேர்தலில் வெற்றி பெற்று முதல் முறையாக நாடாளுமன்ற உறுப்பினரானார். அதன் பின் 1994ம் ஆண்டு தேர்தலில் தோல்வியடைந்தாலும் 2000 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார்.

தனது அரசியல் வாழ்வில், போக்குவரத்து, கல்வி, நகர அபிவிருத்தி, நீர் வளங்கள் உட்பட பல அமைச்சுப் பதவிகளை வகித்துள்ள இவர் பலம் பொருந்திய, பேச்சாற்றல் மிக்க நாடாளுமன்ற அங்கத்தவராக திகழ்கிறார்.

கொழும்பு ரோயல் கல்லூரியின் பழைய மாணவரான ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக இருக்கின்ற அதே நேரத்தில், கொழும்பு ரோயல் கல்லூரியின் அவரது சமகால மற்றுமொரு பழைய மாணவரான தினேஷ் குணவர்தன பிரதமராக பதவி ஏற்றிருப்பது விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

நீண்டகால அரசியல் அனுபவமிக்க தினேஷ் குணவர்தன, இலங்கையின் புதிய பிரதமராக பதவியேற்றிருப்பதை பாராட்டும் அதேவேளை மக்களின் இன்றைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி, நாடு நலன் பெற நற்சேவையாற்ற வாழ்த்துகிறோம்!

## பிரிந்தார் பெருமை

### 'பிறைகாந்தன்' தௌலத் மீரான்



1960களின் நடுப்பகுதியில் "பிறைகாந்தன்" என்னும் புனைப் பெயரில் தரமான சிறுகதைகள், கவிதைகள் எழுதி பிரபலமான எழுத்தாளர், எம். எஸ். தௌலத் மீரான், கடந்த மே மாதம் 27ம் திகதி (27/05/2022) தனது 75வது அகவையில் காலமானார்.

கொழும்பு வாழைத்தோட்டம் செய்யது சிராஸ்தீன், மைமூன் பீபீ தம்பதியரின் 4வது மகனான இவர், கொழும்பு மிகுந்து மாவத்தை அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் (இப்போதைய அல்ஹிக்மா தேசியக் கல்லூரி) பழைய மாணவராவார். பாடசாலையில் பயிலும் காலத்திலேயே "திங்கள் மலர்" எனும் கையெழுத்துப் பத்திரிக்கையை நடாத்தி, எழுத்துத் துறையில் தன்னை வளர்த்துக் கொண்டதோடு, பிற மாணவர்களை எழுதுவதிலும், வாசிப்பதிலும் ஊக்குவித்துள்ளார். இளமைப் பருவத்தில் பிரபல எழுத்தாளர் ஜெயகாந்தன் மீது கொண்ட அபிமானம் காரணமாக "பிறைகாந்தன்" எனும் புனைப்பெயரில் எழுதினார்.

இலங்கையின் தேசிய பத்திரிகைகளில் மரபுக் கவிதைகள், சிறுகதைகள், சன்மார்க்க கட்டுரைகளை இவர் அதிகமாக எழுதியுள்ளார். இவரது மரபுக் கவிதைகள், அன்றைய சிரேஷ்ட கவிஞர்களால் பெரிதும் சிலாகித்துப் பேசப்பட்டுள்ளது. இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின், அந்த கால பிரபலமான நிகழ்ச்சியான "இஸ்லாமிய சமய பாடசாலை" நிகழ்ச்சியிலும், தேசிய சேவையின் பிரபல நிகழ்ச்சியான 'சிறுவர் மலர்' நிகழ்ச்சியிலும் மாணவர்களுக்குப் பொருத்தமான, நாடகங்கள், வரலாற்று கதைகள், பேச்சுக்கள் போன்றவற்றை எழுதி பங்களிப்புச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளை வெளியிட்ட சுயாதீன பத்திரிகா சமாஜத்திலும் பணியாற்றியுள்ள தௌலத் மீரான், பிற்காலத்தில் தன்னை வியாபாரத்துறையில் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டதால் இலக்கிய ஈடுபாடு படிப்படியாகக் குறைந்து, பின்னர் நின்றே போயுள்ளது. ஆயினும் எழுத்தாளர்கள், கலைஞர்கள் உட்பட பலருக்கு பல வகைகளிலும். உதவிகளை வழங்கியுள்ளார்..

இவர், "பாரம்பரியம்" புகழ் கலாபூஷணம் எம். எஸ். எம். ஜின்னாவின் தமையனாரும், சத்திய எழுத்தாளர் கலாபூஷணம்எஸ். ஐ. நாகூர் கனியின் சம்பந்தியுமாவார் என்பது பலரும் அறியாத விடயமாகும்.

'பிறைகாந்தன்' தௌலத் மீரான் தரமான பல சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் எழுதி இருந்தாலும் அவை நூலுருப் பெறவில்லை என்பதும், இன்று அவற்றை வாசிக்கும் வாய்ப்பு இல்லாமலிருப்பதும் கவலைக்குரிய விடயமாகும்.

## நலமே வாழ்வோம்

### உலகை எச்சரிக்கும் குரங்கம்மை

ஆப்பிரிக்க பிராந்தியத்தில் முதல்முறையாகக் கண்டறியப்பட்ட குரங்கு அம்மை, தற்போது பல்வேறு நாடுகளில் பரவியுள்ளது. இந்நோயால் உலகம் முழுவதும் இதுவரை 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டவா்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 5 பேர் பலியாகியுள்ளனர். இதேவேளை 8 வயதுக்குட்பட்ட குழந்தைகள் குரங்கம்மை நோயால் பாதிக்கப்படும் அபாயம் அதிகம் என அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேபோல் புதிதாகப் பிறந்த குழந்தை உட்பட இரண்டு குழந்தைகள் குரங்கம்மை காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த மையம் உறுதிப்படுத்தியதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்நிலையில் குரங்கு அம்மை நோயை சர்வதேச நெருக்கடியாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது. இதுதொடர்பான ஆலோசனைக் கூட்டத்திற்குப் பிறகு பேசிய அதன் தலைவர் டெட்ரோஸ் இதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அப்போது அவர், "இதற்கு முன் இல்லாத அளவு பல்வேறு நாடுகளில் குரங்கு அம்மை நோய் பரவி வருகிறது.

ஆய்வாளர்களின் கருத்துகளின்படி குரங்கு அம்மை நோயை சர்வதேச அவசர நிலையாக அறிவிக்கிறோம்" எனத் தெரிவித்துள்ளார்.

தொற்று நோய் ஒன்றுக்கு உலக சுகாதார நிறுவனம் விடுக்கும் மிக உயர்ந்த எச்சரிக்கை இதுவாகும்.இலங்கையிலும்குரங்கம்மை நோய் பற்றிய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## சிந்தனை செய் மனமே

### அவள் என் அம்மா!



உலகின் பிரபல உதைப்பந்தாட்ட வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோவிடம் ஒரு நிருபர் கேட்டார், "உங்கள் அம்மா ஏன் இன்னும் உங்களுடன் வாழ்கிறார்? ஏன் அவளுக்காக தனியாக ஒரு வீடு கட்டக்கூடாது?"

கிறிஸ்டியானோ ரொனால்டோ இவ்வாறு பதிலளித்தார், "என் அம்மா எனக்காக தன் வாழ்வை தியாகம் செய்து என்னை வளர்த்தார். நான் இரவில் சாப்பிடுவதற்காக அவள் பசியுடன் தூங்கினாள். எங்களிடம் பணம் இல்லை. எனக்கு கால்பந்து மற்றும் உபகரணங்களை வாங்க, அவள் வாரத்தில் ஏழுநாட்கள் மற்றும் மாலை நேரங்களில் கிளீனராக வேலை செய்தாள். அவளது தியாகத்துக்கு ஈடு இணையுண்டா?"

"நான் ஒரு சிறந்த வீரராக முடியும் என்று நம்பிய அவளுக்கு, என் முழுமையான வெற்றியும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

நான் வாழும் வரை, அவள் எப்போதும் என் பக்கத்தில்தான் இருப்பாள், அவளுக்கு என்னால் முடிந்த அனைத்தையும் நான் செய்வேன். அவளுக்கான அடைக்கலமும் மற்றும் எனது மிகப் பெரிய பரிசும் நான்தான்" என்றார்.

பணம் மக்களை செல்வந்தர்களாக மாற்றாது. உண்மையில் சிலர் மிகவும் ஏழ்மையானவர்கள். அவர்களிடம் இருப்பது பணம் மட்டுமே. வாழ்வில் பரிசுகள் மற்றும் ஆசீர்வாதங்களுக்கு நன்றி செலுத்துவதில் தானே உண்மையான செல்வம் காணப்படுகிறது. நாம் ஒவ்வொருவரும் இதுபற்றி நன்கு சிந்தித்து செயல்பட வேண்டும்.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207

# திருவள்ளுவத்தில் தலைமைத்துவம் (Leadership)



## திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர்

கே. பத்மானந்தன்



17

Peter Drucker ,Robert Tannen Baum,Livingstone,Warren Bennis, C.I. Bernard, Bernard Keys and Thomas, Keith Davis, George R. Terry, Koontz and O'Donnell, Alford ,John Maxwell போன்ற பல்வேறு முகாமைத்துவ அறிஞர்கள் கொடுத்துள்ள வரைவிலக்கணத்தின்படி பொதுநோக்கு ஒன்றினை அடைவதற்காக மக்கள் குழுக்கள் மீது செல்வாக்குச் செலுத்தி அவர்களை விருப்போடு வினைத்திறனோடு செயற்பட வழிப்படுத்தி ஒருங்கிணைத்து ஊக்குவிக்கின்ற நடவடிக்கையே தலைமைத்துவம் எனக்கொள்ளப்படுகிறது. சிறந்த தலைமைத்துவத்தினாலேயே ஒரு நிறுவனத்தில் வேலை செய்யும் பணியாளர்களை வினைத்திறனுடனும் பயனுறுதிமிக்க வகையிலும் தொழில் செய்ய வழிகாட்ட முடியும். பணியாளர்களின் நடத்தை, மனோபாவம், செயற்றிறன் என்பன தலைமைத்துவத்திலேயே தங்கியுள்ளன. எனவே ஒரு நிறுவனத்தில் பயனுறுதி மிக்க முகாமைத்துவம் இருக்க வேண்டுமாயின் அங்கே சிறந்த தலைமைத்துவம் இருக்க வேண்டும் .எனவே முகாமையாளர்கள் சிறந்த தலைவர்களாக இருக்க வேண்டும்.

எனவே தலைமைத்துவம் என்பது முகாமையாளர் ஒருவர் தன்னுடைய தனித்துவம் மிக்க ஆற்றலால் அல்லது வல்லமையால் ஊழியர்களைச் சரியான முறையில் வழிப்படுத்தி நிறுவன இலக்குகளை வெற்றிகரமாக அடையச் செய்வதாகும். எத்தகைய சரியான திட்டங்கள் இருந்தாலும் எத்தகைய வளங்கள் இருந்தாலும் சரியான தலைமைத்துவம் இல்லாவிட்டால் ஒரு நிறுவனத்தை வெற்றிகரமாக இயக்க முடியாது அல்லது ஒரு தொழிலை இலாபகரமாக செய்ய முடியாது .ஒரு முகாமையாளரிடம் தலைமைப்பண்பு இல்லாவிட்டால் அவரால் சரியான முறையில் பணியாற்ற முடியாதது மட்டுமல்ல அவரது நிறுவனத்தை சரியான முறையில் இயக்க முடியாது .

மேலே குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ அறிஞர்களின் கருத்துக்களின்படி ஒரு முகாமையாளரிற்கு இருக்கவேண்டிய தலைமைத்துவ பண்புகளாக, புத்திக் கூர்மை, ஆழ்ந்த கல்வி மற்றும் துறைசார் அனுபவம், புதியன சிந்தித்தல், சிறந்த தொடர்பாடல் திறன், ஆலோசனையும் வழி காட்டலும் வழங்கக்கூடிய திறமை, மன முதிர்ச்சி, சிறந்த உடல் தகுதி, நடுநிலமை, இயல்பூக்கம், பொறு ப்பேற்கும் தன்மை, முடிவெடுக்கும் திறன், ஊழியர்களால் ஏற்றுக் கொள்ளப்படல் என்பன அமைகின்றன. இக்கருத்துக்களை கீழ் வரும் ஈரடியில் திருவள்ளுவர் சிறப்பாக வெளிப்படுத்துகின்றார் .

**அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்**
**எஞ்சாமை வேந்தர்க் கியல்பு.**
(குறள் 382)



அஞ்சாமை அல்லது துணிவு( Courage), ஈகை அல்லது இரக்க சிந்தை(Generosity), அறிவுடைமை அல்லது அறிவாற்றல் (Knowledge), ஊக்கமுடைமை அல்லது உயர்ந்த குறிக்கோளை எட்டும் முயற்சி (Zeal/Enthusiasm) ஆகிய இந்த நான்கு பண்புகளும் குறைவு படாமல் இருத்தலே ஒரு அரசனுக்குரிய அல்லது தலைவனுக்குரிய தகுதிகளாகும் என்கிறார் திருவள்ளுவர். எனவே திருவள்ளுவர் கூறும் அரசனுக்குரிய தகுதிகள் போன்று நிறுவனமொன்றின் முகாமையாளர் என்பவர் எடுத்த கருமத்தை முடிக்கின்ற துணிவு, அக்கருமத்தை முடிக்கத் தேவையான அனுபவ அறிவு,நிர்ணயித்த நிறுவன இலக்குகளை அடைவதற்கான இடையறா முயற்சிகளை மேற்கொள்ளும் பண்பு அதாவது ஊக்கம் என்பவற்றை கொண்டிருப்பதோடு தனது ஊழியர்களின் அல்லது தன்னைச் சார்ந்தவர்களின் நலனில் கவனம் பேணும் தன்மை கொண்டவராக இருக்க வேண்டும். அதேபோன்று முகாமையாளருக்கு இருக்க வேண்டிய இன்னும் மூன்று பண்புகளைப் பற்றி கீழ்வரும் ஈரடியில் திருவள்ளுவர் கூறுகிறார் .

**"தூங்காமை கல்வி துணிவுடைமை**
**அம்மூன்றும் நீங்கா நிலனாள் பவற்கு".**
(குறள்383)

காலம் தாழ்த்தாத தன்மை அதாவது தூங்காமை(Alertness, கல்வி (Education), துணிவுடைமை(Bravery) ஆகிய இந்த மூன்று பண்புகளையும் நிலத்தை ஆளும் அரசன் தன்னைவிட்டு நீங்காமல் பார்த்துக்கொள வேண்டும் என்கிறார் திருவள்ளுவர் . இத்தகைய பண்புகளை ஒரு நிறுவனத்தின் முகாமையாளர் கொண்டிருக்கவேண்டியது கட்டாயம் .இருக்க வேண்டியவை பண்புகளாகும்

தூங்காமை என்று இங்கே திருவள்ளுவர் குறிப்பிடுவதன்மூலம் முகாமையாளர் என்பவர் காலந்தாழ்வு செய்யாமல் தனது கடைமைகளை விரைந்து செய்யவேண்டும் அதாவது செயல் ஆற்றுவதில் சோராது விழிப்பாக இருக்கவேண்டும் என்கிறார். ஒரு செயலைக் காலத்தில் செய்யாமை, காலம் தாழ்த்துதல், தள்ளிப்போடும் மனப்பான்மை போன்றவை முகாமையாளரின் திறனைக் குறைப்பதோடு முறை கேடுகளுக்கும் வழி வகுக்கும் எனவே முகாமையாளர் விரைந்து செயல்படல் வேண்டும். கல்வி என்று சொல்வதன் மூலம் திருவள்ளுவர் ஒரு முகாமையாளர் தனது தொழிலை ஆற்றத் தேவையானவற்றைக் கற்றுத்தேர்வதுடன் அவற்றைக் காலம் செல்லச் செல்ல அவ்வப்போது புதுப்பித்துக் கொள்ளவும் வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்துகின்றார். துணிவுடைமை என்று கூறுவதன் மூலம் உண்மைகளை ஆராய்ந்து தெளிவான உறுதியான முடிவெடுக்கும் மனத்திட்பம் முகாமையாளர்களுக்கு இருக்க வேண்டும் என்பதை திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

ஒரு சிறந்த முகாமையாளர் என்பவர் எல்லோராலும் எந்நேரத்திலும் எவ்விடத்திலும் அணுகத்தக்கவராகவும் வேலை செய்யும் எல்லோராலும் விரும்பத்தக்கவராகவும் இருக்க வேண்டும். மேலும் முகாமையாளர் என்பவர் மற்றையவர்களுடைய கருத்துக்களை, பிரச்சினைகளைக் கேட்பவராகவும், கேட்கும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பவராகவும், இன்சொல் பேசுபவராகவும் இருக்க வேண்டும். அதேவேளை மற்றைய வர்களுக்கு நல்லவழி காட்டியாகவும் (Role model) இருக்க வேண்டும். இக் கருத்துக்களை கீழ் வரும் ஈரடியில் திருவள்ளுவர் சிறப்பாக வெளிப்படுத்துகின்றார்.

**"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன்**
**அல்லனேல் மீக்கூறும் மன்னன் நிலம்".**
(குறள் 386)

காண்பதற்கு எளியவனாய் இருப்பதோடு கடுஞ்சொல் கூறாத இனிய பண்பாடும் உடையவனாய் இருக்கும் மன்னனுடைய ஆட்சிக்கு உட்பட்ட நாட்டையே எல்லோரும் விரும்புவர் அத்தகைய மன்னனையே உலகமும் புகழும் என்கிறார் திருவள்ளுவர் . எனவே திருவள்ளுவர் கூறும் மன்னனைப் போல் ஒரு நிறுவனத் தலைவர் அல்லது முகாமையாளர் என்பவர் காட்சிக்கு எளியவராயும் எல்லோரையும் அரவணைத்து செல்வ துடன் இன்சொல் பேசுபவராகவும் இருக்க வேண்டும் அப்போதுதான் நிறுவனத்தை வெற்றிகரமாக நிர்வகிக்க முடியும்.

தலைவர் அல்லது முகாமையாளர் யாராலும் அணுகப்படமுடியாதவராயும், ஊழியர்களை அல்லது தன்னைச் சார்ந்தவர்களை மதிக்காதவராயும், ஊழியர்களுடைய அல்லது தன்னைச் சார்ந் தவர்களுடைய பிரச்சனைகளைக் கேட்டு ஆராய்ந்து சரியான முறையில் நீதியான முறையில் தீர்வுகாண முடியாதவராகவும் இருந்தால் அவர் தனது நிலையையும் மதிப்பையும் இழந்து விடுவதுடன் தனது பணியையும் இழந்துவிடுவார். யாரும் அவரை கணக்கில் எடுக்க மாட்டார்கள் என்ற கருத்துகளை கீழ்வரும் ஈரடியில் திருவள்ளுவர் சிறப்பாக வெளிப்படுத்துகின்றார்.

**"எண்பதத்தான் ஓரா முறைசெய்யா**
**மன்னவன் தண்பதத்தான் தானே கெடும்".**
(குறள்548)

ஆடம்பரமாக யாரும் அணுகமுடியாமல் இருக்கின்ற, ஆராய்ந்து நீதி முறை செய்யாமலும் அல்லது நீதி வழங்காமலும் இருக்கின்ற அரசன் தாழ்ந்த நிலையை அடைந்து பகைவரில்லாவிட்டாலும் கூட தானாகவே கெட்டழிந்து விடுவான் என்கிறார் திருவள்ளுவர் . எனவே திருவள்ளுவர் கூறும் அரசனைப் போல் அல்லாமல் ஒரு நிறுவனத்தின் தலைவர் அல்லது முகாமையாளர் என்பவர் எளியவராக, அகங்காரமற்றவராக, நேர்மையானவராக இருந்தால் மட்டுமே வெற்றிகரமானவராக இருக்க முடியும் என்கிறார் திருவள்ளுவர்.



# இளமை தோற்றத்திற்கு விட்டமின் ஈ



சரும பராமரிப்புக்காக தயாரிக்கப்படும் பொருட்களில் விட்டமின் ஈ கட்டாயம் சேர்க்கப்படும். சருமம் முதிர்ச்சி அடைவதை தள்ளிப்போடும் ஆற்றல் இதற்கு உண்டு. அன்டி ஒக்சிடெண்டுகள் விட்டமின் ஈ யில் அதிகமாக உள்ளது. விட்டமின் ஈ சத்து போதுமான அளவு இருந்தால் உடலில் ஏற்படும் பிரச்சினைகளை எளிதாக தடுக்கலாம்.

உணவின் மூலம் விட்டமின் ஈ சத்தை நேரடியாக பெற்று இயற்கையான வழியில் அழகை பாதுகாக்க முடியும். சூரியகாந்தி விதைகள், பாதாம், வேர்க்கடலை, அரிசி தவிடு மற்றும் கோதுமை தவிடுகளில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய் பசலைக்கீரை போன்றவற்றில் விட்டமின் ஈ அதிகமாக உள்ளது.

### நகங்கள் பராமரிப்பு

கைகளுக்கு தொடர்ந்து வேலை கொடுப்பவர்களின் நகங்கள் வலிமை குறைந்து அழகின்றி நிறம் மங்கி காணப்படும். நகங்களை சுற்றிலும் தோல் உரிதல், சருமம் கருமை அடைதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படும். இரவில் தூங்குவதற்கு முன்பு விட்டமின் ஈ சத்துள்ள எண்ணெய்யை நகங்களை சுற்றியும், விரல்களிலும் தடவி மென்மையாக வட்ட வடிவில் மசாஜ் செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதால் நகங்கள் இயற்கையான வெளிர் சிவப்பு நிறத்தோடும் வலிமையோடும் காணப்படும்.

### கருவளையம் மறைவதற்கு

கருவளையம் முகத்தின் பொலிவை குறைப்பதோடு வயது முதிர்ந்த தோற்றத்தையும் ஏற்படுத்துகிறது. சிலருக்கு கருவளையத்தோடு கண்களை சுற்றியுள்ள சருமத்தில் சுருக்கங்களும் ஏற்படும். இவர்கள் தினமும் இரவு தூங்குவதற்கு முன்பு விட்டமின் ஈ சத்துள்ள எண்ணெயை கண்களை சுற்றிலும் தடவி மென்மையாக மசாஜ் செய்து வந்தால் கருவளையமும் சுருக்கங்களும் நீங்கி கண்களில் பொலிவு ஏற்படும்.

### இரவு நேர சரும பராமரிப்பு

குறைந்த அளவிலான மேக்அப் போட்டிருந்தாலும் இரவு தூங்க செல்வதற்கு முன்பு அதை முழுவதுமாக நீக்கி விட்டு முகத்தை நன்றாக சுத்தம் செய்ய வேண்டும. மேக் அப் பொருட்களில் உள்ள வேதி மூலக்கூறுகள் சருமத்தை சேதமடைய செய்து பருக்கள் போன்ற பிரச்சினைகளை ஏற்படுத்தலாம். விட்டமின் ஈ சத்துள்ள எண்ணெயை சில துளிகள் எடுத்து முகம் மற்றும் கழுத்துபகுதியில் தடவலாம். இதனால் முகத்தில் எண்ணெய் வழியாது. விட்டமின் ஈ சத்துள்ள எண்ணெய் வறண்ட முகத்துக்கு ஈரப்பதம் அளிக்கும்.

### இளமையான சருமம்

தளர்வு அடைந்த சருமங்கள் வயதான தோற்றத்தை ஏற்படுத்தும். சருமத்தை சரியாக பராமரிக்காவிட்டால் நெற்றி பகுதியில் சுருக்கங்களும், கோடுகளும் விழத்தொடங்கும். இவை மேலும் அதிகரிக்காமல் இருப்பதற்கு விட்டமின் ஈ சத்துள்ள எண்ணெய் உதவுகிறது. இது சருமத்தை இறுக்கமாக்கி இரத்த ஓட்டத்தை அதிகரித்து இளமையான தோற்றத்தை ஏற்படுத்துகிறது.

## மங்கையர் முற்றம்

# மன அழுத்தத்திற்கு தியானம்



மன அழுத்தமாக அல்லது டென்ஷனாக இருப்பதாக உணர்ந்தால் ஓரிடத்தில் அமைதியாக உட்கார்ந்து கொண்டு தியானம் செய்வது நல்லது. இல்லையெனில் ஒன்று இரண்டு மூன்று என நூறு வரை எண்ணுங்கள். இதனால் மனச் சிந்தனை வேறு பக்கம் செலுத்தப்பட்டு மன அழுத்தம் குறையும்.

அடிக்கடி மன அழுத்தம் அடைபவர்கள் தினசரி தியானம் செய்தல் அவசியம். நாம் இருக்கும் இடத்திலோ நாம் பயணம் செய்யும் பொழுதோ தியானம் செய்யலாம்.

தியானம் செய்ய விருப்பமில்லாதவர்கள் அவர்கள் வணங்கும் கடவுளை நினைத்து வழிபட்டு உட்கார்ந்திருக்கலாம். முன் நெற்றியில் இரு புருவங்களுக்கும் இடையே ஒரு ஒளி இருப்பதாக கற்பனை செய்து கொண்டு அதன் மீது கவனம் செலுத்தியவாறு உட்கார்ந்து இருக்கலாம்.

அதிகாலையில் மூச்சுப்பயிற்சி செய்வது சிறந்தது. நேராக நிமிர்ந்து உட்கார்ந்து, கண்களை முடிக்கொள்ளவும். கைகளை அடி வயிற்றில்படும்படி வைத்துக்கொண்டு, ஆழமாக மூச்சை இழுத்து, மெதுவாக வெளியேவிடவும். இப்படிச் செய்யும்போது அடிவயிற்றின் அசைவுகளை உணர முடியும். இதனால், கவனம் முழுவதும் அதில் குவிக்கப்பட்டு, உடலும் மனமும் தளர்வடைந்து இயல்புநிலையை அடையும். மேலும், இதய துடிப்பு சீராக இருப்பதால், இரத்த அழுத்தம் குறையும்; மனஅழுத்தம் நீங்கும்.

டென்ஷன் குறைய ஆரோக்கியமான தூக்கம் அவசியம். நல்ல காற்றோட்டமுள்ள சூரியனைப் பார்த்த அறையில் தூங்குவதும் அவசியம். முறையான மற்றும் சரியான நேரத்தில் தூங்கிப் பழக வேண்டும். உடல் உழைப்பு முறையான தூக்கத்தை உண்டாக்கும்.

எந்த செயற்பாட்டிலும் வேகத்தைத் தவிர்த்து விவேகமாகச் செயல்பட்டால் டென்ஷனைத் தவிர்க்கலாம். சிந்தித்து பொறுமையாக திட்டம் தீட்டி நேரம் ஒதுக்கி செயற்பாடுகளைச் செய்தால் மனம் அமைதி பெறும் டென்ஷன் ஏற்படாது.

# ஹேண்ட்பேக்



பெண்கள் வெளியே செல்லும்போது தங்களுக்கு தேவையான பொருட்களையும் உடன் எடுத்து செல்வார்கள். அதற்கு ஹேண்ட்பேக் மிக அவசியமானது.

ஏற்கனவே எடுத்து செல்லும் பொருட்களின் எடை அதிகமாக இருக்கும்பட்சத்தில் ஹேண்ட்பேக்கை வாங்கும்போதே அதன் எடையைக் கவனிக்க வேண்டும். இல்லையெனில் பல உடல்நல பிரச்சினைகளை சந்திக்க நேரிடும்.

பெண்கள் 'ஷோல்டர் பேக்' வகைகளைத்தான் அதிகம் பயன்படுத்துவார்கள். வேலைக்குச் செல்லும் பெண்கள், தங்களுக்குத் தேவையான குடை, தண்ணீர் போத்தல், சாப்பாடு, முக்கியமான பேப்பர்கள், மேக்கப் பொருட்களை ஹேண்ட்பேக்கில் வைத்துக்கொள்கிறார்கள். குறைந்தபட்சம் நான்கு கிலோ பொருட்களுடன் ஒரு பக்கமாக மட்டுமே மாட்டிக்கொண்டு செல்வார்கள். இப்படித் தொடர்ந்து பயன்படுத்துவதால், பல்வேறு உடல் நலப் பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள்.

இதனால், எலும்புகளில் பாதிப்பு ஏற்படும். தோள்பட்டையில் உள்ள நரம்புகள் நசுங்கி, கையில் வலியை ஏற்படுத்தும். அந்தப் பகுதியின் தசைகளும் பாதிப்படையும். கழுத்தில் ஆரம்பித்து தோளில் முடியும் எலும்பை, 'அக்சிலரி போன்' என்றும் 'பியூட்டி போன்' என்றும் சொல்வார்கள். அந்த எலும்பையும் ஹேண்ட்பேக் அழுத்தி பிரச்சினையை உண்டாக்குகிறது.

பலரும் ஹேண்ட்பேக்கை வாங்குவதோடு சரி, அதனை பயன்படுத்திவிட்டு குப்பை தொட்டியில் தூக்கி வீசும் வரை அவற்றை துவைத்து சுத்தம் செய்வதே இல்லை. கழிவறை முதல் உணவகம் வரை தன்னுடனே எடுத்துச் செல்கிறார்கள். இப்படிப் போகும் இடமெல்லாம் கிருமிகளைப் எடுத்துக்கொண்டு வீட்டுக்குள், படுக்கை அறை வரை கொண்டு வரப்படுகிறது, 'ஹேண்ட் பேக்'. அதனால் ஹேண்ட் பேக் விஷயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

### ஹேண்ட்பேக் தேர்வு

அன்றாடம் பயன்படுத்தும் பேக் எனில், அது எடை குறைவானதாக இருக்க வேண்டும். அடிக்கடி துவைத்துச் சுத்தம் செய்ய எளிதாக இருக்கும் வகையிலும் அமைந்திருக்கவேண்டும். ஒரே பக்கமாகத் தூக்கிச்சென்று தோளில் ஏற்படும் வலியைத் தடுக்க... இரண்டுத் தோள்களிலும் மாட்டிக்கொள்ளும்படியான பின்பக்க பேக்கைப் பயன்படுத்தலாம். ஷோல்டர் பேக்கை பயன்படுத்தும்போது வலது கை, இடது கை என அடிக்கடி பையை மாற்றி அணியுங்கள். அனைத்துப் பொருட்களையும் ஹேண்ட்பேக்கில் அடைக்காமல், உணவு மற்றும் தண்ணீர் ஆகியவற்றுக்கு சாப்பாட்டுப் பையை பயன்படுத்துங்கள். ஹேண்ட்பேக்கில் பல அறைகள் இருந்தால், அதில் வைக்க வேண்டிய முக்கிய பொருட்களை பட்டியல் போடவும். வீட்டில் பயன்படுத்தும் பொருளை, அலுவலகம் கிளம்பும் முன்பு, வீட்டிலேயே எடுத்துவைத்து விடவும். இதனால் ஹேண்ட் பேக்கை தூக்கி செல்வதால் ஏற்படும் தேவையில்லாத வலியைத் தவிர்க்கலாம்.

அடிக்கடி ஹேண்ட்பேக்கை சுத்தம்செய்து தேவையற்ற காகிதங்கள், பயன்பாடில்லாத பொருட்களை அப்புறப்படுத்தவும். சவர்க்காரத் தூள் அல்லது கிளீனிங் லிக்விட் பயன்படுத்தி ஹேண்ட்பேக்கின் வெளிப்புறப் பகுதியைச் சுத்தம் செய்யவும். ஹேண்ட்பேக்கை லக்கேஜ் ஆக பயன்படுத்தாமல் மென்மையாக பயன்படுத்த வேண்டும்.



# புருவம் அடர்த்தியாக வளர வேண்டுமா?

முகத்திற்கு அழகு சேர்ப்பது விழிகள் மட்டும் அல்ல. அதில் புருவத்திற்கும் அதிக இடமுண்டு. ஆனால் இப்போது உள்ள பெண்களுக்கு அடர்த்தியான, கருமையான புருவம் என்பது இருப்பதில்லை. இப்படி பட்டவர்கள் புருவம் அடர்த்தியாக வளர கீழே உள்ள எளிய முறையை பின்பற்றி வந்தால் மிக விரைவில் புருவம் அடர்த்தியாக வளர்வதை காணலாம்.

பொதுவாக புருவம் அடர்த்தியாக வளர விளக்கெண்ணெய் ஒரு சிறந்த வழி என்று நம் அனைவருக்கும் தெரிந்ததுதான். இந்த விளக்கெண்ணெயுடன் ஒலிவ் ஒயிலை சேர்த்தால் இன்னும் நல்ல பலன் கிடைக்கும்.

அதாவது 8 சொட்டு விளக்கெண்ணெயுடன், 10 சொட்டு ஒலிவ் ஒயிலை கலந்து லேசாக சூடேற்றி கொள்ளுங்கள். இந்த எண்ணெயை ஒரு காற்று புகாத போத்தலில் ஊற்றி பத்திரமாக வைத்து கொள்ளுங்கள்.

இந்த எண்ணெயை தினமும் இரவு தூங்குவதற்கு முன் புருவத்தில் பூசி, சிறிது நேரம் மசாஜ் செய்யுங்கள். பின்பு அப்படியே வைத்திருந்து மறுநாள் காலையில் முகத்தை குளிர்ந்த நீரால் கழுவவேண்டும். இவ்வாறு தினமும் செய்து வர, ஒரு மாதத்திலேயே உங்கள் புருவம் அடர்த்தியாக வளர்வதை உணர்வீர்கள்.

# பல்லிகளின் தொல்லைக்கு தீர்வு

வீட்டில் பல்லி இருப்பது சாதாரணம் தான். ஆனால் யாருக்கும் பல்லிகள் வீட்டில் இருப்பது பிடிக்காது. வீட்டில் அலுமாரியைத் திறக்கும் போது, கதவை திறக்கும் போது பல்லிகள் மேலே இருந்து விழுந்தால், அது சிலருக்கு பயத்தை அல்லது அருவருப்பை ஏற்படுத்தும். பல்லிகள் பொதுவாக பாதிப்பில்லாதவை என்றாலும், வீட்டின் சுவற்றில் எப்போதும் பல்லிகள் சுற்றிக் கொண்டிருந்தால், அது வீட்டின் அழகை கெடுப்பதோடு, ஆரோக்கியத்திற்கும் சற்று ஆபத்தானது.

ஏனெனில், பல்லிகளின் மலம் மற்றும் எச்சிலில் சல்மோனெல்லா என்று அழைக்கப்படும் பக்டீரியா காணப்படுகிறது. பல்லியின் எச்சில் மற்றும் மலம் உண்ணும் உணவுகளில் விழுந்தால், அது நச்சுத் தன்மையை ஏற்படுத்தும். எனவே உங்கள் வீட்டில் பல்லிகள் அதிகம் சுற்றிக் கொண்டிருந்தால், அதை விரட்டும் முயற்சியில் உடனே ஈடுபடுங்கள்.

### பல்லியை விரட்டும் எளிய வழிகள்



★ மிளகுத் தூளை நீரில் கலந்து, ஒரு ஸ்ப்ரே போத்தலில் ஊற்றி, பல்லி சுற்றும் சுவற்றில் தெளித்துவிட்டால் பல்லி வராது.

★ கோப்பி பவுடர், புகையிலை இரண்டையும் கலந்து உருண்டை களாக்க வேண்டும். இந்த உருண்டையை பல்லி அதிகம் வரும் பகுதி அல்லது வீட்டின் மூலைமுடுக்குகளில் வைத்தால் பல்லி வராது.

★ உங்கள் வீட்டைச் சுற்றி நாப்தலீன் உருண்டைகளை ஆங்காங்கு வையுங்கள். பல்லிகளுக்கு இந்த உருண்டைகளின் வாசனை பிடிக்காது. எனவே இதை வீட்டு மூலைகளில் வைத்தால், அதன் வாசனைக்கு பல்லி வராது.

★ பல்லிகளுக்கு வெதுவெதுப்பான பகுதி தான் பிடிக்கும். அந்த மாதிரியான பகுதிகளில் தான் பல்லி அதிகம் காணப்படும். உங்கள் வீட்டில் பல்லி அதிகம் சுற்றினால், ஃப்ரிட்ஜில் உள்ள குளிர்ந்த நீரை அப்பகுதிகளில் தெளியுங்கள்.

★ மயில் இறகை பல்லி வரும் இடத்தில் வைத்தால், பல்லி மயில் இறகைக் கண்டு அஞ்சி, இனிமேல் வராதாம்.

★ முட்டை ஓட்டில் இருந்து வரும் நாற்றம், பல்லிகளுக்கு குமட்டலை ஏற்படுத்தும். எனவே ஆங்காங்கு மூலைகளில் முட்டை ஓடுகளை வையுங்கள்.

★ பூண்டு பற்களின் வாசனையும் பல்லிகளுக்கு பிடிக்காது. பூண்டு பற்களை வீட்டின் மூலைகளில் வையுங்கள் அல்லது பூண்டு சாற்றினை நீரில் கலந்து அந்நீரை பல்லி வரும் இடங்களில் தெளித்துவிடுங்கள்.

இனி பல்லியைக் கண்டால் பயப்படத் தேவையில்லை. மேலே குறிப்பிட்டவற்றை செய்தாலே பல்லி உங்கள் வீட்டுப் பக்கம் வரவே வராது.

# பாதாம் பூரி

**தேவையான பொருட்கள்**

மைதா மாவு 1 கப்
சர்க்கரை 3/4 கப்
உருக்கிய நெய் 1/4 கப்
உலர்ந்த தேங்காய் துருவல் 1/2 கப்
எண்ணெய் பொரிப்பதற்கு
அரிசி மாவு 2 மே.க
தண்ணீர் 1 கப்
உப்பு சுவைக்கேற்ப
ஏலக்காய் பொடி, கிராம்பு 1 மே.க

**செய்முறை**

ஒரு பாத்திரத்தில் மைதா மாவு, அரிசி மாவு, உப்பு, நெய் எல்லாவற்றையும் சேர்த்து நன்றாக பிசையுங்கள். கொஞ்சம் கொஞ்சமாக தண்ணீர் சேர்த்து மாவை மென்மையாக பிசைந்து வைத்துக் கொள்ளுங்கள். அதை அப்படியே 10 நிமிடங்கள் வைத்து விடுங்கள்.

ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து சூடானதும் சர்க்கரையை சேர்த்து தண்ணீர் ஊற்றவும். நன்றாக அதை கலந்து சர்க்கரை முழுவதும் கரையும் வரை காத்திருக்க வேண்டும்.

அதனுடன் ஏலக்காய் தூள் சேர்த்து சர்க்கரை சிரப்பை இறக்கி தனியாக வைத்து விடவும். இப்பொழுது பிசைந்த மாவை கொஞ்சமாக எடுத்து சின்ன சின்ன உருண்டைகளாக உருட்டி பூரி போல் தேய்த்து பூரியை முக்கோண வடிவில் எல்லா பக்கங்களையும் கவனமாக மூட வேண்டும். (சமோசா செய்வது மாதிரி).

பாத்திரத்தில் எண்ணெய் சூடானதும் ஒவ்வொரு பூரியாக போட்டு பொன்னிறமாக மாறும் வரை பொரிக்க வேண்டும். பொரித்து சுடச்சுட உள்ள பூரியை சர்க்கரை பாகில் நனைத்து அதன் மேல் துருவிய தேங்காயை தூவி சாப்பிடலாம்.



LECO

வரையறுக்கப்பட்ட (தனியார்) லங்கா மின்சார கம்பனி

## வாடகைக்கு அல்லது குத்தகைக்கு கட்டிடமொன்று தேவை

## கதிர்காமம்

**விலைமனு இல.: LECO/22/NCB/PR4/244**

கதிர்காமத்தில் தளபாடங்களுடன் ஏறத்தாழ 50-60 பேர்ச்சுகளடங்கிய விஸ்தீரணமுள்ள புனித நகர் எல்லைக்குள் விடுமுறை பங்களாவொன்றாக பாவிப்பதற்கும் உடன் குடிபுகுதலுக்காக வாடகைக்கு/ குத்தகைக்கு பங்களாவொன்று தேவைப்படுகின்றது. இக்கட்டிடத்தில் 4 வளிச்சீராக்கப்பட்ட விருந்தினர் அறைகளுடன் இணைக்கப்பட்ட குளியலறைகளும் ஆகக் குறைந்தது 4 வாகனங்களை நிறுத்தக்கூடிய இடப்பரப்பும், 15-20 அடி அகலமுள்ள அணுகுவழியும், மின்சாரம், தொலைபேசி, குழாய் நீர் மற்றும் வடிகாலமைப்பு இன்னும் பலவும் இருத்தல் வேண்டும். காவற் பொறுப்பாளருக்கான தங்குமிடம், சாரதிக்கான இளைப்பாறும் அறை, சமையலறைக்கான போதுமானளவு இடப்பரப்பு மற்றும் 20 நபர்களுக்கான உணவு உண்ணும் மற்றும் தங்குமிடம் ஆகியனவும் இருத்தல் வேண்டும்.

வாடகைக்கு அல்லது குத்தகைக்கான கால எல்லையானது 02 வருடங்களாகும்.

முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2022.08.23 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும். விலைமனுக்களை மூடிய பின்னர் அவைகளை விரைவாகவே திறக்கப்படும்.

**விலைமனுக்கள் பின்வரும் முழுமையான விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

* தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம். * மின்னஞ்சல் முகவரி
* எதிர்பார்க்கப்படும் வாடகை/குத்தகைத் தொகை * அனைத்து ஏனைய உரித்தான விபரங்கள்
* உரித்துறுதி மற்றும் அளவை வரைபட பிரதிகளுடனான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்.

தற்போது நிலவும் கோவிட்-19 நிலைமை காரணமாக விலைமனு திறத்தலானது Zoom meeting வழியாக ஒன்லைனில் நடாத்தப்படும். ஒன்லைனில் நடைபெறும் திறத்தலில் உரிமையாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்குபெறலாம். கூட்ட தொடர்பை வழங்குவதற்காக விலைமைனுதாரர்கள் தலைப்பு மற்றும் பங்குபெறும் விலைமனுதாரர்களின் எண்ணிக்கையை திட்டவட்டமாக குறிப்பிட்டு 'procurement@leco.lk' என்ற முகவரிக்கு மின்னஞ்சல் விண்ணப்பமொன்றை அனுப்பவும். (எந்தவொரு தெளிவுறுத்தல்களுக்கும் 011-2371637 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்)

விலைமனுக்கள் பதிவுத் தபாலில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படலாம் [விலைமனுக்கள் அவைகளின் மூடும் திகதி மற்றும் நேரத்திற்கு முன்னராக வரையறுக்கப்பட்ட (தனியார்) லங்கா மின்சார கம்பனியை வந்தடையும் தன்மையில் அனுப்பப்படல் வேண்டும்] அல்லது விலைமனுக்கள் அவைகளை மூடும் திகதி மற்றும் நேரத்திற்கு முன்னராக கம்பனியின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

இடப்பரப்புக்களின் உரிமையாளர்கள் மாத்திரமே அவர்களின் விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகை மற்றும் விலைமனுவின் தலைப்பு குறிப்பிடப்படல் வேண்டும்.

எந்தவொரு மேலதிக தெளிவுறுத்தல்களுக்கும், தயவு செய்து மனித வளங்கள் மற்றும் நிருவாகத்திற்கான மேலதிக பொது முகாமையாளருடன் 011-2 - 371 600 என்ற இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளவும்.

.

**பொது முகாமையாளர்**
**வரையறுக்கப்பட்ட (தனியார்) லங்கா**
**மின்சார கம்பனி**
**ஈ.ஏச். குரே கட்டிடம்**
**411, காலி வீதி, கொழும்பு-03**

LECO

பெறுகை அறிவித்தல்

www.leco.lk

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk

SLBFE

## இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகமும் (SLBFE) மற்றும் சே∴ப் பவுண்டேஷன் (SAFE Foundation) நிறுவனமும் இணைந்து 100 நலம்பேணல் சேவை பெண்களுக்கு இலவச பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித்திட்டம்

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகமும் (SLBFE) மற்றும் சே∴ப் பவுண்டேஷன் (SAFE Foundation) நிறுவனமும் இணைந்து 100 நலம்பேணல் சேவை பெண்களுக்கு இலவச பயிற்சியளிப்பதற்குத் தேவையான வேலைகளை மேற்கொண்டுள்ளன.

இஸ்ரேலிலுக்கு வீட்டு நலம்பேணல் சேவையாளர்களை அதிகளவில் அனுப்புவதை நோக்காகக் கொண்டு நடாத்தப்படும் இந்த நிகழ்ச்சித்திட்டம் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் நடாத்தப்படும்.

இதன்பொருட்டு பின்வரும் தகைமைகளைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**

❖ 25 - 44 வயதிற்கிடைப்பட்ட வெளிநாட்டில் வேலை செய்து இந்நாட்டிற்கு வருகை தந்த பெண்ணொருவராவிருத்தல்.
❖ குறைந்தபட்சம் உயரம் 1.5m மற்றும் குறைந்தபட்ச நிறை 45kg
❖ இதற்கு முன் இஸ்ரேலில் சேவையாற்றியிருத்தல் கூடாது.
❖ வாழ்க்கைத் துணை தற்போது சேவையாற்றாதிருத்தல்.
❖ க.பொ.த. (சா.தர) வரை கல்வி கற்றிருத்தல்
❖ குற்றமற்ற தூய்மையான பொலிஸ் அறிக்கை இருத்தல்
❖ உடல் மற்றும் உள ரீதியாக ஆரோக்கியமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சயரோகம், மஞ்சற் காமாலை, பாலியல் நோய், HIV எயிட்ஸ் போன்ற நோய்கள் உள்ளடங்களாக (ஆனால் இதற்கு மட்டும் வரையறுக்கப்படாத) நாற்பட்ட நோய்களுக்கு உட்படாத பெரிய பாரத்தை சுமக்கக்கூடிய இயலுமையுள்ள இஸ்ரேலில் சிரமான நிலையில் நலம்பேணல் சேவை செய்வதற்கான இயலுமை இருத்தல் வேண்டும்.

பணியகத்தில் பயிற்சியை நிறைவு செய்தவர்கள், நலம்பேணல் சேவைக்கான தேசிய மதிப்பீட்டுத் திறனின் IIIஆம் மட்டத்திற்கு (NVQ III) அனுப்பப்படுவர் என்பதுடன் அதில் சித்தியடைபவர்கள் இஸ்ரேலில் வீட்டு நலம்பேணல் சேவை வேலைக்காக அனுப்பப்படுவர். இந்த பதவிகள் லொத்தர் முறையினால் தெரிவு செய்யப்படுவதனால் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்தல் இஸ்ரேலில் நலம்பேணல் சேவை தொழிலைப் பெற்றுக்கொள்வதற்கான அடிப்படைத் தகைமையாகும்.

உங்களது விண்ணப்பப் படிவங்களை முகாமையாளர் (பயிற்சி - உள்ளகம்), இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம், 553/1, புதிய கண்டி வீதி, தலங்கம வடக்கு, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு அல்லது mgr_trdomastic@slbfe.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

அல்லது அருகிலுள்ள இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு வழங்கவும்.

**விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள்: 2022-08-15ஆம் திகதியாகும்.**

**தலைவர் - இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம்**
**அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்போம்.**

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி (SMIB)

SMIB

## அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் தொழில் வாய்ப்பு சந்தர்ப்பங்கள்

நாட்டிற்கான முதன்மையான வீடமைப்பு வங்கியான அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியானது வாடிக்கையாளர் திருப்தியான மற்றும் பரந்தளவிலான பல்வகையான உயர்மட்ட சேவைகளை முன்வைப்பதற்காக வங்கியின் செயற்பாட்டை மீள்கட்டமைப்பு செய்யும் பணியை முன்னெடுத்துச் செல்கின்றது. எனவே, சுறுசுறுப்பான தலைமைத்துவ பாங்குகளை காட்சிப்படுத்தியுள்ள மற்றும் வர்த்தக இலக்குகளை அடைவதற்காக முழுமையான கடப்பாடையுடைய உரித்தான தகைமைகள் மற்றும் அனுபவமுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்களை நாம் அழைக்கின்றோம்.

### பிரதி பொது முகாமையாளர் - நிதி மற்றும் திட்டமிடல்

**பிரதான பொறுப்புக்கள்**

கணக்கிடல் மற்றும் நிதி திணைக்களத்திற்கு பொறுப்பாகவுள்ள நிதி மற்றும் திட்டமிடலுக்கான பிரதி பொது முகாமையாளரானவர் சிறந்த உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள், வருடாந்த வரவு - செலவுத் திட்டங்கள், கூட்டுரு திட்டங்கள், வருடாந்த நிதியிடல் கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் வெளிவாரி கணக்காளர்களுடன் தொடர்பை மேற்கொள்ளல் அடங்கலானவற்றை அறிமுகப்படுத்தல் மற்றும் அமுல்நடாத்தல் அடங்கலான முழுமையான செயற்பாடுகளுக்கு தலைமைதாங்கல் மற்றும் முகாமைப்படுத்தல் ஆகியவற்றிற்கு பொறுப்பாகவிருப்பார். அவர் (ஆண்/ பெண்) வியாபார கொள்கைகள், நிதியங்களை அணிதிரட்டல், செயற்பாட்டு அறிக்கைகளை தயாரித்தல் ஆகியவற்றை அறிமுகப்படுத்தல் மற்றும் மீள்நோக்கல் ஆகியவற்றிற்கும் பொறுப்பாகவிருப்பதுடன் பொது முகாமையாளர்/ சபை பணிப்பாளர்களினால் வழங்கப்படும் வேறேதாவது கடமைகளுக்கும் பொறுப்பாகவிருப்பார்.

**தகைமைகள் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவொரு பல்கலைக்கழகத்திலிருந்து கணக்கிடலில் பெற்றுக் கொண்ட பட்டதாரிப் பட்டம்.

**அத்துடன்**

ICASL/CIMA/ACCA- UK ஆகியவற்றின் இடைநிலை மட்ட தகைமை தொடர்புள்ள துறைகளில் பெற்ற முதுமாணிப் பட்டமானது சேர்க்கப்பட்ட தகைமையாக கருதப்படும்.

**அல்லது**

ICASL/CIMA/ACCA- UK ஆகியவற்றின் முழுமையான தொழில்ரீதியிலான அங்கத்துவம்.

**அனுபவம்:**

உரித்தான துறையில் பதினைந்து (15) வருட அனுபவத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலும் வங்கி ரீதியிலான நிறுவனமொன்றில் உரித்தான துறையில் பெற்ற அனுபவமும் இருத்தல் வேண்டும்

**வேதனம்:**

சம்பள அளவுத்திட்டம் - மாதமொன்றிற்கு 250,655- 8550x12 ரூபா மற்றும் வங்கியினால் அனுமதிக்கப்பட்ட படிகள் (10% படிகள், வாழ்க்கைச் செலவு மற்றும் வாடகைப் படி.)

**வயது:** 50 வயதிற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும் (இருப்பினும், ஏற்கனவே அரசதுறை அமைப்பொன்றில் பணியாற்றுபவருக்கு வயதெல்லை பிரயோகிக்கப்படமாட்டாது)

**பொதுவான நிபந்தனைகள்:**

**தெரிவுசெய்யும் முறைமை -** வங்கியின் ஆட்சேர்ப்பு கொள்கை மற்றும் நடைமுறையின் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்படல். நேர்முகப்பரீட்சையொன்றின் மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.

ஏனைய அனுகூலங்கள்:

- சேமலாப நிதிய பங்களிப்பு–தொழில் வழங்குநரினால் 15% அத்துடன் 10% ஊழியரினால்.
  வங்கியானது ஊ ந நி இற்கு பங்களிப்பை வழங்கும்.
- இரு மாதங்களுக்கான திரட்டிய சம்பளம் வருடாந்த மிகையூதியமாக வழங்கப்படும்.
- சேவையில் உறுதிப்படுத்திய பின்னர், இலகு தவணை விகிதத்தில் வீடமைப்பு கடன்.
- வங்கியின் மருத்துவ திட்டத்தின் கீழான அனுகூலங்கள்
- பாவிக்கப்படாத மருத்துவ விடுமுறைக்கான பணம் வழங்கல்.

**விண்ணப்பங்களின் முடிவு திகதி:** 2022.08.15

**விண்ணப்பிக்கும் நடைமுறை:**

ஆர்வமும் தகைமையுமுள்ள விண்ணப்பதாரிகள் அவர்களின் சுயதரவு மற்றும் அவர்களின் கல்விசார்/தொழில்சார் ஆவணங்களின் பிரதிகள் மற்றும் இரு தொழில்சார் உறவினரல்லாத பரிந்துரையாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொடர்பு இலக்கங்கள் ஆகியவற்றை கீழேயுள்ள மின்னஞ்சல் முகவரியூடாக அனுப்புதல் வேண்டும்.

அனைத்து விண்ணப்பங்களும் கடுமையான இரகசியமான முறையில் பரிசீலனை செய்யப்படுவதுடன் எவ்வகையான ஆதரவு தேடலும் தகைமையை நீக்குவதற்கான வழியை வகுக்கும். இந்த ஆட்சேர்ப்பு தொடர்பாக தெரிவு செய்தலை தீர்மானித்தல், பிற்போடல் அல்லது ஆட்சேர்ப்பை இரத்துச் செய்தல் அல்லது செயற்பாட்டை மற்றும்/அல்லது தெரிவு செய்வதற்கான தகவுத் திறனை மாற்றுவதற்கான உரிமையை வங்கியானது கொண்டுள்ளது. பணிப்பாளர் சபையின் தீர்மானமே இறுதியானதும் முடிவானதாகும்.

**careers@smib.lk என்ற வழியால் மாத்திரமே விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.**

AUTOWHEEL

FAMILY RESTAURANT IS NOW OPEN

AA CEYLON Estd 1904

FOR TASTY SRI LANKAN FOOD

Live Music in Attendane

"Friday Special Buriyani"

RS. 385/- PER PACK

VISIT - Automobile Association of Ceylon
40, Sir Mohamed Macan Marker Mawatha, Colombo 03
Tele. No: 0774369013 (Krishan)

## வேலை வாய்ப்பு



இலங்கையின் பாரிய சில்லறை வலையமைப்பிற்கு

### தலைமை நிறைவேற்று அதிகாரி

**தலைமை என்பது பதவி அல்ல செயல்**

**தகைமைகள் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிர்வாகம் அல்லது அது சார்ந்த ஏனைய ஒரு துறையில் இளமாணிப் பட்டம்.
   மற்றும்
   வர்த்தக நிர்வாகம் அல்லது அது சார்ந்த ஏனைய ஒரு துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம் அல்லது முகாமைத்துவம்/ கணக்கியலில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் இணை அங்கத்துவம்.
   மற்றும்
   முதல் பட்டத்தை பெற்ற பின் கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்பெற்ற வணிக நிறுவனம் ஒன்றில் நிரூபிக்கப்பட்ட தளப் பதிவு ஒன்றுடன் முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 20 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும் என்பதோடு அதில் 05 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் அனுபவம் இருத்தல் வேண்டும்.
2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிர்வாகம் அல்லது அது சார்ந்த ஏனைய ஒரு துறையில் இளமாணிப் பட்டம்.
   மற்றும்
   பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிர்வாகம் அல்லது அது சார்ந்த ஏனைய ஒரு துறையில் கலாநிதிப் பட்டம்.
   மற்றும்
   முதல் பட்டத்தை பெற்ற பின் கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்பெற்ற வணிக நிறுவனம் ஒன்றில் நிரூபிக்கப்பட்ட தளப் பதிவு ஒன்றுடன் முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும் என்பதோடு அதில் 05 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்:**

அடிப்படை சம்பளம் ரூபா 250,000/= (செயல்திறன் கொடுப்பனவு ரூபா 75,000/= , போக்குவரத்து கொடுப்பனவு 50,000/= மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு மற்றும் அரசாங்க சுற்றறிக்கைகளின்படி பதவிக்கு பொருந்தும் தகவல் தொடர்பாடல் கொடுப்பனவு )

இலங்கையின் பாரிய சில்லறை வலையமைப்பிற்கு

### பிரதி பொது முகாமையாளர் உள்துறை தணிக்கை

**தகைமைகள் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட Finance Management Degree அல்லது Accountancy Degree
   மற்றும்
   பொருத்தமான துறையில் Post Graduate Degree (Masters')
   மற்றும்
   ஏதேனும் கூட்டுத்தாபனம், சட்ட ரீதியான சபை அல்லது புகழ்பெற்ற வணிக ஸ்தாபனத்தில் 05 வருடங்கள் மூத்த முகாமையாளர் தரத்திலும் மொத்தமாக குறைந்தது 15 வருடங்கள் முகாமையாளர் தரத்துடைய அனுபவத்தை கொண்டிருத்தல்
2. பொருத்தமான துறையில் அங்கீகரிக்கப்பட்ட துறைசார் பட்டய நிறுவனத்தில் சக உறுப்புரிமை (CIMA, ACCA, CA, CIA)
   மற்றும்
   ஏதேனும் கூட்டுத்தாபனம், சட்ட ரீதியான சபை அல்லது புகழ்பெற்ற வணிக ஸ்தாபனத்தில் 05 வருடங்கள் மூத்த முகாமையாளர் தரத்திலும் மொத்தமாக குறைந்தது 15 வருடங்கள் முகாமையாளர் தரத்துடைய அனுபவத்தை கொண்டிருத்தல்

**சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்:**

அடிப்படை சம்பளம் ரூபா 150,000/= (செயல்திறன் கொடுப்பனவு ரூபா 75,000/= , போக்குவரத்து கொடுப்பனவு 50,000/= மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு மற்றும் அரசாங்க சுற்றறிக்கைகளின்படி பதவிக்கு பொருந்தும் தகவல் தொடர்பாடல் கொடுப்பனவு )

**வயது:** 45 வயதுக்கு குறையாதவராகவும் 60 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**நியமனத்தின் பண்பு:** EPF மற்றும் ETF இற்கு உரித்தான ஒப்பந்த நியமனம்

**பொருத்தமான அபேட்சகர்கள் பின்வருவனவற்றை கொண்டிருத்தல் வேண்டும்:**

- மதிப்பீடு, மதிப்பாய்வு மற்றும் தரவை விளக்கும் திறனுடன் சிறந்த பகுப்பாய்வு, சிக்கல்களை தீர்க்கும் பண்பு மற்றும் ஏற்பாட்டுத் திறன்களை பெற்றவராகவும் சிறந்த சுய ஊக்கம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
- வலுவான தலைமைத்துவ தகைமைகள், ஒருவருக்கு ஒருவர் தொடர்புகொள்ளும் திறன்களை கொண்டிருத்தல்.
- சிறந்த IT திறன்களை நிரூபிக்க முடியுமாக இருத்தல் வேண்டும்.
- பல தரப்புக் குழுக்களுக்கு தலைமை வகித்த மற்றும் வழிநடத்திய நிரூபிக்கப்பட்ட திறமை. மனித மற்றும் ஏனைய வளங்களை முறையாக அமர்த்திய மற்றும் திறமையாக முகாமைத்துவம் செய்த அனுபவம்.

**அனைத்து விண்ணப்பதாரர்களும்.**

- இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும்.
- பதவியின் கடமைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கு மற்றும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் கடமையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- சிறந்த ஆளுமையுடைய நபராக இருத்தல் வேண்டும்.

நீங்கள் சரியான தகைமைகள் மற்றும் அனுபவத்தை பெற்றவராக இருந்தால், சான்றிதழ்களின் பிரதிகளுடன் உங்களது சுய விபரக்கோவையை கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது vacancies@lankasathosa.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு இந்த விளம்பரம் வெளியான 10 நாட்களுக்குள் அனுப்பவும். (கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்/ மின்னஞ்சலின் "Subject" பகுதியில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்)

(தேர்வு செய்யப்பட்ட அபேட்சகர்களுடன் மாத்திரமே நிறுவனம் தொடர்புகொள்ளும்)

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

தலைவர், லங்கா சதொச லிமிடட், 5ஆம் மாடி
இல.27, சதொச செயலகக் கட்டிடம்,
வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

සතොස

# ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

## வெற்றிடங்கள் - நிரந்தர ஊழியர் நியமனம்

### கற்கை மற்றும் கற்கை உதவி பணியாளர்கள்

**மருத்துவ பீடம்**

**ஆரம்ப மருத்துவத் துறை**

1. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி வெற்றிடம் - தரம் I / II

**இயன் மருத்துவ துறை**

1. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி வெற்றிடம் - தரம் I / II

**பொறியியல் பீடம்**

**மின், மின்னணு மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் துறை**

1. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி வெற்றிடம் - தரம் I / II, விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாத)
2. பயிற்றுவிப்பாளர் பதவி - தரம் II

**வான்வெளிப் பொறியியல் துறை**

1. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி வெற்றிடம் - தரம் I / II, விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாத), விரிவுரையாளர் (தகுதிகாண்)

**முகாமைத்துவம், சமூக அறிவியல் மற்றும் மானிடவியல் பீடம்**

**சமூக அறிவியல் துறை**

1. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி வெற்றிடம் - தரம் I / II, விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாத), விரிவுரையாளர் (தகுதிகாண்)

**மொழியியல் துறை**

1. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி வெற்றிடம் - தரம் I / II, விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாத) விரிவுரையாளர் (தகுதிகாண்)

### தெற்கு பல்கலைக்கழகம் - சூரியவெவ

**கட்டமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் இடவியல் விஞ்ஞான பீடம்**

**மதிப்பீட்டு ஆய்வு துறை**

1. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி வெற்றிடம் - தரம் I / II, விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாத), விரிவுரையாளர் (தகுதிகாண்)

* விஷேட குறிப்பு : மதிப்பீட்டு ஆய்வு துறையில் விசேட பட்டப்படிப்பு பெற்றவர்கள் விரும்பப்படுவார்கள்.

**ஆங்கில மொழி கற்பிக்கப்படும் பிரிவு**

1. ஆங்கில மொழி பயிற்றுவிப்பாளர் பதவி - தரம் III

### எழுத்துசார் மற்றும் நிர்வாக ஊழியர்கள்

1. தொழில்நுட்ப அதிகாரி (இயந்திரவியல்) தரம் III
2. தொழில்நுட்ப அதிகாரி (மின்னியல்) தரம் III
3. தொழில்நுட்ப அதிகாரி (சிவில்) தரம் III
4. தொழில்நுட்ப அதிகாரி பதவி தரம் II (ஆ) பிரிவு

**சம்பள அளவுத்திட்டம்**

| | |
|---|---|
| 1. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி தரம் I | :- U-AC 3 (I) ரூ. 91,310 - 7x2,170 - 106,500 p.m. + (151% கல்விசார் கொடுப்பனவு + ஏனைய கொடுப்பனவுகள்) |
| 2. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி தரம் II | :- U-AC 3 (II) ரூ. 79,360 - 11x1,630 - 97,290 p.m. + (151% கல்விசார் கொடுப்பனவு + ஏனைய கொடுப்பனவுகள்) |
| 3. விரிவுரையாளர் பதவி (உறுதிப்படுத்தப்படாத) | :- U-AC 3 (III) ரூ. 69,580 - 5x1,630 - 77,730 p.m. + (131% கல்விசார் கொடுப்பனவு + ஏனைய கொடுப்பனவுகள்) |
| 4. விரிவுரையாளர் பதவி (தகுதிகாண்) | :- U-AC 3 (IV) ரூ. 54,600 - 10x1,335 - 67,950 p.m. + (115% கல்விசார் கொடுப்பனவு + ஏனைய கொடுப்பனவுகள்) |
| 5. பயிற்றுவிப்பாளர் பதவி தரம் II | :- U-AS 1 (I) ரூ. 48,385 - 19x690 - 61,495 p.m. + (ஏனைய கொடுப்பனவுகள்) |
| 6. ஆங்கில மொழி பயிற்றுவிப்பாளர் பதவி தரம் III | :- U-AS 1 (II) ரூ. 41,095 - 18x660 - 52,975 p.m. + (ஏனைய கொடுப்பனவுகள்) |
| 7. தொழில்நுட்ப அதிகாரி பதவி தரம் III /II (ஆ) பிரிவு | :- U-MT 1 (IIIA) ரூ. 31,625 - 07x300;10x355 - 37,275 p.m. + (ஏனைய கொடுப்பனவுகள்) |

**ஏனைய பிரதிபலன்கள் :**

தகைமைபெற்ற பதவிகளுக்காக கடமை ஓய்வு விடுமுறை, ஊக்குவிப்பு கொடுப்பனவுகள், இலவச சுகாதார காப்புறுதிகள், வருடாந்த ஊக்குவிப்பு காப்புறுதிகள், பணியாளர்களது குழந்தைகளுக்கான புலமைப்பரிசில்கள், பல்கலைக்கழக வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் பொழுது முன்னுரிமை வழங்கல் மற்றும் மேலும் ஏனைய வரப்பிரசாதங்கள்.

**அனைத்து நிர்வாக ஊழியர்களுக்கான பொது நிபந்தனைகள்**

1. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரிகளை தெரிவு செய்தல், குறித்த பதவிகளுக்கு / தரங்களுக்கேற்ப அனுமதிக்கப்பட்ட வெற்றிடங்களின் இடைவெளி பூரணப்படுத்தல் என்பன ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக முகாமைத்துவ சபையினால் மேற்கொள்ளப்படும்.
3. விண்ணப்பதாரிகளால் இணையத்தளத்தில் (www.kdu.ac.lk) இருந்து தரவிறக்கம் செய்த விண்ணப்பத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்டு தொடர்புடைய சான்றிதழ்களின் நகல் பிரதியுடன் 2022.08.31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவாளர், ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை எனும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் அல்லது நேரடியாக கையளித்தல் அல்லது (staffrecruit@kdu.ac.lk) எனும் மின்னஞ்சல் முகவரிக்கு ஊடுகதிர் செய்யப்பட்ட நகல் பிரதிகளை அனுப்பி வைத்தல் வேண்டும்.
4. கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடல் வேண்டும். மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் மின்னஞ்சல் பொருள் வரிசை தலைப்பில் "விண்ணப்பிக்கும் பதவி மற்றும் திணைக்களம்" என்பவற்றை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.
5. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.
6. பல்கலைக்கழகங்கள் / நிறுவனங்கள் / அரச துறைகள் / நிறுவனங்கள் அல்லது சட்டப்பூர்வ வாரியங்களில் பணிபுரியும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை நிறுவனத்தின் தலைவர் மூலம் சமர்ப்பிக்க வேண்டும்.
7. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக இணையத்தளத்தில் (www.kdu.ac.lk) தரவிறக்கம் செய்துகொள்ள முடிந்த விண்ணப்பப்படிவத்தின் மூலமாக மாத்திரமே குறித்த பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியும். பிந்திக்கிடைக்கும், பூரணப்படுத்தப்படாத அல்லது மேலே இலக்கம் 06 குறித்த மாதிரிக்கமையாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
8. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு இப்பல்கலைக்கழகத்தின் எந்தவொரு வளாகத்திலும் சேவையாற்றுவதற்கு மற்றும் பணியாற்றுவதற்கு ஆற்றல் இருத்தல் வேண்டும்.
9. குறித்த தகைமைகளைப் பூரணப்படுத்திய விண்ணப்பதாரிகள் மாத்திரமே போட்டிப் பரீட்சை அல்லது நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவர்.
10. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அடிப்படையில் இணைத்துக்கொள்ளல், பதவி உயர்வு நடைமுறைக்கிணங்க மற்றும் நேர்முகத்தேர்வு அல்லது போட்டிப்பரீட்சை பெறுபேறுகளுக்கு ஏற்ப விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவர்.
11. விண்ணப்பதாரிகள் நேர்முகத்தேர்வுக்கு அல்லது போட்டிப் பரீட்சைக்கு அழைப்பதற்கு முன்னர் அவர்களது பெயர் பட்டியலை தயாரிக்கும் உரிமை பல்கலைக்கழகத்திற்கு உண்டு.
12. பல்கலைக்கழக மானிய ஆணையக்குழுவினால் வெளியிடப்படும் சம்பள படிவத்திற்கமைய சம்பளம் வழங்கப்படுவதுடன் சம்பளத்திற்கு மேலதிகமாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட ஏனைய மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**கற்கை ஊழியர்களுக்கான பொது நிபந்தனைகள்**

1. கற்கை பதவிக்கான விண்ணப்பதாரர்கள் தமது கற்பித்தல் திறனை உறுதி செய்வதற்காக தேர்வாளர் குழுவினர் முன்னிலையில் விளக்க காட்சியொன்றினை (ஆங்கில மொழியில்) செயற்படுத்த வேண்டும்.
2. விண்ணப்பதாரிகள் தகைமைகள் மற்றும் பாடத்துறை தொடர்பாக அறிந்துக்கொள்ள பல்கலைக்கழக இணையத்தளம் (www.kdu.ac.lk) மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் படிமுறை 721, 08/2016, 08/2016 (ii), 08/2016 (iii), 07/2018, 725, 14/2017 மற்றும் அவற்றின் விசேட குறிப்புகள் மற்றும் குறித்த சட்டங்களை சரிபார்க்கவும்.

**எழுத்துசார் மற்றும் அனைத்து தர நிர்வாக ஊழியர்களுக்கான பொது நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிப்பதற்கான தகைமைகளை அறிய ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் இணையத்தளம் மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றுநிருபம் 763 மற்றும் 05/2022 ல் உள்ளடக்கப்பட்டுள்ள விசேட குறிப்புகள் மற்றும் ஆலோசனைகளை சரிபார்க்கவும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :**

பதிவாளர்
ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
இரத்மலானை 10390, இலங்கை
மின்னஞ்சல் : staffrecruit@kdu.ac.lk

மேலதிக விபரங்களுக்கு பிரவேசிக்கவும் :
www.kdu.ac.lk

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 22

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | | | 03 | 04 |
| | 05 | 06 | 07 | 08 | |
| 09 | | 10 | | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | | 17 |
| 18 | | | 19 | 20 | |
| 21 | 22 | 23 | | 24 | 25 |

பெயர் ....................................................
வகுப்பு ....................................................
தொலைபேசி இல ....................................................
பாடசாலை பெயர் ....................................................
வதிவிட முகவரி ....................................................
....................................................
.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் /பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(01) சூரியத் தொகுதியில் உள்ள கோள் இது. 'கவர்ச்சியான கிரகம்' எனக் கூறப்படுவது.
(03) தென்னை போன்று கிளை விடாமல், உயரமாக வளர்கின்ற மரம்.
(05) மாணவர்கள் கல்வி பயிலும் கல்விக் கூடம்.
(11) கடலில் வாழும் மீன். சிறிய உருவம் முதல் பெரிய உருவம் வரையான இனங்களில் இம்மீன் உள்ளது. மனிதரையே விழுங்கக் கூடிய ஆபத்தான மீன்.
(13) கடல் போக்குவரத்து சாதனம்.
(19) குதிரைக்கு மற்றொரு பெயர் இது.
(21) மிகவும் மெதுவாக ஊர்ந்து செல்லும் பிராணி. ஆபத்து வரும்போது, தனது உடலை ஓட்டுக்குள் இழுத்து மறைத்துக் கொள்ளும். (தலைகீழான சொல்)
(24) மணலும் மணல் சார்ந்த இடமும்.

**மேலிருந்து கீழ்**

(02) காய் முற்றிக் கனிந்ததும் வருவது இப்பருவம். (தலைகீழான சொல்)
(03) போட்டிகளில் வெற்றி பெற்றால் வழங்கப்படுகின்ற வெகுமதி.
(06) இரவு முடிந்து, சூரியன் உதயமானதும் தோன்றுகின்ற பொழுது. (தலைகீழான சொல்)
(09) 'நான்' என்ற ஆணவம் கொண்ட சுபாவத்தை இப்பெயரிலும் குறிப்பிடலாம்.
(12) சமாதானப் பறவை. (தலைகீழான சொல்)
(16) உணவை அரைத்து உண்பதற்கான உறுப்பு. (தலைகீழான சொல்)
(20) கொடையில் சிறந்த மன்னனாக அக்கால இலக்கியங்களில் போற்றப்பட்டுள்ள மன்னன். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 21

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. தலதாமாளிகை 10. பாட்டி 14. கட்டுரை 19. சந்தி
22. இஞ்சி 25. பாதை

**மேலிருந்து கீழ்**

01. தரு 03.தாலாட்டு 06.மாளிகை 10. பாரை
12. சட்டி 17. கந்தை 18. மாசி 21. பாதி

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 20

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
**சுலைக் அஹமட்,**
தரம் 08B, அல் ஹுமைசரா தேசிய பாடசாலை,
73/2, சாலி ஹாஜியார் மாவத்தை,
சீனன்கோட்டை, பேருவளை.

**இரண்டாம் பரிசு**
**செந்தில்குமார் தபிலோஷன்,**
தரம் 07, இ/அல் மக்கியா தேசிய பாடசாலை,
இல. 37/1, பள்ளிவாசல் வீதி,
பண்டாரவத்தை, இரத்தினபுரி.

**மூன்றாம் பரிசு**
**எம்.ஏ.எம். உமர்,**
தரம் 06E, கே/ஸாஹிரா தேசிய பாடசாலை,
78, தக்கியா வீதி,
மாவனல்ல.

### பாராட்டு பெறுவோர்

**1. ரமீஸ் இமாரா இஸ்ரா,**
தரம் 09, அல் அமான் மு.ம.ம.வி,
கல்லொழுவ,
மினுவாங்கொடை.
**2. பர்ஹா பைஸர்,**
தரம் 08, பாஸியதுல் நஸ்ரியா,
155/42, மருதானை வீதி,
பேருவளை.
**3. என். இலக்கியாநாட்சி,**
தரம் 06, கொ/ சைவமங்கையர் வித்தியாலயம்,
கொழும்பு 06.
**4. எம்.என். முன்சிப் அஹமட்,**
தரம் 06, இ/சி.சி. தமிழ் மகா வித்தியாலயம்,
இல. 55/1, முந்துவ மாவத்தை,
இரத்தினபுரி.
**5.** சாஹிட் நூரி,
தரம் 04, தாருஸ்ஸலாம் மகா வித்தியாலயம்,
திஹாரிய.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 22
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :

**பகுத்துஉண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.**

**தெளிவுரை :**
*கிடைத்ததைப் பகுத்துக் கொடுத்துத் தானும் உண்டு பல உயிர்களையும் காப்பாற்றுதல், அறநூலார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையான அறமாகும்.*

# உலகின் உயரமான ரயில்வே பாலம்!

உலக அதிசயமான ஈபிள் டவரை விட அதிக உயரம் கொண்ட ரயில்வே பாலம் இந்தியாவின் ஜம்முகாஷ்மீர் இமயச் சரிவில் அமைக்கப்பட்டுள்ளது. காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையான ரயில் பாதைகள் இணைப்புத் திட்டத்தின் கீழ் 2004 ஆண்டில் இந்திய இமயச் சரிவில், செனாப் ஆற்றைக் கடக்க மாபெரும் இரும்பு வளைவு ரயில் பாலம் ஒன்றை அமைப்பதற்கு இந்தியா அரசு திட்டமிட்டது. காஷ்மீரை, நாட்டின் பிற பகுதிகளோடு இணைக்கும் ரயில்வே திட்டத்தின் ஒரு பகுதியாக, காஷ்மீரின் ரியாசி மாவட்டத்தில், செனாப் நதியின் குறுக்கே, 1,562 அடி நீள வளைவு இரும்பு பாலம் கட்டப்பட்டுள்ளது. 2017 நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இந்த பாலம், 1,250 கோடி ரூபாய் செலவில், 1172 அடி (359 மீட்டர்) உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இது ஐரோப்பிய நாடான பிரான்சின் பாரிஸ் நகரில் உள்ள உலக அதிசயமான ஈபிள் டவரைவிட உயரமானது. ஈபிள் டவரின் உயரம் 324 மீட்டர். அதை விட 35 மீட்டர் அதிக உயரம் கொண்டிருக்கிறது இந்த பாலம். பாலத்தின் நீளம் 17 இடைவெளிகளுடன், 1,315 மீட்டர் இருக்கும்படியும், அதில் செனாப் ஆற்றின் குறுக்கே, பிரதான வளைவின் பரப்பளவு மட்டும் 467 மீட்டர் இருக்கும்படியும் பாலம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இந்த பாலம் பயங்கர குண்டுவெடிப்பையும் தாங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதாக என, ரயில்வே அதிகாரிகள் தெரிவித்திருந்த குறிப்பிடத்தக்கது.







**சுஜானி திருஆலன்,**
நெடுங்குளம்,
வவுனியா.

# பொது அறிவுத் தகவல்கள்

- தண்ணீருக்கு அடியில் சென்று ஆராய்ச்சி செய்ய உதவும் மூச்சு கருவியின் பெயர் ஸ்கியூபா ஆகும்.
- முதன் முதல் 1893 ம் ஆண்டு நினைவு தபால் தலையை வெளியிட்ட நாடு அமெரிக்கா.
- தொலைக்காட்சியில் பயன்படுத்தப்படும் மூன்று அடிப்படை நிறங்கள் பச்சை, நீலம், சிகப்பு
- பிளாஸ்டிக்குகளை எரிக்கும் பொழுது டையாக்சின் என்ற நச்சுப் புகை வெளியாகிறது.
- சூப்பர் கணனியின் வேகம் வினாடிக்கு ஃலாப்ஸ் (Flops) என்ற அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.
- பாம்பு நாக்கின் மூலம் வாசனையை உணர்கிறது.
- காண்டா மிருகத்தின் கொம்புகள் உண்மையில் எலும்புகள் அல்ல.அவை மிகக் கடினமான மயிரிழைகளால் உருவானவை.
- அனப்லெப்ஸ் என்ற மீனுக்கு இரண்டு கண்களில் நான்கு விழித்திரைகள் உண்டு.
- கடுமையான வெப்பத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்ள நீர் யானையின் தோலில் ஒருவித இளஞ்சிகப்பு நிறத்தாலான திரவம் சுரந்து, குளிர்ச்சியை கொடுக்கிறது.
- உண்ணி எனப்படும் தெள்ளுப்பூச்சி, ஓராண்டு வரையிலும் கூட பனிக்கட்டியினுள் உயிருடன் இருந்து, ஐஸ் கரைந்தபின் வெளிவரும் ஆற்றல் கொண்டது.
- உலகிலேயே உயரமான சிகரம் எவரெஸ்ரட்,இதன் உயரம் 8848 மீட்டர்கள்.
- திரை அரங்குகளே இல்லாத நாடு பூட்டான்.
- உலகிலேயே மிகப் பெரிய நூலகம் மாஸ்கோவில் உள்ள லெனின் நூலகம்.
- உலகிலேயே துனியில் செய்தித்தாள் வெளியிடும் நாடு ஸ்பெயின்.
- அஞ்சல் தலையில் தனது நாட்டின் பெயரைக் கொண்டிராத நாடு ஐக்கிய இராஜ்ஜியம்.
- உலகில் மிக நீண்ட நாள் வாழும் மிருகம் முதலை. இவை 300 ஆண்டுகள் வரை வாழுகின்றன.
- இரண்டு பிரதமர்களைக் கொண்ட நாடு சான்மரீனோ.
- உலகிலேயே ஜனாதிபதிக்கு ஒரு வருட காலம் பதவி கொண்ட நாடு சுவீட்சர்லாந்து.
- முதல் டிரக்டர் 1900 ஹால்ட் என்பவரால் செய்யப்பட்டது.
- முதன் முதலில் காகிதத்தினால் ரூபாய் நோட்டை அச்சிட்டு வெளியிட்ட நாடு சீனா.
- ஐக்கிய நாடுகள் சபை 1945, அக்டோபர் 24ல் தொடங்கப்பட்டது.
- உலகிலேயே வெப்பமான இடம் அசீசீயா (லிபியா).
- உலகிலேயே குளிந்த இடம் சைபீரியா (ரஷ்யா).
- விமானம் பறக்கும் உயரத்தை அளக்க உதவும் கருவியின் பெயர் ஆல்டி மீட்டர்.
- உலகிலேயே அதிக வயதில் பிரதமர் ஆனவர், மொகரார்ஜி தேசாய்.இவர் 1977ல் மார்ச் 24ல் பதவி ஏற்றபோது வயது 81.
- பூனையின் கண்பார்வை மனிதனைவிட எட்டு மடங்கு கூர்மையானது.
- ஒட்டகம் 1 கிலோமீட்டருக்கு அப்பால் உள்ள தண்ணீரை எளிதாக கண்டுபிடித்துவிடும்.
- கரையான் ஒரு நாளைக்கு முப்பதாயிரம் முட்டை இடும்.
- நத்தைகளால் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் வரை நித்திரை கொள்ள முடியும்.
- மனிதனுடைய காதுகளால் 130 டெசிபல் அளவு தான் பொறுத்துக்கொள்ள முடியும்

**நி. இலக்கியா நாட்சி**
கொ/ சைவமங்கையர் வித்தியாலயம்,
கொழும்பு 06.

# பேருடன் வாழ்வோம்!

*நாளைய தேசம் செய்யும்*
*நல்ல தலைவராய் நாங்கள்*
*வளமாய் பணிகள் செய்வோம்*
வாழ்க்கைப் பாடம் பயில்வோம்
அறியாமை இருள் போக்கும்
அறி வொளியாய் நாங்கள்
அற செயல்கள் புரிவோம்
ஆன்டவ னருளைப் பெறுவோம்
*வறுமை பிணி தீர்க்கும்*
*வஸந்த காற்றாய் நாங்கள்*
*வீறு கொண்டு வீசுவோம்*
*வெற்றி மணம் பூசுவோம்*
சீரொளி பரத்தி வைக்கும்
சிதறிய முத்துக்களாய் நாங்கள்
சீர் பெற்று சிறப்போம்
சிந்தையில் இதம் சேர்ப்போம்
*அறிவுக் கண்களைத் திறக்கும்*
*அன்னையின் புதல்வராய் நாங்கள்*
*பரிவு சிறகை விரிப்போம்*
*பாச வானில் பறப்போம்*
சிறுமைக் கொள்கை யழிக்கும்
சின்னஞ் சிறுசுகளாய் நாங்கள்
பெருமை மண்ணில் புதைப்போம்
பேருடன் வாழ்ந்து சிறப்போம்!

**வரக்கமுறையூர் ராசிக்**

# பொன்மொழிகள்

- ★ *நாம் எப்போதும் நம்பிக்கையை தளரவிடாமல்.. மேலும் நல்லதை செய்ய முயற்சிக்க வேண்டும்..!*
- ★ *நேரம் போய்க் கொண்டே தான் இருக்கும்.. எனவே நீ செய்ய வேண்டியதை செய்.. அதுவும் இப்போதே செய்.. காத்திருக்காதே..!*
- ★ *நீங்கள் புதிதாக ஒன்றை முயற்சிக்கும் போது "நீ ஒரு முட்டாள்" என்ற வார்த்தையை அதிகம் எதிர்கொள்ள தயாராகுங்கள்..!*
- ★ *எப்போதும் நீங்கள் நேற்றை பற்றியே சிந்திப்பீர்கள் என்றால் உங்களுக்கு நாளை சிறப்பாக இருக்காது..!*
- ★ *நேரம் போய்க் கொண்டே தான் இருக்கும்.. எனவே நீ செய்ய வேண்டியதை செய்.. அதுவும் இப்போதே செய்.. காத்திருக்காதே..!*
- ★ *நீங்கள் புதிதாக ஒன்றை முயற்சிக்கும் போது "நீ ஒரு முட்டாள்" என்ற வார்த்தையை அதிகம் எதிர்கொள்ள தயாராகுங்கள்..!*
- ★ *எப்போதும் நீங்கள் நேற்றை பற்றியே சிந்திப்பீர்கள் என்றால் உங்களுக்கு நாளை சிறப்பாக இருக்காது..!*
- ★ *கேள்விகளை கேட்பவன் ஐந்து நிமிடம் முட்டாள்.. கேள்வியே கேட்காதவன் வாழ்நாளில் எப்போதுமே முட்டாளாக இருப்பான்..!*
- ★ *வேறு எந்த தகுதியையும் விட விடாமுயற்சியே வெற்றிக்கு அவசியம்.. அது அனைத்தையும் வெல்லும்.. இயற்கையும் அதற்கு விதிவிலக்கு அல்ல..!*

**எஸ். அருந்திகா,**
புசல்லாவை.

# இவ்வார மழலை




**ஷாமிக் / அஸ்ரினா,**
மோதர,
மொறட்டுவ.






**நி. ரம்யா,**
தரம் 05, நூரி தமிழ் வித்தியாலயம்,
தெரனியகலை.



**எம்.இ. மொஹமட் மௌத்,**
தரம் 07, OKI சர்வதேச பாடசாலை,
கடுவளை



**வி. மனோஸ்ரீ,**
தரம் 09, நூரி தமிழ் வித்தியாலயம்,
தெரனியகலை.



**கே. சதுஷன்,**
தரம் 04, நூரி தமிழ் வித்தியாலயம்,
தெரனியகலை.

# மஞ்சரி விளையாட்டு

## கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் 2022

# இங்கிலாந்தில் பிரமாண்டமான ஆரம்பம்

இங்கிலாந்து பர்மிங்காமில் "2022 கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள்" வியாழக்கிழமை (28) பிரமாண்டமான முறையில் ஆரம்பமானது.

இப் போட்டிகள் ஆகஸ்ட் 8 வரை நடைபெறவுள்ளது.

பர்மிங்காம் அலெக்சாண்டர் மைதானத்தில் நடைபெற்ற ஆரம்ப விழா பல சிறப்பம்சங்கள நடைபெற்றன. அமைதிக்கான நோபல் பரிசு வென்ற மலாலா யூசுப்சாய் கல்வியின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், LGBTQ+ உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டார்.










இந்த நிகழ்ச்சியில், 72 நாடுகளைச் சேர்ந்த மொத்தம் 5054 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர். கொமன்வெல்த் போட்டியின் வரலாற்றில் முதல் முறையாக ஆடவர் பிரிவுகளை விட மகளிர் பிரிவில் அதிக போட்டிகள் நடைபெறுகிறது.

1998 காமன்வெல்த் போட்டிக்கு பிறகு முதல் முறையாக கிரிக்கெட் போட்டி, இந்த தொடரில் மீண்டும் ஆரம்பமாகிறது. இதில் இந்தியா,அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் உள்ளிட்ட மகளிர் கிரிக்கெட் அணிகள் மட்டும் பங்கேற்கிறது.

ஆரம்ப விழாவின் சிறப்பு அம்சமாக 10 அடி உயர அனிமேட்ரோனிக் காளை மைதானத்திற்கு வந்தது. இரும்பு மற்றும் இயந்திரத் தொழில்களுக்குப் புகழ்பெற்ற பர்மிங்காம் மற்றும் கொமன்வெல்த் ஆகியவற்றின் பன்முகக் கலாசாரத்தைக் காட்டுவதே வடிவமைப்பின் நோக்கமாக இருந்தது.

பின்னர் விளையாட்டு வீரர்களின் அணிவகுப்பு ஆரம்பமானது. இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பளுதூக்கும் வீராங்கனை இந்திக்க திஸாநாயக்க மற்றும் கிரிக்கெட் வீரர் சாமரி அத்தபத்து ஆகியோர் இலங்கை கொடியை ஏந்தியவாறு அணிவகுப்பில் சென்றனர்.

விளையாட்டு நேற்று ஆரம்பிக்கப்பட்டன. இந்தப் போட்டிக்காக 72 நாடுகளைச் சேர்ந்த 5000 விளையாட்டு வீரர்கள் 280 பதக்கங்களுக்காகப் போட்டியிடவுள்ளனர்.

## ஒருநாள் போட்டி எண்ணிக்கையில் மாற்றமில்லை ஐ.சி.சி. அறிவிப்பு

International Cricket Council

ஒரு நாள் போட்டி எண்ணிக்கையில் மாற்றம் செய்ய வேண்டிய தேவை ஏதும் ஏற்படவில்லை என ஐ.சி.சி. தலைமை செயல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இருபது ஓவர் கிரிக்கெட்டின் தாக்கத்தினால் சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் அழிவை நோக்கி சென்று கொண்டிருப்பதாக பாகிஸ்தான் முன்னாள் வீரர் வாசிம் அக்ரம், அவுஸ்திரேலிய வீரர் உஸ்மான் கவாஜா உள்ளிட்டோர் சமீபத்தில் குற்றம் சாட்டியிருந்தனர்.

இதனால் ஒரு நாள் போட்டிகளில் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) ஏதாவது மாற்றம் செய்யுமா என்ற கேள்வி எழுந்தது. ஆனால் 2023ம் ஆண்டு முதல் 2027ம் ஆண்டு வரையிலான வருங்கால போட்டி அட்டவணையில் நாடுகள் இப்போது கூட கணிசமான எண்ணிக்கையில் ஒரு நாள் போட்டிகளை சேர்த்துள்ளன. அதனால் வருங்கால அட்டவணையில், ஒரு நாள் போட்டி எண்ணிக்கையில் மாற்றம் செய்ய வேண்டிய தேவை ஏதும் வரவில்லை என்று ஐ.சி.சி. தலைமை செயல் அதிகாரி ஜெப் அலார்டிஸ் தெரிவித்துள்ளார்.

## கட்டார் பிபா உலகக் கிண்ண உதைப்பந்தாட்டம்

# 'ட்ரோன்'கள் மூலம் உச்சகட்ட பாதுபாப்பு





பிஃபா உலகக் கிண்ண உதைப்பந்தாட்ட தொடர் நவம்பர், டிசம்பர் மாதங்களில் கட்டாரில் நடைபெற உள்ளது. 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த போட்டியில் 32 அணிகள் பங்கேற்க இருக்கின்றன. சர்வதேச அளவில் அதிக ரசிகர்களை கொண்ட விளையாட்டு என்பதால் போட்டிக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், இந்த உலகக் கிண்ண போட்டிக்கு பலத்த பாதுகாப்பு அளிக்க 'ட்ரோன்'கள் பயன்படுத்தப்படவுள்ளன.

பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் 'செயற்கை நுண்ணறிவு மூலம் இயக்கப்படும் சிறிய ட்ரோன்களை' வீழ்த்துவதற்காக வலைகளை வீசும் ட்ரோன்கள் இந்த பகுதிகளைப் பாதுகாக்க உதவும்.

கட்டாரின் உள்துறை அமைச்சகத்துடனான ஒப்பந்தத்தைத் தொடர்ந்து ஃபோர்டெம் டெக்னாலஜிஸ் (Fortem Technologies) நிறுவனம் இதற்கான ட்ரோன்களை வழங்குகிறது.

பொதுவாக ட்ரோன் தாக்குதல்களால் ஏற்படும் அச்சுறுத்தல் குறித்து அதிகரித்துவரும் அச்சத்தை இந்த ஒப்பந்தம் பிரதிபலிக்கிறது என்று இந்த நிறுவனம் கூறுகிறது.

அதன் செயல்முறை கட்டமைக்கப்பட்ட பகுதிகளில் ட்ரோன்களை வீழ்த்துவதற்கு பாதுகாப்பான வழியாக இருக்கும் என்றும், ஆயுதங்களைப் பயன்படுத்தினால் ஏற்படக்கூடிய அபாயத்தைக் குறைக்கிறது என்று ஃபோர்டெம் கூறுகிறது. இத்தகைய ட்ரோன்கள் வலைகளை வீசுவதன் மூலம் அதன் இலக்கு ட்ரோனை வலையில் சிக்க வைக்கிறது. பின்னர் அது மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்லப்படலாம்.

பெரிய ட்ரோன்களுக்கு, ஒரு பாராசூட்டுடன் இணைக்கப்பட்ட ஒரு வலை ஏவப்படுகிறது. அதில் சிக்கிய 'இலக்கு ட்ரோன்கள்' மெதுவாக தரையில் விடப்படுகிறது.

உலகக் கிண்ணம் நடைபெறும் இடம் முழுவதும் மிகச் சிறிய ரேடார்களை பயன்படுத்தி இலக்குகள் அடையாளம் காணப்படுகின்றன, இது வான்வெளியின் முழுமையான பார்வையைத் தருகிறது என்று ஃபோர்டெம் தலைமை நிர்வாகியும் இணை நிறுவனருமான டிமோதி பீன் பிபிசியிடம் தெரிவிக்கிறார்.

உலகெங்கிலும் உள்ள பல்வேறு பாதுகாப்பு தளங்களில் ட்ரோன்கள் நேரடியாக செயல்பட்டு, பாதுகாப்பு அளித்ததாக அந்நிறுவனம் கூறுகிறது.

ஆனால் ரசிகர்களின் ஆரவாரத்துடன் ட்ரோன்களின் சலசலப்பு இருக்காது. ஏனெனில் இயந்திரங்கள் 'அந்த இடத்திலிருந்து ஒரு மைல் அல்லது அதற்கும் அப்பால்' தங்கள் வேலையைச் செய்கின்றன என்று பீன் மேலும் கூறினார்.

தீவிரவாதிகள் முன் திட்டமிடப்பட்ட விமானப் பாதைகளில் ட்ரோன்களை ஏவக்கூடும் என்று ஃபோர்டெம் நிறுவனம் கூறுகிறது.

தீவிரவாதிகள் ஜாய்ஸ்டிக்குகளைப் (Joystick) பயன்படுத்தாததே எங்கள் வணிகம் உயரக் காரணம். தீவிரவாதிகள் உங்கள் வாகன நிறுத்துமிடத்தில் ஜாய்ஸ்டிக் கொண்டு வந்து ட்ரோன்களை இயக்கமாட்டார்கள். இந்த ட்ரோன்கள் ப்ரோகிராம் செய்யப்பட்டவை... அதனால் அவற்றை தடுக்க முடியாது என்கிறார் பீன்.

# செஸ் ஒலிம்பியாட் தொடரில் நிறைமாத கர்ப்பிணியாக களமிறங்கும் வீராங்கனை



செஸ் ஒலிம்பியாட் தொடரில் நிறைமாத கர்ப்பிணியாக களமிறங்கவுள்ள இந்திய வீராங்கனை அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளார். 44வது செஸ் ஒலிம்பியாட் தொடரில் சென்னை மாமல்லபுரத்தில் கோலாகலமாக ஆரம்பமானது.

188 நாடுகளில் இருந்து சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் இந்த போட்டியில் பங்கேற்றுள்ளனர்.

இந்த தொடருக்காக இந்தியாவின் சார்பில் மொத்தம் 6 அணிகள் களமிறக்கப்படுகின்றன. ஓபன் பிரிவில் 3 அணிகளும், பெண்கள் பிரிவில் 3 அணிகளும் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதில் பெண்கள் ஏ அணியில் இடம்பெற்றுள்ளவர் தான் கிராண்ட் மாஸ்டர் ஹரிகா துரோனவள்ளி. 9 வயதிலேயே தேசிய சாம்பியன் பட்டம் வென்ற இவர், 8 மாத கர்ப்பிணியாக களமிறங்குகிறார்.

### யார் இந்த ஹரிகா துரோனவள்ளி

2011ம் அண்டு கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற ஹரிகா, இதுவரை 2012, 2015, 2017 என மூன்று முறை உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் பதக்கம் வென்று அசத்தியுள்ளார். செஸ் உலகில் வெற்றி நடை போடும் இவரை பாராட்டி மத்திய அரசு அர்ஜுனா விருது, பத்ம ஸ்ரீ விருதுகளை வழங்கி கௌரவித்தது. இப்படிபட்ட பெருமை கொண்ட ஹரிகா, இந்த முறை எப்படியாவது தங்கம் வென்றே தீர வேண்டும் என்ற முனைப்புடன் களமிறங்குகிறார். இது அவர் சந்திக்கப்போகும் 9வது செஸ் ஒலிம்பியாட் தொடராகும். 13 வயதில் இருந்து செஸ் ஒலிம்பியாட்டில் தங்கம் வெல்ல போராடி வருவதால், இந்த முறை சொந்த நாட்டில் வென்றுவிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.



ஹரிகாவின் உடல்நிலையை கருத்தில் கொண்டு போட்டி அரங்கத்தில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சிறப்பு ஆம்புலன்ஸ் வாகனம், மருத்துவக்குழு என தனி கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து பேசிய அவர், மனரீதியாக எந்தவித மாற்றமும் இன்றி சகஜமாக இருக்கிறேன். உடல் ரீதியாக சிக்கல்கள் வரலாம். எனினும் அதனை மீறி வெல்வேன் என நம்பிக்கையுள்ளதாக கூறியிருக்கிறார்.

## அக்கரைப்பற்று ஹிஜ்றா விளையாட்டு கழகம் சம்பியன்

அக்கரைப்பற்று வடக்கு
தினகரன் நிருபர்



அக்கரைப்பற்று FUN BOYS விளையாட்டு கழகத்தின் ஆறாவது ஆண்டை முன்னிட்டு நடாத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டியில் அக்கரைப்பற்று ஹிஜ்றா விளையாட்டு கழகம் 25 ஓட்டங்களினால் வெற்றி பெற்று சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

30 அணிகள் பங்கேற்ற இச் சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டி ஞாயிற்றுக்கிழமை (03) அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இப்போட்டியில் அக்கரைப்பற்று 'ட்ரிபிள் பீ' (BBB) அணியை எதிர்த்தாடிய அக்கரைப்பற்று ஹிஜ்றா அணி 25 ஓட்டங்களினால் வெற்றி பெற்று பணப்பரிசு மற்றும் சம்பியன் கிண்ணத்தையும் சுவிகரித்துக் கொண்டது.

இச்சுற்றுத்தொடரின் தொடர் நாயகனாக ஹிஜ்றா அணியின் முஹம்மட் இப்திகாரும், இறுதிப்போட்டியின் ஆட்ட நாயகனாக முஹம்மட் ஹம்தானும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

அக்கரைப்பற்று மாநகர சபையின் உறுப்பினரும், அக்கரைப்பற்று உதைபந்தாட்ட லீக்கின் தலைவருமான ஏ.ஜீ. அஸ்மி அவர்களினால் வெற்றிக்கிண்ணம் மற்றும் பணப்பரிசும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜூலை மாதம் 31ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# கண்ணுக்குத் தெரியாத ரோஜா

**எஸ்.எஸ்.இசட் .கான்**




கதிரவனின் காலைக் கதிர்கள் அந்த எதிர் மாடிக்கட்டிடத்தின் மீது கீற்றுக்களாக பதிந்து கலை ஓவியம் தீட்டிக்கொண்டிருந்தன. ஜன்னலைத் திறந்து அந்த இயற்கை அழகை சற்று ரசித்த நளீரின் கவனத்தைக் கவர்ந்தது அந்த எதிர்மாடிக் கட்டிடத்தின் மூன்றாம் மாடியின் ஜன்னலில் சாய்ந்திருந்த அந்த அழகிய முகம்.

ஒரு கணம் தன்னை மறந்து அந்த அழகு தேவதையை ரசித்த நளீரின் கண்கள் அவளது கண்களை நேருக்கு நேராக சந்தித்தன. ஒரு கணம் கண்களின் சந்திப்பில் தன்னை மறந்த நளீர் அவள் உடனே ஜன்னலை இழுத்து மூடிவிட்டு மறைந்ததும் தான் சுய உணர்வுக்குத் திரும்பினான்.

நளீர் கொழும்பிற்கு வந்த முதல் நாள் அது. அவனது பட்டப்படிப்பை வெற்றிகரமாக முடித்து நல்லதொரு தனியார் நிறுவனத்தில் பெரிய சம்பளத்தில் தொழிலில் சேர்ந்த அவனுக்கு எல்லாமே நிறைவாக முடிந்தன எனலாம்.

மற்ற பல்கலைக்கழக மாணவர்களைப்போல் காதல் கும்மாளம் என்று எதுவுமே இல்லாமல் தனது இலட்சியமும் வெற்றியும் மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு விடாமுயற்சியோடு முன்னேறிய நளீர் தனது தொழிலுக்கு செல்லும் முதல் நாளன்று ஒரு பெரும் உற்சாகத்தோடு இருந்தான். அவனது அந்த உற்சாகத்துக்கு புது மெருகேற்றியது அந்த அழகிய முகம்.

ஒருவரது வாழ்க்கைப் பாதையின் திசையை தீர்மானிக்கும் அம்சங்கள் மூன்று என்று அடிக்கடி தன் நண்பர்களிடம் சொல்லுவான் நளீர். ஒன்று ஒருவர் அடையும் கல்வியின் அளவு. இரண்டு அவன் தேர்ந்தெடுக்கும் தொழில். மூன்று அவன் தேர்ந்தெடுக்கும் மனைவி.

அவனைப் பொறுத்தவரை முதல் இரண்டு கட்டங்களையும் வெற்றியாகக் கடந்து விட்டான். அடுத்து இருப்பது திருமணம் மட்டுமே. இதிலும் வெற்றியடைய வேண்டும். வாழ்க்கை எந்த இடைஞ்சல்களும் இல்லாமல் அமைதியாகவும் செல்வச்செழிப்பானதாகவும் அமைய வேண்டும் என்பதே அவனது நோக்கம்.

நடுத்தர குடும்பமாக இருந்தாலும் கஷ்டங்கள் அதிகமற்ற சிறிய குடும்பத்தில் பிறந்த நளீர் தனது இலக்கை அடைவதில் தீவிர இலட்சியவாதி. எனவே அவனது இலட்சியத்தை அடையும் வரை எந்தக் காதல் சலனங்களுக்கும் ஆளாகாமல் கட்டுக்கோப்புடன் நடந்து வந்தான். தான் உண்டு தனது இலட்சியம் உண்டு என்று ஒரே குறிக்கோளுடன் இயங்கிய நளீர் தனது வாழ்க்கை மற்றவர்கள் பாராட்டும் வண்ணம் சிறந்து விளங்க வேண்டும் என்பதில் மிகவும் சுயஉறுதியுடன் திகழ்ந்தான்.

கொழும்பில் அமைதியான சூழலில் அமைந்த அந்த மாடியை வாடகைக்கு எடுத்துக் குடியேறிய நளீர் அன்று முதன் முதலில் சந்தித்தது அவளது கண்களைத் தான்.

அவனுக்கே அதிசயமாக இருந்தது அவன் எப்படி தனது கட்டுப்பாட்டை மறந்து அவளது முகத்தைக் கண்டதும் தன்னை இழந்து அவளது முகக் கவர்ச்சியில் கவரப்பட்டு விட்டான் என்று.

ஒருவேளை இது தான் காதலா! இந்த புதிய உணர்வு சற்று வித்தியாசமானதாக இருந்தது அவனுக்கு.

முதல் நாள் வேலைக்கு சென்றதும் வேலையின் இடையில் அவனது நினைவுத்திரையில் அவளது முகம் தோன்றிக் கொண்டே இருந்தது. அவளது முகம் அவனை ஆட்சி செய்ய ஆரம்பித்து விட்டது எனலாம்.

மாலை வீடு திரும்பிய நளீர் ஜன்னலைத் திறந்து எதிர் மாடியினை நோக்கினான். ஜன்னல் மூடியே இருந்தது. ஜன்னல் திறக்காதா என்ற ஏக்கத்தோடு மீண்டும் மீண்டும் தனது ஜன்னல் அருகே வந்து வந்து தேடிய அவனது கண்களுக்கு மிகவும் ஏமாற்றமாகவே இருந்தது.

அடுத்த நாள் காலை நளீர் ஜன்னலை திறக்கவும் அவனது முகம் மகிழ்ச்சியில் ஆழ்ந்தது. அந்த அழகிய முகம் ஜன்னலில் உதயமாகியது. அவன் அவளை பார்ப்பதை உணர்ந்தவள் போல் முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டு தன் வீட்டின் உள்ளே சட்டென்று சென்று விட்டாள்.

நாள் தோறும் அரங்கேறும் நாடகம் போல தினமும் அவன் அவளைப்பார்ப்பதும் அவள் சட்டென்று உள்ளே செல்வதுமாக இது தொடர்ந்தது. இனம் புரியாத உணர்வில் இனம் தெரியாத அந்த உயிரைத் தேட ஆரம்பித்தது அவனது இதயம்.

நாட்கள் செல்ல செல்ல நளீரின் மனதில் அவள் படிப்படியாக பதிய ஆரம்பித்தாள். அவளைப் பார்த்து கண்ணோடு கண் சேர்வதில் இருக்கும் அந்த சந்தோஷத்தை அவனால் இழக்க முடியவில்லை. இப்படி கண்ணோடு கண்ணாக ஆரமபித்த அந்த தொடர்ப்பு மாதங்கள் சில தொடர்ந்த பின்னர் புன்னகை பறிமாறலாக வளர்ந்தது. எனினும் அதற்கு மேலாக அவளைப்பற்றி எதையும் தெரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு அவனுக்கு இருக்கவில்லை.

ஊருக்குப் புதியவனான நளீருக்கு நண்பர்களோ தெரிந்தவர்களோ ஒருவரும் அந்த இடத்தில் இருக்கவில்லை. எனவே அவளைப்பற்றி விசாரித்து தெரிந்துக் கொள்ளும் வழி கிடைக்கவில்லை. அதே நேரம் அவளைப்பற்றி தெரிந்துகொள்ள வேண்டிய கட்டாயத்தேவை மடடும் எப்படியோ வந்து விட்டது.

ஏனென்றால் அவனது வீட்டில் அவனுக்கு பெண்பார்க்கும் படலத்தை ஆரம்பித்துவிட்டார்கள். எனவே ஒரு முடிவெடுக்க வேண்டிய காலத்தின் தேவையை நளீரால் உணர முடிந்தது.

தனது மனதைக் கவர்ந்த அவளது கைபிடிக்க தீர்மானித்தான் நளீர். அவனைப் போலவே அவளும் அவனை விரும்புகிறாள் என்பதில் சந்தேகமேயில்லை. அவளது கண்களிலே தெரிந்த கனிவும் அவள் புன்னகையில் இருந்த உணர்வும் அவளும் அவனை விரும்புகிறாள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என அவனை நம்ப வைத்தன. எப்படி அவளை அணுகுவது! எப்படி அவளிடம் தனது காதலை எடுத்துச் சொல்லலாம். நளீருக்கு வழி தெரியவே இல்லை.

உதவிக்கு யாராவது இருந்தால் நன்றாக இருக்குமே என ஏங்கினான். எவரிடமும் சொல்லக்கூடிய விடயமா இது! அப்படியே சொன்னாலும் தனது சுய கௌரவத்துக்கு பாதகம் விளையாமல் சொல்ல வேண்டுமே!

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது அந்தக் கண்களின் காதல். அதற்கு ஒரு யதார்த்த உறவைக் கொடுக்க அவனது மனம் துடித்தது.

அந்த மாடிவீட்டுத் தொகுதியில் வாழ்பவர்கள் எல்லோருமே வசதியானவர்கள் என்பதில் சந்தேகமே இல்லை. அந்தக் குடியிருப்பில் வாழ்வதென்பது சாதாரண மனிதர்கள் நினைத்தும் பார்க்க முடியாது. அதனால் நிச்சயமாக அவளும் நல்ல வசதியுள்ள குடும்பத்தை சேர்ந்தவளாகத் தான் இருக்க வேண்டும்.

அதனால் அவளை திருமணம் செய்வதில் அவனது இலட்சியத்துக்கு எந்த இடைஞ்சலோ இடையூறோ ஏற்படாது என்பது நளீரின் கணிப்பு. ஒருவேளை அவளுக்கு ஏதாவது ஒரு இடத்தில் திருமணம் செய்து விட்டார்கள் என்றால்! நளீரின் மனதில் அந்த சிந்தனை வந்ததும் அவனுக்குள் ஒரு பதட்டமும் தோன்றியது. எனவே இனி சற்றும் தாமதிக்கக் கூடாது என்று முடிவெடுத்தான் நளீர்.

அடுத்த நாள் வெள்ளிக்கிழமை தனது மாடிக் கட்டிடத்தின் வெளியே வந்து எதிர் மாடி வழியாக போகிறவர்கள் வருகிறவர்கள் எல்லோரையும் நிதானமாகக் கவனித்துக் கொண்டிருந்தான் நளீர்.

அந்த மாடிக்கு செல்லும் நுழைவாயிலில் நுழைந்த ஒரு முதியவரை அவன் உற்று நோக்கினான். அந்த மனிதர் தான் அந்த ஜன்னலில் தெரியும் அந்த அழகிய தேவதையின் தந்தையாக இருக்க வேண்டும்.

அவரைத் தொடர்ந்து சென்ற நளீர் அவர் ஏறிய லிப்டிலேயே ஏறிக்கொண்டான். இலக்கம் நான்கு மின்னியதும் அவர் லிப்டில் இருந்து இறங்குகையில் தனது ஊகம் சரியென்று உணர்ந்தவனாக அவரைப் பின் தொடர்ந்தான் நளீர். அவனைத் திரும்பிப்பார்த்த அவர் ஆச்சியத்தோடு கேட்டார். "நீங்க யாரைப் பார்க்க வேண்டும"?.

அப்பொழுது தான் நளீர் உணர்ந்தான் அந்தந்த மாடிவீடுகளுக்கு எதிராக நிற்கும் வண்ணம் தான் லிப்ட் சேவை அமைந்துள்ளது என்று.

இந்த எதிர்பார்க்காத திருப்பத்தால் சற்று நிலைக்குழைந்திருந்த நளீர் தன்னை ஓரளவு சீர் செய்துக் கொண்டு அமைதியாகக் கூறினான் : "உங்களோடு கொஞ்சம் பேசலாமா".

"வாங்க உள்ளே போய் பேசலாம்,நீங்கள் இந்த குடியிருப்புக்கு புதிது போல" எந்த ஊர்" என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனார் முதியவர்.

"நான் மட்டக்களப்பு! ஆனால் இப்போது இங்கே கொழும்பில் தான் தொழில் பார்க்கிறேன்." என்று தன்னைப் பற்றிக் கூறிய நளீர் அந்த வரவேற்பறையை ஒருகணம் நோட்டமிட்டான்.

"கொஞ்சம் இருங்க. அமைதியாக பேசலாம்" என்று கூறிவிட்டு உள்ளே சென்றார் அந்த மனிதர்.

நளீரின் கண்கள் அந்த வரவேற்பறையை சுற்றி ஆராய்ந்தன. கலைவடிவமாக அமைந்திருந்தது அந்த வரவேற்பறை. எந்த இடத்தில் எது இருக்க வேண்டுமோ அந்த இடத்தில் அது இருக்கும் வண்ணம் நன்கு சீராக வைக்கப்பட்டிருந்தன.

சுவரில் இருந்த ஒரு நெஞ்சளவிலான குடும்பப்படம். அதில் அந்த மனிதர் அவரது மனைவி மகன் ஆகியோரோடு இருந்தது அந்த தேவதைதான்.

"தம்பி என்ன சாப்பிடுறீங்க?கொபி? டீ? என்ன சாப்பிடுறீங்க" என்று அன்போடு விசாரித்தார் அந்த மனிதர்.

" நோ புரப்ளம் சார்!"

"வீட்டுக்கு முதல் முறையாக வந்திருக்கிறீங்க, கட்டாயம் ஏதாவது குடிக்கணும்" என்று உள்ளே சென்று தேனீரோடு திரும்பினார் அவர்.

தேனீரைக் கையில் ஏந்திய நளீர் அதனை சற்று பருகியவனாக தொடரலானான் : "சார் உங்கட வரவேற்பறை ரொம்ப அழகா கலையாக இருக்கு. இன்டீரியர் டிசைனர் யாராவது அலங்காரப் படுத்தியிருப்பார்கள் என்று நினைக்கிறேன்"

அவன் சொல்லி முடிக்கவில்லை. அவர் மனம்விட்டு சிரித்தவாறு கூறினார்: "நோ நோ,இதுக்கெல்லாம் எதுக்கு இண்டீரியர் டிசைனர் எல்லாம் எனது மகளின் கைவண்ணம் தான்"

நளீரின் உள்மனம் பெருமிதம் அடைந்தது. அவன் மனதைப் கொள்ளைக் கொண்ட தேவதை வெறும் அழகி மட்டுமல்ல. அவள் ஒரு திறமைமிக்க கலையுணர்வு கொண்ட பெண் என்பதை நினைத்ததும் பெரும் பூரிப்பாகவும் இருந்தது. அவளை மனைவியாக அடைவதில் அவன் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று எண்ணினான்.

"ஓ உண்மையிலேயா! உங்கட மகள் ரொம்ப கலைஉணர்வு நிறைந்தவங்க என்று நினைக்கிறேன்" என்று அவன் சொன்னதும் அந்த மனிதரின் குரலில் விரக்தி எதிரொலித்தது.

"எல்லா திறமையும் அழகும் இருந்தும் என்ன பயன் தம்பி, அவளால் மற்ற பெண்கள் போல சமூகத்தில் பழக முடியாதவளாக இருக்கிறாளே" என்று மனம் நொந்து சொன்னார்.

நளீருக்குப் புரியவில்லை. அவன் அவரை கேள்விக்குறியோடு பார்க்கவும் அந்த வீட்டின் கதவு மின்விசை அடிக்கவும் சரியாக இருந்தது.

அவர் கதவை திறக்கவும் உள்ளே ஒரு சக்கர நாற்காலியை தள்ளிக் கொண்டு ஒரு பெண் வரவும் சரியாக இருந்தது. அந்தச் சக்கரநாற்காலியில் அமர்ந்திருந்த அந்த பெண்ணை பார்த்தான். அதிர்ச்சியாக இருந்தது அவனுக்கு. ஜன்னலில் தெரிந்த அதே முகம். அதே கண்கள்.

அவனால் ஒருகணம் நிதானமாக இருக்க முடியவில்லை.

யாரைப்பற்றி இத்தனை மாதங்களாக கற்பனையில்மிதந்துக்கொண்டிருந்தானோ அதே அழகிய பெண்தான் இப்போது அவன் முன்னால் கால்களை இழந்த முடமாக சக்கர நாற்காலியில் இருந்தாள்.

அவளது கண்கள் ஒருகணம் அவனது கண்களை சந்தித்தன. அதில் எந்த சலனமுமில்லை. அதே கனிவான பார்வை. மின்னல் போல தோன்றி மறைந்த அதே புன்னகை. சட்டென்று அவள் உள்ளே மறைந்தாள்.

நீண்ட கனவிலிருந்து விழித்தெழும்பியது போல அவன் தன் சுயஉணர்வுக்கு வந்தான்.

அவனை ஆட்டிப்படைத்த காதல் உணர்வுகள் பெரும் வெயிலில் வேகமாக மறையும் பனித்துளிகள் போல எங்கோ மங்கி மறைந்தன.

வாழ்க்கையின் முதல் இரண்டு கட்டங்களையும் வெற்றியாகத் தாண்டியது போல இந்த திருமண விடயமும் சீராக அமைய வேண்டும் என்று அவனது சுயஅறிவு அவனுக்குக் கட்டளையிட்டது.

அப்படியென்றால் அவனுள் எழுந்த அந்தக் காதல்! ஓ அதுவா,அது அவனைப் பொறுத்த மட்டிலும் அவனைப்போன்ற நவீனகால இலட்சியவாதிகளைப் பொறுத்த மட்டிலும் வெறும் தப்புக்கணக்குத் தான்.

"என்ன ஆழமாக யோசிக்கிறீங்க! நீங்க வந்த விடயத்தை சொல்லவே இல்லையே என்று வினவினார் அந்த மனிதர்.

"நான் உங்கள் மகளை மனதார காதலித்தேன். அவளையே திருமணமும் செய்ய விரும்புகிறேன். அவள் முடமாக இருந்தாள் என்ன நான் அவளைக் காப்பாற்றுவேன்' என்று திடமாகச் சொல்ல அவன் என்ன கடந்தகால இலக்கியங்களில் வரும் கதாநாயகனா என்ன!

நவீன இலட்சியவாதி! அவனது குறிக்கோள் எல்லாம் அவனது முன்னேற்றம் மட்டுமே. எனவே தந்திரமாக அந்த மனிதரிடம் சொன்னான் "சார் எனக்கு இங்கே யாரையும் தெரியாது. எனவே ஒரு ரிபரன்சுக்கு உங்கட பெயர் விபரங்களை தர முடியுமா!"

"ஓ இது என்ன பெரிய விசயம். இந்தாங்க என்னுடைய விசிடிங் கார்ட். தாராளமாக யாருக்கும் கொடுங்க"

"நன்றி சார்! இதோ என்னுடைய கார்ட்" என்று தன்னுடைய கார்டையும் கொடுத்த அவன் அவரிடம் இருந்து விடை பெற்றான்.

அதன் பின் , அந்த ஜன்னலை அவன் பார்க்கவேயில்லை. அவனைப் பொறுத்த வரை காதல் ஒரு தப்புக்கணக்கு.

அவளைப் புரிந்து கொள்ளும் இதயம் அவனிடம் இல்லை.

அவள் அவனது கண்ணுக்குத் தெரியாத ஒரு ரோஜா.

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 34

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | | 03 | 04 | ■ | 05 | 06 |
| 07 | | ■ | 08 | | 09 | ■ | |
| ■ | ■ | 10 | | | | ■ | |
| ■ | 11 | | | | | ■ | ■ |
| 12 | 17 | | ■ | ■ | 13 | 14 | 15 |
| 16 | | ■ | 17 | 18 | ■ | 19 | |
| 20 | | 21 | ■ | 22 | 23 | ■ | |
| 24 | | | | ■ | 25 | | |

**திரு/திருமதி.செல்வி** ..............................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
**முகவரி** ..............................
..............................
..............................

.................... ....................
**திகதி** **கையொப்பம்**

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
**போட்டி இல. 34**
**த.பெ.இல.834. கொழும்பு**

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 34

**இடமிருந்து வலம்**

*(01)* நீண்ட ஆயுள்.
*(05)* அருமையான வாய்ப்பு. அதிர்ஷ்டம்.
*(07)* தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்டிருப்பவர்.
*(08)* திருமணத்தின் முன் ஒரு ஆணின் நேசிப்புக்குரியவள் குழம்பி விட்டாள்.
*(10)* ஜன்னல்.
*(11)* சிறுவர்களின் விளையாட்டுப் பொருள். (குழம்பியுள்ளது)
*(12)* தமது இடங்களிலிருந்து வெளியேறி வேறு இடங்களில் தஞ்சம் புகுந்தோர்.
*(13)* துணையாக யாருமற்ற நிலை.
*(16)* ஒன்றுக்கு மேற்பட்டவை.
*(17)* தோழன் அல்லது இணைந்திருப்பவர்.
*(19)* எப்போதும்.
*(20)* நெல் பயிரிடும் நிலம். (குழம்பியுள்ளது)
*(22)* பெண் திரும்பிவிட்டாள்.
*(24)* இளம் காளைமாடு. (குழம்பியுள்ளது)
*(25)* கோபம்.

**மேலிருந்து கீழ்**

*(01)* தலைமுடி.
*(02)* மன்மதனின் மனைவி.
*(03)* குளிர்ச்சி.
*(04)* அவலட்சணம்.
*(06)* பல்லக்கு
*(09* எண்ணத்தின் நிறைவேற்றம். (குழம்பியுள்ளது)
*(10)* வாகன ஓட்டுநர்.
*(11)* சூரியன்.
*(12)* அடைக்கலம் அல்லது பாதுகாப்பு.
*(14)* வாரத்தில் ஒருநாள். (தலைகீழ்)
*(15)* பொது நிகழ்வு, விளையாட்டுக்குரிய திறந்தவெளி இடம்.
*(18)* செவி.
*(21)* உள்ளுறுப்புகளில் ஒன்று. (தலைகீழ்)
*(23)* ஒரு தமிழ் மாதம்.

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 33

### விடைகள்

**இடமிருந்து வலம்**

(01) குசலம் (03) உதவி (5) பேடு
(06) கடுகு (07) குரங்கு (10) பக்தி
(12) கடுவன் (13) பளை (14) காசு
(15) மது (17) பந்தம் (19) கம்பு
(21) துவி (23) புள்ளி (24) சாந்தம்

**மேலிருந்து கீழ்**

(01) குபேரன் (02) சடுகுடு (03) உடுக்கு
(04) தகுதி (08) குவளை (09) பங்கம்
(11) பரிசு (14) காபந்து (15) மகள்
(16) தும்பு (18) தகாத (20) புளி
(22) சாவி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 32

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
**எஸ். விஷாஷினி,**
91/1,
பிரதான வீதி,
கொழும்பு 11.

**இரண்டாம் பரிசு**
**ஏ. சந்தியாகு,**
34/12, செமனரிவத்த ரோட்,
தென்னக்கும்புர,
கண்டி.

**மூன்றாம் பரிசு**
**எம்.வி.எப். பஸீனா,**
இல. 71, மரிக்கார் வீதி,
களுத்துறை தெற்கு,
களுத்துறை.

### பாராட்டு பெறுவோர்

**1. ஆர். ராஹினி,**
கோவிலடி, மொறகொல்ல வீதி,
வெளிமடை.

**2. வி. பாலேந்திரா,**
15/2B, தயா வீதி,
வெள்ளவத்தை,கொழும்பு 06.

**3. சாஹிராபானு லியாவுதீன்,**
இல. 12/6, சென். பீற்றர்ஸ் லேன்,
நிந்தனி, புத்தளம்.

**4. ஏ.எல். அப்துல் ஜலீல்,**
61/1A, மஹபுத்கமுவ,
கொட்டிகாவத்தை.

**5. கஸ்தூரி கலியபெருமாள்,**
2/27A, வெலிக்கந்தை,
கண்டி.

**6. எம்.டபிள்யூ.எம். நபாஸ்,**
ஹஸன்ஸ்தான்,
நாங்கல்ல.

**7. கே. ஹெலன்குமார்,**
ட்றூப் எஸ்டேட்,
தலவாக்கலை.

**8. ஏ.எல்.ஏ. அஸீஸ்,**
இல. 17A, சிறிமல் மாவத்தை,
தெஹிவளை.

★ ★ ★

# கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆடை ஏற்றுமதி வருவாய் 30%ஆல் அதிகரிப்பு




கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது மே 2022இல் ஆடை ஏற்றுமதி வருமானம் 446 அமெரிக்க டொலராக அமைந்திருந்ததுடன் அது 30% அதிகரிப்பாக அமைந்திருந்ததை அடுத்து, கூட்டு ஆடை சங்கங்களின் மன்றம் (JAAF) தொழில்துறையில் உள்ள அனைத்து பங்குதாரர்களின் சிறந்த பங்களிப்பைப் பாராட்டியது, நாட்டின் ஆடைத் துறையானது முன்னெப்போதுமில்லாத சவால்களை எதிர்கொண்டு அதன் இலக்குகளை அடைவதில் தொடர்ந்து தனது பங்களிப்பை வழங்கி வருவதையும் பாராட்டியுள்ளது.

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) சுமார் 6% பங்களிப்பதோடு, அனைத்து ஏற்றுமதிகளில் ஏறக்குறைய பாதி பங்களிப்பை வழங்குவதால், ஆடைத் தொழில் தேசிய பொருளாதாரத்தின் முதுகெலும்பாக அமைகிறது. ஆற்றல் வழங்கல் மற்றும் உற்பத்திப் பொருள் நடவடிக்கைகளில் ஏற்படும் இடையூறுகள் காரணமாக தொழில்துறை தொடர்ந்து குறிப்பிடத்தக்க தடைகளை எதிர்கொள்வதால், துறையின் ஏற்றுமதி வருவாய் மே 2022க்குள் 16% முதல் 2.2% வரை வளரும் என எதிர்பார்க்கப்படுகிறது.



இது குறித்து கருத்து தெரிவித்த JAAF பொதுச் செயலாளர் யொஹான் லோரன்ஸ், "2022ஆம் ஆண்டின் இறுதிக்குள் தொழில்துறையின் இலக்கான 6 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டுவோம் என்று நம்புகிறோம். எவ்வாறாயினும், முதலில் கடக்க வேண்டிய குறிப்பிடத்தக்க சவால்கள் உள்ளன என்பதை நாங்கள் நன்கு அறிவோம். எனவே, தொழில்துறையில் செயல்பாடுகளின் தொடர்ச்சிக்கு சாத்தியமான அனைத்து ஆதரவையும் வழங்குவது முக்கியம்.

"பெரிய ஆடை உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்தியைத் தக்கவைத்துக்கொள்வதை உறுதிசெய்வதைத் தவிர, அன்றாட நடவடிக்கைகளில் கடுமையான சவால்களை எதிர்கொள்ளும்தொழில்துறையின் முக்கிய பிரிவான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆடை உற்பத்தியாளர்களுக்கான ஆதரவிற்கு முன்னுரிமை அளிப்பது அவசியம். " என அவர் தெரிவித்தார்.

நாடு தற்போது எதிர்கொள்ளும்முன்னெப்போதும் இல்லாத நிச்சயமற்ற நிலை, ஸ்திரமற்ற உலகளாவிய சந்தை நிலைமைகள் மற்றும் அதிகரித்து வரும் மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்திக்கான செலவுகள் போன்றவற்றுக்கு மத்தியிலும், இலங்கையின் ஆடைத் தொழில்துறையானது தேசிய பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளது. தற்போதைய நெருக்கடிக்கு மத்தியிலும், ஏற்றுமதி செயல்திறனில் உள்ள உயர் போக்குகள், ஜூன் 2022 வரை ஆண்டுக்கு ஆண்டு 17% வளர்ச்சியைப் பதிவு செய்தல் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் (FDI) தொடர்ச்சியான வரவு காரணமாக இலங்கையில் ஆடைகள் தொடர்பான நேர்மறையான அணுகுமுறை இன்னும் நாட்டிற்குள் காணப்படுகின்றது. 94 மில்லியன் அமெரிக்க டொலர் ஆடை முதலீட்டில், 2022ஆம் ஆண்டில் ஆடைத் துறையின் விரிவாக்கத்திற்காக இதுவரை 73 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்புள்ள முதலீடுகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறந்த நிதிப்பெறுபேறுகளைப் பதிவுசெய்துள்ள AMF

1962 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இலங்கையின் பழமையான நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமான அசோசியேட்டட் மோட்டர் ஃபினான்ஸ் கம்பனி பிஎல்சி (AMF), 2021/22 நிதியாண்டில் சிறந்த நிதிப் பெறுபேறுகளைப் பதிவு செய்திருந்தது.

உறுதியற்ற பொருளாதார சூழலிலும் இவ்வாறு உயர்ந்த பெறுபேறுகளை பதிவு செய்திருந்தமை விசேட அம்சமாகும். ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனத்தின் அர்ப்பணிப்பான பணியாளர்கள் மற்றும் தூர நோக்குடைய நிர்வாக தந்திரோபாயங்களினூடாக, நிறுவனத்தின் வரிக்கு முந்தைய இலாபம் ரூ. 492 மில்லியனாக உயர்ந்திருந்தது. வைப்புக்கான திரள்வு சொத்துக்களின் விகிதம் 37.65% ஆக காணப்பட்டது.

இதனூடாக, நிறுவனத்தின் ஆரோக்கியமான நிதி நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன், திரள்வு சொத்துக்களினூடாக தமது கடப்பாடுகளை செலுத்தித் தீர்க்கக்கூடிய ஆற்றலைக் கொண்டிருக்கும்.



2021 ஆம் ஆண்டில் தனது பயணத்தில் AMF இன் உரிமை வழங்கல் ஊடாக ரூ. 500 மில்லியன் பங்குகள் வழங்கலுக்கு மிகைக் கோரல் பதிவாகியிருந்தது. இதனூடாக இலங்கை மத்திய வங்கியின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்தின் பிரதான மூலதன தேவைப்பாடுகள் முழுமையாக உறுதி செய்யப்பட்டிருந்தன.

உரிமை வழங்கல் மிகைக் கோரலை பதிவு செய்திருந்தமையினூடாக, உறுதியடைந்து வரும் நிதி நிலை மற்றும் AMF மீதான நம்பிக்கை மற்றும் ஐந்தாண்டு தந்திரோபாயத் திட்டத்துக்கமைய நிறுவனத்தினால் உறுதியாக முன்னேற்றத்தை எய்தக்கூடிய திறன் போன்றன உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதன்பிரகாரம், மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட காலப்பகுதியில், கம்பனியின் பிரதான மூலதனம் ரூ. 2.624 பில்லியனாக உயர்ந்திருந்தது. நிலை I மற்றும் நிலை II மூலதன விகிதங்களும் முறையே 14.9% மற்றும் 15.8% வளர்ச்சியை பதிவு செய்திருந்தன. நிதி வினைத்திறன் பற்றி கலந்துரையாடுகையில், AMF இன் பிரதம நிறைவேற்று அதிகாரி ரி.எம்.ஏ. சலே கருத்துத் தெரிவிக்கையில், "2021/22 நிதியாண்டில் நாம் நிர்ணயித்திருந்த இலக்குகளை எய்தி அவற்றை மிஞ்சியுள்ளோம் என்பதை எமது பங்காளர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு அறியத்தருகின்றோம். சகல பங்காளர்களுக்கும் சிறந்த பெறுமதிகளைப் பெற்றுக் கொடுப்பதனூடாக, எம்மால் நிதியாண்டை உயர்ந்த பெறுமதியை பதிவு செய்ய முடிந்தது." என்றார்.

ஆர்பிகோ ஃபினான்ஸ் கம்பனி பிஎல்சியுடன் கடந்த ஆண்டில் இணைந்து ஒற்றை நிறுவனமாக துறையின் உறுதியான நிறுவனமாக மாற்றம் பெற்றதைத் தொடர்ந்து AMF பாரிய மைல்கல்லை பதிவு செய்திருந்தது.

கடினமான காலப்பகுதியை மீண்டெழுந்திறனுடன் கடப்பதற்கு இந்த புதிய நிலையை AMF தனக்கு சாதகமாக மாற்றியுள்ளது.

# DFCC வங்கியின் 'அனைவருக்கும் ஆங்கிலம்' நிகழ்ச்சித்திட்டத்தில் பட்டதாரிகளுக்கு பாராட்டு




அனைவருக்கும் ஏற்ற வங்கியான, DFCC வங்கி 'அனைவருக்கும் ஆங்கிலம்' (Samata English) என்ற நிகழ்ச்சித்திட்டத்தை 4ஆவது ஆண்டாக இணைய வழி பாடத்திட்டமாக வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

இத்திட்டம் என்பது DFCC வங்கியின் ஒரு விசேட முயற்சி என்பதுடன், இது க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த 1825 வயதுடைய இளைஞர், யுவதிகளிடையே ஆங்கிலப் பேச்சுத் திறன்களை மேம்படுத்துவதற்கும் பல்வேறு மென் திறன்களை மேம்படுத்துவதற்கும் அதன் விரிவான நிலைபேண்தகைமை மூலோபாயத்திற்கு அமைவாக நடத்தப்பட்டது.

இந்த ஆண்டுக்கான DFCC Samata English நிகழ்ச்சித்திட்டத்தின் பட்டதாரிகள், அவரவர் பங்குபற்றிய பிரதேசங்களில் உள்ள DFCC வங்கியின் கிளைகளில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாக்களில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். இவ்வைபவத்தில் பங்கேற்பாளர்கள் பாடநெறியை நிறைவு செய்ததற்கான சான்றிதழைப் பெற்றுக்கொண்டதுடன், DFCC வங்கியின் சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகளைச் சந்திக்கும் வாய்ப்பையும் பெற்றனர்.

இதுகுறித்து DFCC வங்கியின் சில்லறை வங்கிச்சேவை, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் துறைகளுக்கான சிரேஷ்ட துணைத் தலைமை அதிகாரி ஆசிரி இத்தமல்கொட கருத்துத் தெரிவிக்கையில், "நாம் சவால்களுக்கு முகங்கொடுத்த போதிலும், DFCC Samata English நிகழ்ச்சித்திட்டத்தை மீள ஆரம்பிக்க முடிந்துள்ளது.

சமூகப் பொறுப்புணர்வுள்ள வங்கி என்ற வகையில், நமது இளைஞர், யுவதிகளுக்கு ஆங்கில மொழிப் புலமை மற்றும் மென் திறன் விருத்தியின் முக்கியத்துவத்தை நாம் அடையாளம் கண்டுள்ளோம். கல்வி என்பது எங்கள் விரிவான நிலைபேண்தகைமை மூலோபாயத்தின் 6 E களில் ஒன்றாகும். இது பல்வேறு கல்வி முயற்சிகளில் எங்களை ஆழமாக ஈடுபடுத்த வழிவகுத்ததாக குறிப்பிட்டார்.

நிறுவனசார் முதலீடுகளுக்கான வாய்ப்புகள்:

# SLT-MOBITEL அமெரிக்காவின் உயர்அதிகாரிகளுடன் கலந்துரையாடல்

இலங்கையின் முன்னணி தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைகள் வழங்குநரான SLTMOBITEL, இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜுலி ஜே. சங் மற்றும் இதர அமெரிக்க உயரதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுத்திருந்தது. அமெரிக்காவை தளமாகக் கொண்ட வியாபாரங்களுக்கு இலங்கையில் காணப்படும் முதலீட்டு வாய்ப்புகள் பற்றி இந்த சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டிருந்தது.




இந்த கலந்துரையாடலில் SLTMOBITEL இன் தவிசாளர் ரொஹான் பெர்னான்டோ, குழும பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனெவிரட்ன மற்றும் SLTMOBITEL இன் இதர சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த சந்திப்பின் போது, அமெரிக்க முதலீட்டாளர்களுக்கு முதலீடுகளை மேற்கொள்ளக்கூடிய முக்கியமான பகுதிகளில் ஒன்றாகதொலைத்தொடர்பாடல் துறை திகழ்கின்றமை இனங்காணப்பட்டது. பிரதானமாக கடந்த மூன்று வருடங்களில் இடம்பெற்ற எதிர்பாராத தேசிய சவால்கள் நிறைந்த சூழ்நிலைகளில்,இந்தத் துறையினூடாக பல முக்கியமான தொழிற்துறைகள் மற்றும் சேவைகளை இணைப்பில் வைத்திருக்க முடியும் என்பதால் இது பற்றி அதிகளவு கவனம் செலுத்தப்பட்டிருந்தது. அத்துடன், தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த, இலங்கையின் டிஜிட்டல் பொருளாதாரத்திலும் அதிகளவு முதலீட்டு வாய்ப்புகள் நிலவுகின்றமை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

இந்த சந்திப்பு தொடர்பில் ஸ்ரீ லங்கா ரெலிகொம் குழுமத்தின் தவிசாளர் ரொஹான் பெர்னான்டோ கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையின் முன்னேற்றத்தில் பங்களிப்பு வழங்கும் தேசிய நிறுவனம் எனும் வகையில், எம்மைப் போன்ற சிந்தனையுடையவர்களை நாடுவது எமது இலக்காகும். இலங்கையில் பெருமளவு அமெரிக்க வியாபாரங்களை முதலீடுகளை மேற்கொள்வதற்கு ஊக்குவிக்கும் முதலாவது படிமுறையாக இந்த சந்திப்பு அமைந்துள்ளது. பரந்தளவு, பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டாளர் சமூகத்தை நாட்டினுள் கட்டியெழுப்புவது மிகவும் முக்கியமானதாகும். எமது உயர் இணைப்புத் தீர்வுகள், தயார்நிலையிலுள்ள தொழில்நுட்ப கட்டமைப்புகள், மேம்படுத்தப்பட்ட வலையமைப்பு சேவைகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு ஆற்றல்களுடன், உலகின் எந்தவொரு நிறுவனசார் முதலீட்டாளருக்குமான சிறந்த தெரிவுப் பங்காளராக திகழக்கூடியதாக இருக்கும்." என்றார்.

# குறுகிய கால நிலையான வைப்புக்களுக்கு அதிக வட்டியை வழங்கும் கொமர்ஷல் வங்கி



குறுகிய கால வைப்புகளை ஊக்குவிப்பதற்காகவும், வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் முதலீடுகளுக்கு ஒரு வருடத்திற்கும் குறைவான காலத்திற்குள் ஒப்பிடமுடியாத மற்றும் பாதுகாப்பான வருவாயை வழங்குவதற்காகவும், கொமர்ஷல் வங்கியானது வருடாந்தம் 22% வரையிலான உயர்வட்டி வீதங்களுடன்; நிலையான வைப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த சிறப்புத் திட்டத்தின் கீழ், கொமர்ஷல் வங்கி வாடிக்கையாளர்கள் 100 நாட்கள், 200 நாட்கள் மற்றும் 300 நாட்களுக்கு குறைந்தபட்சம் ரூபா 2 மில்லியன் வைப்புத் தொகையுடன் நிலையான வைப்புக் கணக்குகளைத் தொடங்கி ஆண்டுக்கு முறையே 20%, 21% மற்றும் 22% வருமானத்தைப் பெறலாம்.

வங்கியின் தனிப்பட்ட மற்றும் வணிக வாடிக்கையாளர்கள் இந்த சமீபத்திய குறுகிய கால நிலையான வைப்புத் திட்டத்திலிருந்து பயனடைவார்கள், இது ஒரு முதிர்வு காலத்தைக் கொண்டுள்ளது மற்றும் முதிர்வுக் காலத்திற்குப் பிறகு புதுப்பிக்க முடியாதது என்று வங்கி தெரிவித்துள்ளது. தனிப்பட்ட வாடிக்கையாளர்களும் கூட்டாக இந்தக் கணக்குகளைத் திறந்து பயனாளியை பரிந்துரைக்கலாம்.இந்த புதிய நிலையான வைப்புத் திட்டம் குறித்து கருத்து தெரிவித்த வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி எஸ் பிரபாகர் கூறியதாவது: 'வட்டி வீதங்கள் அதிகரித்து வருவதால், முதலீட்டாளர்கள் தங்கள் வருமானத்தை அதிகரிப்பதற்கான விருப்பங்களைத் தேடுகின்றனர், ஆனால் அத்தகைய முதலீடுகளின் பாதுகாப்பும் மிக முக்கியமானது, குறிப்பாக தற்போதைய சூழலில். கொமர்ஷல் வங்கியானது நாட்டின் மிகப் பெரிய மற்றும் அதிக இலாபம் ஈட்டும் தனியார் துறை வங்கியின் பலத்தையும் ஸ்திரத்தன்மையையும், ஒரு நூற்றாண்டுக்கும் மேலான நம்பிக்கையையும், அதிக போட்டித் தன்மை கொண்ட வருமான விகிதத்துடன் வழங்குகிறது.

இலங்கையின் முதல் 100% கார்பன் பாவனையினை குறைத்த வங்கி, உலகின் தலைசிறந்த 1000 வங்கிகளில் தொடர்ந்தும் 12 வருடங்களாக பட்டியலிடப்பட்ட ஒரேயொரு இலங்கை வங்கி, கொமர்ஷல் வங்கியாகும். கொமர்ஷல் வங்கி வலையமைப்பினைக் கொண்ட 268 கிளைகள் மற்றும் 940 தானியங்கி இயந்திரங்களை கொண்டு இயங்குகின்றது.

# தங்கவிருதை வென்ற Flexiprint பொதியிடல் நிறுவனம்




இலங்கை பொதியிடல் உற்பத்தித் துறையின் முன்னோடி நிறுவனமான தனியார் நிறுவனம், இலங்கை தேசிய வணிகச் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய அதிஉயர் தொழில்முயற்சிகள் (NBEA) 2021 விருது விழாவில் அச்சு மற்றும் அதுசார்ந்த சேவைகள் பிரிவின் தங்கவிருதை வென்றுள்ளது.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற இவ்விருது விழாவில் நிறுவனத்தின் பணிப்பாளர் இசுரு அபேவிக்ரம உள்ளிட்ட குழுவினர் விருதை பெற்றுக்கொண்டனர். 1994ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட Flexiprint நிறுவனம் தற்பொழுது உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் புகழ்பெற்ற பொதியிடல் நிறுவனமாக திகழ்கிறது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தேயிலைச் சந்தைக்கு உயர்தரத்திலான தேயிலைபை டெக் மற்றும் தேயிலைபை கவர்களை உற்பத்தி செய்யும் இந்நிறுவனம் ப்ளெக்சோகிராபி தொழில்நுட்பத்துடன் தண்ணீரை கலந்து உற்பத்தி செய்யப்படும் (Water Base) பெயின்ட் ஒன்றை பயன்படுத்தி இலங்கையில் முதல் தடவையாக தரமான தேயிலைப் பொதிகளை உற்பத்தி செய்கின்றது.

1994ஆம் ஆண்டில் ஒரு இயந்திரத்துடன் 10 ஊழியர்களைக் கொண்டு தொடங்கப்பட்ட Flexiprint நிறுவனம் தற்பொழுது 08 இயந்திரங்களோடு சுமார் 275 ஊழியர்களைக் கொண்ட பெரும் நிறுவனமாக வளர்ச்சி அடைந்துள்ளது. எந்தவொரு அளவிலான ஆர்டரென்றாலும் உரியநேரத்துக்கு வழங்குவதற்கு தேவையான மகத்தான தொழில்நுட்ப அறிவு இந்நிறுவனத்திடம் உள்ளது.

தேயிலைபை டெக், தேயிலைபை கவர்கள் மற்றும் பிரமீட் வடிவிலான தேயிலை பைகள் உள்ளிட்ட பல்வேறு வகையிலான பொதிகளை Flexiprint நிறுவனம் உற்பத்தி செய்கின்றது. தற்போதைய சவால்மிக்க சூழலிலும் உற்பத்தி தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு தேவையான மூலோபாய வேலைத்திட்டத்தின் பிரகாரம் இந்நிறுவனம் செயற்படுகின்றது.

ஒவ்வொரு வாடிக்கையாளரினதும் தேவைகளை வெவ்வேறாக இனங்கண்டு அவர்கள் மத்தியில் முறையான தொடர்புகளை பேணி சேவைகளை வழங்குவதே இந்நிறுவனத்தின் தனித்துவச் சிறப்பாகும்.

# விவசாயிகளுக்கான SAPP மானியதிட்டம் கெக்கிராவையில்



நாட்டின் முன்னணி பால் உற்பத்தியாளருமான பெல்வத்தை (Pelwatte), இலங்கையில் விவசாய அமைச்சுடன் செயற்படுத்தப்படும் சிறிய அளவிலான விவசாய வர்த்தக கூட்டாண்மை திட்டமான, சிறு அளவிலான விவசாய வணிக கூட்டுத் திட்டத்தின் (Smallholder Agribusiness Partnership Program SAPP) ஒரு செயற்பாட்டு உறுப்பினராக அங்கம் வகித்து வருகின்றது. ஒவ்வொரு பெல்வத்தை உற்பத்திக்குமான, புதிய பாலை உற்பத்தி செய்வதில் அயராது உழைக்கும் விவசாய சமூகத்தின் வாழ்க்கையை மேம்படுத்த உதவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணங்க, SAPP மானிய அங்குரார்ப்பண நிகழ்வை, 2022 ஜூலை 08 ஆம் திகதி கெக்கிராவை பால் சேகரிப்பு நிலைய கேட்போர் கூடத்தில், சிறிய அளவிலான விவசாய வர்த்தக கூட்டாண்மைத் திட்டம் (SAPP) மற்றும் சந்தை சார்ந்த பால் பண்ணை (MOD) திட்ட அதிகாரிகளின் பங்கேற்புடன் பெல்வத்தை மேற்கொண்டிருந்தது.மானிய நிதி உதவிக்கு மேலதிகமாக, அமெரிக்க விவசாயத் திணைக்களம் (USDA) மற்றும் சர்வதேச நிர்வாகக் கூட்டுத்தாபனம் (IESC) ஆகியவற்றின் ஆதரவுடன், உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட, நெறிமுறை ரீதியாகவும் சிறந்த தரத்திலும் உற்பத்திகளை அதிகரிக்கவும் மேம்படுத்தவுமாக, விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்ட விவசாய முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம், சந்தை சார்ந்த பால் உற்பத்தித் திட்டத்தின் ஆதரவுடன் விவசாய சமூகத்தை ஊக்கப்படுத்தவும் இந்த திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இந்நிகழ்வில் பெல்வத்தை நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அக்மல் விக்ரமநாயக்க கருத்துத் வெளியிடுகையில், "நாட்டின் தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலையில் எந்தவொரு நபருக்கும், குறிப்பாக விவசாய சமூகத்திற்கு இது ஒரு கடினமான காலமாக உள்ளது" என்றார்.

# வாரபலன்



31.07.2022 - 06.08.2022

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

எதிர்பாராத விரயங்கள் அதிகரிக்கும். எதையும் திட்டமிட்டு செய்ய இயலாது. குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும். உடன்பிறந்தவர்களின் உத்தியோகத்தில் பணிநிரந்தரம் ஆகலாம். ஆரோக்கியத் தொல்லைகள் அகலும். கைவசம் இருந்த நிலம் மதிப்பு மிக்கதாக மாறும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

## ரிஷபம்

விரயத்துக்கு ஏற்ற வருமானம் வந்துகொண்டே இருக்கும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொகை வரவு உண்டு. பொது வாழ்வில் புகழ் கூடும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். பணிபுரியும் இடத்தில் பக்குவமாக நடந்து கொள்ளுங்கள். தடைப்பட்டுவந்த காரியங்கள் துரிதமாக நடைபெறும். வழக்குகள் சாதகமாக முடியும். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். புகழ் மிக்கவர்களை கொண்டு காரியங்களை சாதிப்பீர்கள்.

## மிதுனம்

திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடந்தாலும் விழிப்புணர்ச்சியோடு செயல்பட வேண்டிய நேரம் இது. சஞ்சலம், சந்தேகம் காரணமாக பல காரியங்களைச் செயற்படுத்த இயலாமல் போகலாம். தொழில் வளம் சிறக்கும். வெற்றிக்குரிய செய்தி வீடு வந்து சேரும். வெளிநாட்டிலிருந்து அனுகூல தகவல்கள் கிடைக்கலாம். பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும். பிள்ளைகளின் சுப காரியத்தை முன்னிட்டு சீர்வரிசை பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

## கடகம்

தடைகளும் தாமதங்களும் அதிகரிக்கும். எதையும் தீர்க்கமாக முடிவெடுத்து செய்ய இயலாது. புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பொருளாதார விருத்தி ஏற்படும். வேலைவாய்ப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் நல்ல தகவல் கிடைக்கும். எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் அனுகூலம் உண்டு. கட்டிடம் கட்டும் வாய்ப்பு, கடை திறப்பு விழா போன்றவை நடைபெறும். வீடு மாற்றம், நாடு மாற்றம், உத்தியோக மாற்றம், வாகன மாற்றம் உள்ளிட்ட மாற்றங்கள் வரும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. பணிபுரிபவர்களுக்கு ஊதிய உயர்வும், உத்தியோக உயர்வும் கிடைக்கும்.

## சிம்மம்

பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும். வாடகை கட்டடத்தில் நடைபெற்ற தொழிலை சொந்த கட்டிடத்திற்கு மாற்றும் முயற்சி கைகூடும். கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும்.சொத்து, சொந்தம், காரிய வெற்றி, வருமானம் போன்றவற்றில் திருப்தி நிலவும். கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு செயற்படவேண்டும். வெளிநாடு சென்றவர்கள் சொந்த ஊர் திரும்பும் சூழ்நிலை ஏற்படும். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். வீண் பழிகளில் இருந்து விடுபடுவீர்கள்.

## கன்னி

தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். பெண் குழந்தைகளின் சுபச் சடங்குகள் மற்றும் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதில் இருந்த தடைகள் அகலும். நல்ல தகவல்கள் உங்களை தேடிவரும். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். தன்னம்பிக்கை குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். உடன்பிறப்புகளின் வழியே இருந்த கோபங்கள் மாறும். பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். சுபச்செலவுகள் அதிகரிக்கும்.

## துலாம்

மனக்குழப்பம் அதிகரிக்கும். தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறும். தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்ய வாய்ப்புகள் உருவாகும். பூர்வீக சொத்துக்கள் அல்லது புதிய சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் விலகும். சகோதர ஒற்றுமை பலப்படும். உடன்பிறப்புகள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழி வகுத்துக் கொடுப்பர். வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து அதை முன்னிட்டு இடமாற்றம் பெறலாம். அத்தியாவசிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். நினைத்தது நிறைவேறும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். ஆரோக்கியம் சீராகும்.

## விருச்சிகம்

தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். அக்கறை செலுத்தாத காரியங்களில் கூட ஆதாயம் கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம் உண்டு. தொழிலில் கூடுதல் லாபம் வரும். உத்தியோகத்தில் ஊதிய உயர்வு கிடைக்கும். புதிய முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். பெற்றோர்கள்வழி இப்பிரச்சினை சமரசத்திற்கு வரும். மேலதிகாரிகள் கேட்ட சலுகைகளை கொடுக்க முன்வருவர். எதிர்காலத்திற்கு உத்தரவாதம் கொடுக்கும் விதத்தில் பல நல்ல சம்பவங்கள் நடைபெறும்.

## தனுசு

விரயங்கள் கூடுதலாக இருக்கும். உடல் நலத்தில் கூடுதல் கவனம் தேவை. சிறுசிறு தொல்லைகள் அடிக்கடி தலைதூக்கும். கடமையில் இருந்த தொய்வு அகலும். பயணங்கள் பலன் தருவதாக இருக்கும். குடும்ப முன்னேற்றம் கூடும். தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தனவரவு திருப்தி தரும். தொலை தூரத்திலிருந்து நல்ல தகவல் வந்து சேரும். பெண் வழிப் பிரச்சினைகள் அகலும். உத்தியோகத்தில் பணி நிரந்தரமாகும்.

## மகரம்

ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கும். எதையும் திட்டமிட்டு செய்ய இயலாது. திடீர் திடீரென மாற்றங்கள் உருவாகும். எதிரிகளின் பலம் கொஞ்சம் மேலோங்கியிருக்கும். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்களை விலக்குவீர்கள். உத்தியோகத்தில் மேலிடத்தில் சலுகைகள் கிடைக்கும். வெளிநாட்டில் உள்ள நண்பர்கள் ஆதாயம் தரும் தகவலை கொடுப்பர். எதிர்காலத்திற்காக சேமிக்க முன்வருவீர்கள். நகைகளை வாங்குவதில் ஆர்வம் செலுத்துவீர்கள். உறவினர்களும் நண்பர்களும் ஆதரவாக இருப்பர்.

## கும்பம்

விரயத்திற்கு ஏற்ற வருமானம் வந்துகொண்டே இருக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நீண்ட தூரத்திற்கான மாறுதல்கள் வந்து சேரலாம். வெளிநாடு சென்று பணி புரிவது சம்பந்தமாக ஏதேனும் ஏற்பாடு செய்திருந்தால் அதில் வெற்றி கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். லாப நோக்கத்தில் பழகியவர்களை இனம் கண்டு கொள்வீர்கள். சக ஊழியர்களால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

## மீனம்

ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். வீண்விரயங்கள் உண்டு. விழிப்புணர்ச்சியோடு செயல்பட வேண்டிய நேரம் இது. நண்பர்களின் ஆதரவோடும் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். சுபகாரியப் பேச்சுகள் முடிவாகும். பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரலாம். வாழ்க்கை துணைக்கு வேலை கிடைத்து வருமானம் வரலாம். ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கும். குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் வரலாம்.

# மனித நேயன் மு. பஷீர் சிறுகதைகள்

மு. பஷீர் 1968 ல் எழுத ஆரம்பித்த இலங்கையின் முன்னணி எழுத்தாளர். எழுத்தையும் இலக்கியத்தையும் வாழ்க்கையாக வகுத்துக் கொண்டவர். இறுதிமூச்சு வரை எழுதினார். சிறுகதை, கவிதை, நாவல், இலக்கிய உரையாடல் என இலக்கிய வட்டத்திற்குள்ளேயே பஷீர் காலத்தை செலவிட்டார். நீர்கொழும்பு மினுவாங்கொடையைச் சேர்ந்த மு.பஷீரை மேல் மாகாண எழுத்தாளராக இனங் காணலாம்.

ஐம்பதுக்கும் அதிகமான சிறுகதைகளை மு.பஷீர் எழுதி உள்ளார். 2013ஆம் ஆண்டளவில் மினுவாங்கொடை கிராமத்தில் நடந்த அவரின் நூல் வெளியீட்டில் அவரைக் கடைசியாகச் சந்தித்தேன். அவரது மறைவை நினைவு கூர்ந்து இலங்கை வானொலி முஸ்லிம் நிகழ்ச்சியில் இலக்கிய மஞ்சரியில் அவரது புனை கதைகளை அறிமுகம் செய்தேன். அதற்குப் பல வருடங்களுக்கு முன்னர் மாணவர்களுக்காக புத்தளம் நகரில் நாங்கள் நடத்திய சிறுகதை எழுதும் பயிற்சி வகுப்பில் ஒரு வளவாளராக வந்தபோது அவரை முதலில் சந்தித்தேன். கலைவாதி கலீல், எம்.எச்.எம் ஷம்ஸ், ஏ.எம். ஜவாத் மரைக்கார் உட்பட பல எழுத்தாளர்கள் வளவாளர்களாக பங்கேற்றிருந்தனர். அதில் சிறுகதையின் கட்டமைப்பு பற்றி அவர் பேசியதாக ஞாபகம்.

மு. பஷீர் இடதுசாரி அல்ல. ஆனால் வறுமைக் கோட்டில்வாழ்பவர்களையும்தொழிலாளிகளையும் தமது கதை மாந்தர்களாக்கினார். பல கதைகளில் ஏழைப் பெண்களை பிரதான கதை மாந்தர்களாக்கி உள்ளார். 1960 களின் இன்ஸான் பண்ணையின் 'புதிய அலை' முஸ்லிம் எழுத்தாளர்களின் இலக்கிய உணர்வுகளை பஷீரின் கதைகளும் பிரதிபலிக்கின்றன. எனினும் பஷீர் 'இன்ஸான்' பண்ணையைச் சேர்ந்தவரல்ல.

சமூக விழிப்புணர்வும் செயலூக்கமும் பல்துறைக் கருத்தியல் ஈடுபாடும் சமூக யதார்த்தப் பார்வையும் கொண்ட அந்தக் குழுவினர் முஸ்லிம் புனை கதை உலகத்தில் மாற்றங்களை விளைவித்தனர்.

சக்திவாய்ந்த ஒரு பிரிவினர் 'இன்ஸான்' பத்திரிகைப் பண்ணை ஊடாக தமிழ் முஸ்லிம் இலக்கியப் பரப்பிற்கு அறிமுகமாகினர். அடுத்த மூன்று அல்லது நான்கு தசாப்தங்களை முஸ்லிம் புனைகதைப் பரப்பில் அவர்கள் தான் நாயகர்களாக விளங்கினர். தமக்கு ஊக்கமளித்தவர்களாக பஷீர் பட்டியலிட்டுள்ள கீழ்வருவோர் அந்தச் சாதனைக்குரிய எழுத்தாளர்கள்தான். எம்.எச்.எம் ஷம்ஸ், திக்குவல்லை கமால், மொயின் சமீம், எஸ்.எல்.எம் ஹனீபா, கலைவாதி கலீல், பண்ணாமத்துக் கவிராயர் என்று ஒரு எழுத்தாளர் குழுவினர் இதில் அடங்கி இருந்தனர். இவர்களில் பலர் சிறுகதை ஆசிரியர்கள். 'புதிய அலை' எழுத்தாளர்கள், 'இன்ஸான்' பண்ணைக்கு வெளியிலும் இருந்தனர். கருத்தியலிலும் இலக்கிய பார்வையிலும் அவர்கள் வேறுபட்டிருந்தனர்.

மு.பஷீர் வித்தியாசமானவர்களில் வித்தியாசமானவர். ஒரே வகைக் கலை அணுகுமுறைக்குள் அவர் தன்னைச் சிறைப்படுத்திக் கொள்ளவில்லை. புதியதாக கதை மாந்தர்களை அவர் அறிமுகப்படுத்தினார் என்ற கே.எஸ் சிவகுமாரனின் கூற்றையும் இங்கு நோக்கலாம். புதிய கருப்பொருள்கள் கதை மாந்தர்கள் எவ்வாறாக வேறுபட்டாலும் மனித நேயம் அவரது கதைகளில் தொனிப்பொருளாக உள்ளது. மனித வாழ்வை ஆராய்வது அவரது நோக்கமாக இருந்தது என்றும் குறிப்பிட்டு கூறலாம்.

வாழ்வை அறியும் அவரது பயிற்சியில் ஆழ்ந்த வாசிப்பு ஒன்றிணைந்திருந்தது. மலையாள எழுத்தாளர்களான வைக்கம் பஷீர், தகழி சிவசங்கரப்பிள்ளை, பொற்றேகாட், கோவிந்தன் நாயர் போன்றவர்களால் மிகவும் கவரப்பட்டிருந்தார். புதுமைப்பித்தன், சுந்தர ராமசாமி, லா. சா. ரா போன்ற தமிழ் எழுத்தாளர்களின் புனைகதைகளை அவர் அதிகம் படித்திருந்தார். அவர்களின் செல்வாக்கு அவரது கதைகளில் எழுத்துக்களில் இடம் பெற்றிருக்கலாம்.

ஆயினும் பஷீர் தனித்துவமான தனக்கென ஒரு பாணியை உருவாக்கிக் கொண்ட எழுத்தாளர். அவரது கதைகளில் சம்பந்தப்படும் கதைமாந்தர்கள் வேறுபட்டிருந்தாலும் வாழ்க்கை பற்றிய விசாரமும், யதார்த்தப் பார்வையும் அவற்றைச் சாதாரண மாந்தர்களின் கதைகளாக்கின. அநேக கதைகள் அவர் வாழ்ந்த மாவட்டத்தைப் பிரதிபலித்தன. நீர்கொழும்பும், கொழும்பும், மினுவாங்கொடையும் அவற்றின் சுற்றாடலும், கதைகள் நிகழும் நிலப்பரப்பு எனலாம். பஷீர் தென்னிந்திய பிரயாண அனுபவங்களை வைத்தும் சில கதைகளை எழுதி இருந்த போதும் அவை எவ்வளவு தூரம் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பது கேள்விக்குரியது.



முஸ்லிம்கள் எழுதும் புனைகதைகள் இஸ்லாமிய (ஒழுக்கவியல்) வரம்புக்குள் தான் இருக்க வேண்டும் என்ற விவாதங்கள் நடந்த காலப்பிரிவில் இலக்கிய சுதந்திரத்தையும் பாதுகாத்து யதார்த்த இலக்கியப் பார்வைக்கு உயிரூட்டியவர்கள் இந்தக் குழுவினர்தான். மு.பஷீரும் அந்த மரபுக்குரியவர். வாழ்க்கை வசீகரமாயினும் சங்கடங்கள் நிறைந்ததாயினும் பஷீர் வாழ்வின் உண்மைகளைத் தரிசிக்க விரும்பினார். மேலோட்டமான படைப்புக்கு அப்பால் வாழ்வில் இருந்த கடினமான பகுதிக்குள் அவர் பிரவேசிக்க விரும்பினார். அவரது நண்பரும் எழுத்தாளருமான எம்.எச்.எம் ஷம்ஸ் கூறிய வார்த்தைகளை இங்கு பார்க்கலாம்.




'இந்த அசாதாரண மனிதனுக்குள் எத்தனை வகை விசாரங்கள், எவ்வளவு ஆற்றல்கள் இலக்கிய அரைவேக்காடுகள் மத்தியிலே மு.பஷீர் ஒரு சிகரமாக உயர்ந்து நிற்கிறார்.' வாழ்க்கை அனுபவங்கள், ஏக்கங்கள், துயரங்களின் உள்ளக உணர்வுகளை கதைகளில் அவர் சித்திரமாக்கினார். 'நிஜங்களின் வலி' (2013) சிறுகதைத் தொகுப்பின் 'கைக்கெட்டும் தூரம்' கதையின் ஆரம்பத்தில் அவர் எழுதும் வரிகள் அவரது கதைகளைப் பற்றிய ஆய்வுகளாகவும் அமைந்து விடுகின்றன. அவர் தமது கதைகளை தன் பார்வையிலிருந்து வளர்த்துச் செல்வது தான் வழக்கம்.

'ஒரு பிடிப்பற்ற மன நிலையுடன் நடந்து கொண்டிருந்ததால் இவர் இருதயத்தினுள் சில தீர்மானங்கள் உள்ளுறைந்து வலுவேறியிருந்தன. இந்தச் சமூகமும் சுயவாழ்வும் கேள்விகளாய் அச்சுறுத்தின என்பது மட்டும் அல்ல ஒவ்வொரு தனி மனித வாழ்வு சார்ந்த காயங்கள் பிற மனிதனது பார்வையில் பெரிதாய் உறைக்கவில்லை என்பது யதார்த்தம்.

பஷீரின் பல கதைகளில் உள் மன விசாரணை அடிக்கடி தோன்றுவது ஏன் என்பதற்கு இந்தப் பந்தியும் ஒரு ஆதாரம்தான். கதை சொல்லும் நுட்பத்தைப் பெற்றுக்கொள்ள நீண்ட யாத்திரை செய்திருக்கிறேன். அவருக்குள் இருந்த உள்மன விசாரணை அவரைப் புடம் போட்டுள்ளது.

ஆயினும் பஷீர் தனி மனித உணர்வுகளையோ சமூக யதார்த்தங்களையோ புறக்கணித்த எழுத்தாளரல்ல. நாளாந்த வாழ்க்கைத் துயரத்திற்குள் சிக்கி உழலும் பல பாத்திரங்களின் போராட்டங்களையும் கண்ணீரையும் பேசும் பல கதைகளையும் படைத்துள்ளார்.

'மொழிவளம், விவரிக்கும் ஆற்றல், பிறர் அதிகம் தேர்ந்தெடுக்காத பாத்திரங்கள், சமூக விமர்சனம், யதார்த்தச் சித்திரிப்பு, மனித நேயம் ஆகிய பண்புகள் அவர் கதைகளில் உள்ளன' என்ற புகழ்பெற்ற விமர்சகர். கே.எஸ் சிவகுமாரன் கூற்று அவரது கதைகளின் தனித்துவப் பண்புகளைச் சுட்டிக்காட்டுவதுதான்.

பொய் முகங்கள் மீது தாக்குதல் தொடுப்பது, மனித நேயத்தைப் பக்குவமாக்குவது, உலக பிரச்சினைகளைப் பேசுவது என்று தமது இலட்சியங்கள் பற்றி பஷீர் தமது முன்னுரை ஒன்றில் கூறி உள்ளார். எழுத்து வளமும் சமூக அநீதிக்கு எதிரான குரலும் ஒன்றிணையும் கதைகள் சமூகத்தின் ஆழத்தில் புரையோடிப் போயுள்ள பல பிரச்சினைகளை வெளியே கொண்டு வருகின்றன. 'சலனம்' அத்தகைய கதை.

பேராசிரியர் :
எம்.எஸ்.எம். அனஸ்

பஷீரின் முத்திரைக் கதைகளில் ஒன்று 'சலனம்' (1991). கம்பஹா மாவட்டத்தில் பீடி சுற்றும் தொழிலில் ஈடுபட்டிருந்த ரமீஸாவின் கதை 'சலனம்'. நாற்பது வயதுள்ள ரமீஸா ஒரு விதவை, அழகான பெண். அடித்தட்டு மக்களின் வாழ்க்கையை கூறும்கதை. ஒரு திரைப் படக்காட்சி போல் சலனம் கதையின் நாயகி ராமீஸாவை அவர் அறிமுகப்படுத்துகிறார், 'விரல்கள் மின்னல் வேகத்தில் பீடிகளை சுற்றினாலும் மனம் நினைவலைகளில் மிதந்தது. இடப்புறமாக நனைத்த இலை அட்டியும் நடுவில் புகையிலை தூளுமாக தட்டில் பீடிகள் குவிந்தன. வெறுந்தரையில் உட்கார்ந்து கால்களை நீட்டி சுவரில் சாய்ந்த வண்ணம் வேலையில் ஈடுபட்டாள் ரமீஸா'.

ஏழை ரமீஸா கடைமுதலாளி காசிம் வீசிய வலையில் வீழ்கிறாள். பண உதவி என்ற போர்வையில் இந்த உறவு ஆரம்பித்தாலும் ஊரில் ஆசை நாயகி என்ற பட்டத்தையும் பெற அது காரணமாகியது.

தனது பீடி சுற்றும் தொழிலை அவள் விடவில்லை. அதில் தேர்ச்சிபெற்ற தொழிலாளி அவள். அவளது வாழ்க்கை போராட்டம் நிறைந்தது. ஆயினும் ஒரே மகள் ரிஸ்மியாவை ஒழுக்கத்தை ஊட்டி வளர்த்தாள். திருமணமும் செய்து வைத்தாள். சில மாதங்களில் ரிஸ்மியாவின் வாழ்விலும் சந்தேகப் பிரச்சினைகள் சூழ்ந்தன. ரிஸ்மியாவை கணவன் சந்தேகிக்கிறான் என்பதில் இருந்து பூகம்பம் உருவாகியது. கணவனுடன் சண்டை பிடித்துக் கொண்டு மகள் ரிஸ்மியா வீட்டுக்கு வந்திருந்தாள். 'அவரிடம் ஒரு வீண் சந்தேகம் ஒன்று இருக்கிறது. தான் அப்படிப்பட்ட பெண் அல்ல என்று ரிஸ்மியா அழுதாள். ரமீஸாவுக்குத் தெரியும் ரிஸ்மியா புடம்போட்ட தங்கம். மகள் மீதான பொய்க் குற்றச்சாட்டுகளுக்கு அவள் தலைவணங்க மாட்டாள். நீ அங்கு போக வேண்டியதில்லை. என்னுடன் இரு. காசீம் முதலாளியிடம் உதவிபெற்று புதிய குடும்பப் பாரத்தையும் சுமக்கத் தயாரானாள் ரமீஸா.

மறுநாள் காசீம் முதலாளியைச் சந்தித்து குழந்தையும் கையுமாக வந்து நிற்கும் மகளின் பிரச்சினையைக் கூறினாள் ரமீஸா. 'ரமீஸா நீ ஒண்ணுக்கும் பயப்படாத, காதிக் கோட்டில் வழக்கைப் போட்டு ரிஸ்மியாவின் கணவனுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும்.

உன்னைக் கைவிடாத மாதிரி மகளையும் நான் பார்த்துக் கொள்கிறேன். உனக்கும் வயதாகிவிட்டது. அவளை நான் விவாகம் செய்து கொள்கிறேன்'. மகளைத் தனது வலையில் சிக்க வைக்க காசீம் தீட்டிய திட்டத்தை ரமீஸா ஏற்க மாட்டாள். அவளது மகள் பத்தரைமாற்றுத் தங்கம். சீறிய நாகமாக வீட்டுக்கு வந்து மகளைப் பார்த்துக் கர்ஜித்தாள்.

'குழந்தையை தூக்கிக் கொண்டு உன்னுடைய வீட்டுக் போ, ஒண்ட மாப்பிள்ளையோடு வாழ்க்கை நடத்து அல்லது அங்கேயே மௌத்தாகிப்போ, முதலில் இங்கிருந்து போ'.

ஒவ்வொரு கதைகளிலும் பஷீரின் பார்வைகள் எழுத்துக்களின் மாயங்களால் ஈட்டி போல் பாய்கின்றன மனித உள்ளங்களில்.

# பாரம்பரியம் நிகழ்ச்சியில் சிரேஷ்ட ஒலி, ஒளிபரப்பாளர்

## ரஷீத் எம். ஹபீல் நினைவலைகள்

ஆகஸ்ட் மாதம் 2ஆம் திகதி( 02.08.2022) செவ்வாய் இரவு 8.15 மணியளவில் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் பாரம்பரியம். நிகழ்ச்சியில் இலங்கை வானொலியின் முன்னாள் சிரேஷ்ட அறிவிப்பாளரும், செய்தி வாசிப்பாளரும், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன செய்தி வாசிப்பாளரும், ரூபவாஹினி முஸ்லிம் பிரிவின் முதலாவது பணிப்பாளருமான காலஞ்சென்ற ரஷீத் எம். ஹபீல் நினைவுகள் மீட்டப்படவுள்ளன.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன தமிழ் நிகழ்ச்சிகளின் முன்னாள் பணிப்பாளர், சிரேஷ்ட ஒலி, ஒளிபரப்பாளர், வாழ்நாள் சாதனையாளர், அரசு விருது பெற்ற கலைமாமணி கலாபூஷணம் எஸ். விஸ்வநாதன்,

சுமார் மூன்று தசாப்தங்களாக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின், தயாரிப்பாளராக பணியாற்றி, பல்வேறு தமிழ் நிகழ்ச்சிகளை தயாரித்து, நெறிப்படுத்தி தொலைக்காட்சி நேயர்கள் மத்தியில் பிரபலம் பெற்றுவரும், அஸ்ஸெய்யத் மபாஹிர் மௌலானா, இவர்களோடு சிரேஷ்ட ஒலிபரப்பாளரும், தர்ஜுமத்துல் குர்ஆன் நிகழ்ச்சி மூலம் நேயர்கள் அபிமானம் பெற்ற, முஸ்லிம் சேவையின் முன்னாள் பணிப்பாளருமான எஸ்.எம்.ஹனிபா ஆகியோரும் கலந்து ரஷீத் எம்.ஹபீல் நினைவுகளை பரிமாறிக் கொள்கிறார்கள்.

1954 ஆம் ஆண்டு முஸ்லிம் சேவை, இஸ்லாமிய சமய பாடசாலை நிகழ்ச்சியூடாக தன் பிஞ்சு வயதில் இலங்கை வானொலியில் கால்பதித்து, அங்கீகரிக்கப்பட்ட முஸ்லிம் சேவையின் கலைஞராகி பின்னாட்களில்,1971 ஆம் ஆண்டு இலங்கை வானொலி பகுதி நேர அறிவிப்பாளராகி, பின் நிரந்தர அறிவிப்பாளராக, முதல் தர செய்தி வாசிப்பாளராக, முஸ்லிம் சேவையின் தயாரிப்பாளராக ஒலிபரப்புத் துறையில் உச்சம் தொட்டார்.

1989 ஆம் ஆண்டு ஈரான் நாட்டின் அரசு விருந்தினராக கலந்து கொண்டு, 1991ல் புலமைப் பரிசில் பெற்று மலேஷியா சென்று தொலைக்காட்சி தயாரிப்பு, நெறியாள்கை துறைகளில் பயிற்சி பெற்று, நாடு திரும்பி 1993 ல், புதிதாக உருவாக்கப்பட்ட, ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் பிரிவின் முதல் பணிப்பாளராக நியமனம் பெற்றார்.



இந் நிகழ்ச்சியினை எம்.எஸ்.எம். ஜின்னா தொகுத்தளிக்க, முஸ்லிம் சேவை பணிப்பாளர் எம்.ஜே. பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார்.




என். சரவணன்

# இஸ்லாமிய புனிதரின் அடக்க ஸ்தலமான அற்புதம் நிகழும் தெவட்டகஹா பள்ளிவாசல்

கொழும்பு நகர மண்டபத்திற்கு அருகில் உள்ள லிப்டன் சுற்று வட்டத்துக்கு அருகில் உள்ள தெவடகஹ ஜும்மா மஸ்ஜித் கொழும்பு நகரின் மிக முக்கியமான பள்ளிவாசல்களில் ஒன்றாகும். கொழும்பின் மையத்தில், பலரால் கவரக்கூடிய முக்கிய பிரதேசத்தில் இது அமைந்திருக்கிறது. மிகப் பழமையான பள்ளிவாசலும் கூட. முஸ்லிம்கள் மட்டுமன்றி வேறு மத நம்பிக்கைகளைக் கொண்டவர்கள் பலரும் கூட ஒன்றுகூடி வணங்கிச் செல்லும் இடமாக அது திகழ்கிறது. பல அரசாங்க பெரிய ஆஸ்பத்திரிகளும் இதைச் சூழ இருப்பதால் பலர் நோய்கள் தீர வேண்டி வணங்கிச் செல்லும் இடமாகவும் இது இருக்கிறது. எனவே பௌத்தர்களும், இந்துக்களும், கிறிஸ்தவர்களும் கூட இந்த பள்ளிவாசலுக்கு வந்து செல்கிறார்கள்.

1802ஆம் ஆண்டு இங்கே முஸ்லிம் புனித யாத்திரிகரான ஷேக் உஸ்மான் வலிஉல்லாஹ் அவர்களின் சமாதி கண்டு பிடிக்கப்பட்டதாக பல முஸ்லிம் மூல தகவல்கள் தெரிவிக்கின்றன. அரேபியாவில் உள்ள அராஃபத்திலிருந்து ஆதாமின் சிகரத்திற்கு புனித யாத்திரையாக வந்த வேளையில் அவர் மறைந்தார். அவர் இங்கேதான் அடக்கம் செய்யப்பட்டார். இந்த பள்ளிவாசலின் முக்கிய அம்சமாக அதனைக் குறிப்பிட முடியும்.

தெவட்டகஹ பள்ளிவாசல் என்று அழிக்கப்படுவதைப் போல "ஷேக் உஸ்மான் வலிஉல்லாஹ் தர்கா மஸ்ஜித்" (Sheik Usman Valiulah Darga Mosque) என்றும் இன்று இதனை அழைக்கிறார்கள். அதிசயம் நிகழ்ந்ததாக நம்பப்படும் கதைகளைக் கொண்ட தர்காக்கள் என இலங்கையில் சிலவற்றைக் குறிப்பிட முடியும் அவற்றில் இது முக்கியமானது.

இந்தப் பள்ளிவாசலைக் கடந்துசெல்லும் "எந்த முஸ்லிம்களும் தமது மரியாதையை செலுத்தாமல் தாண்டுவதில்லை." என்கிற பொது அப்பிப்பிராயமும் உண்டு.

அதுமட்டுமன்றி பெண்களும் உள்ளே சென்று வணங்கிச் செல்லும் வணக்கஸ்தலமாக அது திகழ்கிறது. கொழும்பில் வெள்ளியன்று ஜும்ஆ தொழுகை முடித்துச் செல்ல பலர் ஒன்று திரளும் இடம். எனவேதான் முஸ்லிம் மக்கள் தமது எதிர்ப்புக் கூட்டங்களையும் அதிகமாக நடத்தும் இடமாக இது திகழ்கிறது.

அரேபியாவின் அரபாத்திலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்து ஆதாமின் சிகரத்திற்குச் (அதாவது பௌத்தர்கள் சிறிபாத என்றும், இந்துக்கள் சிவனொளிபாத மலை என்றும் அழைக்கப்படும் மலைக்கு) சென்று, பின்னர் இலங்கையில் தங்கிவிட்ட முஸ்லிம் சமயத் துறவி செயிதினா அஸ் ஷேக் உஸ்மான் சித்திக் இப்னு அப்துர்ரஹ்மானின் கல்லறை இருக்கும் 150 ஆண்டுகள் பழமையான பள்ளிவாசல் அது. இந்த மஸ்ஜித் உருவான வரலாறு பற்றி ஒரு சுவாரஸ்யமான பின்னணி கதையொன்று உள்ளது. வாய்மொழிக் கதையான இந்த கதை மிகவும் பிரபலமானது.

200 ஆண்டுகள் பழமையான கதை அது. 1820 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்த கறுவாத்தோட்டப் பகுதி மரங்கள் நிறைந்த வனாந்திரம். ஒரு எண்ணெய் விற்கும் சிங்களப் பெண், தனது குடும்பத்தை உழைத்துக் காக்கும் ஒரே ஒரு பெண். அவர் நாளாந்தம் பம்பலப்பிட்டியிலிருந்து கறுவாத்தோட்ட காட்டு வழியாக மருதானைக்கு சென்று வருவார்.

ஒரு நாள் இந்த காட்டின் வழியாக வந்து கொண்டிருந்த வேளை அவர் ஒரு முந்திரி மரத்தின் வேரில் தடுக்கி விழுந்தார். அப்படி விழுந்ததில் அவரின் மண் பானை துண்டு துண்டாக உடைந்தது. அவர் தாளாமல் கதறி அழுதார். "என் குடும்பத்திற்கு இன்று உணவு இல்லை. என்னுடைய ஒரே வருமானம் அழிந்து விட்டது. ஐயோ! எனது குடும்பம் இன்று பட்டினி கிடக்க வேண்டுமே" என புலம்பி அழுது கொண்டிருந்தார். அந்த அழுகையிலேயே களைத்துப் போய், அங்கேயே அயர்ந்து தூங்கி விட்டார் அந்தப் பெண். அப்போது ஒரு குரல் அவரை எழுப்பியது. அது 'விரக்தியடைய வேண்டாம்..,விரைவில் எல்லாம் சரியாகிவிடும்' என்று அவருக்கு உறுதியளித்தது. அப்பெண் நிமிர்ந்து பார்த்தார், அங்கே யாரையும் காணவில்லை, விரக்தியில் மீண்டும் கண்ணீர் வடித்து அழுதுகொண்டிருந்தார்.

மீண்டும் அந்தக் குரல் உறுதியளிக்கும் அதே வார்த்தைகளைத் திரும்பத் திரும்பச் சொன்னது. அப்பெண்ணால் இதை நம்பமுடியாததாக இருந்தது. ஏனென்றால் அந்த அடர்ந்த காட்டில் அவர் எந்த மனிதனையும் அங்கே காணவில்லை. திடீரென்று பச்சை நிற ஜுப்பா அணிந்த ஞானி போன்ற தோற்றத்தில் ஒரு முதியவரை அப்பெண் கண்டார். அம்மனிதனின் தோற்றத்தால் அப்பெண் உற்சாகமாக நோக்கினார்.

"நீங்கள் பயப்பட ஒன்றுமில்லை," என்று அவர் அப்பெண்ணிடம் கூறினார். "உன் எண்ணெய்யை நான் உனக்குத் திருப்பித் தருகிறேன். எனக்கு ஒரு பானை மட்டும் கொண்டு வா" என்றது அந்தக் குரல்.

அந்தப் பெண் மருதானை நோக்கிப் புறப்பட்டு, வழக்கமான தனது வாடிக்கையாளரான மாமினா லெப்பை என்ற முஸ்லிம் ஒருவரின் வீட்டிற்குச் சென்று, அவரது தாயிடம் ஒரு புதிய பானையைக் தரும்படிச் சொன்னார். வழக்கத்துக்கு மாறான இந்த வேண்டுகோளைக் கேட்ட மமினா லெப்பை அதுபற்றி அப்பெண்ணிடம் வினவியபோது; அவர்களிடம் "நான் திரும்பி வந்து நடந்ததைச் சொல்கிறேன்" என்று கூறி பானையுடன் காட்டிற்குத் திரும்பிய அப்பெண் ஒரு முதியவர் `தெவட்ட' மரத்தின் மீது சாய்ந்து கொண்டிருப்பதைக் கண்டாள். தேவதா மரம் என்பதை தமிழில் "அந்திமிரியம்"என்கிற பெயர் கொண்டு அழைக்கிறார்கள். முதலில் உடைந்த இடத்தில் பானையை வைக்கச் சொன்னார். அம்மனிதர் தன் பாதத்தை தரையில் அழுத்தினார் அத்தரையில் இருந்து எண்ணெய் துளித்துளியாக பொங்கி வழிந்தது.

அந்தப் பெண் திகைப்புடன் பேசாமல் பார்த்துக்கொண்டிருந்தாள். ஒரு முந்திரி மரத்திலிருந்து சில இலைகளைப் பறித்து, அவற்றைக் கொண்டு எண்ணெயை அள்ளி அப்பானையை நிரப்பச் சொன்னார். அந்தப் பானை நிரம்ப எண்ணெய் கிடைத்தது. "இனி உன் தொழிலைச் செய்யலாம்," என்று அவர் அப்பெண்ணிடம் கூறினார். மேலும் அம்முதியவர் இதைப் பற்றி முஸ்லிம் வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிக்கும்படியும், தான் அங்கே தோன்றிய இடத்தை அவர்களுக்குக் காட்டவும் கேட்டுக் கொண்டார். அப்பெண் அந்தப் பெரியவருக்கு வணக்கம் செலுத்தி அவரது ஆசீர்வாதங்களைப் பெற்று விடைபெற்றார்.

இந்தச் சம்பவத்தை கூறுவதற்காக அப்பெண் மருதானையிலுள்ள மமினா லெப்பையின் வீட்டுக்குக்கு விரைந்தார். அவர் உடனே பெரிய பிச்சை, மீரா கனீ ஆகிய இருவரையும் அழைத்துக்கொண்டு கறுவாத்தோட்டத்துக்கு விரைந்தார். அங்கு அந்த அற்புத அடையாளங்களை அவர்கள் நேரிலேயே கண்டனர். அதாவது உடைந்த குடம், சிந்திய எண்ணெய், மரமுந்திரிகை மரம், எண்ணெய்யை அள்ளியெடுத்த இலைகள், தெவட்டமரம் என்பன அங்கே காணப்பட்டன.

அந்த ஞானி யார் என்று அவர்களால் அறியமுடியவில்லை. ஆனால், "யாஸீன் சூறா" வையும், "பாத்திஹா" வையும் ஓதிய பின் "வொலியுல்லாஹ் அவர்களே! தங்கள் அற்புதங்களை காணச் சந்தர்ப்பம் அளித்த எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் வல்ல அல்லாஹ் எங்களுக்குத் தாங்கள் யார் என்பதைக் காட்டித்தருவானாக." என்று அவர்கள் பிரார்த்தித்தார்கள்.

அங்கே சூழ வாழ்ந்த முஸ்லிம் மக்கள் அந்த இடத்தில் அறங்காவலராக மமினா லெப்பை நியமிக்கப்பட்டார்.

இந்தக் வாய்மொழிக் கதையின் நம்பகம் ஒருபுறம் இருக்க அதனை மறுப்பவர்களும் இருக்கவே செய்கிறார்கள். மேலும் சமாதி வழிபாடுகளை மறுக்கும் முஸ்லிம் சமூகத்து பிரிவினரும் இந்த பள்ளிவாசலை விமர்சிக்கவே செய்கிறார்கள்.

1847 இல், இருபத்தேழு ஆண்டுகளுக்குப் பின்னர், இந்த சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் இடத்துக்கு மொரோக்கோ மஃரிப் தேசத்தைச் சேர்ந்த அஷ்ஷெய்கு அலி ஜபருத் மௌலானா என்னும் மார்க்கப்பெரியார் இலங்கை வந்தார். கொழும்பு மருதானை மசூதியிலேயே அவர் தங்கினார். தவட்டகஹா அதிசயம் பற்றியும் அவருக்கு அறிவிக்கப்பட்டது.ஒரு குறிப்பிட்ட வெள்ளிக்கிழமையன்று, ஜும்மா தொழுகைக்குப் பிறகு, கதீப் ஹஸன் லெப்பை, ஷெய்கு அப்துல் காதிர், போன்ற சிலருடன் ஸயாரத்திற்கு நேரடியாக விஜயம் செய்து பாத்திஹா ஓதினார்கள். அலி ஜபரூத் மௌலானா அந்த வலியுல்லாஹ் சமாதிக்கு முன்னால் தன்னை ஒரு ஜுப்பா' (அங்கி) மூலம் மூடிக் கொண்டு, கல்லறையில் மண்டியிட்டு, தொழுதார். இறுதியில் அவர் போர்வையிலிருந்து வெளிப்பட்ட போது அவரது முகம் தெய்வீக ஒளியால் பிரகாசித்தது. கூடியிருந்த முஸ்லிம்களுக்கு அவர் இப்படி உபதேசித்தார்.

"ஓ, எல்லாம் வல்ல அல்லாஹ், இவர் மிகவும் மரியாதைக்குரிய புனிதர். அவரது பெயர் செய்த் உஸ்மான் சித்திக் இப்னு அப்துர் ரஹ்மான், ஆதாமின் சிகரத்திற்கு புனிதப் பயணமாக இந்தத் தீவுக்கு வந்து சில காலம் அருகாமையில் வாழ்ந்த பிறகு இங்கேயே மரணமடைந்தார். பின்னர் கதீப் தம்பி லெப்பை பக்கம் திரும்பி, "இது எந்த மாதம்?" என்றார்.

பெண்கள் இந்த பள்ளிவாசலின் பிரதான தொழுகை மண்டபத்திற்கு அனுமதிக்கப்படுவதில்லை, ஆனால் அவர்களுக்கென தனியான தொழுகைப் பிரிவு அங்கு உள்ளது.இது இலங்கை முழுவதும் உள்ள மசூதிகளில் பொதுவான அம்சமாகும்.

**பள்ளிவாசலின் கட்ட வரலாறு**

இந்தப் பள்ளிவாசல் இருந்த நிலம் ஆரம்ப காலத்தில் ஒரு கண்ணகி கோவில் (சிங்களத்தில் பத்தினி தெய்யோ) இருந்த இடம் என கூறும் சிங்களவர்கள் உள்ளார்கள். அதற்கான பழங்கால ஓவியங்கள், பாடல்கள் என்பவற்றையும் கூட கட்டுரைகளாகவும், நூல்களிலும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இருக்கலாம். அப்படியே இருந்தாலும் கூட அது அழிக்கப்பட்டுத் தான் இது கட்டப்பட்டதற்கான ஆதாரங்கள் எதுவும் கிடையாது. மேலும் இது மமினா லெப்பையின் காலத்திலேயே ஆங்கிலேய ஆட்சியாளர்களால் எழுதிக் கொடுக்கப்பட்ட ஒன்று என்பதற்கான ஆதாரங்களும் உண்டு.

1848 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அரசாங்கம் வீதி அபிவிருத்திக்காக சில நிலங்களை கையகப்படுத்தியது. அதில் மமினா லெப்பையின் நிலமும் அடங்கும். அதற்கு அரசாங்கம் இழப்பீடு கொடுக்க ஒத்துக் கொண்டது. இழப்பீடாக தற்போது பள்ளிவாசல் உள்ள நிலத்தைத் தரும்படி மமீனா லெப்பை கேட்டுக்கொண்டார். அந்த கோரிக்கை ஏற்கப்பட்டு அன்றைய ஆங்கிலேய ஆளுநர் சேர் சார்ல்ஸ் ஜஸ்டின் மெக்கார்த்தியால் (Sir Charles Justin McCarthy)1863 ஆம் ஆண்டு பெப்ரவரி 9ஆம் திகதி இந்த நிலம் அக்கோரிக்கையின் பேரில் வழங்கப்பட்டது. (கொழும்பு கச்சேரி பதிவிலக்கம் No.A/16/381)

பிரதான வீதியோடு சேர்ந்தாற் போல் அமைந்திருக்கும் இந்த பெரிய பள்ளிவாசல் முகலாய கட்டட அமைப்பின் சாயலில் வட்டக் கூரை வடிவத்திலான கோபுரங்களைக் கொண்டதாக கட்டப்பட்டிருக்கிறது.

இந்த குவிமாடம் 1885ஆம் ஆண்டில் கட்டப்பட்டது, 1905 ஆம் ஆண்டு ஒரு தமிழ் ரத்தின வியாபாரி தனது திருடப்பட்ட நகைகளையும் ரத்தினங்களையும் கண்டுபிடிக்க நேர்த்திக் கடன் வைத்து அது நிறைவேறியதும் 1905 ஆம் ஆண்டில் மசூதியை ஒட்டி யாத்ரீகர்களுக்கான தங்குமிடம் ஒன்றைக் கட்டிக் கொடுத்தார்.

இரு உயரமான பெரிய வட்டக் கோபுரங்களில் ஒன்று 500 துளைகள் இருப்பதாகக் கூறப்படுகிறது அவற்றில் பல புறாக்கள் வந்து தங்குவதைக் காணலாம். நாளாந்தம் கூடும் பெருமளவு புறாக்களுக்கு அங்கே தீனி போடும் வழிபாட்டாளர்களையும் அங்கே காணலாம். அங்கிருக்கும் நீர் தடாகத்தில் அவை நீர் அருந்திக் குளித்துச் செல்வதையும் காணலாம். அருகிலேயே இருக்கிற கொழும்பு நகரசபை மண்டபக் கட்டிடத்தை ஆங்கிலேயர்கள் கட்டும் போது இந்த குவிமாடத்தின் சாயலில் தான் கட்டினார்கள் என்கிற ஒரு நம்பிக்கையும் கூட பரவலாக இருக்கிறது.

தம்பிலிங்கம் செட்டியார் சமாதிக்கு அருகில் நிரந்தரமாக எரியும் எரிவாயு விளக்கை அமைத்துக் கொடுத்தார். எஸ்.தம்பி முதலியார் இந்த பள்ளிவாசலின் வாயில் பகுதிகளை அமைத்துக் கொடுத்தார். பல முஸ்லிம் தனவந்தர்கள் இதன் கட்டுமானப் பணிகளுக்காக நிறைய உதவியிருக்கிறார்கள்.


இன்று

1983 ஆம் ஆண்டு அன்றைய போக்குவரத்து, முஸ்லிம் அலுவல்கள் கலாசார அமைச்சராக இருந்த எம்.எச் முஹமட்டால் இந்த மஸ்ஜீத்தின் முன்னர் இருந்த தோற்றம் புதுப்பிக்கப்பட்டு பல மாற்றங்களுக்கு உள்ளானது.

ஆனால் பிரதான கட்டிடம் அதன் வரலாற்று முக்கியத்துவம் மாற்றப்படாமல் அப்படியே பேணப்பட்டு வருகிறது. கொழும்பு வரும் உல்லாசப் பிரயாணிகள் பலர் இதனை தேடிக் கண்டு அனுபவித்துச் செல்கின்றனர். வெள்ளிக்கிழமைகளில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட வழிபாட்டாளர்கள் இந்த மசூதியில் கூடுகிறார்கள்.

இந்த பள்ளிவாசலின் கட்டடக் கலையும், அங்கே உள்ள மொசைக் கற்களின் அலங்காரமும் சிறப்பாக பேசப்படுகின்றன.

## நெருக்கடிக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

இதற்கிடையில், ஊழலை அகற்றவும், நிலையான தன்மையை ஏற்படுத்தக் கூடிய வகையில் வினைத்திறனான கட்டமைப்பு மற்றும் நிதி நிர்வாகத்தை மேற்கொள்வதற்கும்முயற்சிகள்மேற்கொள்ளப்படவேண்டும். இதற்கு அரசியல்வாதிகள் மாத்திரமன்றி, அரச ஊழியர்கள் உட்பட நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள அனைவரும் நாட்டுக்காகப் பணியாற்ற வேண்டும். நாம் அனைவரும் கூட்டுப்பொறுப்புடன் செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

**கே: ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைக்கப்படவுள்ள சர்வ–கட்சி அரசாங்கத்தினால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகளை வழங்க முடியும் என நீங்கள் நம்புகிறீர்களா?**

*பதில்: சவால்கள் மிகப் பெரியவை. ஒன்று அல்லது இரண்டு பேர் இந்த வேலையைச் செய்ய முடியும் என்று கருதவில்லை.*

*நாட்டில் உள்ள சிறந்த மூளைகள் ஒன்றுகூடி தங்கள் அரசியலை மறந்து எமக்கு நியாயமான வாய்ப்பை வழங்க வேண்டும்.*

**கே: 19 ஆவது திருத்தத்துக்கு மீண்டும் செல்ல வேண்டியதன் அவசியத்தை சிலர் வலியுறுத்தியுள்ளனர். புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்துவது தொடர்பான நிலைப்பாடு என்ன?**

*பதில்: 19 ஆவது திருத்தச் சட்டம் முழு பலத்துடன் மீண்டும் கொண்டுவரப்படும் என ஜனாதிபதி விக்கிரமசிங்க மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். அதன் பிறகு, அமைச்சரவை இது குறித்து முடிவெடுத்து முடிக்க வேண்டும்.*

## பா.ஜ.கவின் 'சமத்துவ இந்தியா'... (06ஆம் பக்கத் தொடர்)

ஆனால், சிறிதும் கவலைப்படாத இளைஞர் ஷியாம், அந்தக் கிராமத்திலேயே 3 தினங்கள் உறவினர்களுடன் தங்கி விட்டார். கிராமத்தின் மூத்த குடிகளை சந்தித்து தனது நோக்கத்தை எடுத்துரைத்துள்ளார்.

அதேசமயம், ஷியாமைத் தவிர வேறு எவரையும் மணமுடிப்பதில்லை என திரௌபதியும் உறுதியாக இருந்துள்ளார். இதனால் மனம் இறங்கிய தந்தை நாராயண்துடு, திருமணத்துக்கு சம்மதித்துள்ளார்.

ஒரிசாவின் பழங்குடிகள் முறைப்படி பெண் வீட்டார் திருமணத்துக்கு பின் சீர் செய்து அனுப்ப வேண்டும். இதை மாப்பிள்ளை வீட்டாருடன் கலந்து பேசி முடிவு எடுப்பது வழக்கம். அதன்படி, திரௌபதிக்கு ஒரு எருமை மற்றும் பசுவுடன் 16 சோடி உடைகளையும் அவரது தந்தை வழங்கினார். கடந்த 1980 இல் நடைபெற்ற அவர்களின் திருமணத்துக்கு பிறகு திரௌபதி துடு என்றிருந்த பெயர், திரௌபதி முர்மு என்று மாறியது.

அத்தம்பதியருக்கு 2 குழந்தைகள் பிறந்தன. லக்ஷ்மண், ஷிபுன் ஆகிய இருவருமே பிள்ளைகள். கணவர் பெயர் ஷியாம். இம்மூவரும் சில ஆண்டுகள் இடைவெளியில் அடுத்தடுத்து இறந்துவிட அவர்களது நினைவால் திரௌபதி முர்மு மிகவும் வாடியுள்ளார். மூவரின் நினைவாக தனது கணவரின் பஹார்பூர் கிராமத்தில் உள்ள சொந்த நிலத்தில் ஒரு பாடசாலையை கடந்த 2016 இல் அமைத்தார். அதற்கு ஷியாம், லஷ்மண், ஷிபுன் ஆகிய 3 பெயர்களின் முதல் எழுத்தை வைத்து 'எஸ்.எல்.எஸ்.பள்ளி' என்று பெயரிட்டார்.

திரௌபதி முர்முவின் கிராமமான பஹார்பூரில் திருமணமான சுமார் 125 குடிகள் உள்ளன. சுமார் 400 வாக்காளர்களைக் கொண்ட இக்கிராமத்தில் திரௌபதியின் சந்தாலி மற்றும் முண்டா சமூகப் பழங்குடிகள் வாழ்கின்றனர்.

ராய்ரங்பூரின் உபர்பேடா கிராமத்தில் தாம் பயின்ற பாடசாலையிலேயே திரௌபதி ஆசிரியராக சில மாதங்கள் பணியாற்றி உள்ளார். அதன் பிறகு 'ஸ்ரீஅரபிந்தோ இன்டகரல் எடியுகேஷன் சென்டர்' கல்வி நிலையத்தில் உதவிப் பேராசிரியராகப் பணி செய்துள்ளார்.

அப்போது திரௌபதி நீர்ப்பாசனம் மற்றும் மின்சாரத் துறையில் இலிகிதர் பணியும் செய்துள்ளார். அதன் பிறகுதான் 1997 இல் நகர சபைத் தேர்தலில் போட்டியிட்டு அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்துள்ளார். தனது குடும்பத்தின் சோக நிகழ்வுக்கு பின்னர் சைவ உணவுக்கு மாறிவிட்ட திரௌபதி, இஞ்சி மற்றும் வெங்காயம் கூட உணவில் சேர்ப்பதில்லை.

ராய்ரங்பூரில் குறைந்த மின் ஒளியுடன் தனது வீட்டில் பூசை அறையை வைத்துள்ளார் திரௌபதி. இதனுள் விஷ்ணு, லஷ்மி, குழந்தை கிருஷ்ணன் மற்றும் பிரம்மகுமாரியின் படங்களை வைத்துள்ளார். திரௌபதியின் உபர்பேடா கிராமத்தில் சுமார் 6,000 பேர் வசிக்கின்றனர்.

இங்குள்ள திரௌபதியின் தந்தை நாராயண் துடுவின் வீடு ஒன்றுதான் சிறந்ததாகக் கருதப்படுகிறது. இதில் தற்போது திரௌபதியின் 2 சகோதரர்கள் குடும்பத்துடன் வசிக்கின்றனர். கிராமத்தில் இருந்து 25 கி.மீ தொலைவில் உள்ள ராய்ரங்பூருக்கு ஆற்றைக் கடந்து செல்வது சிரமமாக இருந்துள்ளது. 2003 இல் திரௌபதியின் முயற்சியில் அதில் ஒரு பாலம் அமைந்த பின்னர் பிரச்சினை தீர்ந்துள்ளது.

சாதாரண கிராமத்தில் இருந்து குடியரசுத் தலைவர் பதவி வரை உயர்ந்த திரௌபதியின் உண்மையான பெயர் புதி முர்மு.

இவர் பாடசாலையில் பயிலும் போது அவரது சமூகத்தை சேர்ந்தவரும், மற்றொரு மாவட்டத்தில் பணியாற்றி வந்தவருமான ஒரு பெண் ஆசிரியர்தான் திரௌபதி என்ற பெயரைச் சூட்டியுள்ளார். பின்னர் அதுவே நிலைத்து விட்டது. இந்தத் தகவலை திரௌபதியே ஒரு பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் மிக உயர்ந்த பதவியை வகிக்கும் முதல் பழங்குடியினப் பெண்மணி ஆனார் அவர். சுதந்திர இந்தியாவில் பிறந்த முதல் இந்திய குடியரசுத் தலைவர் என்ற பதிவையும் பதித்திருக்கிறார்.

## பதுக்கலை கட்டுப்படுத்துமா?... (09 ஆம் பக்கத் தொடர்)

இதில் வாகன பதிவு தகவலை வழங்கும்போது வாகன அடிச்சட்ட இலக்கங்கள் (Chassis No) உரிய முறையில் பதியப்படாமை உள்ளிட்ட பிரச்சினை எழுந்தன. அதற்கு மாற்று வழியாக வாகன வருமான அனுமதிப்பத்திர இலக்கத்தை பயன்படுத்த வசதி அறிவிக்கப்பட்டுள்ளது.

### தூரப் பயணம்

இது தவிர தமது சொந்த தேவைக்காக, அலுவலக தேவைக்காக தனிப்பட்ட வாகனங்களில் தூர பயணம் மேற்கொள்பவர்கள் தமது ஒதுக்கீட்டிற்கு அதிகமான எரிபொருளை பெறுவதிலும் ஒரு சிக்கல் காணப்படுகின்றது. இதற்கு மாற்றுத் தீர்வாக பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துவதே ஒரே வழியாக காணப்படுகின்றது. ஆயினும் இதற்கான மாற்று வழிகள் அறிவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### ஒன்றுக்கு மேற்பட்ட வாகனங்கள்

தற்போதுள்ள எரிபொருள் நெருக்கடியில் தனிப்பட்ட நபர்கள், தமது அடையாள அட்டை இலக்கம் மூலம் தம்மிடமுள்ள ஒரு வாகனத்தை மாத்திரம் பதிவு செய்து எரிபொருளை பெற்று தமது அத்தியாவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வசதி வழங்கப்பட்டுள்ளது. இது சிலருக்கு எரிச்சலூட்டும் ஒன்றாக இருந்தபோதிலும், நாட்டின் எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் அனைவருக்கும் சமத்துவ வசதி, சமமான பங்கீட்டை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குவது குடிமக்களின் கடமையாகும்.

### ஸ்மார்ட் தொலைபேசிகளின் அவசியம்

QR குறியீட்டை பெறுவதற்கான பதிவுகளை மேற்கொள்வதற்கும், அதன் பின்னர் குறித்த குறியீட்டை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காண்பிப்பதற்கும் ஒரு ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசி இருப்பது அவசியமாகின்றது. ஆயினும், இதற்காக ஒரு தடவை மாத்திரம் மேற்கொள்ளும் பதிவை, எந்தவொரு ஸ்மார்ட்போனிலும், இணைய வசதி கொண்ட சாதனங்களிலும் மேற்கொள்ள முடியுமென்பது சிக்கலை ஏற்படுத்தாது. அதே போன்றே இறுதியில் பெறப்படும் QR குறியீட்டை அட்டையாக அச்சிட்டு பத்தோடு பதினொன்றாவது அட்டையாக பணப்பையினுள் வைத்திருக்க முடியுமென்பதும் இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வாக அமைகின்றது.

### வர்த்தக வாகனங்கள் BRN மூலம் பதிவு

இருப்பினும் வர்த்தக நிறுவனங்களுக்கு மாத்திரம் இவ்வசதி வழங்கப்பட்டுள்ளது. அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் தங்களுக்கு உரித்தான ஒன்றுக்கு மேற்பட்ட வாகனங்களை பதிவு செய்வதற்கு தற்போது வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக தேசிய அடையாள அட்டை கோரப்படும் இடத்தில், வர்த்தக நிறுவன பதிவு இலக்கத்தை (Business Registration NumberBRN) தெரிவு செய்து உள்ளீடு செய்வதன் மூலம் இதற்கான பதிவை மேற்கொள்ளலாம்.

### நாளை முதல் அமுல்

எரிபொருள் விநியோக ஒதுக்கீட்டிற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டம் நாளை (01) முதல் முழுமையாக அமுல்படுத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

### எதுவரை தொடரும்?

எரிபொருள் தட்டுப்பாட்டுக்காக தற்காலிகமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இம்முறையை அமுல்படுத்தி அரசாங்கம் இறுதி வரை எம்மை இதற்குள்ளேயே பழக்கப்படுத்தப் போகிறதா எனும் கேள்விக்கு, போதிய அந்நியச் செலாவணி கிடைக்கும் வரை, நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீளும் வரை, நாட்டிற்கு விடிவு காலம் ஏற்படும் வரை இதுவே கதியாக இருக்கலாம் என்பது பதிலாக அமையப் போகின்றது.

### முறையான பொதுப் போக்குவரத்தும் ஒரு வழி

இந்த இக்கட்டான நிலையை எரிபொருள் ஒதுக்கீட்டின் மூலம் மாத்திரம் தான் தீர்க்கலாமா? திட்டமிட்ட பொதுப் போக்குவரத்து முறையை ஏற்படுத்துவதன் மூலமும் மாற்று வழியாக இப்பிரச்சினைக்கு தீர்வு வழங்கலாம். ஜப்பான், சீனா உள்ளிட்ட நாடுகளில் உயர் பதவிகளில் உள்ளவர்கள் கூட பொதுப் போக்குவரத்தையே பயன்படுத்துகிறார்கள். ஒரு சில வீதிகளில் எவ்வித வாகன நடமாட்டமும் இல்லை என்பதோடு, அவ்வீதிகளில் அவர்கள் சாரி சாரியாக நடந்தே செல்கிறார்கள். அதற்கு அவர்களது பொதுப் போக்குவரத்து வசதியே காரணமாகும்.

அவ்வாறான திட்டமிட்ட வழிகளை உருவாக்கி, அவற்றை நடைமுறைப்படுத்த இதுவே சந்தர்ப்பமாகும். தினமும் விரயமாகும் எரிபொருளுக்காக வெளிநாடுகளில் கடன்படுவதிலும் பார்க்க, திட்டமிட்ட வழிமுறைகளுக்காகக் கடன்படுவது நிரந்தர தீர்வுக்கு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. இதன் மூலம் எரிபொருளுக்காக நமது நாடு செலவிடும் அந்நியச் செலாவணியை மீதப்படுத்தலாம் என்பது இதன் மற்றொரு நன்மையாக காணப்படுகின்றது.

### உலகின் முதலாவது நாடு?

கொவிட் தொற்றைத் தொடர்ந்து ஏற்பட்ட முடக்கம் காரணமாக பல்வேறு நாடுகள் பொருளாதார பின்னடைவை எதிர்கொண்டுள்ளதோடு, இதன் காரணமாக அந்நாடுகள் எரிபொருள் பற்றாக்குறைக்கு முகம் கொடுத்து வருகின்றன. அயர்லாந்து, ஐக்கிய இராச்சியம் போன்ற வளர்ந்த நாடுகளிலும் எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதற்காக அவ்வாறான நாடுகள் ஒவ்வொரு வாகனத்திற்கும் குறிப்பிட்ட எரிபொருள் ஒதுக்கீட்டை அறிவித்துள்ள போதிலும், இவ்வாறு QR குறியீடு போன்ற திட்டங்களை அமுல்படுத்தவில்லை என்றே அறிய முடிகின்றது.

குறித்த ஒதுக்கீட்டு முறைக்கு கட்டுப்படாமல், பதுக்கலையும், முறைகேடுகளையும் மேற்கொள்பவர்களைக் கட்டுப்படுத்தவே QR முறை கொண்டு வரப்பட்டுள்ளது என்பது ஒரு புறம் உண்மையான காரணமாக இருந்தபோதிலும், உலகின் முதன் முறையாக தொழில்நுட்பத்தின் அடிப்படையில் எரிபொருள் ஒதுக்கீட்டை மேற்கொள்ளும் நாடாக இலங்கை தன்னை அடையாளம் காட்டிக் கொள்ளப் போகின்றது என்பதை மறுபுறம் கொண்டாட முடியாமல் உள்ளது.

வீதிகளில் ஓடிய வாகனங்கள் வீதியோரத்தில் வரிசைகளில் ஓய்வெடுக்கும் காலம் கடந்து செல்ல, இலங்கைக்கு விடிவு காலத்தை ஏற்படுத்துவதற்கான ஆரம்பத்தை, நாளை (01) நாடு முழுவதும் அமுல்படுத்தவுள்ள இந்த தேசிய எரிபொருள் அட்டை வழங்குமா என பொறுத்திருந்து பார்ப்போம்!

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜுலை மாதம் 31ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2022 ஜூலை 31 ஞாயிற்றுக்கிழமை
பிரியங்கா அருள்மோகன்





# விமானத்தின் மைலேஜ் விபரம்!

ஓர் விமானம் ஒரு நிமிடம் இயங்க எத்தனை லீட்டர் எரிபொருளை உறிஞ்சும் என்பது பற்றிய விபரத்தை பார்க்கலாம்.

நல்ல மைலேஜ் தரக் கூடிய ஓர் பைக் சுமார் 50 கிமீ முதல் 60 கிமீ வரையில் பயணிக்க ஒரு லீட்டர் பெட்ரோலே போதுமானதாக இருக்கின்றது. இதேபோல், சூப்பராக மைலேஜ் தரக் கூடிய ஓர் கார் 20 கிமீ முதல் 25 கிமீ வரை பயணிக்க ஒரு லீட்டர் பெட்ரோலே போதுமானதாக உள்ளது.

இந்த மாதிரியான சூழலில் வானில் சீறி பாய்ந்து பறக்கும் விமானங்கள் எத்தகைய மைலேஜை தரும்? என்கிற சந்தேகம் நம்மில் பலருக்கு ஏற்பட்டிருக்கக் கூடும்.

குறிப்பாக, அவை எந்தளவு எரிபொருளை பயன்படுத்தும் என்கிற சந்தேகமும் எழுப்பியிருக்கக் கூடும். இந்த சந்தேகத்திற்கான விளக்கத்தையே இதில் பார்க்க இருக்கின்றோம்.

முதலில் வானூர்திகளில் பயன்படுத்தப்படும் ஏவியேஷன் டர்பைன் ஃப்யூவல் (Aviation Turbine Fuel) ஒரு லீற்றர் எவ்வளவு ரூபாய்க்கு விற்கப்படுகின்றது என்பது பற்றிய விபரத்தைப் பார்க்கலாம். கடந்த ஜூலை 16ம் திகதி நிலவரப்பட, ஏவியேஷன் டர்பைன் ஃப்யூவல் ஒரு கிலோ லீட்டர் ரூ. 1,38,147.93 க்கு விற்கப்படுகின்றது.

அப்படியானால், விமானங்களுக்கான எரிபொருள் ஒரு லீட்டருக்கு ரூ. 130க்கும் அதிகமான விலையில் விற்கப்படுகின்றது. இது தலைநகர் டெல்லியில் விற்கப்படும் விலை நிலவரம் ஆகும். ஒரு கிலோ லீட்டர் என்றால் ஆயிரம் லீட்டருக்கு சமம் ஆகும். இத்தகைய அதிக விலையில் விற்கப்படும் எரிபொருளை மிக அதிக வேகத்தில் ஓர் விமானம் உறிஞ்சும் என்பது உங்களில் எத்தனை பேருக்கு தெரியும்.



உதாரணமாக ஓர் போயிங் 747 விமானம் 4 லீட்டர் எரிபொருளை ஒவ்வொரு செகண்டுக்கும் செலவு செய்யுமாம். ஆமாங்க, இங்கே எழுத்து பிழை எதையும் நாங்கள் செய்யவில்லை. ஒரு செகண்டிற்கே ஓர் போயிங் 747 ரக விமானம் சராசரியாக 4 லீட்டர் ஏவியேஷன் டர்பைன் ஃப்யூவலை பயன்படுத்தும். அப்படியென்றால், அது ஒரு நிமிஷத்திற்கு 240 லீட்டர் வரை எரிபொருளை உறிஞ்சும்.

ஒரு நிமிஷத்துக்கே இத்தனை லீட்டர் என்றால், ஒரு மணி நேரத்திற்கு அது எரிபொருளை உறிஞ்சும் என்கிற கேள்வி உங்களுக்கு எழும்பலாம். போயிங் விமானம் ஒரு மணி நேரம் இயங்க 14,400 லீட்டர் வரை எரிபொருள் தேவைப்படுகின்றது. இத்தகைய அதிக எரிபொருள் செலவீனத்தைக் கொண்டதாகவே போயிங் ரக விமானங்கள் பல உள்ளன.

உதாரணமாக, ஓர் போயிங் 747 விமானம் டோக்யோவில் இருந்து நியூ யார்க் நகரத்தை நோக்கி பறக்கின்றது என வைத்துக் கொள்வோம். இந்த பயணத்திற்கு சுமார் 13 மணி நேரம் விமானம் பறக்க வேண்டியிருக்கும். ஆகையால், இப்பயணத்திற்கு மட்டும் சுமார் 1,87,200 லீட்டர் எரிபொருள் தேவைப்படும். போயிங் நிறுவனத்தின் அதிகாரபூர்வ வலைதள பக்கத்தில், போயிங் 747 ஒரு கிலோமீட்டர் பயணிக்க 12 லீட்டர் வரை எரிபொருளை பயன்படுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விமானத்தில் ஒரே நேரத்தில் 568 பேரால் பயணிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்குந்தது.



இந்த விமானம் 1,200 கி.மீட்டர். இடைவெளியை வெறும் இரண்டே மணி நேரங்களில் கடந்துவிடும். அதாவது, மும்பையில் இருந்து தலை நகர் டெல்லியைச் சென்று சேர அதற்கு வெறும் 2 மணி நேரங்களே போதுமானதாக உள்ளது. இது மணிக்கு 600 கி.மீ பறக்கும் திறன் கொண்டது. அதாவது, ஒரு நிமிடத்தில் 10 கி.மீட்டரைக் கடுக்கும் வேகத்தில் இவ்விமானம் பறக்கும்.

இந்த விமானத்தில் சுமார் 192 பேர் வரை ஒரே நேரத்தில் பயணிக்க முடியும். இத்தகைய ஏர்பஸ் ஏ321 விமானம் ஒரு கிமீ பயணிக்க 4.18 லீட்டரை எரிபொருளை பயன்படுத்துமாம். அதாவது, அதன் 1,200 கிமீ பயண இடைவெளியை முழுமையாக முடிக்க 5,016 லீட்டர் ஃப்யூவல் தேவைப்படும் என தரவுகள் தெரிவிக்கின்றன.

இதை வைத்து பார்க்கையில் ஒரு செகண்டிற்கு இந்த விமானம் 0.683 லீட்டர் எரிபொருளை செலவு செய்கிறது என்பது தெரிகின்றது. போயிங் 747 விமானத்தைக் காட்டிலும் இது பல மடங்கு குறைவாகும். ஒரு நிமிட இயக்கத்திற்கு 41.8 லீட்டர் எரிபொருள் போதுமானதாக உள்ளது. இதேபோல், ஒரு மணி நேரத்திற்கு 2,508 லீட்டரை அது எரிக்கும். ஓர் ஏர்பஸ் ஏ321 நியோ விமானத்தின் எரிபொருள் கெபாசிட்டி 32,940 லீட்டர் ஆகும்.

**அட்டைப்பட விளக்கம்**



பிரியங்கா மோகன் (பிரியங்கா அருள் மோகன்) தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னட மொழி திரைப்பட நடிகை ஆவார். இவர் 2019ஆம் ஆண்டு இயக்குனர் க்ரிஷ் கிரிஜா ஜோஷி இயக்கத்தில் வெளியான "ஒந்து கதை ஹெல" என்ற கன்னட திரைப்படத்தில் நடித்து திரையுலகில் அறிமுகமாகியுள்ளார்.

பெண் எழுத்தாளர் அறிமுகம் 33



# கவிதை என்பது படிப்பவரை காதல் செய்வதாக அமைய வேண்டும்

## அமெரிக்காவில் தமிழ் வளர்க்கும் நெல்லை (அன்புடன்) ஆனந்தி

இந்தியாவில் தமிழ்நாட்டில் திரு நெல்வேலியில் பிறந்து தற்போது மிச்சிகன், வட அமெரிக்காவில் 24 வருடங்களாக வசித்து வருபவர் "அன்புடன்" ஆனந்தி. இவர் கவிதாயினி, எழுத்தாளர் , தமிழ் ஆசிரியர், நிகழ்ச்சி தொகுப்பாளர், தயாரிப்பாளர், கவிஞர், கட்டுரையாளர், பட்டிமன்றப் பேச்சாளர் எனத் தமிழ் மொழி மேல் கொண்ட காதலால் இன்றும் தமிழ் சார்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறார்.

அமெரிக்காவில் "எனர்ஜி சயின்சஸ்" என்ற ஒரு அலுவலகத்தில் அலுவலக மேலாளராகப் பணியாற்றி வரும் இவருக்கு, இரு பெண் பிள்ளைகள் உள்ளனர். இவரது கணவர் பிஸியோ தெரபிஸ்டாக அமெரிக்காவில் பணியாற்றி வருகிறார். இவர் கடந்த 15 வருடங்களாக கவிதைகள் , கட்டுரைகள் தொடர்ந்து எழுதி வருகிறார்.

இவர் ஆசிரியப் பயிற்சி படித்துக் கொண்டிருக்கும் பொழுது" நவீன திருவிளையாடல் " என்ற ஒரு நாடகத்திற்கு வசனம் எழுதி அதில் பார்வதியாக நடித்துள்ளார்.

அமெரிக்காவுக்கு வந்த பின் சுமார் பன்னிரண்டு ஆண்டுகளாக முகநூலில் ப்ளாகில் தனது கவிதைகளை எழுதி வந்ததோடு அமெரிக்காவில் இருக்கக்கூடிய தென்றல், கதம்பம் போன்ற இதழ்களில் தனது கட்டுரைகள், கவிதைகள் வெளிவந்துள்ளதாக குறிப்பிட்டார்.

இவர் பல கவியரங்குகளிலும், கருத்தரங்குகளிலும் உலக சாதனை நிகழ்வுகளிலும் பங்கேற்று சான்றிதழ்கள் பெற்றதோடு சங்கப்புலவர் விருது, பாரதியார் விருது, பாவலர் விருது, தங்க மங்கை விருது, தமிழ் தொண்டர் விருது, சிங்கப்பெண் 2022 விருது, ஈரோடு தமிழன்பன் 80 விருது, சமுதாயச் சிற்பி 2022 உள்ளிட்ட சில விருதுகளைப் பெற்றுள்ளதாக குறிப்பிட்டார்.

இவர் கடந்த 15 வருடங்களாகத் தொடர்ந்து எழுதி வருகிறார். இதுவரை ஐந்து நூல்களை வெளியிட்டுள்ளார்.

கொரோனா காலத்தில் தனது முதல் கவிதை நூலான 'என்னுயிர் நீயன்றோ' நூலை வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து 'ஆனந்த அந்தாதி' என்ற அந்தாதி வடிவத்தில் ஒரு கவிதை நூலையும் 'முக்கூடல் வெண்பா' என்ற ஒரு மரபுக் கவிதைத் தொகுப்பு நூலையும் (இரு நண்பர்களோடு இணைந்து) வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவிலிருந்து வெளிவந்த முதல் தன்முனைக் கவிதைகள் நூலாக 'அவளின் நாட்குறிப்பேடு' என்ற கவிதை நூல் வெளிவந்தது. கடந்த மே 8ஆம் திகதி தாயகம் சென்று அங்கே 'மனம் ஒரு மாயக்காரன்' என்ற ஒரு கட்டுரைத் தொகுப்பு நூலை வெளியிட்டுள்ளார்.

கதம்பம், தென்றல், முத்துக்கமலம், வளரி, வல்லினச் சிறகுகள், இனிய உதயம், மக்கள் முரசு, தாரகை, நெல்லை டைம்ஸ், ஆனந்தச் சந்திரிகை, ஆக்கம், தமிழ்ப்பல்லவி, கொக்கரக்கோ, சித்திரகுப்தன் ஆகிய இதழ்களில் இவரது படைப்புகள் வெளி வருவதாக இவர் கூறினார்.

ஒரு கவிதை என்பது எவ்வாறு அமைய வேண்டும் என வினவப்பட்ட போது இவ்வாறு பதிலளித்தார்.

கவிதை என்பது படிப்பவரை காதல் செய்வதாக அமைய வேண்டும். உணர்வுகளைத் தூண்ட வேண்டும் அல்லது எண்ணத்தை எழுச்சியாக்க வேண்டும் அல்லது ஏற்றத்தைக் கொடுக்க வேண்டும்.

ஒற்றை வரியில் சொன்னாலும் சரி, ஓராயிரம் வரிகளில் சொன்னாலும் சரி. சொல்லக்கூடிய விஷயத்தை உள் வாங்கும் விதமாக வாசகருக்குப் புரியும் விதமாக எளிமையாகவும் இனிமையாகவும் நுட்பமாகவும் சொல்ல வேண்டும்.

கண்ணில் காணும் காட்சிகளை கதைகளாய் சொல்லாது, விதைகளாய் விதைக்காது, கவிதையாய்ப் புனைவது ஒரு வரம். அது ஒரு தவம். ஒரு கவிதையைப் படிக்கும் பொழுது அதை அப்படியே மறந்து விட்டு சென்றுவிடக்கூடாது. அந்த கவிதை வாசிப்பாளர் மனதில் ஓடிக்கொண்டே இருக்க வேண்டும். அவன் எண்ணத்தின் ஓரத்தில் எங்கேயோ அமர்ந்துகொண்டு அவனை ஏதோ செய்ய வேண்டும்.

ஒரு கவிதை வாசிப்பாளரைக் கவர்வது அந்தந்த வாசிப்பவரின் மனநிலையை பொறுத்தது. ஒரே கவிதை ஒருவருக்குப் பிடிக்கும், ஒருவருக்குப் பிடிக்காது. ஒரே கவிதையை ஒருவர் ஆகா என்று சிலாகிப்பதும் உண்டு, இன்னொருவர் ஐயோ இதென்ன கொடுமை என்று எண்ணுவதும் உண்டு. வாசிப்பவரின் மனோநிலையைப் பொறுத்தே கவிதை ஈர்க்கப்படுகிறது. சொல்ல வந்த விடயத்தை எளிமையாகப் புரிய வைத்துவிட்டால் எப்படி ஒரு திரைப்படப் பாடலைக் கேட்கும் பொழுது நம் வாழ்க்கையோடு பொருத்திப் பார்த்து கண்ணீர் விடுவதும் அழுவதும் சிரிப்பதும் உண்டோ, அது போல் கவிதை வரிகளைப் படிக்கும் பொழுது அதை தன்னோடு பொருத்திப் பார்ப்பது தான் பழக்கம்.

மஜினா உமறு லெவ்வை ...
மாவடிப்பள்ளி

ஒரு வாசிப்பாளர் அவ்வாறு பொருத்திப் பார்க்கும் பொழுது அவன் மனதைத் தொடும் விதமாக வரிகள் அமைந்துவிட்டால் அந்த கவிதையால் அவர் ஈர்க்கப்படுவார். கவிதை வரிகள் அவன் வாழ்க்கையோடு தொடர்பு கொண்டு பயணிக்கும்.

இன்றும் கண்ணதாசனின் பல வரிகளை நாம் மனதில் நினைத்துக் கொண்டிருப்பது போல, வைரமுத்துவின் வரிகளை வாஞ்சையோடு அசை போட்டுக் கொண்டிருப்பது போல, நாம் எழுதிய வரிகள் ஒருவர் மனதைத் தொட்டு விட்டால் அது அவர்களை ஈர்த்து அவர்கள் மனதில் வாசம் செய்யும். இதற்கான சூத்திரமோ, இலக்கணமோ என்று எதுவுமில்லை. படைப்பாளனின் திறமையும் அதைப் படிப்போரின் உணர்வும் சார்ந்ததே என கவிதை பற்றி தனது கருத்துக்களை கூறினார்.

விளையாட்டாகச் சொல்வது "சண்டை என்று வந்தால் சட்டை கிழியத்தானே செய்யும் என்று". அதுபோல எந்த ஒரு துறையை எடுத்துக் கொண்டாலும் நம்மைப் போற்றும் நபர்களும் தூற்றும் நபர்களும் இருப்பார்கள். மேலே ஏறுவதைப் பார்த்து வியப்போரும் கீழே இழுத்து விட துடிப்போரும் இருப்பார்கள். அப்படி நானும் சில பல அனுபவங்கள் கடந்து வந்துள்ளேன்.

நல்ல அனுபவங்களை ஆனந்த அலைகளாக எடுத்துக்கொண்டேன். கசப்பான நிகழ்வுகளை அனுபவமாக எடுத்துக் கொண்டேன். என்னைப் பொறுத்த வரையில் நீ நீயாக இரு. யாராகவும் இருக்க முயலாதே.. என்பதை வாழ்க்கையில் கடைபிடிப்பவள். நமக்கு வருவதை ஒழுங்காகச் செய்தாலே நமக்குக் கிடைக்கக் கூடியவை தானே கிடைக்கும். இன்னொருவரைப்போல ஆக வேண்டும் என்ற துடிப்புடன் இயங்கும் பொழுது தான் ஒருவன் தன்னை இழக்கிறான். தனக்கான சுயத்தை மறக்கிறான்.

தான் மட்டும் உயர வேண்டும் என்று நினைக்காமல் கூட பயணிப்பவர்களையும் ஒன்றாக இணைத்து செல்லும் பொழுது அதில் கிடைக்கக் கூடிய ஆனந்தமே தனி. அப்படித் தொடர்ந்து செயல்படுவதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருப்பவள்."குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை" என்று என் தகப்பனார் அடிக்கடி சொல்வது போல எல்லாமே சுபமாக நலமாக நடந்துவிட்டால் வாழ்க்கையும் போரடித்துத் தானே போகும். அதனால் சில பல சீண்டல்களும் தடைக்கற்களும் அங்கங்கே வரத்தான் செய்யும். அதைக் கடந்து போவதும் ஒரு சுகமே. எதைப்பற்றியும் அதிகமாக யோசிக்காமல் அவ்வப்போது கடந்து போவதே என் வழக்கம். அதுவே நான் தொடர நினைக்கும் பழக்கம். "துன்பம் வரும்போது கொஞ்சம் சிரிங்க" என்று சொல்லி வைத்தார் வள்ளுவர். நன்மை வரும் பொழுது எப்படி மனமகிழ்வோடு குதூகலத்தோடு இருக்கிறோமோ, அதே போல துன்பம் வரும் பொழுதும் அதையும் ஏற்றுக் கொள்ளக் கூடிய மனப்பக்குவத்தைப் பெற்று விட்டால் பல இன்னல்களைத் தவிர்க்கலாம்.

இன்பமோ துன்பமோ சமமாகப் பார்க்க முயற்சி செய்கிறேன். புகழ்ச்சியும் இகழ்ச்சியும் சமமாக எடுத்துக் கொள்ள பயின்று கொண்டிருக்கிறேன். தடைக்கற்களை படிக்கற்களாகத் தாண்டி பயணித்துக் கொண்டிருக்கிறேன் என தான் சந்தித்த சவால்களையும் அதை தாண்டிய விதத்தினையும் பகிர்ந்து கொண்டார்.

கவிதை பயன் கருதி நான் எந்தக் கவிதையும் எழுதுவதில்லை. அதுபோல் எனது கவிதையை நீ படித்தே ஆக வேண்டுமென்று யாரையும் கொடுமை செய்வதுமில்லை.

கவிதை எழுதுவது என்பது நம் மனதை புத்துணர்வோடு வைத்திருக்கச் செய்கிறது. கவிதை எழுதுபவனும் ஒரு படைப்பாளியே! ஒரு படைப்பாளியாக நாம் இருக்கும் பொழுது நம்மை அறியாமல் நமக்குள் ஒரு சிலிர்ப்பு, மகிழ்ச்சி, ஆனந்தம் இருக்கத்தான் செய்கிறது.எதிரே நடக்கும் ஒரு சம்பவத்தைப் பார்க்கும் பொழுது நான்கு வரிகளில் அதைக் கவிதையாக வடிக்கும் பொழுது ஏதோ ஒன்றைப் பதிவு செய்து நிறைவு செய்ததாய் ஒரு எண்ணம்.

அதை யாரோ ஒருவர் புரிந்து கொண்டு சரியாகச் சொல்லியிருக்கிறீர்கள் என்று சொல்லும்பொழுதும், மனதைத் தொடும் விதமாக இருக்கிறது என்று ரசிக்கும் போதும் நமக்குள் ஏதோ சாதித்து விட்ட உள்ளுணர்வு.எந்தப் பயனையும் எதிர்பார்க்காது செய்யக்கூடிய செயலுக்கு தான் நன்மை உண்டு. அதுபோல் எந்தப் பயனையும் எதிர்பார்த்து நான் கவிதை எழுதுவதும் இல்லை. அப்படி எழுதுவது கவிதையாகவும் இருப்பதில்லை.



மனதில் பட்டதை மகிழ்வோடு வரிகளாகப் படைத்து வருகிறேன். ஒரு சூரிய உதயம், சூரிய அஸ்தமனம், மழை நேரத்து மாலை, பனித்துளி படர்ந்த மலர்கள், துள்ளிக்குதிக்கும் மீன்கள், தூரப் பறந்து போகும் பறவைகள், ஓடிப்பிடித்து விளையாடும் சிறுவர்கள், ஓரமாக அமர்ந்து கதைக்கும் பெரியவர்கள், காதலோடு கடக்கும் இணையர்கள், காத்திருக்கும் தெருவோரக் கடைக்காரர்கள், அசை போட்டுக் கொண்டிருக்கும் மாக்கள், அழகாக வருடிப் போகும் தென்றல், இப்படி கண்ணில் பட்டதையெல்லாம் கருத்தில் நினைத்ததையெல்லாம் கவிதையாக படைப்பதில் இருக்கும் சுகமே தனி. ஒரு கவிஞனாக படைப்பாளியாக இருப்பதில் நானும் பெருமை கொள்கிறேன் என மனம் திறந்து தனது இலக்கியப்பயணத்தின் அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்.

# நட்பின் நாயகன் 'கனடா உதயன்' லோகேந்திரலிங்கத்தின் இலக்கிய ஊடக பணிகளை பாராட்டிய விழா

கனடா உதயன் பிரதம ஆசிரியரும் நிர்வாகியும் ஆகிய நாகமணி லோகேந்திரலிங்கத்தின் 50 ஆண்டு கால இலக்கிய மற்றும் ஊடக பணிகளைப் பாராட்டும் விழா 120722 அன்று கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற போது பல்வேறு ஆளுமைகள் தெரிவித்த கருத்துக்களின் சுருக்கமான தொகுப்பு:

இலக்கிய ஆர்வலர் உடுவை.எஸ். தில்லைநடராசா விழாவிற்கு வருகை தந் தோரை வரவேற்று தலைமையுரை ஆற்றுகையில்

"நாகமணி லோகேந்திரலிங்கம் 50 ஆண்டுகளுக்கும் அதிகமாக இலக்கியத்துறையில் கவிதை, கட்டுரை, கதை என பல ஆக்கங்களைப் படைத்ததுடன், ஊடகத் துறையில் நாட்டு நடப்புகள், செய்தி, விமர்சனம் என பல்வேறு விடயங்களை மிகச் சுவையாகவும் மனதில் நிலைத்து நிற்கத் தக்கதாகவும் எழுதி வருபவர்., அத்துடன் பலரை பத்திரிகைகளில் எழுத தூண்டி வருபவர். குறிப்பாக எங்கள் நாட்டில் இடம்பெற்ற விரும்பத்தகாத விளைவுகளால் கனடாவுக்கு புலம்பெயர்ந்து சென்றதும், கனடா வாழ் தமிழ் மக்களுக்காக "கனடா உதயன்" வாரப் பத்திரிகையை ஆரம்பித்து வர்த்தகப் பிரமுகர்களுடன் உதவியுடன் இலவசமாக விநியோகித்து வருகிறார். கனடாவிலும் தமிழர்கள் வாழும் உலகின் ஏனைய பகுதிகளிலும் நடைபெறும் முக்கிய தகவல்களையும் மக்கள் அறியவேண்டும் என்பதற்காக கனடா உதயன் பத்திரிகையை பிரதம ஆசிரியராக பொறுப்பேற்று நடத்தி வருகிறார்.

ஒவ்வொரு வருடமும் உலகின் பல்வேறு பகுதிகளில் சிறப்பாக கலை, இலக்கிய சமூகப் பணியாற்றும் தமிழரை கனடாவுக்கு அழைத்து சர்வதேச விருதையும் வழங்கி வருகின்றார். அது மட்டுமல்ல போராட்டத்தின்போது முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களது வாழ்க்கையை சீராக்கி வருமானத்தை உயர்த்துவதற்கான பணிகளை ஆற்றி வருகிறார். எனவே, அவர் நீடித்த ஆயுளுடன் மேலும் பல பணிகளையாற்ற வேண்டுமென்பதற்காக இலங்கை நண்பர்கள் பாராட்டு விழாவை ஒழுங்கு செய்துள்ளனர் என்று குறிப்பிட்டார்.

தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் தனது உரையில், "கனடா உதயன்" பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் நிர்வாகியுமாகிய லோகேந்திரலிங்கத்தின் எழுத்தாற்றலும் நிர்வாகத் திறனும் போற்றுதலுக்கு உரியது. ஊடக உலகின் பல்வேறு துறைகளிலும் சிறப்பான ஆற்றல் மிக்கவராக திகழும் லோகேந்திரலிங்கம் இலங்கையில் வாழ்ந்த போதும் கனடாவுக்கு புலம் பெயர்ந்து வாழுகின்ற போதும் தொடர்ச்சியாக எழுத்துப் பணியையும் ஊடகப் பணியையும் சிறப்பாக ஆற்றி மற்றவர்களையும் இத் துறைகளில் பிரகாசிக்க வைத்து வருகிறார். தமிழ் மக்களின் கலை இலக்கிய பண்பாட்டு நிகழ்ச்சிகளுக்கும் பொருளாதார வாழ்வுக்கும் முக்கிய இடம் கொடுத்து வரும் லோகேந்திரலிங்கம் பல நாடுகளிலும் வாழும் தமிழ் மக்களுடன் இணைய வழியாக இணைந்து அவர்களுக்கு ஆதரவு வழங்கி வருவதுடன், கலை இலக்கிய ஊடக பாலமாகவும் திகழ்ந்து வருகிறார்", என்று குறிப்பிட்டார்.

வீரகேசரி பிரதம ஆசிரியர் ஶ்ரீகஜன் பேசுகையில், "பத்திரிகை ஆசிரியர்களுக்கும் சில விருப்பு வெறுப்புகள் இருக்கலாம்., ஆனால் மக்களுக்காக பத்திரிகை நடாத்தும் ஊடகவியலாளருக்கு சிறப்பான சமூகப் பார்வை இருக்க வேண்டும். பல்வேறு மக்களின் அபிப்பிராயங்களை பிரதி பலிப்பதாக பத்திரிகையை நடத்தி செல்ல வேண்டும். அந்த வகையில் கனடா உதயன் தமிழ் மக்களுக்காக வெளி வரும் பத்திரிகை. யார் எதை எழுதினாலும் தரமான படைப்புகளுக்கு தனியிடம் கொடுத்து அவர்களை ஊக்குவித்து, வாசகர்கள் பல விடயங்களையும் அறியச் செய்து வரும் பணி பாராட்டத்தக்கது. நம்நாட்டு படைப்பாளிகளை மதித்து ஊக்குவிக்கும் நோக்குடன் "கனடா உதயன் இலங்கை







சிறப்பிதழை" வெளியிட்டதையும், எல்லோருடனும் நல்ல மனதுடன் நட்பு பாராட்டுவதையும் அவரது பெரும் தன்மையைக் காட்டுகிறது",என்று குறிப்பிட்டார்.

சிரேஷ்ட எழுத்தாளர் கலாநிதி சதீஷ் குமார் சிவலிங்கம் உரையாற்றுகையில் "லோகேந்திரலிங்கம் எங்கும் எப்போதும் தன் மனதில் உள்ளவற்றை அஞ்சாமல் வெளிப்படுத்தும் துணிச்சல் மிக்க ஊடகவியலாளர். பல்வேறு தரப்பினருடன் பழகும் போது கூற வேண்டிய விடயங்களை பக்குவமாக கூறுவதில் வல்லவர். அரசியல்வாதிகளுக்கும் அஞ்சாமல் தனது அபிப்பிராயங்களை தெரிவித்து வருபவர். தாய் நாட்டையும் தமிழர்களையும் மறவாமல் உயிர்த்துடிப்பான வார்த்தைகளால் ஊடகத் துறையில் தனக்கென ஒரு தனியான இடத்தை நிலைநாட்டி தொடர்ந்தும் பணியாற்றி வருபவர். ஊடகத்துறையில் நிலைத்து நிற்கும் அளவுக்கு தனித்துவம் வாய்ந்தவர்., தமிழ் மக்களின் கலை, இலக்கிய பண்பாட்டு பொருளாதார நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இவர் பல நாடுகளிலும் தமிழ் மக்களோடு தன்னை இணைத்துக்கொண்டு பாலமாக செயற்பட்டு வருகிறார். விழாவில் கலந்து கொள்பவர்கள் பற்றியும் குறிப்பிட விரும்புகின்றேன். இந்த நிகழ்வுக்கு முன்னிலை வகிக்கும் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் வெளிநாடுகளில் நடைபெற்ற எனது புத்தக வெளியீடுகளில் கலந்துகொண்டு எனது இலக்கியப் பணிகளுக்காக பெருந்தொகை பணத்தை அன்பளிப்பு செய்து என்னை ஊக்குவித்து வருபவர். அதேபோல இந்த நிகழ்விலும் விழா நாயகனுக்கு பெரும் தொகை பெறுமதியான நவீன கைத் தொலைபேசியை அன்பளிப்பு செய்து, அவரது பணிகளை ஊக்குவித்துள்ளார்" என்று தெரிவித்தார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் வி.தேவராஜ் பேசும்போது, "லோகேந்திரலிங்கமும் நானும் பதுளை மண்ணைச் சேர்ந்தவர்கள். லோகேந்திரலிங்கம் சிறு வயது முதல் வாசிப்பவர்களின் நெஞ்சைத் தொடும் வகையில் கனதியான காத்திரமான கவிதைளை "மலையன்பன்" என்னும் பெயரில் எழுதியதையும் தமிழ் மக்களின் சுய கௌரவம், பாதுகாப்பு, மனித உரிமை தமிழ்த்தேசியம் பற்றி அடிக்கடி ஊடகங்களில் எழுதிவருவதையும் பெருமையுடன் குறிப்பிடவேண்டும். நாங்கள் இருவரும் நண்பர்கள் என்று சொல்வதை விட அண்ணன் தம்பி என்ற உறவு முறையில் இணைந்தவர்கள் என்பது பொருத்தம். பல நாடுகளில் வாழும் நல்ல இலக்கிய




வாதிகளை லோகேந்திரலிங்கம் தனது சொந்த செலவில் கனடாவுக்கு அழைத்து இலக்கிய சந்திப்புகள் நிகழ்தி வருவதைக் குறிப்பிடுவதோடு, அத்தகைய சந்திப்புகளில் நானும் கலந்து கொண்டேன் என்பதை பெருமையுடன் குறிப்பிடுகின்றேன் " என்றார்.

லோகேந்திரலிங்கம் தனது ஏற்புரையில் "பத்திரிகை உலகுக்கு தொண்டு செய்வதுடன் எமது சமூகத்துக்கு முக்கியமாக தேவைப்படும் விடயங்களை தொடர்ந்து கனடா உதயனில் எழுதி வருகின்றேன்., கூரான கத்தி மேல் நடப்பது போல் எனது கடமை அமைந்துள்ளதைக் குறிப்பிட வேண்டும்., அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்கள், கலாசார விடயங்கள், மக்களின் இன்ப துன்பங்கள் ஆகியவற்றை அவ்வப் போது எனது பத்திரிகையில் கொண்டு வருகிறேன். அத்துடன் எமது விடுதலைப் போராட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து எனது கலை இலக்கிய ஊடகப் பணிகளை செய்து வருகிறேன். 2009 போராட்டத்தின் உச்சகட்டதிதிலும் மக்களுக்காக பணியாற்றியதால் கனடா உதயனுக்கு பல அன்பர்கள் உதவி செய்து வருகிறார்கள்., பல எழுத்தாளர்கள் பல்வேறு தகவல்களை தருகிறார்கள்., கனடா உதயன் சிறப்பாக வெளி வருவதற்கு நல்ல முறையில் ஆதரவு தருவோருக்கும்,போராட்டம் நடைபெற்ற பகுதிகளில் வாழ்வாதாரம் தேவைப்படுவோருக்கு உதவிகளை செய்வோருக்கும் மன நிறைவான நன்றியை தெரிவிக்கிறேன். என்னைப் பாராட்டும் விழா தொடர்பான விடயங்களில் ஈடுபட்ட அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

விழாவில் கலந்து கொண்ட முக்கிய பிரமுகர்களுக்கு 'கனடா உதயன்' இலங்கை சிறப்பிதழின் பிரதினை லோகேந்திரலிங்கம் வழங்கிவைத்தார். "கனடா உதயன் இலங்கைச் சிறப்பிதழ்"தொடர்பான ஒரு பார்வை என்னும் தலைப்பில் வசந்தி தயாபரன் எழுதிய கட்டுரையை ஊடகவியலாளர் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன அறிவிப்பாளர் விசு.கருணாநிதி சபைக்கு சமர்ப்பித்தார்.

ஊடகங்கள் பல்கிப் பெருகி வெளிவரும் நவீன யுகத்தில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்., இலத்திரன் ஊடகங்களின் நடுவே கனடா உதயன் 25 ஆண்டுகளாக தொடர்ந்து வெளிவந்து தமிழ் உலகை தன்வசப்படுத்தி வருகிறது., உதயன் பத்திரிகை நிர்வாகியும் பிரதம ஆசிரியரும் ஆகிய லோகேந்திரலிங்கம் தொடர்பாக நிறையவே அறிந்துள்ளோம்.

"தாமரை" சஞ்சிகையை தோற்றுவித்த போது,ப.ஜீவானந்தம் " இலக்கியம் சமுதாய சூழ்நிலையை உருவாக்கும் மரம் மட்டுமல்ல சமுதாய சூழ்நிலையை உருவாக்கும் வித்துமாகும்" என்று குறிப்பிட்டதை இப்போது பொருத்திப் பார்க்க விழைகின்றேன்

ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்தோர் தமிழ் உலகுக்கு அரும் கொடையாக புதிய பரிணாமத்துடன் இலக்கிய தமிழ் நெஞ்சங்களை உணர்வுப் பகிர்வு மூலம் ஒருங்கிணைந்து வருகிறது., லோகேந்திரலிங்கமும் இப்பணியில் இணைந்துள்ளார். "தாய்க்கு ஒப்பான தாய்நாட்டை மறவாதிருப்போம்" என்னும் மகுட வாக்கியம் கனடா உதயன் பற்றிய பெரிய அளவிலான புரிதலை ஏற்படுத்தி விடுகிறது. உள்ளடக்கத்தின் பகுப்பில் சுவாரஸ்யமான கதை, இலக்கியம், அரசியல், சமூகம், சினிமா, ஆன்மீகம் ஆகியவற்றோடு மனிதநேயம் என்ற பிரிவும் என்னை வியக்க வைத்தது.

ஆசிரியரின் சமூகப்பார்வை ஆழமான புரிதலுக்கு இட்டுச்சென்றது.

குறிப்பிடக்கூடிய கட்டுரைகள் பின்வருமாறு

**1. ஈழ இலக்கிய போக்கில் திருகோணமலை கலை இலக்கியம் தொடர்பான ஒரு வரலாற்றுப் பதிவு.**

**2. 'மலையக அரசியல் தலைவர்களும் தளபதிகளும்,'சி.வியின் நூல் பற்றிய கட்டுரை.**

**3. மலையக எழுத்தாளர் சிவலிங்கம் பற்றிய கட்டுரை.**

மற்றும்

"எங்கே என் தாய்நாடு ?"."கூக்குரல்"."உயிர் கொடுத்த கனடா தேசம்" . "வாழ்ந்து காட்டு". வீழவோம் என நினைத்தீரோ ? என்னும் தலைப்பில் அமைந்த பல கவிதைகளும் இச்சிறப்பிதழில் இடம்பெற்றுள்ளன. புகழ் பூத்த இலங்கை தமிழ், முஸ்லிம் எழுத்தாளர்களின் சிறுகதைகளும் சிறப்பிதழை அலங்கரிக்கின்றன. எழில்மிகு இலங்கை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட உலகப் புகழ்பெற்ற ஊடக மன்னன் இலக்கிய திலகம் லோகேந்திரலிங்கத்தின் ஊடக இலக்கியப் பணிகளை பாராட்டிய விழாவில்,இலங்கை பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் சமூக ஆர்வலர்கள், இளைஞர்கள் பலர் கலந்து கொண்டனர். இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நவீன கைத்தொலைபேசி ஒன்றை அன்பளிப்பு செய்து அவரின் பணிகளைப் பாராட்டினார். இலங்கை இந்து குருமார் அமைப்பு தலைவர் கலாநிதி சிவஸ்ரீ.வைத்தீஸ்வர குருக்கள் பாராட்டி வாழ்த்துப் பத்திரம் வழங்கினார். மிருதங்க வித்துவான் வேணிலான் ,கவிஞர். சுபாஷினி.பிரணவன், கலைமணி ஸ்ரீதயாளன், சென்னையிலிருந்து வருகை தந்த ஊடகவியலாளர்.ஆர். பிரகாஷ் உட்பட பலர் லோகேந்திரலிங்கத்தைப் பாராட்டி வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.



**இட்லிக்கார் :** என் மனைவி இட்லி பண்ணா மல்லிகைப்பூ மாதிரி இருக்கும்..
**பச்ச :** அப்படியா ?
**இட்லிக்கார் :** ஆமாம் , மீந்து போன இட்லிய தொடுத்து தலைல வெச்சிப்பாள்னா பாத்துக்கோங்க !



**மாணவன்** : பரீட்சையில் ஃபெயில் ஆனதுக்கு என்னோட மறதி தான் சார் காரணம்
**ஆசிரியர் :** இப்பவாவது உணர்ந்தியே!
**மாணவன் :** கையில் பிட் இருந்தும் அடிக்கலைன்னா வேற என்ன சார் சொல்றது

மா மர இலை 52,
அரச மர இலை 66
ஆல மர இலை 92,
இத எல்லாத்தையும் கூட்டினால் என்ன வரும்?
வேறென்ன வரும் குப்பைத்தான் வரும்.



**ஆசிரியர் :** மாலன், ஆறில் பத்து போகுமா?
**மாலன் :** போகும் சார்!
**ஆசிரியர் :** எப்படி?
**மாலன் :** எங்க வீடு ஆத்துக்குப் பக்கத்திலேதான் சார் இருக்கு. எங்கம்மா தினமும், பத்துப் பாத்திரத்தை அங்கே தான் தேய்ப்பாங்க



**ஒருவர் :** என்னது பேப்பர்ரோஸ்ட் ஓரத்திலே வரிசையா ஓட்டை இருக்குது?
**மற்றொருவர் :** இது கம்ப்யூட்டர் பேப்பர் ரோஸ்ட்...






**பாபு :** உன் மனைவி யாருக்கு ஓட்டுப் போடுவாங்க?
**கோபு :** நான் யாருக்கு ஓட்டுப் போடுவேனோ, அவருக்குத்தான்
**பாபு :** யார் அவர்?
**கோபு :** அதை இன்னும் என் மனைவி முடிவு செய்யவில்லையே!



**நண்பர் :** கவர்னர் பதவிக்கு உங்க பெயர் அடிபடுது! நீங்க என்னடான்னா கவலையா காட்சி தர்றீங்களே ?
**அரசியல்வாதி :** இந்த தடவையாவது எப்படியும் ஜெயிச்சிடணுங்கற கவலைதான்



**பாக்கி :** அவன் ஏன் நீலநிறச் சட்டை போட்டுக் கொண்டிருக்கிறான் தெரியுமா?
**பாபு :** தெரியலையே!
**பாக்கி :** வெறும் பனியனை மட்டும் போட்டுக் கொண்டு ஆபீசுக்கு வரக்கூடாது என்று தான்.



**ரமனன் :** அவர் ரொம்ப குண்டு தான் ஆணா அதுக்காக அந்த ஹோட்டல்ல அவரை இப்படி அவமானப்படுத்தியிருக்கக் கூடாது
**பாக்கி :** அப்படி என்ன பண்ணீங்க
**ரமனன் :** மெனுவுக்கு பதிலா "கொடேஷன்" குடுத்தாங்களாம்



**பிரமுகர் :** எனக்கு 65 வயசு ஆகுது.. இதுவரை எதிரின்னு ஒருத்தர் கூடகிடையாது..
**தொ.கா. நிருபர் :** அட.. ஆச்சரியமா இருக்கே.. அய்யா சொல்லுங்க.. எப்படி இதை சாதிக்க முடிஞ்சது..?
**பிரமுகர் :** பசங்கள அனுப்பி போட்டுத் தள்ளிட்டா முடிஞ்சது..!
கடி

பல் வலிக்கு முக்கியமான காரணம்
என்னனு தெரியுமா?
வேற ஏன்னா!!! பல் தாங்க!!!




# புலனாய்வு ஊடகவியலாளராக வர வேண்டும் என்பதே எனது கனவு

## ஊடகவியலாளர் அப்ரா அன்ஸார்

என்னைப் பொறுத்தவரையில் நான் ஊடகத்துறையில் பயணிப்பதை வெற்றியாக பார்க்கிறேன். நான் ஊடகத்துறையில் கால் வைத்து இந்த வருடத்துடன் நான்கு வருடங்கள் பூர்த்தியாகின்றன. என்னுடைய சிறு வயது இலட்சியம் நான் வைத்தியராக வர வேண்டும் என்பது தான். எனினும் நான் ஊடகவியலாளராக இருக்கிறேன். எனது துறை தான் மாறியிருக்கிறது. மாறாக எனது இலக்குகள் அப்படியே தான் இருக்கின்றன. இதற்காக ஒவ்வொரு நிமிடமும் இறைவனுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

எல்லோருக்கும் பாடசாலை வாழ்க்கை என்பது இனிமையாகவே இருக்கும். எனக்கு அது தலைகீழாக மாறிவிட்டது. இப்போது நினைக்கிறேன் அவ்வாறு நடந்ததும் நல்லதுக்குத் தான்.

இறைவனின் நாட்டம் என்பது சும்மா இல்லை என்பார்கள் அது உண்மைதான். பாடசாலைக் காலத்தில் சில கசப்பான விடயங்கள் என்னுடைய கல்வியை சிறப்பாக தொடர தடையாக இருந்தது. அதற்கு சில நண்பர்களின் செயற்பாடுகள் அமைந்திருந்தன. எனினும் இன்று அவர்களே வியக்கும் வகையில் இறைவன் என் வாழ்க்கையை மாற்றியிருக்கிறான்.

நான் இதனை வெளிப்படையாக கூறுவதற்குக் காரணம் என்னைப் போன்று இன்னும் பல பெண்கள் மற்றும் ஆண்கள் அவர்களின் கதைகளில் மனமுடைந்து போகலாம். அவர்களுக்கு நிச்சயம் நான் ஒரு உந்து சக்தியாக இருக்க வேண்டும் என்பதே எனது ஒரே நோக்கம்.

நான் பாடசாலைக் காலத்திலிருந்தே எழுதி வருகிறேன், பாடசாலை மட்ட போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றுள்ளேன். எனவே எனது எழுத்துக்களை இன்னும் சமூகத்துக்கு அழுத்தமாக கொடுக்க வேண்டும் என பத்திரிகைத் துறைக்கு பிரவேசிக்க வேண்டும் என்று நினைத்தேன். உயர்தரப் பரீட்சைக்கு பின்னர் ஊடகத்துறை சம்பந்தமான பயிற்சிப் பட்டறை ஒன்றில் கலந்து கொண்டேன். அங்கு தான் இந்த நாட்டின், முஸ்லிம் ஊடக சமூகத்தின் முன்னோடி என். எம் அமீன் சேர் ஐ சந்தித்தேன். அன்றிலிருந்து இன்று வரை அவர் தான் எனது சிறந்த வழி காட்டி.

எனது எழுத்துக்களுக்கு இவ்வளவு பெறுமதி இருக்கும் என்பதை எனக்கு உணர்த்தியது என்.எம் அமீன் சேர் தான். எனது கட்டுரைகளுக்கான அங்கீகாரத்தைத் தந்தது நவமணி பத்திரிகை தான். எனது ஊடகத்துறை ரோல் மொடல் என். எம். அமீன் சேர் தான். அவருடைய அனுபவம், பொறுமை, தலைக்கணம் அற்ற தன்மை எல்லாம் எனக்கு ஒரு உந்து சக்தியாக இருக்கின்றது. நானும் எதிர்காலத்தில் பல சமூக அக்கறை கொண்ட ஊடகவியலாளர்களை உருவாக்க வேண்டும். என்னுடைய எழுத்துக்களுக்கு குறை சொல்பவர்களை நான் நேசிக்கிறேன். அவர்கள் கட்டாயம் தேவை. ஆனால் என்னுடைய முகத்துக்கு நேராக பேச வேண்டும் என்பதையே நான் அவர்களுக்கு கோரிக்கையாக விடுக்கிறேன். பின்னால் பேசுபவர்கள் கோழைகள் , கோழைகளை பற்றி யோசிப்பது பிரயோசனமற்றதாகவே நினைக்கிறேன்.

நான் ஒரு எழுத்தாளர். எனது எழுத்துக்கள் உண்மையை பிரதிபலிக்க வேண்டும் என்பதையே நான் நினைக்கிறேன்.இதுவரையில் என்னால் 50 மேற்பட்ட கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.

அவை நவமணி, மீள்பார்வை, தமிழன், தினகரன் ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. பெரும்பாலும் களத்திற்கு சென்று அங்கு பெற்ற கதைகளை எழுதியிருக்கிறேன் உதாரணமாக உமா ஓயா திட்டம், கரும்பு செய்கையாளர்களின் பிரச்சினைகள், 7 வருடங்களுக்கு பின்னர் (கலவரம்) அளுத்கமை தர்கா நகரின் நிலை குறிப்பிடலாம். அது மாத்திரமின்றி விளையாட்டு துறையிலும் பல கட்டுரைகளை எழுதி வருகிறேன். எழுத்து துறை மாத்திரமின்றி நான் ஒரு தொலைபேசி ஊடகவியலாளராக (மொபைல்) இருக்கிறேன்.

சமூகத்திலுள்ள பல பிரச்சினைகளை காணொளி documentary ஆக வெளிக்கொண்டு வந்துள்ளேன். எனக்கு விளையாட்டு மற்றும் புலனாய்வுத் துறைகளில் சிறந்த ஊடகவியலாளராக வர வேண்டும் என்பதே கனவு. அதற்காகவே நான் தொடர்ந்து உழைத்து வருகின்றேன்.

எனது குடும்பம் தான் எனது வெற்றிக்கு காரணம். அவர்களுடைய அன்பு, நம்பிக்கை தான். எனது தந்தை வெளிநாட்டில் பணிபுரிகிறார்.

தாய் இல்லத்தரசி, எனக்கு அண்ணன் மற்றும் அக்கா மாத்திரம் தான் . அண்ணண் வணிகத்துறையில் கற்றவர். தற்போது கணக்காளராக இருக்கிறார். அக்கா கலைத்துறையில் கல்வி கற்றார். அவர் இல்லத்தரசியாக இருக்கிறார்.

நான் நடுத்தர வர்க்கத்தை சேர்ந்தவள். எனினும் என்னை ஒரு இளவரசியாகவே எனது தந்தை பார்க்கிறார்.

நான் மனமுடைந்து போகும் போதெல்லாம் எனது சகோதரன் மற்றும் சகோதரி எனக்கு ஆறுதல் கூறி நம்பிக்கை தருவார்கள். எனது தாய் மற்றும் தந்தையுடைய ஆதரவு தான் என்னை ஊடகத்துறையில் சிறப்பாக பயணிக்க வழிவகுத்தது.

ஒரு பெண்ணின் வெற்றியின் பின்னால் ஒரு ஆண் இருப்பார் என்று கூறுகிறார்கள். நிச்சயமாக எனது வெற்றியின் பின்னால் எனது தந்தையின் வியர்வையே இருக்கின்றது. இந்த நாட்டின் சிறந்த முஸ்லிம் பெண் ஊடகவியலாளராக வர வேண்டும் என்பதே எனது இலக்காக உள்ளது. நான் 1996.06.21 ஆம் திகதி களுத்துறை மண்ணில் பிறந்தேன். எனது பாடசாலை களுத்துறை முஸ்லிம் பாளிகா மகா வித்தியாலயம். 2013ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சை மற்றும் 2016ஆம் ஆண்டு கலைப்பிரிவில் உயர்தரப் பரீட்சையில் நிறைவு செய்தேன்.

பல்கலைக்கழக வாய்ப்பு கிடைக்கவில்லை என்றாலும் 2019ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறை டிப்ளோமாவை நிறைவு செய்தேன். ஆங்கில டிப்ளோமாவை Aquinas college இல் கற்றேன்.

எனினும் இன்னும் அது நிறைவடையவில்லை. நாட்டின் சிக்கலான சூழலினால் அதை இந்த வருடம் நிறைவு செய்ய எதிர்பார்த்து உள்ளேன். நான் எப்போதும் இன்னொருவருக்கு மோட்டிவேசனாக இருக்க வேண்டும் என நினைக்கிறேன். குறிப்பாக ஊடகத் துறையை தெரிவு செய்கின்ற பெண்களுக்கு.

பலர் என்னுடைய எழுத்துக்களை பாராட்டும் போது நான் என்னுடைய தமிழ் பாட ஆசிரியை ஹைறியாவை நினைக்கிறேன்.

ஏனெனில் அவரைப் போன்று தமிழ் பாடத்தை இனிமையாக கற்றுத் தரக்கூடிய ஆசிரியை தற்போது இருக்க முடியாது. மிகவும் அரிது அவ்வாறான ஆசிரியர்கள்.

நம் வாழ்க்கையில் பல விடயங்களுக்கு இறைவனுக்கு தொடர்ந்து நன்றி செலுத்துகிறேன்.

குறிப்பாக நான் 2012ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை எழுதி இருக்க வேண்டும்.

ஆனால் என்னுடைய சூழல் அதனை மாற்றி விட்டது. 2013ஆம் ஆண்டு என்னுடைய பரீட்சையை எழுதி உயர் தரத்துக்கு சென்றேன்.

நான் என்னுடைய பரீட்சையை private ஆக செய்தேன். அந்த வேளையில் என்னுடைய பாடசாலை அதிபர் நாஜிபா அமீர் ஹம்சா என்னைப் பாராட்டி பாடசாலையில் சேர்த்துக் கொண்டார். என்னுடைய பாடசாலை காலத்தில் அதிபரையும், என்னுடைய தமிழ் பாட ஆசிரியை ஹைறியாவையும் சிறு வகுப்பு ஆசிரியைகளான ஜெலீலா மற்றும் ஹிதாயா ஆசிரியையும் ,கணித பாட ஆசிரியர்களான அஜ்வாத் மற்றும் ராஸிக் சேரையும் மறக்க முடியாது.

அவர்களுடைய பிரார்த்தனைகள் மற்றும் அன்பு ஏராளம். பாடசாலை காலத்தில் பல்வேறு போட்டி நிகழ்ச்சிகளில் நான் கலந்து கொண்டுள்ளேன்.

அதற்கு ஆதரவாக இருந்த ஆசிரியை பௌசியா. அவருக்கு நான் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளேன்.

பொதுவாக எல்லா துறைகளிலும் எங்களுக்கு சவாலாக நிறைய பேர் வருவார்கள். எங்களுக்கு சிறந்த வழியை காட்ட யாரும் இருக்க மாட்டார்கள்.

இருந்தாலும் அது குறைவு. அதே போல தான் ஊடகத்துறையும்.

பொறாமையாளர்கள் எங்கு அதிகம் என்ற கேள்வியை தொடுத்தால் அது நிச்சயம் ஊடகத் துறையில் பணி புரிகின்றவர்கள் தான்.

என்னைப் பொறுத்தவரையில் நான் சிறிய காலமாகத் தான் ஊடகத் துறையில் இருக்கிறேன். எனினும் பல அனுபவங்களை பெற்றிருக்கிறேன்.



சிரேஷ்ட ஊடகவியலாளர்களான அமீன் சேர், கலைவாதி கலீல், நௌஷாத் மொஹீடீன் , பியாஸ் முஹம்மத் சேர், சிவா ராமசாமி மற்றும் பிரியதர்ஷினி, அஸ்வர் முஹம்மத் ஆகியோர் என்னுடைய ஊடக வாழ்க்கையில் சிறந்த ஆசிரியர்கள்.

## சவால்கள்

என்னுடைய வாழ்க்கையே எனக்கு சவாலக தான் இருக்கிறது. நிறைய கஷ்டங்கள், ஏமாற்றங்கள், வலிகள், வேதனைகளை கடந்து வந்துள்ளேன். ஆனால் இறைவன் என்னை கைவிடவில்லை.

ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நான் சோதிக்கப்படும் போதும் எனக்கு இறைவன் மீதான நம் பிக்கை அதிகரித்துள்ளது.

அதன் பின்னர் பல வெகுமதி களை இறைவன் தந்துள்ளான்.

பாடசாலை காலத்தில் நிறைய துன்பத்தை அனுபவித்து இருக்கின் றேன். குறிப்பாக சில துரோகிகள்,







நண்பிகள் என்ற வேஷத்தில் இருந் தனர்.

### அதன் பின்னர் ஊடகத்துறை

ஊடகத்துறையில் எனது பயணம் 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட் டது.

கொழும்பு பல்கலைக்கழகத் தில் இதழியல் துறையில் டிப்ளோ மாவை நிறைவு செய்தேன். 2018 தொடக்கம் 2020 வரை நவமணிப் பத்திரிகையில் சுயாதீன ஊடகவிய லாளராக இருந்தேன்.

எனது எழுத்துக்கள் ஆழமான ஒரு பாதையை நோக்கி செல்ல நவமணிப் பத்திரிகையும் அதன் பிரதான ஆசிரியர் அமீன் சேரும் பிரதான பங்களிப்பு செய்தனர்.

துரதிஷ்டவசமாக இன்று அப் பத் திரிகை வெளிவருவதில்லை. 25 வருட வரலாற்றைக் கொண்ட பத்தி ரிகை இவ்வாறு கைவிடப்பட்டதற்கு எமது முஸ்லிம் சமூகம் கைசேதப் பட வேண்டும்.

அவர்களுக்கு பாரிய பங்குண்டு. அதனை மீண்டும் உயிர்பிக்க. என் னுடைய பிரார்த்தனையும் அவாவும் அது தான்.

ஊடகத்துறையில் பயணிப்பது என்பது அவ்வளவு இலகுவான தல்ல.

அதுவும் ஒரு பெண் பயணிப் பது மிகவும் கடினமானது. இங்கு எங்களை ஊக்கப்படுத்துபவர்களை விட குழியில் தள்ளி விட்டு சந்தோ ஷப்படுவர்களே அதிகம்.

என்னை பொருத்தவரை யில் எனக்கு இந்தத் துறையில் தொடர்ந்து ஊக்கமளிப்பவர்களும் இருக்கிறார்கள்.

என்னை தேவைக்கு பயன்படுத் தியவர்களும் இருக்கின்றார்கள். ஒவ்வொரு முகங்களும் வித்தியாச மானது என்பதை ஊடகத்துறைக்கு வந்த பிறகு அறிந்து கொண்டேன்.

ஒரு ஆண் உழைப்பதை காட்டி லும் பெண் 10 மடங்கு உழைத் தால் தான் குறித்த இடத்தை அடைய முடியும்.

நான் எதிர்நோக்கிய சவாலாக குறிப்பாக ஊடகத்துறைக்கு முஸ்லிம் பெண்கள் வருவது குறைவு, அவ்வாறு வந்தாலும் தொடர்ந்து இருக்க மாட்டார்கள்.

எனக்கும் இதனை பல பேர் முதலில் கூறினார்கள் , என்னால் முடியாது என்று கூறினார்கள்.

முடியாது என்று சொல்வதை நான் முடியும் என நிரூபிக்க வேண்டும் என பிடிவாதமாக இருந் தேன்.

ஆரம்பத்தில் குடும்பத்திலும் கூட பல எதிர்ப்புக்கள் இருந்தன. நான் அத்தனையும் அவர்களுக்கு கூறி புரிய வைத்தேன். என்னுடைய குடும் பத்தில் வேறு யாரும் ஊடகத்துறை யில் இல்லை.

ஆண்களும் இல்லை.வேறு துறை களில் இருக்கின்றார்கள்.அது எனக்கு பெரிய சவாலாக இருந்தது.

நான் மனமுடைந்து போகும் போதெல்லாம் எனது நண்பர்கள் எனக்கு மிகவும் ஆதரவாக இருந் திருக்கிறார்கள்.

இப்போதும் இருக்கிறார்கள். பல பச்சோந்திகளுக்கு மத்தி யில் எனக்கு சிறந்த நண்பர்களும் இருக் கின்றார்கள் என்பது மனநிறைவை ஏற்ப டுத்துகின்றது.



கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543

# குறும்பா, ஹைக்கூ லிமரிக்கூ, தன்முனைக் கவிதைகள்:
## சில அறிமுகக் குறிப்பகள்

**(கடந்த வாரத் தொடர்)**
**ஈழத்தில் ஹைக்கூ கவிஞர்கள்**

சு.முரளீதரன் கூடைக்குள் தேசம் 1988
கல்லறைக்குள் கதிரவன் சாள்ஸ் 1990
ஹைக்கூ கவிதைகள் கட்டன் லரவன் 1998
உயிர்ச் சிறகுகள் அஸீஸ் எம் பாயிஷ் 2001
மனசின் பிடிக்குள் 2001 லரஞ்சனி சர்மா
பச்சை இறகு 2001 வேலணையூர் பொன்னண்ணா
நுங்கு விழிகள் இ.சு முரளிதரன்2007
வானவில் பெரிய ஐங்கரன் 2007
அம்மா என் ஹைக்கூவிக்னா பாக்கிய நாதன் 2007
இயற்கை இயல்பு பஸ்லி ஹமீட் 2013
நறுக் 2016 மொழி வரதன்
கவிநுட்பதுளிப்பாக்கள் 2017 பாயிஷா நவ்பல்.

1000 முத்துக்கள் பன்னாட்டுக் கவிஞர்களின் ஹைக்கூ தொகுதி. தமிழ்நெஞ்சம் வெளியீடு.

தொகுப்பு கவிநுட்பம் 2017 இலங்கை

மேலே நூல்களைத் தந்தவர்க ளோடு,

ரசிகுணா, சத்தார் எம் ஆஷாத்,

நஸீறா ஆப்தீன், பாலமுனை பாறூக் ஜே. வஹாப்தீன், டாக்டர் அப்துல் ரஷாக்,நஸ்மின் நாஸர்,நிர்மலா சிவராச சிங்கம்,மருதூர் நப்ரிஸ்,ஏஏ.சபீக்கா றிஸ்வான்,முஹம்மது அலி,ஜீவிதன்,ப ழனியாண்டி கனகராஜா, லோஜி,ஆலெ முகம்மதுஇர்ஜாத், மெய்யன் நடராஜ்,வபீரா வபி,ஆகியோ ரும் ஹைக்கூ கவிதைகளை எழுதிவ ருகின்றனர்.

இவ்வாண்டு இந்தியாவில் இருந்து வெளியான உலகளவி லான ஹைக்கூ சாதனை நூலில் (ஹைக்கூ2020 )இவர்கள் ஒவ்வொ ருவரினதும் 20 ஹைக்கூக்கள் இடம் பெற்றுள்ளன.

இது11 ஹைக்கூ வித்தகர்களால் தெரிவு செய்யப்பட்ட 2020 ஹைக் கூக்களைக் கொண்ட இதுவரை வெளிவந்த நூல்களில் அதிக அள விலான ஹைக்கூக்களைக் கொண்ட நூலாகும்.

**தமிழ் நெஞ்சம் வெளியீடு.2020.**

உதிர்ந்த மலர்
கிளைக்குத் திரும்புகின்றது
ஓ.. வண்ணத்துப் பூச்சி

(மோரி டேகே) ஹைக்கூ வுக்கு எடுத்துக் காட்டாக முன்வைக்கப்படும் பா.

ஹைக்கூவில் அந்தாதி எழுதி இருப் பவர் தமிழக கவிஞர் அமுத பாரதி.

இலங்கையில் ஹைக்கூ பற்றி முக நூலில் பயிறசிக் குறிப்புகளை சத்தார் எம் அசாத் வழங்கி வருகின்றார்.

நஸீரா ஆப்தீன்,ஹைக்கூவில் கரை வோமா என்னும் நூலினை வெளியிட் டுள்ளார். ஹைக்கூ குக்கூ, சென்றியூ, பழமொன்றியூ,

மோனைக் கூ,எதுகைக் கூ என்று விரிவாக்கம் பெற்றுள்ளது.

**குக்கூ 3வரி மரபை மீறும்.**

சென்றியூ 3வரி. நகைச்சுவை உணர்வு அதிகமிருப்பின் சென்றியூ கவித்துவம் அதிகமிருந்தால் ஹைக்கூ.

ஆயிரம் பேரோடு
வேட்புமனுத் தாக்கல்
ஐம்பது வாக்குகள்!

பழமொன்றியூ
பழமொழிகள் சேர்ந்து வருவது

அன்னை
யும் பிதாவும்
முன்னறி தெய்வம்
ஆகாத வயதில்
முதியோர் இல்லம்!

எதுகைக்கூ, நம்மவர்களாலும் எழு தப்பட்டு வருகின்றது.

**எதுகைக் கூ**

விழி நனைந்தது
வழி பிரிந்தது
வலி,காதலர் பிரிந்தார்.

ஹைக்கூவில் பரிசோதனை முயற்சி

**விடுகவிக் கூ**

மணிக்கூ

இவற்றை நஸீரா ஆப்தீன் செய்து பார்த்துள்ளார்.

3வரிதான் விடுகதை போல அமையும்.

ஊரெல்லாம் பிரகாசம்
வானிலோர் புதிய ஒளி
மின்னல்

**3வரிக்கவிதை**

மணிக்கூ
பிரிந்து இணைந்து
பிளந்து பிரித்தது
கத்தரிக்கோல்

தற்போது இலங்கையில் தொடர்ந்து ஹைக்கூ கவிதை எழுதி வருபவராக அய்சத் அப்சத் என்பவர் உள்ளார்.

இவருடைய நூற்றுக்கும்மேற்பட்ட ஹைக்கூக்கள் இந்தியாவில் திரு கா.ந.கல்யாண் சுந்தரம் நடத்துகின்ற உலக ஹைக்கூ கவிதை மன்றத்தில் இடம்பெற்றிருக்கின்றன. பரிசுக்குத் தேர்வாகி அங்குள்ள இதழ்களிலும் பிர சுரமாகின்றன.

**லிமரைக் கூ( Limeriku)**

குறும்பாவும்(Limerick) ஹைக்கூ வும்(Haiku) கலந்து வத்திருக்கின்ற பா இது.

குறும்பா விலிருந்து குறும்பையும், இயைபுத் தொடையையும் பெற் றுக்கொண்டு ,ஹைக் கூவில் இருந்து மூன்று வரி அமைப்பைப் பெற்று வரு கின்ற கவி வடிவம்.

**முதலாம் வரியின் இறுதிச் சீரும்**

மூன்றாம் வரியின் இறுதிச் சீரும் இயைபுத் தொடை பெற்று வரும். இரண்டாம் வரி மற்ற இருவரிகளை யும் விட நீண்டிருக்கும்

லிமரைக் கூவின் தந்தையாக Ted Pauker என்ற ஆங்கிலக் கவிஞனைச் சொல்வர். தமி முக்கு இதனைக் கொண்டு வந்தவர் கவிஞர் ஈரோடு தமிழன்பன்.

**(தொடரும்)**



பாலமுனை பாறூக்..

# சினி பஜார் கேள்வி பதில்



மொழிவாணன்

ஆர்.சுதாகர், வத்தளை.
**கேள்வி:நடிகை குஷ்புவும் தனது மகளை சினிமாவில் நடிக்கவைக்கப் போகிறாராமே?**

**பதில்:** தமிழ் திரையுலகில் நட்சத்திர நடிகர்கள் தங்களின் வாரிசுகளை திரையுலகில் அறிமுகப்படுத்துவது சகஜம். முன்னணி இயக்குநரும். நடிகருமான சுந்தர் சி குஷ்பு தம்பதியினரின். மூத்த வாரிசு அவந்திகா,கதையின் நாயகியாக தமிழ் திரையுலகில் விரைவில் அறிமுகமாகிறார். இதற்கான முதற்கட்ட பேச்சு வார்த்தை நிறைவடைந்த நிலையில், இது தொடர்பான அதிகாரபூர்வமான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இயக்குநர் சங்கரிடம் சொந்தப் பட நிறுவனம் இருந்தாலும் சன் பிக்சர்ஸ் தயாரிக்கும் 'விருமன்'படத்தில் தன் மகளை அறிமுகப்படுத்தினார் அதேபோல் குஷ்புசுந்தர் சி யும் தங்களது மகளை மற்றொரு முன்னணி தயாரிப்பு நிறுவனம் தயாரிக்கும் படத்தில் அறிமுகப்படுத்த திட்டமிட்டிருக்கிறார்கள்.



எம்.எம்.நவாஸ், திஹாரிய.
**கேள்வி;"கவிப் பேரரசு"என்று அழைக்கப்படுவதற்கான தகுதி வைர முத்துவுக்கு இல்லையென்று இப்போது பலரும் கூற ஆரம் பித்து விட்டார்களே.என்ன காரணம்?**
**பதில்:**ஆமாம்...அவரைப்பற்றிய மோசமான சில தகவல்கள் வெளியாகியிருக்கிறது. இது சம்பந்தமாக அடுத்த வாரம் தகவல் தருகிறேன்.

எம்.எம்.பைரூஸ், மன்னார்.
**கேள்வி: மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் இதுவரை எத்தனை படங்களில் நடித்திருக்கிறார்.அதில் கண்ணதாசன் எத்தனை படங்களுக்கு பாடல் எழுதிருக்கிறார்?**
**பதில்:**138படங்களில் நடித்திருக்கிறார்.அதில் 50 படங்களுக்கு கண்ணதாசன் பாடல்கள் இருக்கிறார். "அச்சம் என்பது மடமையடா அஞ்சாமை திராவிடர் உடமையடா"என்ற பாடல் எப்போதும் எம் . ஜி.ஆரின் காரில் ஒலித்துக்கொண்டே இருக்கும்.



எம். மாகிரட், எலபடகம.
**கேள்வி: நடிகை சமந்தாவின் காட்டில் நல்ல மழையாமே?**
**பதில்:**உண்மைதான்'' காத்து நாக்குல ரெண்டு காதல்' படத்தின் பிரமாண்டமான வசூல் வெற்றிக்குப் பிறகு உற்சாகத்துடன் வலம் வருகிறார் நடிகை சமந்தா.விரைவில் வெளியாக விருக்கும்'யசோதா'மற்றும்' சாகுந்தலம்'ஆகிய படங்களில் கதையின் நாயகியாக நடித்திருக்கும் இவர் தற்போது தெலுங்கின் முன்னணி இளம் நடிகரான விஜய் தேவரகொண்டா நடிப்பில் தயாராகி வரும் 'குஷி' படத்தில் அவருக்கு ஜோடியாக நடிதுவருகிறார்.இந்நிலையில். அவுஸ்திரேலியா நகரங்களில் ஒன்றான மெல்போர்ன் நகரில் நடைபெறும் இந்திய திரைப்பட விழாவில் சிறப்பு அகதியாக இவர் பங்கு பற்று கிறார்.இதனிடையே இயக்குநர் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் தயாராக இருக்கும் பெயரிடப்படாத புதிய படத்தில் நடிகை சமந்தா வில்லியாக நடிக்கக் கூடுமென உறுதி படுத்தப்பட்ட தகவல்கள் வெளியாகி இருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

எஸ்.புஷ்பராஜ், வவுனியா.
**கேள்வி:'பொன்னியின் செல்வன்' படத்தில் நடிகர் விக்ரம் எந்த கதா பாத்திரத்தில் நடிக்கிறார்.வேறு என்ன படங்களில் அவர் நடிக்கிறார்?**
**பதில் :** உலகத்தில் உள்ள அனைத்து பகுதிகளில் வாழும் பன்னிரெண்டு கோடிக்கும் மேற்பட்ட தமிழர்களின் பெரும் எதிர்பார்ப்பில் இருக்கும் திரைப்படம் மணிரத்தினத்தின்' பொன்னியின் செல்வன்'.இதில் ஆதித்த கரிகாலன் எனும் கதா பாத்திரத்தில் நடித்து ரசிகர்களை வியப்பில் ஆழ்த்த விடுக்கிறார் நடிகர் சீயான் விக்ரம்.. தனது கதா பாத்திரம் தொடர்பான காட்சிகளுக்கு தமிழ்,தெலுங்கு,மலையாளம்,கன்னடம்,இந்தி என ஐந்து மொழிகளிலும் பின்னணி பேசி அசத்தியிருக்கும் இவர் விரைவில் முன்னணி இயக்குநர் ப.ரஞ்சித்தின் இயக்கத்தில் தயாராகும் பெயரிடப் படாத படத்தில் கதையின் நாயகனாக நடிக்கிறார்.

படப்பிடிப்புகள் விரைவில் தொடங்கப்பட விருக்கும் இந்தப் படத்தில் விக்ரமுக்கு ஜோடியாக 'சுல்தான்'படத்தின் மூலம் தமிழ் ரசிகர்களுக்கு அறிமுகமான இளம் தென்றல் நடிகை ரஷ்மிகா மந்தானா நடிக்கக் கூடுமென உறுதியான தகவல்கள் வெளியாகி உள்ளது.

'கே.ஜி.எஃப்.' படத்தின் பிரமாண்ட வெற்றிக்குப் பிறகு,மீண்டும் அதே கதைக்கள பின்னணியில் பா.ரஞ்சித் மற்றும் சீயான் விக்ரம் இணைந்து பணியாற்ற விரும்பலாம் ரசிகர்களிடையே பெரும் வரவேற்பு ஏற்பட்டிருக்கிறது.

கே.எஸ்.சந்திரன், கலஹா
**கேள்வி: விஜய் சேது பதியின் வாரிசான சூர்யா சேது பதியும் படங்களில் நடிக்க ஆரம்பித்து விட்டாராமே?**
**பதில்:**ஆமாம்,ஏற்கனவே 'நானும் ரவுடிதான்'படத்தில் விஜய சேதுபதியின் வாரிசான சூர்யா விஜய சேதுபதி நடிகராக அறிமுகமாகி இருக்கிறார்.

அதைத் தொடர்ந்து அருண் குமார் இயக்கத்தில் மொழியான 'சிந்து பாத்'படத்திலும் விஜயசேதுபதியுடன் சேர்ந்து நடித்திருக்கிறார். தற்போது வெற்றித் திருமாறன் இயக்கத்தில் தயாராகி வரும் 'விடுதலை' எனும் படத்தில் விஜய் சேதுபதி முக்கிய ஒரு கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இந்தபடத்தில் காதாநாயகனாக நடிப்பதற்கு சூர்யா விஜய் சேதுபதி தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.விஜய சேதுபதி உறுதியாக பரிந்துரையின் பெயரில்தான் அவரது வாரிசு சூர்யா இந்த படத்தில் நாயகனாக நடிப்பதாக படக் குழுவினர் தெரிவித்திருக்கிறார்கள்.





**சினி பஜார் கேள்வி பதில்,**
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.



# செருப்பு பிஞ்சுரும் பயில்வான் ரங்கநாதனுடன் ரேகா நாயர் மோதல்!

பார்த்திபனின் இரவின் நிழல் திரைப்படத்தில் அரை நிர்வாணமாக நடித்த ரேகா நாயர், தன்னை தரக்குறைவாக விமர்சனம் செய்த பயில்வான் ரங்கநாதனுடன் நடுரோட்டில் வைத்து சண்டை போட்டார்.

இரவின் நிழல் திரைப்படத்தில் அரை நிர்வாணமாக நடித்த தன்னை தரக்குறைவாக விமர்சனம் செய்ததாக கூறி நடைபயிற்சியில் ஈடுபட்டிருந்த நடிகரும், திரைப்பட விமர்சகருமான பயில்வான் ரங்கநாதனுடன் நடிகை ரேகா நாயர் வாக்குவாதத்தில் ஈடுபட்டது பரபரப்பை ஏற்படுத்தியது. நடிகர் பார்த்திபன் இயக்கி நடித்த இரவின் நிழல் திரைப்படம் கடந்த வாரம் வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்று இருக்கிறது. ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைப்பில், ஆர்தர் வில்சன் இயக்கியிருக்கும் இந்தப் படத்தில் வரலட்சுமி சரத்குமார், பிரிகிடா, ரேகா நாயர் உள்ளிட்ட பலர் நடித்து உள்ளார்கள். சிங்கிள் ஷாட்டில் தயாராகி இருக்கும் இந்தத் திரைப்படத்தை பார்த்து திரையுலகினர், ரசிகர்கள் பாராட்டுக்களைத் தெரிவித்து வருகின்றனர். அதற்கு இணையாக இந்த திரைப்படத்தால் பல்வேறு சர்ச்சைகளும் எழுந்துள்ளன. உலகின் முதல் சிங்கிள் ஷாட் நான் லீனியர் திரைப்படம் என்று பார்த்திபன் இதற்கு விளம்பரம் செய்து வரும் நிலையில், அது தவறான தகவல் என்று விமர்சகர் ப்ளூ சட்டை மாறன் தெரிவித்ததால் இருவருக்கும் இடையே கருத்து மோதல் நிலவி வருகிறது.

அதேபோல் இந்த படத்தில் நடித்த பிரிகிடா சேரி மக்கள் கெட்ட வார்த்தை பேசுவார்கள் என்று பேசியதும் கடும் விமர்சனத்துக்கு உள்ளானது. பிரிகிடாவுக்கு எதிராக பலரும் கண்டனம் தெரிவித்த நிலையில், அவரை கைது செய்யவும் வலியுறுத்தினர். நடிகர் பார்த்திபன் இந்த விவகாரத்தில் தலையிட்டு மன்னிப்பு கோரியதால் அந்த பிரச்சினை ஓய்ந்தது. மேலும் இப்படத்தில் நடிகைகள் பிரிகிடா மற்றும் ரேகா நாயர் ஆகியோர் அரை நிர்வாணமாக நடித்திருப்பதை பலரும் சுட்டிக்காட்டி விமர்சித்து வருகின்றனர். குடும்பத்துடன் இதைப் பார்க்க முடியாது என்றும் பலர் தெரிவித்தனர். அதேநேரம் இது துணிச்சலான முயற்சி என்ற பாராட்டுக்களும் சேர்ந்தே வந்தன. இந்த நிலையில் நடிகை ரேகா நாயர் இதில் அரை நிர்வாணமாக நடித்திருப்பதை விமர்சகரும் நடிகருமான பயில்வான் ரங்கநாதன் விமர்சித்ததாக கூறப்படுகிறது. குழந்தைக்கு பால் கொடுக்கும் காட்சியில் நடித்த ரேகா நாயர் மேலாடை விலகியப்படி நடித்திருந்தார்.

இதனை சினிமா நடிகரும் பத்திரிகையாளருமான பயில்வான் ரங்கநாதன் விமர்சனம் செய்திருந்தார். இதனால் ஆத்திரமடைந்த ரேகா நாயர் திருவான்மியூர் பீச்சில் நடைபயிற்சி சென்றுகொண்டிருந்த பயில்வான் ரங்கநாதனை நிறுத்தி அவருடன் சண்டையில் ஈடுபட்டார். நான் எப்படி வேண்டுமானாலும் நடிப்பேன், உங்களுக்கு என்ன என்று கேட்ட அவர், பயில்வான் ரங்கநாதனை நோக்கி காட்டமான சில வார்த்தைகளை பயன்படுத்தி கத்தினார். இதனால் இருவருக்கும் இடையே கைகலப்பு ஏற்படும் சூழல் ஏற்பட்டது. ஆடையில்லாமல் நடிப்பது என் விருப்பம் என்ற ரேகா நாயர் உனக்கு என்ன வந்தது? செருப்பு பிஞ்சுரும் என ஆவேசமாக கத்தினார். இதனை கண்ட அங்கிருந்தவர்கள் அவர்களை சமாதானம் செய்தனர். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் அதிகம் பகிரப்படுகிறது.

# திருமணமா?

மலையாள திரையுலகில் முன்னணி நடிகையாக வலம் வருபவர் நித்யா மேனன். இவர் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் '19(1)(a)' . மலையாள திரையுலகின் முன்னணி நடிகையான நித்யா மேனன், தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்ற மொழி படங்களில் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளார். இவர் நடிப்பில் உருவாகியுள்ள 'திருசிற்றம்பலம்' திரைப்படம் விரைவில் திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. மேலும், விஜய் சேதுபதி நடிப்பில் உருவாகியுள்ள '19(1)(a)' படத்தில் நித்யா மேனன் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இப்படம் விரைவில் நேரடியாக ஓடிடியில் வெளியாகவுள்ளது. இதனிடையே நடிகை நித்யா மேனனுக்கும், மலையாள நடிகர் ஒருவருக்கும் விரைவில் திருமணம் என்ற தகவல் கடந்த சில நாட்களாக சமூக வலைதளங்களில் பரவியது. இதனை மறுத்துள்ள நித்யா மேனன் சமீபத்தில் அளித்துள்ள பேட்டி ஒன்றில் "என் திருமணம் குறித்து சமூக வலைதளங்களில் பரவி வரும் வதந்திகளில் முற்றிலும் உண்மை இல்லை. இதுபோன்ற செய்திகளை வெளியிடும் முன் ஊடகங்கள் உண்மையை சரிபார்க்க முயற்சி செய்ய வேண்டும் என நான் விரும்புகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.



# 5 தேசிய விருதுகளை அள்ளிய சூரரைப் போற்று



மாதவனின் இறுதிச்சுற்று படத்தின் மூலமே ஒட்டுமொத்த இந்தியாவையும் திரும்பி பார்க்க வைத்து அந்த படத்தை பல மொழிகளில் ரீமேக் செய்ய காரணமாக இருந்தவர் இயக்குநர் சுதா கொங்கரா.

அடுத்ததாக சூர்யாவை இயக்கி அவர் கொடுத்த சூரரைப் போற்று திரைப்படம் ரசிகர்களை பிரம்மிப்பின் உச்சிக்கே கொண்டு சென்றது.

நடிகர் சூர்யா மற்றும் சூரரைப் போற்று படத்துக்கென 5 தேசிய விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதனை கொண்டாடும் விதமாக இசையமைப்பாளர் ஜிவி பிரகாஷ் மற்றும் சுதா கொங்கரா கேக் வெட்டிக் கொண்டாடிய புகைப்படங்கள் தற்போது வெளியாகி உள்ளன.

கொரோனா பரவல் காரணமாக கடந்த 2020ம் ஆண்டு தீபாவளி ரிலீஸாக நவம்பர் 12ம் திகதி டிஸ்னி பிளஸ் ஹாட்ஸ்டாரில் சூர்யாவின் சூரரைப் போற்று திரைப் படம் வெளியானது. நேரடியாக ஓடிடியில் ஜோதிகாவின் பொன்மகள் வந்தாள் படம் ரிலீசானதற்கே எதிர்ப்புகள் கிளம்பிய நிலையில், சூர்யாவின் சூரரைப் போற்று திரைப்படம் ஓடிடியில் வெளியாகி பெரும் பிரச்சினையை சந்தித்தது. ஆனால், படத்தைப் பார்த்த பலரும் இந்தப் படம் ஓடிடியில் வெளியாகாமல் தியேட்டரில் வெளியாகி இருந்தால் அப்பவே மிகப்பெரிய வசூல் வேட்டையை நடத்தியிருக்கும் எனக் கூறினர்.

ஒஸ்கர் போட்டிக்கு சென்று சில சுற்றுகள் முன்னேறிய நிலையில், அதன் பின்னர் முன்னேற முடியாமல் சூரரைப் போற்று பின் வாங்கிய நிலையில், இந்தப் படத்துக்கு நிச்சயம் தேசிய விருது கிடைக்கும் என பலரும் எதிர்பார்த்ததை போலவே தற்போது 5 தேசிய விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. சிறந்த நடிகர் சூர்யா, சிறந்த நடிகை அபர்ணா பாலமுரளி, சிறந்த இசையமைப்பாளர் ஜிவி பிரகாஷ், சிறந்த திரைக்கதை சுதா கொங்கரா, சிறந்த திரைப்படம் என 5 விருதுகளை தட்டித் தூக்கியது.

# சித்தார்த்துடன் அதிதிராவ் காதலா

நடிகர் சித்தார்த்தும் அதிதி ராவும் காதலித்து வருவதாகவும், பல இடங்களில் இருவரும் ஜோடியாக ஊர் சுற்றி வருவதாகவும் கூறப்படுகிறது. மணிரத்னம் இயக்கிய 'காற்று வெளியிடை' படம் மூலம் தமிழில் அறிமுகமாகி பிரபலமானவர் அதிதிராவ் ஹைத்ரி. தொடர்ந்து செக்க சிவந்த வானம் படத்தில் அரவிந்த்சாமி ஜோடியாக நடித்தார். உதய நிதியுடன் சைக்கோ, துல்கர் சல்மான் ஜோடியாக ஹேய் சினாமிகா படங்களிலும் நடித்து இருந்தார். இவருக்கும், நடிகர் சித்தார்த்துக்கும் காதல் மலர்ந்துள்ளதாக தகவல் பரவி உள்ளது. இருவரும் மும்பையில் உள்ள ஒரு சிகை அலங்கார நிலையத்தில் இருந்து வெளியே வந்தனர். அப்போது போட்டோகிராபர்கள் அவர்களை படம் பிடிக்க முயற்சித்தனர். அதிதி மட்டும் போட்டோவுக்கு போஸ் கொடுத்தார். பின்னர் இருவரும் ஒரே காரில் ஏறி புறப்பட்டு சென்றனர். இந்த வீடியோ வலைத்தளங்களில் வெளியாகி உள்ளது. இதன் மூலம் இருவரும் காதலிப்பதாக இந்தி, தெலுங்கு இணைய தளங்கள் செய்தி வெளியிட்டு உள்ளன. சித்தார்த்தும், அதிதியும் மஹா சமுத்திரம் என்ற தெலுங்கு படத்தில் ஜோடியாக நடித்தனர். அப்போது இருவருக்கும் நெருக்கம் ஏற்பட்டு காதல் மலர்ந்ததாக கூறப்படுகிறது. சமீபத்தில் சித்தார்த் பிறந்த நாள் கொண்டாடியபோது அதிதி வாழ்த்து தெரிவித்து வலைத்தளத்தில் பதிவுகள் வெளியிட்டார். ஆனாலும் காதலிப்பதை இருவரும் உறுதிப்படுத்தவில்லை.



# பிரபலமான பெண் நடிகைகள் பட்டியலில் முதலிடத்தில் சமந்தா

**இந்தியாவில்** (ஜூன் 2022) பிரபலமான பெண் நடிகைகள் பட்டியலில் சமந்தா முதலிடத்திலும், அனுஷ்கா ஷெட்டி 10வது இடத்திலும் உள்ளனர். ஓர் மேக்ஸ் ஸ்டார் இந்தியா வெளியிட்டு உள்ள இந்தியாவில் மிகவும் பிரபலமான பெண் திரைப்பட நட்சத்திரங்கள் (ஜூன் 2022)' பட்டியலில் நடிகைகள் சமந்தா, ஆலியா பட், நயன்தாரா, காஜல் அகர்வால் மற்றும் தீபிகா படுகோன் ஆகியோர் முதல் 5 இடங்களில் உள்ளனர். இந்த பட்டியலில் பூஜா ஹெக்டே 6வது இடத்திலும், கீர்த்தி சுரேஷ், கத்ரீனா கைஃப், கியாரா அத்வானி 7, 8, 9 இடத்திலும் அனுஷ்கா ஷெட்டி 10வது இடத்திலும் உள்ளனர். கியாரா அத்வானி முதல் முறையாக டாப் 10 பட்டியலில் நுழைந்துள்ளார். ராஷ்மிகா மந்தனாவின் பெயர் டாப் 10 பட்டியலில் இடம் பெறாததால் ரசிகர்கள் அதிர்ச்சியில் உள்ளனர்.



# பீட்ரூட் பேஸ் பேக் போடுவதால் சருமத்தில் ஏற்படும் மாற்றங்கள்



அழுக்கு சேர்வது தான் சருமத்தில் ஏற்படுகிற பெரும்பாலான பிரச்சினைகளின் துவக்கப் புள்ளியாக இருக்கிறது. இது தீவிரமானால் இளம் வயதிலேயே சருமத்தில் சுருக்கங்கள் ஏற்பட்டு வயதான தோற்றத்தை கொடுக்கும்.

பீட்ரூட் பேஸ்பேக் போடுவதால் சருமத்தை பாதுகாத்து கொள்ளலாம்.

**தேவையான பொருட்கள்**

பீட்ரூட் ஜூஸ் – 2 மேசைக்கரண்டி
தயிர் 1 மேசைக்கரண்டி
கடலை மாவு 2 மேசைக்கரண்டி
எலுமிச்சை சாறு 1 மேசைக்கரண்டி

முதலில் இரண்டு டேபிள் ஸ்பூன் கடலைமாவு தனியாக ஒரு பவுலில் எடுத்துக் கொள்ளுங்கள். அதில் ஒரு மேசைக்கரண்டி தயிர், ஒரு கரண்டி எலுமிச்சை சாறு மற்றும் கடைசியாக இரண்டு மேசைக் கரண்டி பீட்ரூட் சாறு கலந்து கொள்ளுங்கள். பேஸ்ட் பதம் வரும் வரையில் நன்றாக கலந்து கொள்ளுங்கள்.

இதனை உங்கள் முகத்தில் அப்ளை செய்வதற்கு முன்னால் முதலில் குளிர்ந்த நீரால் முகத்தை சுத்தமாக கழுவிக் கொள்ளுங்கள். க்ளின்சிங் மில்க் இருந்தால் அதனை தடவியும் முகத்தை சுத்தமாக துடைத்துக் கொள்ளலாம். இதனால் சருமத்தில் உள்ள அழுக்குகள் வெளியேறும். அதன் பிறகு இந்த கலவையை முகம் முழுவதும் அப்ளை செய்ய வேண்டும். எப்போதும் கீழிருந்து மேலாக அப்ளை செய்வது நல்லது.

முகம் முழுவதும் அப்ளை செய்து முடிந்ததும் கழுத்துக்கும் அப்படியே தடவுங்கள். முகத்திற்கு தருகிற முக்கியத்துவத்தை கழுத்துக்கு யாரும் கொடுப்பதில்லை. இதனால் முகம் ஒரு நிறமாகவும் கழுத்து வேறொரு நிறமாகவும் தெரியும். இதனை தவிர்க்க கழுத்துக்கும் சேர்த்தே ஃபேஸ் பேக் போடுவது நல்லது. இதனை கழுத்துக்கும் சேர்த்து போட்டபிறகு சுமார் பதினைந்து நிமிடம் கழித்து நீங்கள் கழுவிடலாம்.

கழுவியதும் இது கூலிங் எஃபக்டை கொடுக்கும். அதோடு சருமத்திலிருக்கும் அழுக்களை எல்லாம் நீக்கிடும். பீட்ரூட்டில் அதிகப்படியான ஃபாலிக் அமிலம் மற்றும் அத்தியவசியமான விட்டமின்கள் இருக்கிறது. இவை சருமத்திற்கு ஈரப்பதத்தை கொடுப்பதுடன் சரும சுருக்கங்கள் ஏற்படாமல் தவிர்க்க உதவுகிறது. இதனை நீங்கள் வாரம் ஒரு முறை என இரண்டு மாதங்களுக்கு தொடர்ந்து முயற்சித்து வர நல்ல பலன் கிடைக்கும்.

எண்ணெய் பசையுள்ள சருமம் கொண்டவர்கள் என்றால் உங்களுக்கு அடிக்கடி பரு மற்றும் கரும்புள்ளி பிரச்சினைகள் ஏற்படும். இவர்களுக்கு பீட்ரூட் சாறு ஃபேஸ் பேக் மிகச் சிறந்த தீர்வாக அமையும். சருமத்தில் பேக் போடுவது மட்டுமின்றி தொடர்ந்து பீட்ரூட் ஜூஸ் குடிக்கவும் செய்திடலாம். பீட்ரூட்டின் சுவை பிடிக்காதவர்கள் அதில் வெள்ளரி மற்றும் கேரட்டையும் சேர்த்து அரைத்து ஜூஸ் தயாரித்துக் கொள்ளுங்கள். இவற்றை சருமத்திற்கு தொடர்ந்து பயன்படுத்தி வந்தால் தழும்புகளையும் போக்கிடும்.

இதனை சருமத்தில் தடவுவதால் சருமத்தில் உள்ள இறந்த செல்களை எல்லாம் நீக்குவதுடன் ரத்த ஓட்டத்தையும் துரிதப்படுத்துவதால் பொலிவான சருமம் உண்டாகும். ஃபேர்னஸ் க்ரீம் தொடர்ந்து பயன்படுத்தி வந்தால் சிலருக்கு அதிலிருக்கும் கெமிக்கல்கள் ஒவ்வாமையை ஏற்படுத்தும். இதனை தவிர்க்க பீட்ரூட் சாறு பயன்படும்.

இன்றைக்கு பலரது கவலையாக இருப்பது கண்களைச் சுற்றியிருக்கும் கருவளையம் தான். அதனை போக்கவும் இந்த பீட்ரூட் ஃபேஸ்பேக் பயன்படும். அதோடு இவை உங்களது ரத்த ஓட்டத்தையும் சீர்படுத்துவதால் இவை கருவளையத்தை போக்கிட உதவுகிறது. அதோடு முகத்தில் இருக்கிற கருந்திட்டுக்கள் எல்லாம் போக்கிடும். உங்களுக்கு 30 வயதை தாண்டி விட்டாலே சருமத்தை இன்னும் சிரத்தையாக பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். இந்த ஃபேஸ்பேக் தொடர்ந்து பயன்படுத்தி வந்ததால் சுருக்கங்கள் வராமல் தவிர்க்கவும் உதவுகிறது. இதனை வாரம் இரண்டு முறை நீங்கள் பயன்படுத்தினால் விரைவில் சிறந்த பலனை பார்க்கலாம்.



# இதய நோய் அபாயத்தை குறைக்கும் நடைப்பயிற்சி



பெரும்பாலான இதய நோய்கள் வெகு எளிதாக தடுக்க கூடியவை. இதில் எளிய வழிகளில் ஒன்றாக நாம் எடுத்துக் கொள்ளக் கூடியது நடை பயிற்சி ஆகும். தினசரி ஒரு சில மணி நேர நடைப்பயிற்சி உங்களது இதய நோய் அபாயத்தை கணிசமாக குறைக்க கூடும் என்று ஆய்வுகள் கண்டறிந்துள்ளன.

இதய நோய் என்பது இதயத்தைச் சார்ந்து பாதிக்கப்படும் பகுதிகளை பற்றிய பல்வேறு நிலைகளை குறித்து நமக்கு குறிப்பிடுவதாகும். பெரும்பாலான இறப்புகள் தற்போது இதய நோய் காரணமாக ஏற்படுகிறது என்பது நிசப்தமான உண்மை. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 17.9 மில்லியன் இறப்புகள் இதய நோய் காரணமாக ஏற்படுவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆரோக்கியமற்ற உணவு, உடல் உழைப்பின்மை, புகையிலை மற்றும் மது பயன்பாடு போன்றவை இதய நோய் மற்றும் பக்கவாதம் ஏற்படுவதற்கான மிகவும் பொதுவான ஆபத்து காரணிகள் என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கிறது.

தினசரி 21 நிமிட உடற் பயிற்சி ஒருவருக்கு இதய நோய் ஏற்படும் அபாயத்தை 30 சதவிகிதம் குறைப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. அதாவது ஒரு வாரத்திற்கு இரண்டரை மணி நேரம் நடை பயிற்சியை நாம் மேற்கொள்ள வேண்டும்.

இந்த நடைப்பயிற்சியை சரியாக செய்தால் உடல் எடையை குறைக்கவும், ரத்த அழுத்தம் மற்றும் கொழுப்பை குறைக்கவும், நினைவாற்றலை அதிகரிக்கவும், இதய நோய், நீரிழிவு நோய், புற்றுநோய் மற்றும் இது போன்ற பல நோய்களின் அபாயத்தை நம்மால் தடுக்க முடியும் என்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

# சிக்கன் மோமோஸ்




**தேவையான பொருட்கள்**

மைதா 2 கப்
உப்பு தேவையான அளவு
சிக்கன் கொத்துகறி 1/4 கிலோ
வெங்காயம் 2
முட்டைகோஸ் (பொடியாக நறுக்கியது)
கரட் (பொடியாக நறுக்கியது) 1 கப்
இஞ்சி (பொடியாக நறுக்கியது) 1 கப்
பூண்டு (பொடியாக நறுக்கியது) 1 தேக்கரண்டி
கொத்தமல்லி (பொடியாக நறுக்கியது) 1 தேக்கரண்டி
மிளகு தூள் 1 தேக்கரண்டி
மிளகாய் தூள் 1 தேக்கரண்டி
நல்லெண்ணெய் 1 தேக்கரண்டி

**செய்முறை**

சிக்கன் கொத்துகறியை நன்றாக சுத்தம் செய்து முக்கால் பாகம் வேக வைத்து கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் மைதா மாவு மற்றும் உப்பு சேர்த்து சப்பாத்தி மாவை பதத்திற்கு பிசைந்து அரை மணி நேரம் ஊற வைக்க வேண்டும்.

இன்னொரு பாத்திரத்தில் வேக வைத்த சிக்கன் கொத்துக்கறி, பொடியாக்கி நறுக்கிய வெங்காயம், முட்டைகோஸ், கரட், இஞ்சி, பூண்டு, கொத்தமல்லி, உப்பு, மிளகாய் தூள், மிளகு தூள், சிறிது நல்லெண்ணெய் சேர்த்து நன்றாக கிளறி கொள்ள வேண்டும்.

அதன் பின்னர் அதில் சிறிதளவு தண்ணீர் தெளித்து நன்கு கலந்து கொள்ள வேண்டும்.

இதையடுத்து பிசைந்து வைத்து உள்ள மாவை பந்து போன்று சிறு சிறு உருண்டைகளாக பிடித்து கொண்டு, அதை சிறிய அளவிலான மெல்லிய சப்பாத்தியாக திரட்டி கொள்ளவும்.

அதன் பின்னர் கிளறி வைத்து உள்ள சிக்கன் கலவையை அந்த சப்பாத்தியில் வைத்து குறிப்பிட்ட வடிவத்தில் செய்து கொள்ள வேண்டும்.

அதன் பின்னர் இட்லி பாத்திரத்தில் எண்ணெய் தடவி அதில் வைத்து வேக விட வேண்டும்.

15 முதல் 20 நிமிடங்கள் வரை வேக விட வேண்டும். தற்போது சுவையான ரெஸ்ட்ரன்ட் ஸ்டைல் சிக்கன் மோமோஸ் ரெடி.

## செந்தூர மழலைச் செல்வங்கள்


ரஸ்மிகா


பவ்யேஷ்
உடப்புசல்லாவ (7 வயது)


ஜெ.வைஷ்ணி
ஜெயப்பிரகாஷ் - ராஹினி


Davind


ஸீனத் ஸியா


Brinjinth

## செல்ஃபி உலா


Dana-Art Director
Shankavi Theater,
Mannar


ஹிமல்ஷா டில்ஷான்


Vijay


Nadun Dimuthu Karunasekara
Moratuwa


செய்த்- நிசாத்
பொல்கஹயாய

## செந்தூரம் பிறந்தநாள் வாழ்த்து

நீங்கள், உங்கள் மழலைச் செல்வங்களின் பிறந்தநாள் வாழ்த்துக்களை இந்த செந்தூரம் இதழில் எந்தவித கட்டணமும் இன்றி இலவசமாக பிரசுரிக்க விரும்புகின்றீர்களா? அவ்வாறாயின் மழலையின் பெயர், முகவரி, பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை குறிப்பிட்டு 0773124543என்ற *whats app* க்கோ அல்லது *senthuram2022@gmail.com*க்கோ அனுப்பி வைக்கலாம்.

## செல்ஃபி உலா

நீங்கள், உங்கள் *Phone* களில் விதவிதமாக எடுத்துப் பார்த்து ரசிக்கும் *Selfie* படங்களை இந்த செந்தூரம் இதழில் பிரசுரிக்க உங்கள், பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை குறிப்பிட்டு 0773124543 என்ற *whatsapp*க்கோ அல்லது *senthuram2022@gmail.com*க்கோ அனுப்பி வைக்கலாம்.

## வழிகாட்டுங்கள்




## நிறம் தீட்டுங்கள்





## 'மொக்க' ஜோக்ஸ்



'' ஏங்க, அடுத்த பிறவியிலும் நீங்கதான் எனக்கு கணவரா வரணும்..''

''எங்கிட்ட அவ்வளவு பிரியமா மாலா..''

''சமையல் வேலைக்கு வேற ஆளை தேட வேண்டாம்ன்னுதான்...''

## தொடர்புபடுத்துங்கள்



## 10 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



நான் ரொம்ப பிஸி...

# பொருளாதார நெருக்கடியினால் வீழ்ச்சியடைந்த
# ஹபறன ஜீப் சபாரி சேவை



இலங்கையின் மொத்த வருமானத்தில் முக்கிய பங்களிப்பை சுற்றுலாத்துறை வழங்குகின்றது என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை. நாட்டின் நாலாபுறமும் சுற்றுலா தளங்களை உள்ளடக்கிய இலங்கையில் ஹபறன பிரதேசமானது அதிகளாவான சுற்றுலாப்பயணிகளை ஈர்க்கும், சுற்றுலாத்துறைக்கு இன்றியமையாத ஓர் முக்கிய நகரமாகும். கிராமத்து மாட்டு வண்டில் சவாரி, ஜீப் சவாரி, தோணி சவாரி, தங்குமிட வசதி, நட்சத்திர ஹோட்டல் என சுற்றுலாப்பயணிகளை மையமாக கொண்டு இயங்கும் தொழில்களை நம்பியே இப்பிரதேசத்தில் சுமார் 4000 இற்கும் அதிகமான குடும்பங்களை சேர்ந்தோர் வசித்து வருகின்றனர்.

இலங்கையில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக சுற்றுலாப்பயணிகளின் வருகையின்மையால் இப்பிரதேச மக்களின் நாளாந்த வாழ்க்கை பாதிப்படைந்துள்ளதாகவே பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். அதிலும் குறிப்பாக இப்பிரதேசத்தில் அதிகளவில் பிரபல்யமான ஜீப் சபாரி சேவையானது முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

**சுமேத பண்டார,**
**அகில இலங்கை ஜீப் சபாரி சங்க தலைவர், ஹபறன**

“இந்த ஹபறன பிரதேசத்தில் ஜீப் சபாரி தொழிலில் ஈடுபட்டு வரும் 985 ஜீப் வண்டிகள் இருக்கின்றன. இவ்வனைத்து வாகனங்களும் சுற்றுலாத்துறையினை நம்பியே இயங்கி வருகின்றன.

அதற்கு பிரதான காரணம் இப்பிரதேசத்தை அண்டியதாக காணப்படுகின்ற மின்னேரிய தேசிய பூங்கா, கவுடுள்ள தேசிய பூங்கா மற்றும் ஹுருளு சுற்றாடல் பூங்காக்களாகும். உண்மையை சொல்வதென்றால் எமக்கு இப்பொழுது போக்குவரத்துக்கு எரிபொருள் இல்லை, ஹோட்டல்களுக்கு சுற்றுலாப்பயணிகள் வந்தால் மின்வெட்டு பிரச்சினையினால் குளிரூட்டிகள் இல்லை. இலங்கையில் மொத்தமாக 3250 சபாரி ஜீப்கள் எமது சங்கத்தின் கீழ் இயங்குகின்றன. எமது சங்கத்திலுள்ள சகல அங்கத்தவர்ளும் தற்பொழுது இப்பிராச்சினைக்கு முகம் கொடுத்திருக்கின்றார்கள். ஹபறனயில் இருக்கின்ற 985 சபாரி ஜீப் வண்டிகளில் தற்பொழுது 300 வண்டிகள் மாத்திரமே எஞ்சியுள்ளன. ஏனையவற்றை வருமானமின்மையாலும், பினான்ஸ் கட்ட முடியாமலும் விற்று விட்டார்கள்”.

**ஹபறன அகில – சபாரி ஜீப் சேவை வழங்குனர், ஹபறன**

“என்னிடம் 10 சபாரி ஜீப்கள் இருந்தன. அவற்றில் 7 ஜீப்களை பினான்ஸ் கட்ட முடியாமல் விற்றுவிட்டேன். இப்பொருளாதார நெருக்கடியினால் சுற்றுலாப்பயணிகள் வருகின்ற சகல இடங்களும் வெறிச்சோடிபோயுள்ளன. சுற்றுலாத்துறையில் எனது இவ்வியாபாரத்தில் 35 இற்கும் அதிகமான ஊழியர்கள் என்னிடம் வேலை செய்தார்கள். அவர்கள் அனைவரும் தற்பொழுது எதுவித வருமானங்களும் இன்றி சிரமப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். காலத்தை கடத்துவதற்காக விவசாயம் செய்வதற்கும் பசளைகள் இன்மையால் இவர்கள் செய்வதறியாது தவிப்பதானது வேதனையளிக்கின்றது” என கண்ணீர்மல்க தெரிவித்தார்.



**முஹம்மத் ஷூபி**
சுற்றுலாப்பயணி, லெபனான்.



**சுமேத பண்டார**
அகில இலங்கை ஜீப் சபாரி சங்க தலைவர்



ஹபறன அகில இலங்கை
ஜீப் சபாரி சேவை வழங்குனர்

நாட்டு நிலைமை இவ்வாறிருந்தும் இலங்கைக்கு விஜயம் செய்துள்ள லெபனான் நாட்டு சுற்றுலாப்பயணி ஒருவர் இவ்வாறு கருத்து தெரிவிக்கின்றார்.

**முஹம்மத் ஷூபி ,**
**சுற்றுலாப்பயணி, லெபனான்**

“நாங்கள் இலங்கைக்கு வருமுன் இங்கே நடைபெறுகின்ற ஆர்ப்பாட்டங்கள், அரசியல் பிரச்சினை, பொருளாதார நெருக்கடி பற்றி கேள்விப்பட்டோம். நாங்கள் அவற்றை கருத்தில் கொள்ளவில்லை. இங்கு எமக்கான பாதுகாப்பு எப்படியிருக்கும் என மட்டுமே ஆராய்ந்தபின் இங்கே வருகை தந்தோம்.

கடந்த இரண்டு நாட்களாக கண்டி, தம்புள்ள போன்ற சில பிரதேசங்களுக்கு விஜயம் செய்தோம். உண்மையிலேயே இலங்கை வாழ் மக்கள் மிக மென்மையானவர்கள், எந்த நேரமும் புன்சிரிப்போடு அன்பாக பழகக் கூடியவர்கள். ஆகவே நாங்கள் எங்களது பயணத்தை மேலும் ஒரு வாரத்திற்கு நீடிக்க இருக்கின்றோம்” என தெரிவித்தார்.

**ஐ.எம்.மிதுன் கான்...**
கெக்கிராவ குறூப் நிருபர்

மத்திய வங்கியின் அறிக்கையின் படி கடந்த 12 வருடங்களில் படிப்படியாக அதிகரித்து வந்த இலங்கையின் சுற்றுலாத்துறை வருமானம் கடந்த 2018 இல் 4380.628 மில்லியன் அமரிக்க டொலராக இருந்தது.

பின்னர் நாட்டில் ஏற்பட்ட அசாதாரன சூழ்நிலைகள் காரணமாக நிலைமை தலைகீழாக மாறி கடந்த வருட சுற்றுலாத்துறை வருமானம் வெறும் 261.416 அமெரிக்க டொலராகவெ காணப்பட்டது. இவ்வருடம் அது மேலும் வீழ்ச்சியடைந்து செல்வதை அவதானிக்க முடிகின்றது.

அந்நிய செலாவணியை அதிகளவில் ஈட்டித்தரும் சுற்றுலாத்துறையினை சீரான நிலைக்கு மீண்டும் கொண்டுவருதல் அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும்.

இவ்விடயம் தொடர்பில் சுற்றுலாத்துறை அமைச்சர் மற்றும் உரிய அரச அதிகாரிகள் சரியான பொறிமுறைகளை கையாள்வதின் ஊடாக சுற்றுலாத்துறை பழைய நிலைக்கு திரும்புமாயின் சுற்றுலாத்துறையினை நம்பி ஜீவனோபாயத்தை நடத்திச்செல்வோர் மீண்டும் பழைய நிலைமைக்கு திரும்புவதோடு நாட்டின் பொருளாதாரமும் சீராக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.



தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

# ஊமக்காச்சி 07

மக்டுகல் எனக்குள் நுழைகிறார். நான் தேடலும் திரட்டலுமாகத் திரிகிறேன். எனது ஐந்தாம், ஆறாம் வயதில் பூக்கள், விதைகள், புளியங்கொட்டைகள், குரும்பட்டிகளென்று சேகரிப்பதிலும் பயன்படுத்துவதிலும் திளைத்திருக்கிறேன்.

கடையடி வளவுக்குள் கிடக்கும் சருகிலைகளை இரும்புக்கூர் கம்பியிலே கோர்த்தெடுப்பேன். விடிய சுபஹோட பனங்கொட்டை பொறுக்கப் போவேன். அவை உம்மம்மாவின் கை வண்ணத்தில் பாத்தியாகும். பின் பனங்கிழங்காகி எங்கள் வயிற்றில் இறங்கும். கடற்கரைக்குப் போனால் சிற்பி சேகரிப்பேன். கடை வீதிக்குப் போய் சோடாமூடி தேடுவேன். ரொபிக் கடதாசி திரட்டுவேன். வெற்று நெருப்புப் பெட்டிகளைப் பொறுக்குவேன். எனக்கு ஒன்றுக்கும் உதவாததென்று ஒன்றில்லை. இப்படி நான் சேகரிப்பவற்றிலிருந்து புத்தாக்கங்கள் பலவும் செய்து மகிழ்ந்திருக்கிறேன்.

தேடலூக்கம், திரட்டூக்கம், ஆக்கவூக்கம், ஆராய்வூக்கம், பணியூக்கமென மக்டூகல் இப்போது என் சின்ன மகனுக்குள்ளும் நுழைந்திருக்கிறார்.

அவன் கூகுல், யூடியூப், ஓபிரா மற்றும் இணைய வழிகளில் தேடிக் கொண்டிருக்கிறான். புத்தாக்கங்கள் பொலிவோடு அவனது அறையை நிரப்புகிறது. ரோபோ செய்கிறான். அவனும் ரோபோ ஆகிறான்.

கேட்பதால் அறிவு வளர்கிறது. பார்ப்பதாலும் அறிவு வளர்கிறது. கேட்பதாலும் பார்ப்பதாலும் வரும் அறிவு சடுதியில் மனப் புத்தகத்திலிருந்து அழிந்துவிடும். செயலால் வளரும் அறிவு அனுபவம் சார்ந்தது, முதிர்ந்தது. சடுதியில் அழியாதது. அது மனசுக்கு உற்சாகம் தருவது. செய்கைக்கு ஆற்றலைத் தருவது. செயலூக்கத்தைப் பரப்புவது. அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி ஆகிய நடத்தைசார் நோக்கங்களை அல்லது நடத்தை மாற்றங்களை உருவாக்குகிறது.

மகாத்மா காந்தி என் சின்ன வயசு நினைவுகளுக்கு நுழைகிறார். 'தலை, நெஞ்சு, கை'' என்பதுதான் மகாத்மாவின் கல்விக் கொள்கை. தலை சிந்தனை அறிவு/ நெஞ்சு உணர்வு மனப்பக்குவம்/ கை – வேலை ஆற்றல் / கை செய்கை மூலமான கற்றல் ஊடகம். உடல் உள இயக்கப்பாட்டின் கற்றல் வடிவம். பரிசோதனை முறைமை சார்ந்தது இது.



குழந்தை வயதில் ஆரம்ப கற்றல் வகுப்புகள் வேலை சார்ந்தது. வைலை மேசையையுடையது. நான் முதலாம் வகுப்பொன்றில் நுழைகிறேன். முப்பத்து மூன்று பூக்கள்; ஒவ்வொன்றும் ஒவ்வொரு நடத்தைக் கோலங்களுடன் அங்கு மாஸ்லோ நிற்கிறார். சுயதிறன், நிறைவுத் தேவை, கணிப்புத் தேவை, காப்புத் தேவையோடு பூக்கள் மலர்வதை அவர் தேவைக் கொள்கையென விவரிக்கிறார்.

பப்லோ, ஸ்கின்னர், தொண்டைக் ஆகியோர் வகுப்புக்கு வருகிறார்கள். நடத்தைவாதப் பரிசோதனை செய்கிறார்கள். பூக்கள் குதூகலிக்கின்றன. ரீச்சருக்குள் இவர்கள் ஒவ்வொருவரும் நுழைகின்றனர். ரீச்சரின் இயக்கப்பாடு செழுமையுறுகிறது. இப்போது பியாஜே உளவளர்ச்சி குறித்து ரீச்சருடன் பேசுகிறார்.

புலனியக்கம் புலனுறுப்புகளால் இயங்கும் சிறுபராயத்தில் காட்சி வடிவக் கற்றல் கற்பித்தல் குறித்து ரீச்சர் சிந்திக்கிறார். நியம சிந்தனை தூல சிந்தனை வயப்படுகிறார். குழந்தைச் சிந்தனைப் பருவங்கள் மீதான குழந்தை நடத்தைக் கோலங்களை வகுப்பறையெனும் கருவறை உயிர்ப்பிக்கிறது.

நான் சின்ன வயசுக் காலத்தில் எழுத்துக்களை சேகரிப்பேன்;. எனக்குள் விதைப்பேன்;. வளர்ப்பேன்;. நிறநிறமான எழுத்துக்களில் சொற்கள் பூக்கும் அவை காய்க்கும் கனியாகும். நான் இன்தமிழின் வாக்கியங்கள் சுவைத்து வளர்ந்தவன். அதனால் இன்று கவினுறு தமிழாகி நிற்கிறேன்.

## மறுவாசிப்பு



முல்லை முஸ்ரிபா

## தீரன் பேரண்டத்தை வாசிக்கும் பறவை




அதனிடை துய்த்தெழல் என்பதும் ஒரு வாங்க மனநிலையின் ஆத்ம சுகம்தான். நௌஸாத்தின் பிரதி வழி பயணிக்கின்றபோது ஆத்மா ஈரமாகிறது. அகவுணர்வின் குவி மையத்தில் இதயம் துடிக்குமோசை இசையாகிறதுளூ இசைவாகிறது.

கனதியற்ற, மிக எளிதான, நீரோட்டம் போல் லாவகமான சொல்லோட்டத்தில் மூழ்கிட வைக்கிற உணர்வு ததும்பும் மொழியைக் கையாள்கிறார் நௌஸாத். வாழ்தலின் ஈற்றிலக்கை அல்லது யதார்த்தத்தை அல்லது ஈமானின் ஈர்ப்பை அவர் மொழிந்து செல்கிறார்.

''என்னவாகிலும் எழுதிக் கொள்ளுங்கள்' ஆயின் பூமான் நபிகளைப் புகழ்ந்து இவன் சோவனம் சொன்னதை மட்டும் சற்றுப் பெரிய எழுத்துகளில் கட்டாயம் பதிவு செய்து கொள்க கண்மணிகளே''/ 'கண்மணியே நாயகமே கல்புக்குள் வாழுகிற காதலரே...'' முஹம்மதியப் பேரொளியை முகத்தில் பூசி முத்தே.... முழுமதியே..... என வேண்டுகோளெழுதும் கவியின் நபி ஈர்ப்பு இந்தப் பிரதியில் விரவிக்கிடக்கிறது. 'காலாதி காலமாய் காலாவதியாகாமல் காலமாய் இருக்கும் காலம் நான்'' என சூபிஞான சிந்தனையின் வெளிப்பாட்டுச் சொற்கள் நிறைந்து கிடக்கின்றன.

வபாத் பற்றிய எண்ணங்கள் கவிஞரைச் சூழ்கின்றன. அநேக கவிதைகளில் வாழ்தல் முடிவுறுமிடத்தில் பிரார்த்தனைகளாகவும், சிந்தனைகளாகவும், போதனைகளாகவும் அமைந்து விடுகின்றன. 'எந்த நிலையில் எவர் உயிர் எவ்விதம் பிரியுமோ எவ்விடம் போகுமோ''

'சுஜ்தில் விழுந்து சிரவணக்கம் செய்யும் போதென் சீவன் போகச் செய்குவையோ'' ஆயின் ஒரேயொரு சொல்லை மட்டும் நம்பிச் சுஜ்தில் விழுந்து பாவி ஊர்ந்து வருகிறேன் பரமன் வாசலுக்கு 'ஆற்றில் விழுந்த ஆன்மாவை அழைத்துச் செல்ல இஸ்ராயீலே இனி நீர் வருக'' என நௌஸாத்தின் கவிதைகள் மறுமைக்கான தேடலைக் கோரி நிற்கின்றன.

'பன்னூலாசிரியர் ஹாதிபுல்ஹுதா மர்ஹூர் எம்.எம்.எம்.நூறுல்ஹக்க்கு'' சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்தக் கவிதைப் பிரதி காலாதி காலம் முதல் ஏக்கம் வரையான ஒரு தொகுதிக் கவிதைகளாலானது.

'நிரப்புங்கள்
என் கலப்புக் கிண்–
ணத்தை
உயர் கஸ்தூரியினால்
முத்திரையிடப்பட்ட
அந்த
முக – மது''

'ஒரு புள்ளிக்குள் ஓர் உலகத்தைப் பார்ப்பதுவும் ஓர் உலகத்தை ஒரு புள்ளியாகக் காண்பதுவும்' ஆன வேள்விக்குள் ஈர்க்கப்பட்டதோர் ஆன்மாவின் மொழிகளாக வந்திருக்கிறது முத்திரையிடப்பட்ட மது. எண்பதுகளிலிருந்து எழுத்துப் புலத்தில் நன்கு அறியப்பட்ட ஆர். எம்.நௌஸாத், நாவலெழுத்திலும், சிறுகதையெழுத்திலும் முத்திரை பதித்தவர். இப்போது முத்திரையிடப்பட்ட மதுவைத் தந்திருக்கிறார்.

ஆன்மாவின் தேடல் கனதியானது. அதன் உணர்வுப் பெருவெள்ளத்திலூறும் மொழி கவிதையாகும்போது பேரண்டத்தை வாசிக்கும் ஒரு கவிதைப் பறவையுமாகி..... சிலபோது பெரு வனத்தில் எங்கோ வீழும் ஒரு சிறு சருகுமாகி நிற்கிறார் கவி. அந்தப் பறவைக்கும் ஒரு பாடல் இருக்கும். அந்தச் சருகும் ஒரு சரித்திரம் சொல்லும் தீரா.



# கற்றல் ஊடகமாக அரங்காற்றுகை

அரங்காற்றுகைக் கலை புராதனமானது. நிகழ்த்து கலையாக உயிர்ப்புடன் நின்றிலங்குவது. உலகில் எல்லா மொழிகளிலும் எல்லாத் தேசங்களிலும் அவற்றுக்குரிய பண்பாட்டுக் கோலத்துடன் அரங்காற்றுகை முனைப்புற்று நிற்கிறது. அது காலவோட்டத்தில் நவீன தன்மைகளையும் பெற்றே உயிர்க்கிறது.

இத்தகைய ஆற்றுகையைக் கற்றல், கற்பித்தல் சூழலில் ஊடகமாகக் கையாளுதல் பற்றுதிமிக்கது.

ஆரம்ப வகுப்பு பிள்ளைகளுக்கு கற்றலில் காட்சிப்புலம் முக்கியமானது. ஐம்புலனையும் ஈர்க்கவல்ல ஆற்றுகை வடிவங்களை குழந்தை ஆற்றுகைகளை இதற்குக் கையாளலாம். இடை உயர் வகுப்புகளிலும் ஆற்றுகையூடாகப் பாடவிதான அலகுகளை செயல்நிலைக் கற்றலை வலுவூட்டவும் முடியும்.

பாடப் பனுவல்களிலுள்ள கதைகளைஃ கவிதைகளை ஆற்றுகை வடிவத்துக்கு மாற்றியமைப்பதூடாகக் கற்றலின் செயல் வடிவத்தை முன்னெடுக்கலாம்.

கவிதைகளில் முற்றுருவம் என்கிற காட்சி வடிவம் வெளிப்படும் அல்லது நவீன சொல்லாட்சி அகவுணர்வூட்டும் காட்சி அல்லது குறியீட்டுப் பாங்கு தொனிக்கலாம். இந்நிலையை ஆற்றுகை வடிவத்துக்கு மாற்றுவதனூடாகக் கற்றல் அனுபவமாக அரங்காற்றுகை மாறிவிடும். உண்மையில் அரங்காற்றுகை உணர்வுபூர்வமானது. உடல்மொழியின் வெளிப்பட்டு நிற்கும் உணர்வுகளும் அதன் அடியாளமான கருத்துநிலையும் ஒரு வகையில் கற்றல் ஊக்கியாக அமைந்துவிடுகிறது. நவீன நுட்பங்களுடன் கவிதைகளையும் கதைகளையும் விளம்பரங்களையும் ஆற்றுகை வடிவமாகத் தரும் போக்கு இன்று காணத்தக்கதாகவுள்ளது. இது புத்தாக்கக் கலை வடிவமாக மட்டுமன்றி கற்றல் கலை வடிவமாகவும் போற்றத்தக்கது.

## ஔவன் கவிதை

### தீராக்கனவொரு இசை

நிலவிலொழுகும் மென்னரம்பினிசை
நெஞ்சுள் மெதுமெதுத்துப் பூக்கிறது இன் பொழுது

திறந்த சாளரத்தின் வழி
தீராக் கனவுகள் விரவி
நிலவின் கூறுகளில் மீள ஒளிர்கிறது இசை
முக்காலமும் முற்றிப் படர்ந்த பேரிசை
பேரிகை

விழிகளில் நொதிக்கும் மறுகணத்திடை அலைகிறது
ஒரு சருகிலை
பெருந்தருவின் உச்சக்கிளையுதிர்த்த பழுப்பிலை
முக்காலமும் உணர்ந்திடா

மௌனத்தின் இடைப்பொழுது
நிலவில் வடிந்த அமாவாசை இசையிலி
அது இருள்
பேரிருள்
நெஞ்சுள் அலைகிறது சருகிலை
அதனசைவிலுமொரு இசை
அது ஒளி
பேரொளி

ஆன்மாவையுணருதலொரு அவா
நீள் வெளியில் அலையும்
பேரவா





# நடிகர் திலகம் பற்றி சில அபூர்வ தகவல்கள்

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் முதல் திரைப் பிரவேசம், 1952ஆம் ஆண்டில் "பராசக்தி' மூலமாகத்தான் என்பதில், ஒரு சிறு திருத்தம் மேற்கொள்ளலாம். சிவாஜி நடித்த முதல் படம் நடிகை அஞ்சலி தேவி தயாரித்த "பூங்கோதை". எனினும் "பராசக்தி"யில் சிவாஜி ஏற்ற குணசேகரன் பாத்திரம் பெரிய அளவில் எதிர்ப்பார்க்கப் பட்டதால் பராசக்திக்குப் பின் பூங்கோதையை வெளியிட்டனர். இதனால் சிவாஜி நடித்த முதல் படம் பராசக்தியாக பதிவு செய்யப்பட்டது. ஹெச்.எம். ரெட்டி என்பவர் தயாரித்து இயக்கிய "நிரபராதி' என்ற படத்தில், நாயகனாக நடித்த தெலுங்கு நடிகரான முக்காமலா கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு, நமது நடிகர் திலகம் பின்னணிக் குரல் கொடுத்ததன் மூலமாக, "பராசக்தி'க்கு முன்பே 1951 ஆம் ஆண்டிலேயே திரையுலகப் பிரவேசம் செய்துவிட்டார். ("நிரபராதி' தெலுங்கிலிருந்து தமிழுக்கு மொழி மாற்றம் செய்யப்பட்ட படம்.)

கே.வி.மகாதேவனின் உதவியாளர் டி.கே.புகழேந்தி தனித்து இசையமைத்த (4 படங்களில்) ஒரு படம், "குருதட்சணை' என்ற சிவாஜி கணேசன் நடித்த படமாகும்.

சிவாஜி கணேசனுக்கு இயக்கவும் தெரியும். அவர் ஒரு திரைப்படத்தை இயக்கி இருக்கிறார். அவர் முழுப் படத்தையும் இயக்கவில்லை என்றாலும், ஒரு படத்தை இயக்கியுள்ளார் என்று வைத்துக் கொள்ளலாம். "ரத்தபாசம்' என்ற படத்தை ஆரம்பத்தில் இயக்குனர் கே.விஜயன் இயக்கிக் கொண்டிருந்தால். இடையில் விஜயனுக்கு உடல் நலக்குறைவு காரணமாக சிவாஜி இயக்கினார். இது சிவாஜி புறொடொக்ஸன் படமாகும். படத்தின் எழுத்துப் பகுதியில் (டைட்டில்) இயக்கம் என்ற பெயர் வர வேண்டிய இடத்தில் எவரது பெயரும் திரையில் வராமல், சிவாஜி கணேசனின் குளோசப் போட்டோக்கள் மட்டுமே திரையில் காண்பிக்கப் படும்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த "இரு துருவம்' என்ற படத்தின் கதையை எழுதியவர் ஹிந்தி நடிகர் திலிப்குமார். இது "கங்கா ஜமுனா' என்கிற ஹிந்திப் படத்தைத் தழுவி எடுக்கப்பட்டது. இது பி.எஸ். வீரப்பாவின் சொந்தப் படமாகும்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த "சரித்திர நாயகன்' என்ற படத்தின் கதையை, தெலுங்கு நடிகர் என்.டி.ராமாராவ் எழுதியுள்ளார். தெலுங்குப் படத்தில் என்.டி.ஆர்.தான் கதாநாயகன். அதன் தழுவலாக எடுக்கப்பட்ட படம் "சரித்திர நாயகன்'. இதில் கதாநாயகனாக சிவாஜி நடித்தார்.

சி.எஸ்.ஜெயராமன், சீர்காழி கோவிந்தராஜன், ஏ.எம்.ராஜா,

எஸ்.சி.கிருஷ்ணன், பி.பி.ஸ்ரீனிவாஸ், டி.எம்.சௌந்தரராஜன், எஸ்.பி.பாலசுப்பிரமணியம், மலேசியா வாசுதேவன்,ஜெயச்சந்திரன் ஆகியோர் நடிகர் திலகத்திற்காக ஒரு படத்தில் யாராவது ஒருவர் மட்டும் பின்னணி பாடியிருப்பார்கள். ஆனால், "வணங்காமுடி' என்ற படத்தில் மட்டும் சிவாஜிக்கு சீர்காழி கோவிந்தராஜன், ஏ.எம்.ராஜா, டி.எம்.சௌந்தரராஜன் ஆகிய மூன்று பேரும் வெவ்வேறு பாடல்களுக்குப் பின்னணி பாடியிருப்பார்கள்.

அதேபோல, "கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி'என்ற படத்தில் மட்டும் சிவாஜிக்கு ஜே.பி.சந்திரபாபு, ஏ.எம்.ராஜா, வி.என்.சுந்தரம் ஆகிய மூன்று பேர் பின்னணி பாடியிருப்பார்கள்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்காக, வி.என்.சுந்தரம் இரண்டு பாடல்களை பின்னணி பாடியுள்ளார். "வீரபாண்டிய கட்டபொம்மன்' என்ற படத்தில் வெற்றி வடிவேலனே என்ற பாடலையும், "கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி' என்ற படத்தில் ஒரு பாடலையும் பாடியுள்ளார்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்காக எஸ்.சி.கிருஷ்ணன், "ராஜா ராணி' என்ற படத்தில் (கண்ணற்ற தகப்பனுக்கு) பூனை கண்ணை மூடினால் என்ற ஒரே ஒரு பாடலை மட்டுமே பின்னணி பாடியுள்ளார்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்காக அஜித்சிங் என்பவர், "தவப்புதல்வன்' என்ற படத்தில் லவ் ஈஸ் பைஃன் டார்லிங் என்ற ஒரே ஒரு ஆங்கிலப் பாடலை பின்னணி பாடியுள்ளார்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்காக, இசையமைப்பாளர் கண்டசாலா, "கள்வனின் காதலி' என்ற படத்தில் வெய்யிற்கேற்ற நிழலுண்டு என்ற பாடலையும், உல்லாசம் போகும் எல்லோரும் ஓர்நாள் சொல்லாமல் போவார் அல்லாவிடம் என்ற பாடலை தெனாலிராமன் படத்திலும் பாடியிருந்தார்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்காக தெலுங்கு பின்னணிப் பாடகர் எம்.சத்தியம் என்பவர், "மங்கையர் திலகம்' என்ற படத்தில் "நீ வரவில்லை எனில் ஆதரவேது' என்ற ஒரே ஒரு பாடலை மட்டும் பின்னணி பாடியுள்ளார்.

நடிகர் திலகம் நடித்த படங்களில், பாரதியார் பாடல்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்ட ஒரே படம், "கப்பலோட்டிய தமிழன்.'

பூஜ்ஜியம் என்ற சொல் இடம்பெற்ற ஒரே பாடல், (நடிகர் திலகம் நடித்த "வளர்பிறை' படத்தில் வரும்) "பூஜ்ஜியத்துக்குள்ளே ஒரு ராஜ்ஜியத்தை" என்ற பாடலாகும்.

பன்னிரண்டு தமிழ் மாதங்களின் பெயர்களும் இடம்பெற்ற இரு திரைப் பாடல்களில் ஒன்று, நடிகர் திலகம் நடித்த "ராஜராஜ சோழன்' படத்தில் இடம்பெற்ற, "மாதென்னைப் படைத்தான்' என்ற பாடலாகும்.இப்படத்திற்கு இசையமையமைத்தவர் வயலின் மேதை குன்னக்குடி எஸ்.வைத்தியநாதன்.இவரின் வேண்டுகோளுக்கிணங்கி டி.ஆர்.மகாலிங்கத்துடன் இணைந்து "தென்றலோடு உடன் பிறந்தாள் செந்தமிழ்ப் பெண்ணாள்" என்ற பாடலை சிவாஜி கணேசன் தனது சிம்மக்குரலில் பாடியிருப்பார்.

சிவாஜி நடித்த படங்களில் பாடல்கள் இருந்தும், சிவாஜி பாடாமல் இருக்கும் படங்கள் "மோட்டர் சுந்தரம் பிள்ளை', "தில்லானா மோகனாம்பாள்' ஆகிய படங்களாகும்.

பாடல்களே இல்லாத முதல் தமிழ்த் திரைப்படம் நடிகர் திலகம் நடித்த 'அந்தநாள்' படமாகும்.

இலங்கை நடிகை மாலினி பொன்சேகாவுடன் நடித்த ஒரே தமிழ்ப் படம், நடிகர் திலகம் நடித்த "பைலட் பிரேம்நாத்' என்பதாகும்.

அதே போல இலங்கை நடிகை கீதா மோகனப் புன்னகை படத்தில் மட்டும் நடிகர் திலகத்தின் ஒரு ஜோடியாக நடித்திருக்கிறார். இதே படத்தில் நடிகர் திலகத்தை விரும்புபவராக நடிகை அனுராதா நடித்திருந்தார்.

எம்.ஜி.ஆர். நடித்த தேவர் பிலிம்ஸ் படங்களை மட்டுமே இயக்கிய இயக்குநர் எம்.ஏ.திருமுகம், நடிகர் திலகம் நடித்த "தர்ம ராஜா' என்ற ஒரே ஒரு படத்தை மட்டுமே இயக்கியுள்ளார். இப்படத்தில் அனிதாபென் என்ற ஜப்பான் நாட்டு நடிகை நடிகர் திலகத்தின் இணையாக சில காட்சிகளில் வருவார்.

மனோரமா, நடிகர் திலகத்தின் ஜோடியாக நடித்த ஒரே படம், "ஞானப் பறவை' மட்டுமே.

நடிகர் ரவிச்சந்திரன் மோட்டார் சுந்தரம் பிள்ளை, கவரிமான் படங்களில் நடிகர் திலகத்துடன் இணைந்து நடித்துள்ளார்.

தமிழ் சினிமாவின் முதல் அகன்ற திரைப் (சினிமா ஸ்கோப்) படம், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த 'ராஜராஜ சோழன்' திரைப் படமாகும். ஆனந்த் தியேட்டர் உரிமையாளர் ஜி.உமாபதி தயாரித்த படம் இது. இந்த உமாபதி பின்னாளில் அக்னி நட்சத்திரம் படத்தில் வில்லனாக நடித்தார்.

தமிழில் தயாரிக்கப்பட்ட முதல் முழு நீள ஈஸ்ட்மென் வண்ணப் படம், நடிகர் திலகம் நடித்த "வீரபாண்டிய கட்டபொம்மன்' (1956) படமாகும். (1952 இல் திரையிடப்பட்ட "ஆன்' (கௌரவம்) என்ற படம், முழு நீள டெக்னிக் வண்ணப் படம் என்றாலும், அது ஹிந்தியிலிருந்து தமிழுக்கு மொழி மாற்றம் (டப்பிங்) செய்யப் பட்ட படமாகும்.

பராசக்தி' படத்தை இயக்கிய கிருஷ்ணன் பஞ்சு முதல், பூப்பறிக்க வருகிறோம் படத்தை இயக்கிய ஏ.வெங்கடேஷ் வரை, சுமார் 100 இயக்குநர்களின் இயக்கத்தில் நடிகர் திலகம் நடித்துள்ளார். படத் தயாரிப்பைப்

பொறுத்த வரையில் நடிகர் திலகத்தை வைத்து அதிக (17 படங்கள்) படங்களை தயாரித்தவர் நடிகர் கே.பாலாஜி மட்டுமே.

பண்டரிபாய் முதல் சுமார் 55 கதாநாயகிகள் சிவாஜியுடன் இணைந்து



நடித்துள்ளார்கள். இவர்களில் கே.ஆர். விஜயா 40 படங்களிலும், பத்மினி 38 படங்களிலும் இணைந்து நடித்துள்ளார்கள்.ஜெயலலிதாவின் தாயார் சந்தியா அவர்கள், "பலே பாண்டியா' படத்தில் நடிகர் திலகத்துக்கு ஜோடியாகவும், "சாந்தி' படத்தில் தாயாகவும் நடித்துள்ளார்.

ஜெயலலிதா, "மோட்டார் சுந்தரம் பிள்ளை' படத்தில் நடிகர் திலகத்துக்கு மகளாகவும், பல படங்களில் நடிகர் திலகத்துக்கு ஜோடியாகவும், "பாட்டும் பரதமும்' படத்தில் நடிகர் திலகத்துக்கு தாயாகவும் நடித்துள்ளார்.சிவாஜியுடன் ஜெயலலிதா ஜோடியாக இணைந்து நடித்த முதல் படம் கலாட்டா கல்யாணம் . நடிகை லட்சுமியின் தாயார் குமாரி ருக்மணி, "கப்பலோட்டிய தமிழன்' படத்தில் நடிகர் திலகத்துக்கு ஜோடியாகவும், "ரோஜாவின் ராஜா' படத்தில் தாயாகவும், "விளையாட்டுப் பிள்ளை' படத்தில் மாமியாராகவும் நடித்துள்ளார்.

நடிகை லட்சுமி, எதிரொலி, தங்கைக்காக, அருணோதயம் ஆகிய படங்களில் நடிகர் திலகத்துக்கு தங்கையாகவும், ராஜராஜ சோழன் படத்தில் மகளாகவும், உனக்காக நான், தியாகம், நெஞ்சங்கள், ராஜரிஷி, ஆனந்தக் கண்ணீர், குடும்பம் ஒரு கோவில் ஆகிய படங்களில் ஜோடியாகவும் நடித்துள்ளார்.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...
கம்பளை

## தப்புக்கணக்கு சரியாப்போச்சு.!

பஸ்ஸில் ஏறிய தாயிடம்
பிள்ளைக்கு எத்தின வயதென
கேட்டார் நடத்துனர்.
தாய் சொன்னாள் நான்கென்று
பிள்ளை சொன்னான் ஆறென்று
மெதுவாக குட்டினாள்
நாலென்று சொல்லு.

சினிமாவுக்கு கூட்டிச்சென்றார்
தந்தை..
எட்டு வயதுக்கு மேல் டிக்கட்
என்றார்கள்..

இவனுக்கு ஏழு வயதென்றார்
இல்லை ஒன்பதென்றான் பிள்ளை
நைசாக அதட்டி
காதை முறுக்கினார்.

இப்போது மதுபான கடையில்
நிற்க்கிறான் பிள்ளை–இருபது
வயதுக்கு மேல்தான் வாங்கலாம்
என்றார் கடைக்காரர்
இருபத்தி இரண்டென்றான்.

பதினெட்டு வயதிலும்
நாலைக் கூட்டினேன்
அம்மா,அப்பா குறைத்த
வயதுகள் என்று சிரித்தான்
தாய்,தந்தையோ அழுதனர்.

அன்புடன் பசுவூர்க்கோபி.
ஐயாக்குட்டி கோவிந்தநாதன்.
நெதர்லாந்து.




இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜூலை மாதம் 31ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.